வர்ண ஜாலம்

பாகம் ௨

எண்டமூரி வீரேந்திரநாத்

வர்ணஜாலம்
Part II

21

அவன் வாழ்க்கையில் இரண்டு பெண்கள் இரண்டு விதமான நடிப்புடன் குறும்புத்தனமாக அவனுக்கு நெருக்கமானார்கள். ஒருத்தி கப்பல் மூழ்கிப் போய் விட்டது என்று நாடகமாடி அவனுடன் தீவிரமான காதலில் சிக்கிக் கொண்டு விட்டாள். இன்னொருத்தி செரிப்ரல் ஹெமரேஜ் என்று பொய் சொல்லி திட்டம் போட்டு அவனிடமிருந்து முத்தத்தைப் பெற்றுக் கொண்டு விட்டாள்.

ரொம்ப வருடங்களுக்கு முன் ஒரு ஆங்கிலப் படம் வந்தது. அதன் பெயர் ''க்ளாஷ் ஆஃப் டைட்டான்ஸ்.'' இரண்டு தேவதைகள் மனிதர்களைப் பகடைக் காய்களாக பயன்படுத்தி சதுரங்கம் விளையாடுவார்கள். அந்த விதமான ஆட்டம், விதியின் உருவில் ஸ்ரீகல்யாணியுடன் மற்றொருமுறை ஆடிவிட்டது. அவள் போட்ட நாடகத்தை எந்த தெய்வம் உண்மையாக்கி விட வேண்டும் என்று நினைத்ததோ?

அவள் அடிக்கடி மணியைப் பார்த்துக் கொண்டாள். இன்னும் நான்கு மணி நேரத்தில் கார்த்திகேயன் வந்து

விடுவான். தன் கைகள் சுவாதீனத்திற்கு வந்து விட்டன என்ற விஷயத்தை எவ்வளவு நாடகத்தன்மையோடு சொல்லலாம் என்று இரண்டு நாட்களாக யோசித்துக் கொண்டிருந்தாள். அவள் தன் பத்து வருட பிசினஸ் வாழ்க்கையில் கூட இவ்வளவு தீவிரமாக யோசித்த தில்லை.

அவள் இங்கே இவ்வாறு யோசனையில் முழுவதுமாக மூழ்கிப் போயிருந்த சமயத்தில் அவளுக்கு பல மைல்கள் தூரத்தில் அரேபியக் கடலில் கல்யாணி ஏஜென்ஸிஸ் சம்பந்தப்பட்ட சரக்குகளை எடுத்துப் போய்க் கொண்டிருந்த கப்பல் ஒரு பக்கமாக சரிந்து மூழ்கிப் போவதற்கு தயாராக இருந்தது. அந்தக் கப்பலின் கேப்டன் 'ஜட்டிஸன்' முடிவை அமல் செய்ய தீர்மானித்துக் கொண்டார். (கப்பல் மூழ்கிப் போகும் சூழ்நிலை ஏற்பட்டால் பயணிகளின் உயிர்களை காப்பாற்றுவதற் காகவும், கப்பல் மூழ்கிப் போகாமல் தடுப்பதற்காகவும் சரக்குகளை கடலுக்குள் தள்ளிவிடுவதை 'ஜட்டிஸன்' என்பார்கள். அந்த அதிகாரம் கேப்டனுக்கு உண்டு) சுமார் ஒரு கோடி ரூபாய் விலை மதிப்புள்ள சரக்கு அந்த விதமாக கடலுக்குள் தள்ளப்பட்டு விட்டன.

இந்தச் செய்தி கல்யாணிக்கு பம்பாய் ஆபீஸிலிருந்து டெலெக்ஸ் மூலமாக தெரிவிக்கப்பட்டது.

கார்த்திகேயன் டில்லியில் விமானத்தில் ஏறப்போன நேரத்தில் இங்கே இந்த விஷயம் தெரிந்தது. ஒரு வினாடி கல்யாணி கல்லாகச் சமைந்து போய் அப்படியே உட்கார்ந்து விட்டாள். உடனே தேறிக் கொண்டு இன்ஷ்யூரென்ஸ் காகிதங்களை வரவழைத்தாள்.

அதில் ஜட்டிஸன் கிளாஸ் சேர்க்கப்படவில்லை. ஆயிரத்தில் ஒரு கேசில் அப்படிப்பட்ட தவறு (அலட்சியம்)

நேர்ந்து விடும். லட்சகேசுகளில் ஒன்று நிஜமாகி விடும். அவள் தினசரி ஆபீஸ் வேலைகளை சுயமாக கவனித்துக் கொள்ள முடியாததால் ஏற்பட்ட முதல் விளைவு இது. நஷ்டம் ஒரு கோடி ரூபாய்!

வெள்ளம் வருவதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வரை எல்லாம் நன்றாகவே இருக்கும். லேசாக மழை பெய்யத் தொடங்கும். தொலைவில் எங்கேயோ நிசப்தத்தை கிழித்துக் கொண்டு ஒரு சத்தம் கேட்கும். நிமிஷத்தில் ஒரு அலை வந்து சகலத்தையும் தன்னோடு சேர்த்து இழுத்துக் கொண்டு போய் விடும்.

அது போன்ற அலை ஏதோ தொலைவிலிருந்து வந்து கொண்டிருப்பது போன்ற தீங்கை அவள் மனம் எடை போட்டது.

அவள் அறையில் ஜெனரல் மேனேஜரும், நான்கு அதிகாரிகளும் கூடினார்கள்.

''மொத்தம் எவ்வளவு சரக்கு ஜட்டிஸன் செய்யப்பட்டது?''

''சுமார் ஒரு கோடி ரூபாய் சரக்கு இருக்கு மேடம்.''

''அந்த ஷிப்பிங் கம்பெனிக்காரர்கள் தரமாட்டார் களா?''

''அது வெளிநாட்டு கம்பெனி. அந்த நாட்டில் கேஸ் போட்டாலும் அது முடிய பத்து வருடங்கள் ஆகிவிடும். அதோடு அந்த கம்பெனி ரொம்ப பிரபலமானதும் இல்லை.''

'பின்னே அவ்வளவு சின்ன கம்பெனியிடம் ஏன் சரக்கை ஒப்படைத்தீங்க?' என்று கேட்கவில்லை அவள். அவர்கள் கொஞ்சம் அதிகமாக சலுகை கொடுத்திருப் பார்கள். ஆபீஸ் நிர்வாகத்தில் சிறிய லெவலில் இருக்கும்

டெபுடி எக்ஸிக்யூடிவ் எடுத்துக் கொண்ட முடிவு அது. அஸ்திவாரத்தையே பெயர்த்தெடுத்து விட்டது.

''காஷ்ஃப்ளோ எப்படி இருக்கு?'' கேட்டாள்.

''மூழ்கிப்போன சரக்கிற்காக அறுபது லட்சம் வங்கிக்கு கட்ட வேண்டும். இன்னும் பதினைந்து நாட்கள் டயம் இருக்கிறது. மீதி நாற்பது லட்சம் டிபெஞ்சர்ஸிற்கு கட்ட வேண்டும்.''

கம்பெனிக்கு கடன் கொடுத்தவர்களை (ஒரு விதத்தில்) டிபெஞ்சர் ஹோல்டர் என்பார்கள். குறிப்பிட்ட சமயத்தில் அவர்களுடைய பணத்தை அவர்களுக்கு திருப்தி தந்து விட வேண்டும். இல்லாவிட்டால் கம்பெனியை மூடிவிடக் கூடிய அதிகாரம் அவர்களுக்கு உண்டு.

மேற்படி உரையாடல் நிகழ்ந்த கொண்டிருக்கும் போது கதவின் மீது டொக் டொக்கென்று சத்தம் கேட்டது. ''கமின்'' என்றாள் கல்யாணி. ஃபைனான்ஸ் மேனேஜர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார். அவர் முகம் வெளிறிப் போயிருந்தது.

''என்ன நடந்தது?'' என்று கேட்டாள்.

''ஸ்டாக் புரோக்கர்களிடமிருந்து செய்தி வந்தது. நம் கம்பெனி டிபெஞ்சர்களில் பெரும் பகுதி இன்று விற்றுப் போய் விட்டனவாம்.''

ஒரு இக்கட்டான உணர்வு. இன்னும் சில நாட்களில் செலுத்தப்பட வேண்டிய டிபெஞ்சர்கள் இன்றைக்கே எக்ஸ்சேஞ்சில் மூவ் ஆவதாவது?

''யார் வாங்கினார்களாம்?''

''தெரியாது மேடம். விசாரித்துக் கொண்டிருக்கிறோம்.''

அவள் மணியைப் பார்த்துக் கொண்டாள். இன்னும் அரைமணியில் கார்த்திகேயன் வந்து விடுவான். அவன் வரும் போது எவ்வளவு சிறப்பாக, அவனுக்கு அதிர்ச்சி யூட்டும் வகையில் வரவேற்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தாள்? கடைசியில் இந்தப் பணவிவகாரத்தில் சிக்கிக் கொண்டு விட்டாள்.

அவள் ஆழமாக மூச்சை விட்டுக் கொண்டு ''இப்போ நம்மால் செய்யக் கூடாது எதுவும் இல்லை. வங்கி பணத்தை திருப்பிக் கட்டுவதற்கு கொஞ்ச நாள் அவகாசம் கொடுக்கும்படி கேளுங்கள். டிபெஞ்சர்களுக்கு கட்ட வேண்டிய பணத்தை நம் சிட்ஃபண்ட் கம்பெனியிலிருந்து எடுத்துப் பயன்படுத்துங்கள்'' என்றாள், இனி நீங்கள் போகலாம் என்பது போல்.

கோடி ரூபாய் நஷ்டம் என்பது குறைவான தொகை இல்லை. கார்த்திகேயன் வருவதற்கு முன்னால் தான் கொஞ்சம் சாதாரணமாக தென்படுவதற்கு அவகாசம் வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள் அவள். ஆனால் அவளுக்கு முன்னால் உட்கார்ந்திருந்த எக்ஸிக்யூடிவ் இன்னும் ஏதோ சொல்ல வேண்டும் என்பது போல் காத்திருந்தார்.

'என்ன விஷயம்?' என்பது போல் பார்த்தாள்.

ஃபைனான்ஸ் மேனேஜர் தொண்டையை கனைத்துக் கொண்டு ஏதோ சொல்லப் போன பொழுது இண்டர்காம் ஒலித்தது. அவள் எரிச்சலுடன் ரிசீவரை எடுத்து ''ஹலோ'' என்றாள். கீழே இருந்து பீட்டர், ''நான்தான் மேடம்! மேலே வரலாமா? மீட்டிங்கில் இருக்கீங்க போலிருக்கு'' பயந்து கொண்டே கேட்டான்.

''ஓ... நீங்களா! கண்டிப்பாக வரலாம். எல்லாம் நம்ப ஆட்கள்தாம்.''

இரண்டு நிமிடங்கள் கழித்து பீட்டர் அறைக்குள் வந்தான்.

''உட்காருங்கள். என்ன விஷயம்?'' என்று கேட்டாள்.

''நம் கம்பெனி டிபெஞ்சர்களை வாங்கியவர்கள் யார் என்று தெரிந்து விட்டது மேடம்.''

எல்லோரும் அவனை ஆர்வத்துடன் பார்த்தார்கள்.

''யாரு?''

''சால்மன் அண்ட் கம்பெனி.''

ஒரு நிமிடம் அந்த அறையில் காற்று ஸ்தம்பித்து விட்டாற் போல் இருந்தது. சால்மன் அண்ட் கம்பெனி என்றால் ஸ்ரீகல்யாணியின் உற்பத்திகளுக்கு போட்டியாக தலைமுடி சாயத்தை உற்பத்தி செய்யும் நிறுவனம். அதை வீழ்த்துவதற்கு கார்த்திகேயன் இதற்கு முன்பே பலவித மான திட்டங்கள் சொல்லியிருந்தான். அவர்கள் இவ்வளவு நாளாக இப்படிப்பட்ட வாய்ப்புக்காகவே காத்துக் கொண்டிருந்தார்கள் போலும்.

ஜட்டிஸன் பற்றி அவர்களுக்கும் தெரிந்திருக்கும். தம் கம்பெனிக்கு வரப் போகும் இக்கட்டுகளை எல்லாம் தெரிந்து கொண்டு டிபெஞ்சர்களை வாங்கி விட்டார்கள் - கெடு நாள் தாண்டிய பிறகு ஒரு நாள் கூட பொறுத்திருக்க மாட்டார்கள். ரிஜிஸ்டர் ஆஃப் கம்பெனீஸுக்கு புகார் கொடுப்பார்கள்: தாம் எந்த நிலையில் இருந்தாலும் சரி பணத்தைக் கொடுத்தாக வேண்டும்.

''சரி. கெடு நாள் தாண்டுவதற்குள் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்'' என்றாள் ஆழ்ந்த

பெருமூச்சு விட்டு. ''அதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் நம்மால்? வங்கி மேனேஜரிடம் கொஞ்சம் காத்திருக்கச் சொல்லுங்கள்.''

''இதில் ஒரு சின்ன பிரச்னை இருக்கு மேடம்! ரிஜிஸ்டரில் நாம் முழுவதுமாக இன்ஷ்யூரென்ஸ் இருப்பது போல் எழுதியிருக்கிறோம். இது சாதாரணமாக நடக்கிற விஷயம். ஆனால் இப்போ இந்த விபத்து நேர்ந்திருப்பதால், நம்ப சரக்கிலேயே ஏதோ தில்லு முல்லு இருக்கிறது என்றும், வங்கியை ஏமாற்றியிருப்பதாக அந்த வங்கியின் டைரக்டர்களிடம் யாரோ சந்தேகத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.''

''யாராக இருக்கும்?''

''வேறு யாரு? சால்மன் அண்ட் கம்பெனிதான்.''

அவள் முகம் சிவந்து விட்டது. கோபம்... இயலாமை.

''அங்கே சரக்கு மூழ்கிப் போய் முற்றிலுமாக இரண்டு மணி நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் இந்த விஷயம் நமக்கு கடன் கொடுத்த வங்கியின் டைரக்டர் களுக்குத் தெரிந்து போய் அவர்களுக்குள் சர்ச்சை பண்ணிக் கொள்ளக் கூட தொடங்கி விட்டார்களா?'' கோபமாக கேட்டாள்.

''சென்ட்ரல் மினிஸ்டர் ஒருவர் அந்த டைரக்டர்களை இது போல் தூண்டி விட்டிருக்கிறார்.''

''அந்த மினிஸ்டரின் பெயர்?''

''பிலிப்ஸ்.''

''அது போகட்டும். வங்கி டைரக்டர்கள் இப்போ என்ன செய்வதாக இருக்கிறார்கள்?''

''பணம் கட்டினால் ஒழிய மேற்கொண்டு வியாபாரத்தை செய்ய விட மாட்டார்களாம்.''

அவளுக்கு வாடியாவைக் கொலை செய்ய நடந்த முயற்சி நினைவுக்கு வந்தது. பாம்பே டையிங்கின் புகழை குறைத்து விட வேண்டும் என்று விமல் குரூப் அந்த கம்பெனியைச் சேர்ந்த வாடியாவை கொலை செய்வதற் காக குண்டர்களை நியமித்ததும், வாடியா பாடிகார்டுகளை நியமித்துக் கொண்டதும் நினைவுக்கு வந்தன.

தன் மீது கொலை முயற்சி நடந்த போது அந்த விஷப் பிரயோகத்திற்குக் காரணகர்த்தாக்களாய் தான் சந்தேகப் படும் நபர்களில் ஒருத்தராக சால்மன் கம்பெனியை பிரதாப்பிடம் குறிப்பிட்டிருந்தாள் அவள். ஆனால் ஆபத்து இந்த உருவத்தில் வரும் என்று அவள் ஊகித்திருக்க வில்லை.

மாஃபியா டைப் கொலைகள் வியாபாரத் துறைக்குள் நுழைந்தது கூட சமீபகாலத்தில்தான் தொடங்கியது. யார் செய்கிறார்கள் என்று தெரியும். ஆனால் கோர்ட்டில் எதுவுமே நிற்காது. வாடியாவாலேயே ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது.

அவள் யோசனையிலிருந்து மீண்டு ''நாம் வேறொரு வங்கி மூலமாக முயற்சி செய்வோம்'' என்றாள்.

''கொஞ்சம் தாமதமாகும் மேடம்.''

''பரவாயில்லை. அந்த விஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க இந்த டிபெஞ்சர்களுக்குப் பணம் தரும் விஷயத்தில் தாமதம் எதுவும் செய்யாதீங்க. எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவு நம் சிட் ஃபண்ட் கம்பெனி யிலிருந்து எடுத்துக் கொடுங்கள். டிபெஞ்சர்களுக்கு மொத்தமாக எவ்வளவு தர வேண்டும்?'' கேட்டாள்.

''ஒரு கோடியே ஐம்பது லட்சம்.''

''நஷ்டம் ஏற்பட்ட இந்தப் பணம் போக எஞ்சிய ஒரு கோடியே ஐம்பது லட்சமாவது ரெடியாக இருக்கா?''

''ஐம்பது லட்சம் வரையில் இருக்கும் மேடம்.''

''மீதி பணத்தை எங்கேயிருந்து கொண்டு வருவதாக இருக்கீங்க?'' அவள் கோபம் பாதரசமாக ஏறிக் கொண்டே இருந்தது. ''அதைக் கூட சிட் ஃபண்டிலிருந்தே எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்தீங்களா?''

ஜெனரல் மேனேஜரும் ஃபைனான்ஸ் மேனேஜரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''என்ன விஷயம் சொல்லுங்கள்?'' என்றாள் அவர்கள் மௌனத்தால் மேலும் எரிச்சலடைந்து.

''இந்தக் கோடி ரூபாய்களும் நமக்கு அந்நிய செலாவணியில் கிடைக்கும் இல்லையா மேடம்?'' என்றார் ஃபைனான்ஸ் மேனேஜர். ''கொஞ்ச நாட்களுக்கு முன்னால் நமக்கு ரகசியமாக ஒரு டிப் கிடைத்தது. நம் நாட்டு ரூபாயின் மதிப்பு குறைந்து விடப் போகிறது என்று.''

''தெரியும்'' என்றாள் கடுமையான குரலில்.

''அப்படி என்றால் கோடி ரூபாய் மதிப்புடைய டாலர்களுக்கு நமக்கு ஒரு கோடியே நாற்பது லட்சம் கிடைக்கும் இல்லையா?''

''எனக்கு நீங்கள் பொருளாதார சாஸ்திரத்தைக் கற்பிக்கத் தேவையில்லை. விஷயத்தை சொல்லுங்கள்.''

''அந்த நாற்பது லட்சங்களையும் டிபெஞ்சர்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தோம்.''

அவள் கட்டில் விளிம்பைக் கையால் ஓங்கி அடித்து விட்டு ''அதாவது அந்த நாற்பது கூட இப்பொழுது நம்மிடம் இல்லை. அப்படித்தானே?'' என்று கத்தினாள்

யாருமே பேசவில்லை.

''கிடைக்குமோ கிடைக்காதோ என்று கூடத் தெரியாத அதிர்ஷ்டத்தை நம் ஸ்தாபனத்தின் கௌரவ தோடு முடிச்சுப் போட வேண்டும் என்றும், அதனால் நாம நிர்மூலமானாலும் பரவாயில்லை என்றும் நினைத்துக் கொள்ளும் அளவிற்கு உயர்ந்த யோசனை உங்களுக்குள் யாருக்கு உதித்தது?''

''கார்த்திகேயனுக்கு.''

அந்த அறை திடீரென்று குளிர்ந்து விட்டாற் போல் தோன்றியது. அதுவரை சந்தடியாக இருந்த சூழ்நிலையில் திடீரென்று நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டு விட்டதால் கடியாரத்தின் வினாடிமுள்ளின் சத்தம் பயத்தைத் தோற்றுவிக்கும்படி பெரிதாக கேட்டது.

அந்த பயத்தை தன் மன ஓட்டத்துடன் ஒப்பிட்டு பார்த்துக் கொண்டு அவள் யோசனையில் ஆழ்ந்து போனாள். தான் எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டோம் என்று அவளுக்கு நன்றாக புரிந்து விட்டது இப்பொழுது

சிறுவன் ஒருவனுக்கு புத்தாடை அணிவித்து பள்ளிக் கூடத்திற்கு அனுப்பினாள். அங்கே அச்சிறுவன் கவிதை சொன்னதும் வாத்தியார் புகழ்ந்த போது பூரித்துப் போனாள். ஆனால் தான் கிண்டர்கார்டன் மாணவனை ஐந்தாம் வகுப்பில் உட்காரவைத்து விட்டோம் என்ற விஷயத்தை மறந்து போய் விட்டாள். வெறுமே கவிதை பாடிவிட்டால் மட்டும் ஐந்தாம் வகுப்பில் உட்காரும் தகுதி

[illegible]த்து விடாது. கலைஞன் என்பதால் அழகாக படம் [illegible]ட்டான். வர்ணங்களின் விஷயத்திலும் அப்படியே. [illegible]திரியை வீழ்த்துவதற்கு பேப்பர்களின் உதவியை பெற்றுக் [illegible]கொண்டால் பலன் கிடைக்கும் என்ற ஐடியாவை [illegible]ால்லுவதற்கு பிசினஸ் மேக்னெட்டாக இருக்கணும் [illegible]ன்ற தேவையில்லை. கொஞ்சம் ஐ.க்யூ. இருந்தாலே [illegible]போதும்.

முதல் முதலாக தளிர் நடைபோடும் மகனைப் [illegible]ார்த்துப் பூரித்துப் போய் விடுவார்கள் தாய் தந்தையர். இந்த உலகத்தில் வேறு யாருமே பண்ணாத காரியத்தைத் [illegible]ன் மகன் மட்டுமே பண்ணி விட்டான் என்பது போல் [illegible]ந்தோஷப் படுவார்கள். அவளும் அது போலவே [illegible]ந்தோஷப்பட்டு விட்டாள். அந்தச் சந்தோஷத்தில் [illegible]வனைக் கூட்டிக் கொண்டு போய் மராத்தான் ரேஸில் நிற்க வைத்தாள். எல்.சி.யைப் [illegible]ற்றியும், ரூபாய் டிவால்யுயேஷனில் லேவாதேவிகளைப் பற்றியும், ஜட்டிஸனைப் பற்றியும் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டது அவளுடைய பேராசை.

சால்மன் அண்ட் கம்பெனிக்காரர்கள் முட்டாள்கள் அல்ல. சந்தர்ப்பத்திற்காக காத்துக் கொண்டு இருந்திருப் பார்கள். எதிர்த்து நிற்க முடியாமல் ஏமாந்து போன சமயத்தில் பழிவாங்கி விட்டார்கள்.

அவள் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆனாள். உடம்பு சுவாதீனமில்லாமல் போய் விட்டது என்ற வேதனையை துணை கிடைத்து விட்டது என்ற நிச்சிந்தை தோற்கடித்து விடவே அந்தச் சந்தோஷத்தில் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆனாள். பிசினஸ் மேக்னட் ஆக இருப்பவர்கள் தூக்கத்தில்

கூட ஓய்வெடுத்துக் கொள்ளக் கூடாது என்ற அடிப்படை உண்மையை ஒரு வினாடி மறந்து போய் விட்டாள். ஒரு வினாடி என்பது கண்மூடித் திறக்கும் நேரமாகவே இருக்கலாம். ஆனால் அந்த நேரம் பொன் போன்றது.

இந்த விஷயமெல்லாம் கார்த்திகேயனிடம் சொன்னால் ''கல்யாணி! இந்த சதித்திட்டங்கள், தந்திரங்கள் எல்லாம் எதுக்கு? மனிதன் நிம்மதியாக வாழ்வதற்கு எவ்வளவு வேண்டும்?'' என்பான்.

''எனக்கு கீழே வேலை செய்யும் மூவாயிரம் தொழிலாளர்களை என்ன செய்யச் சொல்றீங்க கார்த்திகேயன்?'' என்று கேட்க வேண்டும்.

அவளுக்கு தன் ஆதர்சமூர்த்தியான செங்கிஜ் கானைப் பற்றி நினைக்கு வந்தது.

அமைதியை விரும்புகிறவனும், எல்லோரின் கண்ணோட்டத்தில் நல்லவனுமான தம்பிக்கு செங்கிஜ் கான் பாதிராஜ்ஜியத்தைத் தருகிறான். தம்பி தானியங்களை விளைவிக்கிறான். பணத்தை அபிவிருத்தி செய்கிறான். அமைதிக்காக மதப் பிரசாரகர்களை வரவழைக்கிறான். ஒரு நாள் விஷயத்தை தெரிந்து கொண்டு இரவோடு இரவாக செங்கிஜ் கான் வந்து தம்பியின் கீழே வேலை பார்க்கும் ஐநூறு அதிகாரிகளைக் கழுத்தை வெட்டிக் கொன்று விடுகிறான்.

''வேதாந்தம் நெருப்புக் கோழியைப் போன்றது தம்பீ! நம்முடையது ஓநாய் வம்சம். ஓநாய்கள் சுற்றிக் கொண்டிருக்கும் இந்த ஜனாரண்யத்தில் வேதாந்தம் மலைகள் மீது மூக்கை மூடிக் கொண்டு சுவாசிப்பதற்குத் தான் பயன்படும். இன்றிரவு நான் இவர்களை எல்லாம்

இப்படி கொன்றிருக்கா விட்டால் நாளைக்கு உன் உயிர் ஆலத்தால் குத்தப்பட்டு தொங்கிக் கொண்டிருக்கும்.''

''ஆனால் நான் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்ய வில்லையே அண்ணா! எங்கள் வாழ்க்கையை நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கள் சாப்பாட்டை நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்.''

''ஆனால் ராஜ்ஜியத்தின் எல்லைக்கு அப்பால் பாலைவனத்தில் இருக்கும் பிச்சைக்காரர்களுக்கு அந்தச் சாப்பாடு கூட இல்லை. அதனால் அவர்களுக்கு நியாயம் வேண்டும். அது காடுகளில் அமலாக்கப்படும் நியாயம்'' என்றான் செங்கிஜ் கான்.

அந்தக் காட்டுமிராண்டித்தனமான நியாயம் இன்னும் மாறவில்லை. இன்னும் ஹீனமாகி விட்டது. சால்மன் கம்பெனியை அவள் பழிவாங்க வேண்டும். ஏசுபிரானை போல் நீதி வாக்கியங்களை சொன்னால் சால்மன் கேட்க மாட்டான். புத்தரைப் போல் அமைதி வார்த்தைகளை சொன்னால் டிபெஞ்சர் ஹோல்டர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

அவள் ஒன்றுதான் நினைத்துக் கொண்டாள். ஒரு கணவனாக, ஒரு மனிதனாக கார்த்திகேயன் உயர்ந்தவன் தான். ஆனால் அந்த உயர்வு அவளுக்கு வேண்டியதில்லை.

அவள் அந்த விதமாக யோசித்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் கார்த்திகேயன் படியேறி மேலே வந்து கொண்டிருந்தான். அவனுக்கு அங்கிருந்த சூழ்நிலை என்னவோ போல் இருந்தது. வெளியே நிறைய கார்கள் நின்றிருந்ததால் ''உள்ளே யார் இருக்காங்க?'' என்று கேட்டான்.

வேலைக்காரன் விவரமாக சொன்னான். கார்த்திகேயன் பெட்ரூமுக்கு வெளியிலேயே உட்கார்ந்து கொண்டான்.

''உள்ளே போங்க சாமீ!'' என்றான் வேலைக்காரன், உங்க படுக்கையறைக்குள் நீங்கள் போவதற்கு என்ன தடை என்பது போல்.

''வேண்டாம், பரவாயில்லை'' என்றான் கார்த்திகேயன்.

உள்ளே ஸ்ரீகல்யாணி ''சரி, நீங்கள் போகலாம். ஒரு வாரத்திற்குள் வரக்கூடிய அவசரத் தொல்லை எதுவும் இல்லையே?'' என்றாள்.

''இருக்கு மேடம்.''

அவள் நெற்றியை சுளித்துவிட்டு ''என்ன?'' என்றாள்.

''சிட் ஃபண்ட் கம்பெனியின் டிபாசிட்டுகள் இன்னும் நான்கு நாட்களில் மெச்சூர் ஆகிவிடும்.''

வந்து விட்டது. அலை வந்து நாசம் செய்து விட்டது. பெருத்த ஓசையுடன் வந்த வெள்ளம் நிசப்தமாக திரும்பிப் போய்விட்டது. போகும் போது சகலத்தையும் துடைத் தெறிந்து விட்டுப் போய் விட்டது. சிதிலங்களைப் பார்வை யிடுவது ஒன்றுதான் எஞ்சியிருந்தது.

சிட் ஃபண்ட் டிபாசிட் வழங்குவது ஒருநாள் தாமதமாகிவிட்டால், விஷயத்தை தெரிந்துகொண்டு எதிரிகள் நாளேடுகளில் பிரசாரம் செய்து விடுவார்கள். (முன்பு தாங்கள் பயன்படுத்திய டெக்னிக்தானே அது.) அடுத்த நிமிடமே கஸ்டமர்கள் எல்லோரும் படையெடுத்து விடுவார்கள். ஒருமுறை நம்பிக்கை போய் விட்டால் சிட் ஃபண்ட் கம்பெனி கால்காசுக்குக் கூட பெறாது.

வினாடிகள் நிமிஷங்களான பிறகு ''போய் வருகிறோம் மேடம்'' என்றார்கள் அவர்கள்.

அவள் பதில் பேசவில்லை. அவர்கள் மௌனமாக நகர்ந்தார்கள்.

ஒரு வினாடிக்குப் பிறகு கார்த்திகேயன் உள்ளே வந்தான். அவ்வளவு நாட்களாக பிரிந்திருந்த உத்வேகத்தோடு அவள் அருகில் வந்து நெற்றியில் முத்தம் பதித்து விட்டு ''எப்படி இருக்கிறாய் கல்யாணி?'' என்று கேட்டான்.

'டாமிட்! அந்த சால்மன் கம்பெனி' என்று எண்ணிக் கொண்டாள்.

''என்ன? இங்கேயே மீட்டிங் ஏற்பாடு செய்திருக்கிறாயே? ஏதாவது முக்கிய விஷயமா?''

அவள் சிரிக்க முயன்று ''இல்லை'' என்றாள்.

அவன் குனிந்து அவள் நெற்றி வகிட்டில் முத்தமிட்டான்.

'என்ன செய்ய வேண்டும் இப்பொழுது?'

''உனக்காக டில்லியிருந்து என்ன வாங்கிக் கொண்டு வந்தேன் தெரியுமா?'' அவன் வெளியே போய் பெரிய பாக்கெட்டை எடுத்துக் கொண்டு வந்தான்.

''சக்கர நாற்காலி, லேடஸ்ட் மாடல். இனிமேல் நீ வீடெல்லாம் சுற்றி வரலாம். தோட்டத்திலும் சுற்றலாம்.''

''தாங்க்ஸ்.''

'சால்மன் கம்பெனிக்காரர்கள் இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பார்கள்?'

''நீ ஏன் இப்படி மௌனமாக இருக்கிறாய்?''

''ஒன்றுமில்லை. நன்றாகத்தானே இருக்கிறேன்.''

அவன் அவள் கைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு உதட்டில் வைத்துக் கொண்டான். ''இன்றிரவு நாம் தோட்டத்தில் கொண்டாடலாம் கல்யாணி!''

'அந்தக் கம்பெனி எக்ஸிக்யூடிவ்கள் எல்லோரும் ஹோட்டலில் கூடி இன்றிரவு கொண்டாடப் போகிறார்களோ என்னவோ.'

அவள் தன்னையறியாமல் கைகளை பின்னால் இழுத்துக் கொண்டாள். அதை அவன் கவனித்தான். உணர்ச்சி வசப்பட்டவனாக கத்தி விட்டான்.

''கல்யாணி! உன் கைகள்... உன் கைகள்...''

''ஆமாம். சுவாதீனத்திற்கு வந்து விட்டன.''

''எப்பொழுது?''

''இரண்டு நாட்களுக்கு முன்னால்.''

''பின்னே... பின்னே போனில் ஏன் சொல்ல வில்லை?''

''திடீரென்று சொல்லி ஆச்சரியப்படுத்த வேண்டும் என்று தோன்றியது.''

அவன் பைத்தியக்காரன் போல் அவள் கழுத்தையும், கன்னத்தையும் அளவுக்கு மீறிய சந்தோஷத்தோடு முத்தமிட்டுக் கொண்டே ''இதென்ன? இவ்வளவு சாதாரண மாகவும், சலனமில்லாமலுமா சொல்லுவது?'' என்றான்.

'ஒரு மணி நேரத்திற்கு முன்னால் மட்டும் நீங்கள் வந்திருந்தால், ஊகித்தும் பார்க்க முடியாதபடி த்ரில்லிங்காக சொல்லியிருப்பேன்' என்று நினைத்துக் கொண்டாள்.

அவன் தன் ஆனந்தத்தையும், ஆவேசத்தையும் அடக்கிக் கொள்வதற்காகத்தானோ என்னவோ அவள் மார்பின் மீது தலை வைத்துக் கண்களை மூடிப் படுத்திருந்தான்.

அவனிடமிருந்து தன் கைகளை விடுவித்துக் கொண்டு அவற்றைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்தக் கைகளால் தன் கணவனுக்கு ரொமாண்டிக்காக த்ரில்லிங்கை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

இப்பொழுது இனி ரொமான்ஸ் இல்லை. ரொமான்ஸில் த்ரில்லும் இல்லை. இப்பொழுது இந்தக் கைகள் பாடம் புகட்டும், அங்கே ஹோட்டலில் குடித்துக் கொண்டே தன்னைப் பற்றி கிண்டல் செய்து ஜோக் அடித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு.

22

பக்கத்தில் அறிவிப்பாளர் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருக்கையில் பப்ளிக் மைக்கில் மங்கோலியன் மொழியில் கார்த்திகேயனை உத்தேசித்து ''ஐ லவ் யூ'' என்று சொன்ன பிறகு விமான நிலையத்திற்கு வெளியே வந்து பார்க் பண்ணியிருந்த காரில் உட்கார்ந்து கொண்டாள் அனுஜா.

ஆனால் காரை ஸ்டார்ட் செய்யவில்லை. அதுவரை இருந்த ஆர்வத்தை யாரோ துடைத்தெறிந்து விட்டார் போல் இருந்தது. காரை ஸ்டார்ட் பண்ணவும் தெம்பு இல்லாதவளாய் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

கார்த்திகேயனை விட ஸ்மார்ட்டான இளைஞர்கள் நிறைய பேர் எத்தனையோ சந்தர்ப்பங்களில் அறிமுகமாகி யிருக்கிறார்கள் அவளுக்கு. இவனை மட்டும் அவள் ஏன் இவ்வளவு விரும்புகிறாள்? கடந்த இரண்டு நாட்களாக இதைப் பற்றியே தான் அவள் யோசித்துக் கொண் டிருந்தாள். அதற்கு பதில் கூட அவளுக்குக் கிடைத்து விட்டது.

அவன் கையில் இருக்கும் கலை? அவனுடைய அழகு? ஊஹூம். இதொன்றுமே இல்லை. அவனுடைய மனமுதிர்ச்சி.

அவள் விமான நிலையத்தைப் பார்த்தாள். இன்னும் விமானம் புறப்படவில்லை. அந்த விமானத்தில் அவன் போய் விடுவானே என்று வருத்தமாக இருந்தது. தொண்டையிலிருந்து வந்த துக்கத்தை வேண்டுமானால் விழுங்கிக் கொள்ள முடிந்ததே தவிர கண்ணிலிருந்து வெளியேறும் கண்ணீரை எப்படி விழுங்குவாள்?

அவளுக்குத் தன் கிளாஸ்மேட் சம்பந்த்தைப் பற்றிய நினைவு வந்தது. அவன் கேர்ல் பிரண்டை பற்றியும் நினைவு வந்தது.

ஒரு முறை அவர்கள் எல்லோரும் என்.சி.சி.க்காக ஒரு மாதகாலம் ராஜஸ்தானுக்கு போக வேண்டியிருந்தது. வழியனுப்புவதற்காக சம்பந்த்தின் சிநேகிதியும் வந்திருந் தாள். இருவரும் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந் தார்கள். வேன் புறப்பட்ட பிறகு சம்பந்த் தங்களோடு சேர்ந்து ஜோக்கடித்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்த போது கேட்டாள் அவள்.

''இவ்வளவு சந்தோஷமாக எப்படி இருக்க முடிகிறது சம்பந்த் உன்னால்? நீ கல்யாணம் செய்து கொள்ளப்

போகும் பெண்ணை ஒரு மாத காலம் பிரிந்திருக்கப் போகிறாயே?''

''நீயாக இருந்தால் என்ன செய்வாய்?'' சம்பந்த் சிரித்துக் கொண்டே கேட்டான்.

'பஸ் நிற்கும் ஒவ்வொரு இடத்திலேயும் இறங்கி டில்லிக்கு எஸ்.டி.டி. செய்திருப்பேனோ என்னவோ.' மனதில் நினைத்துக் கொண்டாள். வெளியில் மட்டும் ''நான் எங்கேயோ படித்திருக்கிறேன் சம்பந்த்! ஒரு இளைஞன் தன் கேர்ல் பிரண்டுக்கு சென்ட்ரல் ஸ்டேஷனில் விடை கொடுத்து அனுப்பி விட்டு, பிரிவைத் தாங்க முடியாமல் காரில் செங்கல்பட்டிற்கு போய் சந்திக்கிறான். காதல் என்றால் அப்படித்தான் இருக்குமோ?'' என்றாள்.

அதைக் கேட்டதும் அவன் பெரிதாக சிரித்து விட்டு அதைப் பற்றி வேனில் இருந்த அத்தனை பேருக்கும் சொல்லி அழ வைத்தான். அதற்குப் பிறகு ரொம்ப நாட்கள் வரையில் கல்லூரியில் எல்லோரும் ''செங்கல்பட்டிற்கு எப்பொழுது போகப் போகிறாய் அனுஜா?'' என்று டீஸ் செய்து கொண்டிருந்தார்கள்.

சிநேகிதி ஒருத்தி சொன்னாள். ''நாங்கள் ஒன்றும் அமைச்சரின் மகள் இல்லையம்மா, காரை எடுத்துக் கொண்டு ரயிலுடன் கூடவே ஓடுவதற்கு.''

உணர்வுகளுக்கும் பணத்திற்கும் சம்பந்தம் என்னவோ, அனுஜாவுக்குப் புரியவில்லை.

விமானம் காற்றில் எழும்பிய போது அவள் அந்தப் பக்கமாக பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அந்த விமானத்தை பார்த்த பொழுது பொறாமை

ஏற்பட்டது, அவனைத் தன்னிடமிருந்து பிரித்து அழைத்துப் போய்விட்டதற்கு.

தொலைவில் மேகங்களுக்கு இடையே விமானம் சின்ன பறவையைப் போல் தென்பட்டுக் கொண்டிருந்தது. அவன் என்ன செய்து கொண்டிருப்பான் உள்ளே? கண்ணாடி வழியாக அவளுக்காக பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டிருப்பானா? போய்க் கொண்டிருந்த விமானம் தன் உயிரையே எடுத்துக் கொண்டு போய் விட்டாற்போல் இருந்தது.

நகரும் ரயிலில் நண்பன் உட்கார்ந்திருக்கும் ஜன்னல் கண் மறைவாகி விட்டதும் கையை ஆட்டுவதை நிறுத்தாமல், கடைசி பெட்டி கண் மறைவாகும் வரையில் செயல் மறந்து நின்று விட்டு, ஏதாவது அற்புதம் நிகழ்ந்து ரயில் பின்னால் திரும்பி வந்து விடுமோ என்று எதிர்பார்ப்புடன் காத்திருப்பது, தங்களை பிரித்த ரயில் மீது கோபத்துடன், காலியாக இருக்கும் பிளாட்ஃபாரத்தைப் பார்த்து துக்கத்துடன் நகருவது... பிரிவின் வேதனை என்றால் அதுதான்.

தன்னுடைய சிநேகிதியின் வாதம் தவறு. இதில் பணத்தை பற்றிய பேச்சு எங்கே இருக்கும்? காதலில் கண்ணீர்தானே செலவாகும்?

அவள் நினைத்துக் கொண்டாள். 'பேரன், பேத்தி எல்லோரும் என் படுக்கையின் சுற்றிலும் சூழ்ந் திருப்பார்கள். மகனும், மருமகளும் துக்கத்தோடு என்னையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். மரணதேவதை என் அருகில் நின்று கொண்டு ''இதயம் முழுவதும் நன்றாக மூச்சை எடுத்துக் கொள். இதுதான் உன் கடைசி மூச்சு.'' என்று சொல்லும். எனக்கு நானே சிரித்துக் கொள்வேன்.

பாபண தேவதை ஆச்சரியப்படுவாள். அதற்கு எப்படி தெரியும் நான் ஒரு நிமிடம் அதிகமாக வாழ்வதாக இருந்தாலும் இதயம் முழுவதும் மூச்சுக் காற்றை விட உன் நினைவுகளை நிரப்பிக் கொண்டு சந்தோஷமாக இருப்பேன் என்று?'

நினைவுகளை பின்னால் தள்ளிவிட்டு விமானம் போய்விட்டது. அவள் ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்து விட்டு கடைசியில் காரைக் கிளப்பினாள். வீட்டிற்குப் போக பிடிக்கவில்லை. ஜனாதிபதி மாளிகை பக்கமாக இருந்த விசாலமான சாலை வழியாக காரைச் செலுத்தினாள். அமெரிக்கத் தூதரகத்திற்குப் பக்கமாக போய்க் கொண்டிருந்த போது அவளுக்கு அந்த யோசனை வந்தது.

காரை யூனிவர்சிடியை நோக்கித் திருப்பினாள். நியேட்டர் டிபார்ட்மெண்டின் ஸ்டூடியோ காலியாகத்தான் இருந்தது. அதன் இன்சார்ஜ் சம்பந்திடம் சென்று ''எனக்கு ஒரு உதவி செய்வாயா?'' என்று கேட்டாள்.

''என்ன?'' என்றான்.

அவள் தான் என்ன செய்ய விரும்புகிறாள் என்பதைப் பற்றி சொன்னாள். சம்பந்த் திடுக்கிட்டு ''உனக்கு மூளை கலங்கி விட்டது'' என்றான்.

அவள் சிரித்துவிட்டு ''ஆமாம். காதல் வயப்பட்டு விட்டேன் இல்லையா?'' என்றாள்.

''நாம் ஸ்டூடியோவை இப்படி பயன்படுத்திக் கொண்டதாக யாருக்காவது தெரிந்து போய்விட்டால்?''

''பத்து நாள் சஸ்பெண்ட் பண்ணுவார்கள். மிஞ்சிப் போனால் ஆயிரமோ இரண்டாயிரமோ ஃபைன் போடு

வார்கள். காதலுக்காக அவ்வளவாவது பண்ணக் கூடாதா என்ன?''

''அனுஜா! எனக்கு அந்த கார்த்திகேயனைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது. என் மீதே எனக்குக் கோபம் வருகிறது.''

''பொறாமை என்றால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் உன் மேல் உனக்குக் கோபம் எதுக்கு?''

''என்னை விட்டுவிட்டு வேறொருத்தனை நீ காதலித்ததற்கு.''

''ஷட் அப்!'' என்றாள் சிரித்துக் கொண்டே.

இருவரும் ஸ்டூடியோவுக்குள் நுழைந்தார்கள். சம்பந்த் சொன்னான். ''நாம் என்னவோ பெரிதாக அனுபவித்து விட்டதாக நினைத்துக் கொள்வோம் நமக்குள். இதைவிட உயர்வாக அனுபவிக்க முடியும் என்று அப்புறமாக நமக்குத் தெரியவரும். நான் காதலித்த பொழுது எனக்கு காதல் ஒரு தேவை. உன்னைப் பார்த்தால் காதல் ஒரு நிரந்தரமான அனுபவம் என்று தோன்றுகிறது. ஒரு காலத்தில் என் காதலையும், காதலியையும் அவ்வளவு சர்வ சாதாரணமாக எப்படி எடுத்துக் கொண்டேனோ இப்போ யோசித்தால் ஆச்சரியமாக கூட இருக்கிறது.''

''அந்தப் பெண்?''

''கணவனோடு சந்தோஷமாக இருக்கிறாள். ஆறாவது மாதம் என்று நினைக்கிறேன். நான் சொல்வது உங்கள் இருவரையும் பற்றியல்ல. எங்களைப் போன்ற இளைஞர்களைப் பற்றி. வயது ஏறஏற மனசு கூட கரடுதட்டுப் போவது நான் பண்ணிய துரதிர்ஷ்டம்.''

ஸ்டூடியோவில் யாருமே இல்லை. சம்பந்த் எல்லா விளக்குகளையும் போட்டுவிட்டு கேமிராவைக் கொண்டு வந்து நிறுத்தினான். அதற்குள் அனுஜா வீடியோ லைப்ரரியிலிருந்து தனக்கு வேண்டிய கேசட்டுகளைக் கொண்டுவந்தாள். ''தாங்க்ஸ்'' என்றாள் அவனுக்குப் பக்கத்தில் வந்து உதவி செய்து கொண்டே.

''எதுக்கு?''

''என் காதலை கேலி பண்ணாததற்கு. வேறு யாராவது இருந்திருந்தால் 'இதில் என்ன இருக்கு? காதல் வயப்பட்ட புதிதில் எல்லோரும் அப்படித்தான் பைத்தியமாக இருப்பாங்க' என்று சொல்லி விடுவார்கள். நீ அப்படி சொல்லவில்லையே?''

''நாலைந்து வருடங்களுக்கு முன்பாக இருந்தால் அப்படி சொல்லியிருப்பேனோ என்னவோ? இப்பொழுது உன்னுடைய மனநிலை எனக்குத் தெரியும். அதனால் அப்படி சொல்ல மாட்டேன். அதான் சொன்னேனே, கார்த்திகேயனைக் கண்டால் எனக்கு பொறாமையாக இருக்கிறது என்று. ஆனாலும் உனக்காக... உனக்காக இதை எல்லாம் செய்கிறேன்.''

''எங்களுக்கு மகன் பிறந்தால் உன் பெயரையே வைத்து விடுகிறோம். போதுமா!'' உத்தரவாதம் தருவது போல் சொன்னாள்.

''கோவிந்த், கோபால் இவர்களிடம் கூட இதே வாக்குறுதியைத் தந்தாயாம்.''

''ஆமாம். ஆஸ்பத்திரியில் உதவி செய்ததற்கு.''

''இப்படி எல்லோருக்கும் வாக்குறுதிகள் கொடுத்துக் கொண்டே போனால் காந்தாரியைப் போல் நூறு பேருக்கு மேலேயே பெற வேண்டியிருக்கும்.''

''எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.''

''நான் ரெடி.''

''கன்னம் பழுத்து விடும் ஜாக்கிரதை!''

''கண்ட கண்ட சினிமாக்களை பார்த்து விட்டு எதை எதையோ ஊகித்துக் கொள்வது உன் வழக்கமாகி விட்டது. நான் ரெடி என்றது கேமிராவுக்காக. அப்போ தொடங்கலாமா?''

அவள் கேமிராவுக்கு முன்னால் வந்து நின்றாள்.

★

''ஏன் என்னவோ போல் இருக்கிறாய்?'' கார்த்திகேயன் அவள் மார்பிலிருந்து தலையை உயர்த்திக் கேட்டான்.

கல்யாணி சுதாரித்துக் கொண்டு ''ஒன்று மில்லையே?'' என்றாள்.

''இல்லை. ஏதோ இருக்கிறது. உனக்குச் சொல்ல விருப்பம் இல்லை என்றால் வேண்டாம்.''

''அந்த சால்மன் அண்ட் கம்பெனிக்காரர்கள் எல்லா பக்கத்திலிருந்தும் நம்மை வீழ்த்துவதற்கு முயற்சி செய்து வருகிறார்கள்.'' என்று நடந்ததை எல்லாம் சொன்னாள்.

ஒருவிதமான உத்வேகம் நிரம்பிய சூழ்நிலையில் கார்த்திகேயன் எல்லாவற்றையம் கேட்டு விட்டு ரொம்ப நேரம் மௌனமாக இருந்தான். கல்யாணி மேலும் சொன்னாள். ''சிட் ஃபண்ட் கம்பெனி விஷயத்திலும் நாம் சிக்கலில் மாட்டிக் கொள்ளப் போகிறோம். ஒரே ஒரு பட்டுவாடா தாமதமாகி விட்டால் கூட எதிரிகள்

[illegible]களில் போட்டு விடுவார்கள். மக்களுக்கு ஒரு [illegible] நம் மீது நம்பிக்கை போய்விட்டால் போதும். [illegible]டுகளைத் திருப்பி வாங்குவதற்காக கும்பலாக [illegible] வரத் தொடங்கி விடுவார்கள்.

"நாம் எந்தக் கப்பலில் சரக்கை அனுப்பி வைக்கிறோம்? அந்த ஷிப்பிங் கம்பெனியின் பின்னணி என்ன? இதை [illegible]யல்லாம் பார்த்துக் கொள்ளாமல் கையெழுத்துப் [illegible]ட்டிருக்கக் கூடாது." கார்த்திகேயன் நொந்து [illegible]கொண்டான்.

"இல்லை" என்றாள் கல்யாணி. "நானாக இருந்தாலும் அதைத்தான் செய்திருப்பேன். இதை எல்லாம் பார்த்துக் கொள்வது முதலாளியின் வேலை இல்லை." அவள் நிறுத்தி விட்டு மீண்டும் தொடர்ந்தாள். "ரூபாயின் மதிப்பு வீழ்ந்து விட்டதன் மூலமாக வரப்போகும் லாபத்தை நம் வியாபாரத்தின் முக்கியமான தேவை களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தது தான் நாம் செய்த தவறு."

"அந்த யோசனையைச் சொன்னது ஜெனரல் மேனேஜர்" என்று சொல்ல வந்தவன் நிறுத்திக் கொண்டான். அது இப்போது எதிரடி கொடுத்து விட்டது. அதனால் தவறை அவர் மீது தள்ளி விடுவது நியாயம் இல்லை. ஒருக்கால் உண்மையாகவே ரூபாயின் மதிப்பு குறைந்து போய் தம் கம்பெனிக்கு ஐம்பது லட்சம் லாபம் வந்தால் இதே ஜெனரல் மேனேஜர் எல்லோரையும் விட முன்னால் தானே வந்து "பார்த்தீங்களா! நான் சொன்ன யோசனை எவ்வளவு லாபத்தை ஈட்டி தந்திருக்கிறது" என்று சொல்லியிருப்பார் கல்யாணியிடம்.

அவனுக்கு இந்தத் துறை புதியது. அதனால் அந்தந்த துறைகளில் நிபுணர்களாக உள்ளவர்களின் ஆலோசனை களைப் பெற்றுக் கொண்டான். இது எல்லா இடங்களிலும் நடக்கும் விஷயம்தான். ஆனால் பொறுப்பு அவனுடையது தான். இதைப் பற்றி மேலும் விவாதம் தேவையில்லை.

''நாம் ஒரு காரியம் செய்யலாம்'' என்றாள். அவன் யோசனையிலிருந்து மீண்டு ''என்ன செய்யலாம்?'' என்று கேட்டான்.

''என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.''

''எதை செய்ய வேண்டும் என்றாலும் பணம் வேண்டும்.''

''பணம் இல்லாமல் செய்யக் கூடியது ஒன்று இருக்கிறது.''

''என்ன அது?''

''ரொமான்ஸ்.''

அவள் எதைப் பற்றிப் பேசுகிறாள் என்று புரிந்ததும் அவள் முகத்தைப் பார்த்தான். அவள் சிரித்தாள். மனதில் மட்டும் நினைத்துக் கொண்டாள். 'ஆம். இவ்வளவு நாட்களாக என் வாழ்க்கையில் பணம், அதிகாரத்தைத் தவிர வேறு எதிலும் ஆர்வம் இல்லாமல் போய்விட்டது. என் மூளையைக் கூறு போட்டுப் பிரிக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. இப்பொழுது பார்த்து விடுகிறேன். நான் எந்த காரியத்தையாவது செய்யும் போது அதைப் பற்றியே ஏன் யோசிக்க மாட்டேன் என்கிறேன்?' அவள் அவன் கேசங்களில் விரல்களால் அளைந்து முகத்தை அருகில் இழுத்துக் கொண்டு முத்தம் பதித்தாள். ''கைகள்

சுயராஜ்யத்திற்கு வந்த பிறகு உங்களுக்குக் கொடுக்கிற முதல் முத்தம் இது. நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''எக்ஸலெண்ட்!''

''என்னால் உங்களுக்கு எதுவுமே செய்ய முடியவில்லை. நீங்கள் சந்தோஷமாக படுத்துக் கொண்டு ஜாலியாக இருக்கும் போது குறைந்த பட்சம் உங்களை நெருங்கி முத்தமிடகூட முடியவில்லை என்னால்'' என்றாள்.

அவன் சூழ்நிலையை எளிதாக்க விரும்பி ''யார் கொடுத்தால் என்ன?'' என்று சொல்லிக் கொண்டே அவள் கழுத்திலிருந்து கைகளை கீழே கொண்டு போனான். அவள் கைவிரல்கள் அவன் முதுகுத்தண்டு வழியாக கீழே பயணித்தன. அவன் ஆவேசம் தாங்க முடியாதவனாக அவள் உடம்பின் மீது மூக்கால் நேர்க்கோடு போட்டுக் கொண்டே கீழே இறங்கினான். அதற்குள் அது அவளை சந்தோஷப் படுத்தாது என்றும், அங்கே அவளுக்கு தொடு உணர்ச்சி இல்லை என்றும் நினைவுக்கு வந்து மறுபடியும் முகத்தின் அருகில் வந்தான். அவன் ஆவேசத்துடன் கீழே இறங்கி அதே வேகத்துடன் சட்டென்று மேலே வந்ததை அவள் புரிந்து கொண்டாலும் கவனிக்காதது போல் சாதாரணமாக அவனை அருகில் இழுத்துக் கொண்டாள். அவள் தன்னைச் சந்தோஷப்படுத்துவதற்காகவே கவனிக்காதவளைப் போல் இருந்து கொண்டாள் என்பதை அவனும் புரிந்து கொண்டான்.

இடுக்கு வழியாக வீசும் காற்றுக்கு திரைச் சீலை லேசாக அசைந்தது.

★

கோணார்க் சிற்பத்தின் மீது கேமிரா நகர்ந்து கொண்டிருந்தது. ஒரு அபூர்வமான தோற்றத்தில் ஆண் ஒருவன் பெண் ஒருத்தியை கட்டியணைத்துக் கொண்டிருப்பது போல் இருந்த சிற்பம் அது. அழகான க்ளோசப்பில் நெருக்கமாக இருந்த அவ்விருவரின் முகங்களிலிருந்து கீழே நகர்ந்து கொண்டிருந்தது கேமரா. ஆணின் கை பெண்ணின் தோளைச் சுற்றிக் கொண்டு அவள் மார்பின் மீது பதிந்திருந்தது. அந்தப் பெண் ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்து விட்டவளைப் போல் ஒரு காலை லேசாக காற்றில் தூக்கிக் கொண்டு கண்களை மூடி யிருந்தாள்.

''க்ரோமோ எஃபெக்டில் அனுஜாவை திரை மீது கொண்டு வந்தான் சம்பந்த். சினிமாவில் சூப்பர் இம்ப்பொசிஷன் போன்றது அது. பின்னால் காட்சி நகர்ந்து கொண்டே இருக்கும். முன்னால் பேசிக் கொண்டிருக்கும் ஆளின் தோற்றம் க்ளோஸப்பில் இருக்கும்.

சம்பந்த் தொடங்கு என்பது போல் சைகை செய்தான்.

அனுஜா தொண்டையை செருமிக் கொண்டே ''கார்த்திகேயன்!'' என்றாள். உடனே வெட்கப்பட்டாள். அதற்குள் திரும்பவும் தைரியத்தை திரட்டிக் கொண்டு பேசத் தொடங்கினாள். ''இதெல்லாம் எனக்கு ஸில்லி யாகவும், சிறுபிள்ளைகளின் விளையாட்டை போலவும் தென்படுகிறது. தென்படுகிறது என்ன? அப்படித்தானே இருக்கு?''

அவளுக்கு பின்னால் தென்பட்டுக் கொண்டிருந்த கோணார்க் சிற்பத்தின் உருவம் மாயமாகி புறா ஒன்று கடிதத்தை எடுத்துப் போகிற காட்சி வந்தது. அவள் மேலும் தொடர்ந்தாள்.

''மனதில் இருக்கும் உணர்வுகளை பிரியமானவர் களுக்கு எடுத்துச் சொல்வதற்கு அந்தக் காலத்தில் கடிதங்களைத் தான் பயன்படுத்தினார்கள். என் நண்பனுக்கு இன்னும் அழகாக சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். அதனால்தான் கடிதத்தை மனப்பாடம் செய்து எதிரே நின்று கொண்டு சொல்லி விட்டேன். ஆனால் இப்பொழுது என் மூல் காதில் விழாத தூரத்தில் இருக்கும் நண்பனுக்கு எப்படிச் சொல்லுவேன்? அதனால்தான் யோசித்தேன். புதிய முறையில், நவீனமான பாணியில் சொல்ல வேண்டும் என்று விரும்பினேன். எந்த முறையில் சொல்கிறேன் என்பதல்ல முக்கியம். இந்த கேசட்டை நீங்கள் வீடியோவில் போட்டுப் பார்த்தால்... அதோ நீங்க சிரிக்கிறீங்க. தாங்க்ஸ். இவ்வளவு தூரத்தில் இருந்து கொண்டு கூட எங்கள் மித்ராஜியின் முகத்தில் சிரிப்பை என்னால் வரவழைக்க முடிந்தது என்றால் அதைவிட வேறு என்ன வேண்டும்?

''எல்லோரையும் போலவே நாமும் இருந்தால் என்ன நன்றாக இருக்கும் சொல்லுங்கள்? அதனால்தான் காதல் கடிதத்தை வீடியோவில் அனுப்புகிறேன். டைட்டிலில் நன்றி தெரிவித்துப் போட வேண்டும் என்றால் சம்பந்தின் பெயரைப் போட வேண்டும். யூனிவர்ஸிடீ ஸ்டூடியோவின் லைப்ரரி கேசட்டுகளை பயன்படுத்திக் கொண்டு, திருட்டுத் தனமாக ரிக்கார்டு பண்ணிக் கொண்டிருக்கிறோம். டைரக்டர் ஆஃப் போட்டோகிரபி சம்பந்த்! நம் பையனுக்கு தன் பெயரை வைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறான். அதோ கண்ணாடித் தடுப்புக்கு அப்பாலிருந்து கோபமாக என்னை முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.'' சிரித்தாள்.

க்ரோமோவில் பின்னால் அருவிகளும், நதியும், தோட்டங்களும் தென்பட்டுக் கொண்டிருந்தன. அவள் உணர்வுகளை பிரதிபலிப்பது போல் பின்னால் காட்சிகள் மாறிக் கொண்டிருந்தன.

''அழகான மனங்களுக்கிடையே இருக்கும் பந்தத்தை இப்படி எலக்ட்ரானிக் முறையில் இயந்திரத்தனமாக எடுத்துச் சொல்கிறேனே என்று நினைத்துக் கொள்ளாதீங்க மித்ராஜீ! உணர்ச்சிகள் கவிதையாகும் போது வெளிப் படுத்தும் முறை வீடியோவானால் தான் என்ன?''

பின்னால் திரையில் பௌர்ணமி நிலவின் வெளிச்சம் நதியில் பிரதிபலித்தது. அலைகள் கூட உறங்குவது போல் இருந்தன. அவள் குரல் மந்திர ஸ்தாயியில் ஒலித்தது.

''காற்று தன் கைகளால் நதியின் அலைகளைத் துயில் எழுப்புவது போல் உங்கள் ஞாபகம் என் இதழ்களில் சிரிப்புத் திரைகளை அசைக்கிறது. உங்களுக்குத் தெரியுமா? நான் உங்களைப் பற்றி யோசித்துக் கொண்டே தியான நிலையை அடைந்து விடுகிறேன். என் தவத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் விதமாக அங்கேயும் நீங்கள் வந்து காட்சி தருகிறீர்கள். ரோஜாவின் மேல் இருக்கும் பனித்துளி எப்போது தன் மீது உதிருமோ என்று இரவெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் புல்லைப் போல் நான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் நினைவுகள் என் இதயக் கதவுகளைத் திறந்து கொண்டு மிகச் சுதந்திரமாக உள்ளே போக கற்றுக் கொண்டு விட்டன.

வசந்த காலமெல்லாம் மழைக்காலமாக, மழைக்கால மெல்லாம் இளவேனிற் காலமாக மாறிப் போய்க் கொண்டிருக்கின்றன. என் மனத்தடாகத்தில் உங்கள்

நினைவுகள் இந்திர ஜாலமாக... மந்திர வீணையாக... சுந்தர ஸ்வப்னமாக ... கந்தர்வ லோகமாக... நந்தவனமாக...''

லெவல்களை கண்ட்ரோல் செய்து கொண்டிருந்த சம்பந்த் வியப்புடன் நிமிர்ந்து பார்த்தான்.

''உன் நினைவுகள் என்னுள் நிரந்தரமாக... பஞ்சகமாக... மனோரஞ்சகமாக...''

சம்பந்த் கண்ட்ரோல் செய்வதை விட்டுவிட்டான். அனுஜா அங்கே இல்லை. வேறு உலகத்தில் இருந்தாள். அவள் குரல் ஸ்தாயிக்கு ஏற்றாற்போல் கண்ட்ரோல் முட்கள் லயப்படி ஆடிக் கொண்டிருந்தன.

அவள் குரல் நடுங்கியது. ''நீயே எனக்கு ஆபரணமாக... அங்கராபரணமாக... இந்தளமாக... விந்திய மலையாக... வேதமாக... சங்கீதமாக...''

திடீரென்று நிசப்தமாகி விட்டதால் சம்பந்த் எட்டிப் பார்த்தான். விளக்குகளுக்கு நடுவில் கேமிராவுக்கு முன்னால் சரிந்து கிடந்தாள் அவள்.

★

''நாம் கொஞ்சநேரம் வெளியே சுற்றிவிட்டு வருவோம்'' என்றான் கார்த்திகேயன்.

''இந்த நள்ளிரவு வேளையிலா?'' என்று ஸ்ரீகல்யாணி கேட்கவில்லை. நரம்புகள் சுவாதீனத்தை பெற்ற பிறகு முதல்முறையாக வெளியே சுற்ற வேண்டும் என்ற உற்சாகத்தைக் காட்டிலும், பெட்ரூமை விட்டு வெளியே போக வேண்டும் என்ற ஆர்வம்தான் அதிகமாக இருந்தது அவளுக்கு.

அவன் நாற்காலியைப் பிரித்து அசெம்பிள் செய்து அவளை ஜாக்கிரதையாக தூக்கி அதில் உட்கார வைத்தான். கீழே கொண்டு வருவது கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. வெளியே தோட்டத்திற்குள் நாற்காலியைத் தள்ளிக் கொண்டே வந்தான். குளிர்ந்த காற்று முகத்தில் விர்ரென்று வந்து வீசியதும் ஒருவிதமான கிளர்ச்சி ஏற்பட்டது. அதுவரை பெட்ரூமில் இருந்து வந்த புழுக்கம் (அது அறையின் புழுக்கமல்ல, மனதின் புழுக்கம்) போய் விட்டாற் போல் இருந்தது.

''ஐ யாம் சாரி'' என்றாள்.

''எதுக்கு?''

''ஏனோ தெரியவில்லை. சொல்ல வேண்டும் போல் இருந்தது.''

அவன் அவள் தோள் மீது கையைப் பதித்து ''ஐ லவ் யூ கல்யாணி'' என்றான்.

அவள் பதில் பேச்வில்லை. அந்தக் கையின் மீது தலையைச் சாய்த்துக் கொண்டு அப்படியே இருந்தாள். இனி பதில் எதற்கு?

அவன் தோட்டத்திற்குள் நாற்காலியைத் தள்ளிக் கொண்டே, பேச்சை மாற்ற விரும்பி, ''நாளை காலையில் நான் ஒரு முறை ஆஸ்பத்திரிக்குப் போகணும்'' என்றான்.

''எதுக்கு?''

''மாலையில் விமானத்தில் எனக்குப் பக்கத்தில் அமைச்சர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு 'வெர்டிகோ' பிரச்னை இருக்கும் போலிருக்கு. கொஞ்சம் பதற்றமடைந்து விட்டார். முதலுதவி செய்யும்படி ஆகி

விட்டது. ஆஸ்பத்திரிக்கு வந்து பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.''

''பெயர்?''

''விவேகாநந்த்!''

''யாருக்காவது ஆபத்து நேரிடுவதும், நீங்கள் பக்கத்தில் இருப்பதும், அதற்கு பிறகு அவர்கள் நெருக்கமாவதும்...'' என்று சிரித்தாள். ''இந்த விவேகாநந்த் கூட உங்களுக்கு நெருக்கமாகும் நிலையில் தானே இருக்கிறார் என்னைப் போல்.''

''இன்றிரவு என்னோடு சண்டை போடணும் என்று சங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாய் போலும்.''

அவள் மேலும் சிரித்துக் கொண்டே ''படுக்கையில் எப்படியும் போட முடியவில்லை. இங்கேயாவது போட விடுங்கள். அது இருக்கட்டும். அவருடைய மகள் செத்துப் போய் விட்டதாக சொன்னீங்க. அப்புறமாக இல்லை என்று தெரிந்தது. என்னதான் நடந்தது?''

''ஓ... அதுவா? சிம்லாவில் என்ன நடந்தது என்றால்...'' அவன் எதிரே தென்பட்ட காட்சியைப் பார்த்து விட்டுச் சொல்வதை நிறுத்திக் கொண்டான்.

அவள் கூட அந்தப் பக்கமாக பார்த்தாள்.

தொலைவில் மரங்களுக்கு நடுவில், மோட்டார் கிணற்றிலிருந்து தென்னை மரங்களுக்குப் பாய்ந்து கொண்டிருந்த தண்ணீர்க் கால்வாய்க்குப் பக்கத்தில் இருந்தார்கள் டிரைவரும், பர்சனல் மேனேஜரின் மனைவியும். அவ்விருவரும் இந்த உலகத்திலேயே இல்லாதவர்களைப் போல், சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

அரைகுறை ஆடையுடன் கால்வாய்க்குப் பக்கத்தில் இருந்த கல்லின் மீது அவன் உட்கார்ந்திருந்தான். அவன் காலடியில் உட்கார்ந்திருந்தாள் அவள்.

கார்த்திகேயன் சந்தடி செய்யாமல் சக்கர நாற்காலியைப் பின்னால் திருப்பினான். வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருக்கும் போது கல்யாணி சொன்னாள். ''இடியட்! அந்த டிரைவரை நாளைக்கே வேலையிலிருந்து நீக்கிவிடப் போகிறேன்.''

''எதற்காக?''

ஸ்ரீகல்யாணி சரேலென்று நிமிர்ந்து ''எதற்காகவா? அவள் யார் தெரியுமா? பர்சனல் மேனேஜரின் மனைவி'' என்றாள்.

அவன் சிரித்தான் ''நம் இருவருக்கிடையே முதல் உரையாடல் இதைப் பற்றி தான் நடந்தது. மறந்து போய் விட்டாயா கல்யாணி?'' என்றான்.

அவள் திடுக்கிட்டு உடனே தேறிக் கொண்டாள். ''ஆமாம். அப்பொழுது அப்படிச் சொன்னேன். உண்மை தான். அபிப்பிராயங்கள் எப்போதும் ஒரே மாதிரி தான் இருக்குமா என்ன? கணவன் மனைவிக்கு இடையே உள்ள பந்தயத்தைப் பற்றி அப்பொழுது எனக்குத் தெரியாது'' என்றாள்.

அவன் பதில் பேசவில்லை. சக்கர நாற்காலியைக் கீழேயே விட்டுவிட்டு அவளைக் கைகளால் தூக்கிக் கொண்டு படியேறி மாடிக்கு அழைத்து வந்து படுக்கையில் படுக்க வைத்தான்.

சுமார் இரண்டு மணி நேரம் கழித்து அவள் மெதுவாக ''என்னங்க?'' என்றாள்.

''ஊம்'' என்றான்.

அதை அவள் எதிர்பார்க்கவில்லை. ''இன்னுமா நீங்கள் தூங்கவில்லை? மணி இரண்டாகப் போகிறதே?'' என்றாள் வியப்புடன்.

''என்ன விஷயம்? சொல்லு.''

''அந்த டிரைவரை வேலையிலிருந்து நீக்கி விடப் போவதாக சொன்னதற்கு நீங்கள் ஒன்றுமே சொல்லவில்லையே?''

''இரண்டு மணி நேரமாக தூங்காமல் நீ யோசித்துக் கொண்டிருந்தது இதுதானா?''

''முதலில் என் கேள்விக்கு பதில் சொல்லுங்கள்.''

''என்ன சொல்லியிருக்கணும்? உடனே நீக்கி விடு என்றா? அல்லது தவறு இரண்டு பேரின் மீதும் இருக்கு. அந்த பர்சனல் மேனேஜரின் மனைவியைக் கூட கண்டித்து வை என்று சொல்லணுமா?''

''என்ன சொல்வது என்று எனக்கும் தெரியவில்லை. உங்களுடன் போனில் முதல் தடவை நான் இந்த விஷயத்தைப் பற்றி பேசிய போது நீங்கள் எனக்கு பாடம் சொல்லித் தருவது போல் சொன்னீங்க. ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் நம்பிக்கையுடன் இருக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி எடுத்துச் சொன்னீங்க. அன்றிரவு போனில் உங்களை ஒரு சைக்கியாடிரிஸ்ட் என்று நினைத்துக் கொண்டு 'அவர்கள் இரண்டு பேரும் என்ன தவறு செய்துவிட்டார்கள்? ஒன்றுமில்லையே?' என்று நான் கேட்டதற்கு கன்னத்தில் அடிப்பது போல் பேசினீங்க. ஆனால் இன்றைக்கு நீங்கள் அவ்வளவு அழுத்தமாக

பதில் சொல்லவில்லை. அப்படி என்றால் கணவன் தன் இச்சையைத் தீர்க்காததால் அந்த வேட்கையை வேறொருவனோடு தீர்த்துக் கொள்வது தவறு இல்லை என்று நீங்கள் நினைக்கிறீங்களா? ஒரு காலத்தில் எனக்கு இருந்து வந்து அபிப்பிராயங்கள் உங்களுக்கும், உங்களுக்கு இருந்து வந்த அபிப்பிராயங்கள் எனக்கும் வந்து விட்டன என்கிறீர்களா?''

அவன் அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான். ''கல்யாணி! வீணாக நீ ஏதேதோ யோசித்துக் கொண்டு இருக்கிறாய். நள்ளிரவுக்கு மேல் ஆகிவிட்டது. தூங்கு'' என்றான்.

அதற்குப் பிறகு பத்து நிமிடங்கள் கழித்து அவள் மறுபடியும் ''என்னங்க!'' என்று கூப்பிட்ட பொழுது அவன் அதற்குள் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்தான்.

23

''சொல்லு. என்னால் உனக்கு என்ன உதவி செய்ய முடியும்?'' ஆஸ்பத்திரி படுக்கையில் இருந்த விவேகாநந்தன் பொதுவான உரையாடல் முடிந்த பிறகு கேட்ட கேள்விக்கு கார்த்திகேயன் வியப்படைந்து ''உதவியா? எதுக்கு?'' என்றான்.

''ஏதாவது வேலை முடித்துத் தரணும் என்றால்...''

''எனக்கு எதுவும் தேவையில்லை. வெறுமே பார்த்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்.''

''பக்கத்து சீட்டில் உட்காந்து பயணம் செய்ததற்காக ஆஸ்பத்திரிக்கு வந்து பார்த்து விட்டுப் போவதற்கு வந்தேன் என்று சொன்னால்...''

கார்த்திகேயன் சிரித்து விட்டு ''உங்களுக்கு மனிதர்கள் மீது நம்பிக்கை கொஞ்சம் குறைவு என்று தோன்றுகிறது'' என்றான்.

அவரும் சிரித்து விட்டு ''அரசியல் தலைவன் இல்லையா? அதான்'' என்றார்.

அதற்குள் டாக்டர் ரிப்போர்ட்டைக் காண்பித்து விட்டு ''ரத்த அழுத்தம் குறைவாக இருக்கிறது. ஒரு முறை எல்லா பரிசோதனைகளையும், ஸ்கேனிங்கையும் செய்து விட்டால் நல்லதென்று அபிப்பிராயப்படுகிறேன்'' என்றார்.

''அவ்வளவு நேரம் இல்லை டாக்டர். டில்லிக்குப் போய் செய்து கொண்டால் போதாதா? ஆபத்து ஒன்று மில்லையே?''

''செ... செ... அதெல்லாம் ஒன்றுமில்லை. சீக்கிரமாக செய்து கொண்டு விடுங்கள்'' டாக்டர் சொன்னார்.

அவர் போன பிறகு விவேகாநந்தன் கார்த்திகேயனைப் பார்த்து ''அப்படி என்றால் என் மகள் பரிசு விஷயத்தில் அவ்வளவு ரகளை செய்து விட்டாள் என்று சொல்லு'' என்றார்.

கார்த்திகேயன் சிரித்துவிட்டு பேசாமல் இருந்தான்.

''இறந்து போய் விட்டாற்போல் ஏதோ நாடகம் கூட போட்டாளாம். வயது ஏற ஏற சேட்டையும் அதிகமாகி விட்டது.''

கார்த்திகேயன் தன் கையில் இருந்த புத்தகத்தை அவரிடம் தந்தான்.

''என்ன இது?''

''உங்கள் மகள் அனுஜாவுக்கு தம்பதிகளான எங்களுடைய ஞாபகார்த்தமாக.''

அவர் புத்தகத்தை வாங்கிப் பார்த்துக் கொண்டே ''உங்கள் மனைவியின் பெயர் ஸ்ரீகல்யாணியா?'' என்று கேட்டார்.

''ஆமாம். கல்யாணி இண்டஸ்ட்ரியைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீங்களே?''

''ஆமாம். கல்யாணி இண்டஸ்ட்ரிஸ் முதலாளி தான் உங்கள் மனைவியா? ரொம்ப பெரிய இண்டஸ்ட்ரிய லிஸ்ட் ஆச்சே.''

''ஆமாம்'' என்று சொல்லிவிட்டு அவன் விடைபெற்றுக் கொண்டான்.

கார்த்திகேயன் போன பிறகு அவர் புத்தகத்தைத் திறந்து பார்த்தார்.

''வாழ்த்துக்களுடன் கார்த்திகேயன் ஸ்ரீகல்யாணி'' என்று இருந்தது அதில்.

அதை எடுத்துக் கொண்டு அவர் டில்லிக்குப் பயணமானார். தனக்கு திருமணமாகி விட்டதென்ற விஷயம் அனுஜாவுக்கு மறைமுகமாக தெரிவிப்பதற்காக கார்த்திகேயன் அனுப்பிய சாட்சியம் அது.

★

டில்லி விமான நிலையம். விமானம் இறங்குவதற்கு இன்னும் ஐந்து நிமிஷங்கள் இருந்த பொழுது அறிவிப்பு கேட்டது.

அனுஜா கவலையுடன் உட்கார்ந்திருந்தாள். இருபது நிமிடங்களுக்கு பிறகு தந்தை வெளியே வருவது

தென்பட்டது. ஓட்டமும் நடையுமாக அருகில் சென்றாள். விவேகாநந்தன் மகளின் வாடிய முகத்தைப் பார்த்து விட்டு கவலையோடு ''என்ன நடந்ததும்மா?'' என்று கேட்டார்.

''எனக்கு ஒன்றும் இல்லை டாடீ. உங்களுக்குத்தான் சரியாகும் போது விமானத்தில் என்ன ஆச்சு? அங்கே ஆஸ்பத்திரியில் என்ன சொன்னாங்க?''

அவர் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டு ''அதற்காகவா இவ்வளவு கலங்கிப் போய் விட்டாய்?''

அவள் ஆம் என்று தலையை அசைத்தாள். அவர் சிரித்து விட்டு ''யாராவது பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வார்கள் தெரியுமா? யாரோ இறந்து விட்டார்கள் போலிருக்கு, அல்லது ஏதோ குடி மூழ்கிப் போய் விட்டது போலிருக்கு என்று நினைத்துக் கொள்வார்கள். அதற்குள் சுற்றிலும் இருக்கிற அத்தனைபேரும் நம்மையே பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்'' என்றார்.

''பேச்சை மாற்றாதீங்க டாடீ. என்னதான் நடந்தது? அதைச் சொல்லுங்க.''

''விமானத்தில் 'வெர்டிகோ' கொஞ்சம் தொந்தரவு கொடுத்து விட்டதும்மா'' என்றார் அவர்.

கொஞ்சம் உயரத்திலிருந்து பார்த்தால் அதள பாதாளத்திற்குள் நழுவிவிழுந்து கொண்டிருப்பது போல் பயத்தோடு வியர்த்துக் கொட்டி, ரத்த ஓட்டம் அதிகமாகி தலை சுற்றுவதும், நினைவு தப்பி விழுவதும் 'வெர்டிகோ' நோயின் லட்சணங்கள். இந்த நோய் தீவிரமாக இருப்பவர்கள் சாதாரணமாக படியேறும் பொழுது கூட கீழே குனிந்து பார்க்க முடியாது. பல வருடங்களுக்கு முன்னால் ஆல்ஃபிரட் ஹிட்ச்காக் இந்தப் பெயரில் ஒரு திரைப்படம் கூட எடுத்தார்.

இருவரும் காரில் ஏறிக் கொண்டார்கள். கார் புறப்பட்டது. அனுஜா கேட்டாள். ''வெறும் வெர்டிகோ என்றால் ஆஸ்பத்திரியில் எதற்காக சேரணும்?''

''கொஞ்சம் பதற்றமடைந்து விட்டேன் என்று வைத்துக் கொள். விமானத்தில் கார்த்திகேயன் என்ற இளைஞன் ஒருவன் என் பக்கத்து சீட்டில் உட்கார்ந் திருந்தான். நம்ம ஊர்க்காரன்தான்.''

அனுஜாவின் இதயம் ஒரு வினாடி நின்று விட்டு பிறகு துடித்துக் கொள்ளத் தொடங்கியது.

''உனக்கும் அவனை தெரியும் இல்லையா? உங்கள் கூட சிம்லாவுக்கு வந்தானாம். அவன் ஒரு ஓவியன்.''

''ஆமாம் டாடீ.''

''ரொம்ப நல்ல பையனாக இருக்கிறான். காலையில் ஆஸ்பத்திரிக்குக் கூட வந்திருந்தான்.''

அனுஜாவின் இதழ்களில் ஒரு குதூகலமான முறுவல் மலர்ந்தது. அதற்குள் அவர் சொன்னார். ''சாதாரணமாக பக்கத்து வீட்டில் என்ன நடந்தாலும் கண்டு கொள்ள மாட்டோம். அப்படியிருக்கும் போது பக்கத்து சீட்டில் உட்கார்ந்திருந்தவனுக்கு உடல் நிலை கொஞ்சம் தடுமாறியதும் பாவம், ஆஸ்பத்திரி வரைக்கும் வந்தான். அப்படிப் பட்டவர்கள் கொஞ்சம் அரிதுதான்.''

'ஆமாம். அரிதுதான்.' மனதிற்குள் எண்ணிக் கொண்டாள். கோவிந்தேடு நிகழ்ந்த உரையாடல் நினவுக்கு வந்தது. மறுபடியும் அதே கேள்வி. எதற்காக அவனை இந்த அளவுக்கு விரும்புகிறாள்?

''ஏம்மா? திடீரென்று மௌனமாகிவிட்டாய்?''

அனுஜா யோசனையிலிருந்து மீண்டவளாக "ஒன்று [illegible] டாடீ" என்றாள்.

முன்னால் சென்ற காரில் தந்தையும், மகளும் [illegible] இருந்தார்கள். பின்னால் வந்த கார்களில் [illegible]காப்பாளர்களும், மற்ற பரிவாரங்களும் இருந்தார்கள். [illegible] நிமிஷங்கள் கழித்து கார் வீட்டிற்கு முன்னால் வந்து [illegible]

"அரை மணியில் தயாராகணும் டாடீ! ஆஸ்பத்திரிக்கு [illegible]வோம்."

அவர் புரியாமல் "என்ன?" என்றார்.

"இன்றைக்கு உங்கள் புரோகிராம் எல்லாம் கான்சல். [illegible]த்திரியில் மாஸ்டர் செக் அப் மட்டும்தான்."

"என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறாய்? நான் [illegible]ரல் மினிஸ்டர். ஏகப்பட்ட வேலை இருக்கும்."

"காலையிலேயே ஜோக் அடிக்காதீங்க டாடீ. [illegible]ச்சர்களுக்கு வேலையிருப்பதாவது? நாடாளுமன்றம் [illegible]லாமல் ஜனாதிபதி ஆட்சி இருந்தாலும் கூட நாட்டில் [illegible] வித்தியாசமும் இருக்காது."

"ஆனாலும் இப்போது ஆஸ்பத்திரிக்கு அவ்வளவு [illegible]ரம் என்னம்மா? ஏதோ விமானத்தில் கொஞ்சம் தலை [illegible]யதற்காக இவ்வளவு ஆர்ப்பாட்டம் எதுக்கு?"

"வெறும் தலை சுற்றல்தான் என்றால் விமானத்தி[illegible]ருந்து இறங்கியதுமே ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்[illegible]ங்களா? ஒன்றுமில்லா விட்டால் அதை விட சந்தோஷப்[illegible] கூடிய விஷயம் வேறு இல்லை டாடீ. ஆனால் [illegible] இருந்தால் மட்டும் தாமதம் செய்யக் கூடாது."

அரைமணிக்குப் பிறகு ஆஸ்பத்திரிக்கு புறப்பட்டார்கள். நகரத்திலேயே மிகவும் ஆடம்பரமான ஆஸ்பத்திரி அது. விசாலமான படிகள். நீளமான வராண்டாக்கள். செங்குத்தான கண்ணாடிகள்.

அவர் உள்ளே போகும்போது ''டாடீ!'' என்று அழைத்தாள். விவேகாநந்தன் நின்று விட்டார். அனுஜா கையிலிருந்த சின்ன பாக்கெட்டை பிரித்தாள். அதில் குங்குமம் இருந்தது. ''காலையில் மகாலக்ஷ்மி கோவிலில் அர்ச்சனை செய்ய வைத்தேன். இதை இட்டுக் கொள்ளுங்கள்.''

''நான் போய்க் கொண்டிருப்பது போருக்காக இல்லை. மாஸ்டர் செக்அப் செய்து கொள்வதற்கு'' என்று சொல்லப் போனார். ஆனால் தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டு விட்டாற் போல் வார்த்தைகள் வெளிவரவில்லை. ''என்னம்மா இது?'' என்றார் பரிவுடன் மகளை அணைத்துக் கொண்டே.

''டாடீ!''

''எனக்கு ஒன்றும் ஆகாது. பேரன், பேத்திகளைத் தூக்கிக் கொஞ்சும் வரையில் எனக்கு ஒன்றும் ஆகாது.'' சூழ்நிலையை இளக வைப்பதற்காக சொன்னார்.

அனுஜா லேசாக வெட்கப்பட்டாள்.

அவர் மகளின் முகத்தைக் கூர்ந்து பார்த்து விட்டு ''ஏதோ காதலில் விழுந்து விட்டாற்போல் தென்படுகிறாயே?'' என்று கேட்டார்.

அனுஜா வாயடைத்துப் போய் விட்டாள். ''உங்களுக்கு ஏன் டாடீ சந்தேகம் வந்தது?''

''முகத்தைப் பார்த்ததுமே வாக்காளரா இல்லையா என்று சொல்லி விட மாட்டோமா? அதே போல் தான் இது.''

அவள் பதில் பேசவில்லை.

''அவன் யாரு?''

''பி.பி. பரிசோதனை பண்ணிக் கொள்ளப் போகிற நேரத்தில் இப்போ எதுக்கு டாடீ அதெல்லாம்? முதலில் போயிட்டு வாங்க.''

''ஏன்? அவ்வளவு தூரம் பி.பி.யை அதிகமாக்கி விடக் கூடிய ஆளா என்ன?''

''இல்லை.''

''இருக்காதுதான். என் மகள் மீது எனக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்கு.''

''அதென்ன நம்பிக்கையோ?'' ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே கேட்டாள். ''இந்த உலகத்திலேயே எதற்கும் பிரயோஜனம் இல்லாத ஒருவனைக் காதலித்தால்.''

''அவன் யாரு?''

''உதாரணமாக அரசியலில் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.''

''உன் தந்தையின் தொழில் மீது அவ்வளவு இளக்காரம் இருக்கக் கூடாது மகளே!''

''விளையாட்டுக்கு சொன்னேன் டாடீ! உங்கள் எதிர்க்கட்சி தலைவரின் மகன் என்று வைத்துக் கொள்ளுங்கள்.''

''கட்சியை மாற்றியாவது கல்யாணத்தை முடித்து வைப்பேன்.''

''கோடி ரூபாய் வரதட்சணை கேட்டால்?''

''ரொம்ப குறைச்சல் அது.''

அவள் சிரிப்பை அடக்கிக் கொண்டு ''உங்களை அந்த அளவுக்கு தொந்தரவு படுத்த மாட்டேன் டாடீ'' என்றாள்.

அதற்குள் பி.ஏ. ''சார்!'' என்றான். அவர் அவனுடன் சேர்ந்து உள்ளே போய் விட்டார்.

அனுஜா ரிசப்ஷனுக்கு எதிரே சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். நீளமான வராண்டா திறந்து கிடந்த முதலையின் வாயைப் போல் இருந்தது.

ஐந்து நிமிடங்கள் கழிந்தன. தன் பார்வையில் பட வேண்டும் என்பதற்காக இளம் டாக்டர் ஒருவன் எந்த வேலையும் இல்லாத போதிலும் ஆஸ்பத்திரி முழுவதும் தன்னால் தான் நடந்து கொண்டிருக்கிறது என்பது போல் பரபரப்புடன் கழுத்தில் ஸ்டெதஸ்கோப்பை மாட்டிக் கொண்டு நடை பயின்று கொண்டிருப்பதை அனுஜா கவனித்தாள். நாலைந்து முறை அப்படியும் இப்படியுமாக அலைந்த பிறகு எதிரே வந்து நின்று கொண்டு ''குட் மார்னிங் மேடம். என் பெயர் பி.பி.டி. லால். எம்.பி.பி.எஸ், பி.ஹெச். எஸ். ஆஸ்ட்ரேலியா, டி.ஜி.பி. கெனடா, எம்ஃப்.சி.எம்.ஐ.'' என்றான்.

அனுஜா அளவு கடந்த ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

தன்னுடைய படிப்பை பற்றி சொன்னதுமே எல்லோரும் அப்படி ஆச்சரியத்துடன் பார்ப்பது பழக்கப் பட்டதுதான் என்பது போல் அவன் சிரித்தான்.

அவள் ஆச்சரியத்தோடு பார்த்தது அதற்காக இல்லை. அவன் சொன்னவற்றில் முதலாவது மட்டும்தான் டிக்ரி. மற்றதெல்லாம் டிப்ளமாக்கள். பெயருடன் கூடவே எல்லா டிக்ரிகளையும் சொல்லிக் கொண்ட அவன் மூளையின் ஸ்க்ரூ விஷயமாக அவளுக்கு சந்தேகம் வந்தது.

அப்பொழுதுதான் அவளுள் தூங்கிக் கொண்டிருந்த குறும்புப் பெண் விழித்துக் கொண்டாள்.

''இந்தச் சின்ன வயதில் மருத்துவ சாஸ்திரத்தில் இவ்வளவு டிக்ரிகளை முடித்து விட்ட உங்களை யாருமே உடம்பெல்லாம் கண்ணாக்கிக் கொண்டு பார்க்காமல் வேறு என்ன செய்யமுடியும் டாக்டர் பி.பி.டி. லால்?'' என்றாள் ஆங்கிலத்தில்.

லால் கொஞ்சம் பூரித்துப் போய் விட்டான். அவள் சிரித்தாள். ''உங்களைப் பார்த்தால் எனக்கு என் சிநேகிதியின் நினைவு வருகிறது. டாக்டர் லால்!''

''ஏன்? அவளுக்குக் கூட இவ்வளவு டிக்ரிகள் இருக்கா?''

''இல்லை இல்லை. ஒரே டிக்ரிதான். ஆனால் தன் கணவனுக்கு கடிதம் எழுதும் போது கூட ''உங்கள் மரணதாசி சகுந்தலா பி.ஏ. என்று எழுதுவாள்.''

அதிலிருந்த சிலேடை புரியாமல் லால் சிரித்தான். அவள் மேலும் தொடர்ந்தாள். ''எங்க அண்ணாவோ 'இந்த டிக்ரிகளின் மதிப்பு சாதாரண மக்களுக்கு தெரியாது தங்கச்சீ' என்பான். தனக்குக் கடிதம் எழுதும் போது யாராவது பெயரோடு சேர்த்து பி.காம். என்று போடாவிட்டால் ரொம்ப கோபம் வந்து விடும் அவனுக்கு.''

அவள் என்ன பேசுகிறாள் என்று புரியவில்லை அவனுக்கு. ''அது சரி, உங்கள் பெயரை சொல்லவே இல்லையே?'' என்றான்.

''அனுஜா! பிராகெட்டில் எம்.ஏ. அதாவது இன்னும் படித்துக் கெண்டிருக்கிறேன்னு அர்த்தம்'' என்றாள்.

''வாங்க. உங்களுக்கு எங்க ஆஸ்பத்திரியைச் சுற்றிக் காட்டுகிறேன்.''

செய்வதற்கு அதைத் தவிர வேறு வேலை எதுவும் இல்லை என்பதால் அவனுடன் புறப்பட்டாள். லால் மகிழ்ந்து போய் விட்டான். அவ்வளவு அழகான பெண்ணோடு சேர்ந்து நடப்பது பூர்வ ஜென்ம புண்ணியம் என்று தோன்றியது. நடந்து கொண்டே சொல்லத் தொடங்கினான்.

''விஞ்ஞானம் ரொம்பவும் வளர்ந்து விட்டது. இதற்கு முன் ஏதாவது நோய் வந்து விட்டால் அதற்குக் காரணம் என்னவென்று டாக்டர்கள் மூளையை குழப்பிக் கொள்ள வேண்டியிருந்தது. இப்பொழுதெல்லாம் நிமிஷ நாழிகையில் வேலை முடிந்து விடுகிறது. இதுதான் ஸ்கேனிங் டிபார்ட்மெண்ட். மூளையிலிருந்து கல்லீரல் வரைக்கும் அத்தனை பரிசோதனைகளையும் இந்த ஸ்கேனிங் மூலமாக செய்து விடலாம். அதற்காக டாக்டர்களின் வேலை சுலபமாகி விட்டது என்று எண்ணிக் கொண்டு விடாதீங்க. இந்த கம்ப்யூட்டர் சொன்னதைப் புரிந்து கொண்டு நடப்பது கூட கஷ்டமான காரியம்தான். இது ஒரு பெருங்கடல். விஷயம் தெரிந்து விட்டால் மட்டும் போறாது. புத்திசாலித்தனமும், நுட்பமானவற்றை புரிந்து கொள்ளும் திறமையும் இருக்க வேண்டும்.'' லால் சொல்லிக் கொண்டே போனான்.

அனுஜா அவனையே பரிதாபமாக பார்த்தாள். கொஞ்சம் காது கொடுத்து கேட்கக் கூடிய ஒருத்தி கிடைத்து விட்டால் போதும். இப்படிப்பட்டவர்கள் வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் தமக்குத் தெரிந்த விஷயங்களை விலாவாரியாக விவரித்து விட்டு, மற்றவர்களை கவர வேண்டும் என்று முயற்சிப்பார்கள். அவளுக்கு சிரிப்பு வந்தது.

அவன் சொன்னான். ''மூளையில் அணுக்கள் மடிந்து போய் விட்டால் கூட இந்த ஸ்கேனிங் மூலமாக தெரிந்து விடும்.''

''மூளையில் அணுக்கள் எப்படி மடியும்?'' சின்ன குழந்தையைப் போல் அப்பாவித்தனமாக கேட்டாள்.

அவன் கொஞ்சம் தடுமாறினான். ''எதனால் என்றால்... அது வந்து... பக்கவாதம் அல்லது வெறிநாய் கடித்து ரேபீஸ்...''

''உங்களுக்கு லூயி பாஸ்சரைத் தெரியுமா?'' அவன் வார்த்தைகளைப் பாதியிலேயே கத்தரித்துவிட்டு திடீரென்று கேட்டாள்.

''அவர் யாரு?'' என்றான் லால்.

அவளுக்குக் கோபம் வரவில்லை. பரிதாபம் தான் ஏற்பட்டது. இந்த டாக்டருக்கு லூயி பாஸ்சர் என்றால் யார் என்று கூட தெரியவில்லை. வெறிநாய் கடியைப் பற்றி பேசுகிறார். விஞ்ஞானம் முன்னேற முன்னேற முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை தெரிந்து கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

''லூயி பாஸ்சர் என்பவர் யார் என்று இன்னும் நீங்கள் சொல்லவே இல்லை'' அவன் யோசனைகளைச் சிதறடித்த படி கேட்டான்.

''மனோஹர் லோஹியா ஆஸ்பத்திரியின் சூபரின்டென்டென்ட்.'' வெறுப்பாக சொன்னாள்.

''அப்படியா! நான் டில்லிக்கு புதிதாக வந்திருக் கிறேன்'' என்றான்.

அவள் வாட்சைப் பார்த்துக் கொண்டாள்.

''வாங்க. உங்களுக்குக் கூட ஸ்கேனிங் டெஸ்ட் செய்கிறேன்.''

அவள் வியப்புடன் ''எனக்கா?'' என்றாள்.

''ஆமாம். உங்க அப்பா வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்.''

இதனால் என்ன நஷ்டம் வந்து விடப் போகிறது என்று நினைத்து அவள் ஒப்புக் கொண்டாள். டெஸ்ட் முடிவடைந்து வெளியே வரும் போது அவள் சொன்னாள். ''ஸ்கேனிங் என்றால் ஊசிகளையும், அதையும் இதையும் குத்துவார்கள் என்று இவ்வளவு நாளும் நினைத்துக் கொண்டிருந்தேன். இவ்வளவு சுலபம் என்று தெரியாது.''

''அதான் சொன்னேனே, சயின்ஸ் ரொம்பவும் முன்னேறிவிட்டது என்று.''

'லூயி பாஸ்சரை மறந்து போகிற அளவுக்கு.' மனதில் நினைத்துக் கொண்டாள். இருவரும் அடுத்த அறைக்குள் நுழைந்தார்கள். அந்த அறையில் டாக்டர் ஒருவர் இருந்தார். பார்த்ததுமே மனதில் கௌரவம் தோன்றக் கூடிய தோற்றம். வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும்.

''டாக்டர் பரத்வாஜ்! இவங்க மிஸ் அனுஜா. சென்ட்ரல் மினிஸ்டர் விவேகாநந்தனின் மகள்'' என்று அறிமுகப்படுத்தி விட்டு உள்ளே அழைத்துச் சென்றான். உள்ளே விசாலமான ஹாலில் நர்ஸ் பரிசோதனை குடுவைகளை சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

''உங்களுடைய ரத்தத்தையும் பரிசோதனைக்கு கொடுங்கள்.''

''ஊசி குத்துவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்று சொல்லுங்கள்.''

''உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால் வேண்டாம்.''

''வந்த பிறகு வேண்டாம் என்று சொல்லுவானேன்? எடுத்துக் கொள்ளுங்கள்.'' கையை நீட்டிக் கொண்டே சொன்னாள்.

க்ளினிக் அஸிஸ்டெண்ட் ரத்தத்தை எடுத்துக் கொண்ட பிறகு ''வாங்க. இன்னொரு பரிசோதனையும் செய்து விடலாம். அதற்குள் இந்தப் பரிசோதனையின் ரிசல்ட் தெரிந்து விடும்'' என்றான்.

இருவரும் இன்னொரு அறைக்குள் நுழைந்தார்கள். சிறிய மிஷின் ஒன்று இருந்தது அங்கே. ''மூச்சை நன்றாக இழுத்துக் கொண்டு பலமாக ஒரு முறை வாயால் ஹாவென்று வெளியே விடுங்கள்'' என்றார், மிஷினுக்கு பக்கத்தில் இருந்தவர். அனுஜா அப்படியே செய்தாள். மிஷினில் முள் தொண்ணூறு வரைக்கும் வந்து விட்டு பின்னால் நகர்ந்தது.

''உங்கள் நுரையீரல் பலமாக இருக்கிறது மேடம்.''

'இதயம்தான் பலவீனமாக இருக்கிறது, காதலில் விழுந்து' என்று நினைத்துக் கொண்டாள். அங்கிருந்து

இ.ஸி.ஜி. பரிசோதனையை முடித்துக் கொண்டு திரும்பி வந்தார்கள். அவள் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள்.

''காபி குடிக்கலாம். வாங்க மேடம்.''

அவள் வேண்டாமென்று மறுத்து விட்டாள். தந்தை வருவதற்கு இன்னும் அரைமணி நேரம் ஆகலாம்.

அவ்விருவரும் மறுபடியும் போனபொழுது டாக்டர் பரத்வாஜ் ஏதோ ரிபோர்ட்டுகளைப் பார்த்துக் கொண் டிருந்தார். நிமிர்ந்து இவர்களைப் பார்த்துவிட்டு ''இந்த ஃபைலை மூடிவிடுங்கள். பேஷண்ட் இறந்து விட்டாளாம்'' என்றார் பேப்பர்களை மேஜை மீது போட்டு விட்டு.

அனுஜாவின் பார்வை அந்தப் பேப்பர்கள் அத்தனைக்கும் மேலாக இருந்த போட்டோவின் மீது பட்டது. பன்னிரெண்டு வயது பெண்ணின் போட்டோ அது. சுவாதீனமாக அந்தப் போட்டோவை கையில் எடுத்துப் பார்த்துக் கொண்டே ''ரொம்ப அழகாக இருக்கிறாள் இல்லையா டாக்டர்! பாவம்'' என்றாள் இரக்கத்துடன்.

''அந்தப் பெண்ணின் பெயர் சுஜாதா. ஹாட்கின்ஸ் நோய் வந்துவிட்டது அவளுக்கு'' என்றார் பரத்வாஜ்.

''ஹாட்கின்ஸ் நோயா? பெயரே பயங்கரமாக இருக்கு'' என்றாள் அனுஜா.

''மரணம் வெகு சமீபத்திற்கு வந்து சேரும் வரையில் அதை கண்டுபிடித்து விடமுடியாது. சாதாரண மனிதர் களுக்கும் அந்த நோயாளிகளுக்கும் வேறுபாடு தெரியாது. 'லிம்போ ப்ளாஸ்டிக்' என்பார்கள். அதற்கு மருந்தே கிடையாது. ரத்தப் பரிசோதனை மூலம்தான் இந்த நோய் இருப்பது தெரியும்.''

''ஒரு விதத்தில் அதிர்ஷ்டம்தான் என்று சொல்லுங்கள். எந்த உபத்திரவமும் இல்லாமல் இறந்து விடலாமே.''

லாப் அசிஸ்டெண்ட் அனுஜாவின் ரிப்போர்ட்டை கொண்டு வந்து தந்து கொண்டே ''டாக்டர் லால்! உங்களுக்கு போன்'' என்று சொன்னான்.

லால் வெளியே போனான். ''எவ்வளவு தூரத்திற்கு வந்திருக்கு உங்கள் பரிசோதனைகள்?'' பரத்வாஜ் ரிப்போர்ட்டை எடுத்து பரிசீலித்துக் கொண்டே கேட்டார்.

''சும்மாதான் டெஸ்ட் செய்து கொள்கிறேன் டாக்டர். அப்பாவோடு சேர்ந்து வந்தேன்.''

''ரெகுலராக வருஷத்திற்கு ஒரு முறை பரிசோதனை செய்து கொள்வது ரொம்ப நல்லது. வாங்க. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார் எழுந்து கொண்டே.

''உங்களுக்கு எதுக்கு டாக்டர் வீண் சிரமம்? ஏதோ விளையாட்டுக்காக பண்ணிக் கொண்டேன்.''

அவளது வார்த்தைகளை தடுத்து விட்டு ''பரவாயில்லை. வாம்மா. யார் பரிசோதித்தால் என்ன?'' என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனார். ஐந்து நிமிடங்களுக்கு பிறகு அவள் நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். டாக்டர் லால் இன்னும் வரவில்லை. மேஜை மீது இருந்த தன்னுடைய ரிப்போர்ட்டை கையில் எடுத்துக் கொண்டாள். பக்கத்திலேயே ஹாட்கின்ஸ் நோயால் இறந்து போன சுஜாதாவின் ரிப்போர்ட்டுகள் இருந்தன. அப்பொழுதுதான் தோன்றியது அவளுக்கு அந்தக் குறும்புத்தனமான யோசனை.

பேப்பர்களிலிருந்து அந்தப் பெண்ணின் ரிப்போர்ட்டை எடுத்து தன் ஃபைலுக்குள் வைத்து விட்டு

தன்னுடையதை அந்தப் பழைய பேப்பர்களுக்கு நடுவில் சேர்த்து விட்டாள்.

அதற்குள் லால் வந்துவிட்டான். ''போகலாமா'' என்றான்.

''டாக்டர் பரத்வாஜ் வந்ததும் சொல்லிவிட்டு போகலாம்.''

இரண்டு நிமிடங்களுக்கு பிறகு உள்ளேயிருந்து பரத்வாஜ் வந்தார். ''போய் வருகிறோம் டாக்டர். தாங்க்ஸ்'' என்றாள். அவர் தலையை அசைத்து விட்டு ஜேபியிலிருந்து பேனாவை எடுத்து அந்த பழைய பேஷண்டின் பைல் மீது குறுக்காக இரண்டு கோடுகளை கிறுக்கி விட்டு 'Closed' என்று எழுதி கையெழுத்திட்டார். அதை லாலிடம் கொடுத்து விட்டு ''ரிகார்ட் செக்ஷனுக்கு அனுப்பி விடு'' என்றார்.

டாக்டர் லாலோடு சேர்ந்து அவள் வெளியே வந்தாள். அதற்குள் ரிசப்ஷன் பக்கமாக தந்தை வந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

''இந்த ரிப்போர்ட்டுகளை எல்லாம் பரிசோதித்து விட்டு எப்போது சொல்லுவார்கள்?''

''நாளைக்கு.''

''உங்களால் பார்த்துச் சொல்ல முடியாதா?''

''நான் எம்.பி.பி.எஸ். டி.ஜி.பி. கெனடா...''

''தெரியும் தெரியும். ஆனால் நான் என்ன விரும்புகிறேன் என்றால் என் ரிப்போர்ட்டுகளை எல்லாம் நீங்களே... நீங்கள் மட்டுமே பரிசோதித்து எனக்கு போன் செய்து, சுயமாக என்னிடம் சொல்லணும் என்று'' என்றாள் சிரிப்பை அடக்கிக் கொண்டே.

''கண்டிப்பாக'' அவளுடன் போனில் பேசக் கூடிய அந்நர்ப்பம் கிடைத்ததற்கு பூரித்துப் போய் விட்டான் லால்.

''ஏம்மா... போகலாமா?'' விவேகாநந்தன் அருகில் வந்து கொண்டே கேட்டார். அவள் தலையை அசைத்தாள். இருவரும் ஏறிக் கொண்டதுமே கார்கள் எல்லாம் வரிசையாக நகர்ந்தன.

24

மதியம் இரண்டு மணி.

ஸ்ரீகல்யாணியின் படுக்கையறையில் ஏறக்குறைய ஒரு மணி நேரமாக மீட்டிங் நடந்து கொண்டிருந்தது. ஜெனரல் மேனேஜரோடு சேர்த்து இன்னும் நான்கு மேலதிகாரிகளும் இருந்தார்கள். சால்மன் கம்பெனி தம் மீது மறைமுகமாக நடத்திய தாக்குதலை எப்படி திருப்பி அடிப்படி என்பதுதான் பிரச்னை. தங்களுடைய வியாபாரத்தை எப்படி தொடர்ந்து நடத்துவது என்பது இன்னொரு பிரச்னை.

''நேற்று மாலை நான் ரத்தினத்துடன் பேசினேன். அவர்கள் நாளையிலிருந்து வேலை நிறுத்தத்தை தொடங்கப் போகிறார்கள்'' என்றாள் ஸ்ரீகல்யாணி.

அதைக் கேட்டதும் அதிகாரிகள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். கார்த்திகேயன் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தான்.

ரத்தினம் சால்மன் கம்பெனியின் யூனியன் லீடர். முதல் நாள் மாலையில் அவள் ரத்தினத்துடன் பேசிக் கொண்டிருந்த போது கார்த்திகேயன் அவ்விடத்திலேயே

தான் இருந்தான். இரண்டு நாட்களுக்கு பிறகு வேலை நிறுத்தத்தை தொடங்க வேண்டும் என்று அவள் எடுத்துரைத்தாள். இரண்டு லட்சம் ரூபாய் கைமாறும் உடன்படிக்கையின் மீது ரத்தினம் அதற்கு சம்மதித்தான். அவனுக்குக் கீழே இருக்கும் தொழிலாளர் சங்கம் வலிமை வாய்ந்தது. வேலை நிறுத்தம் தொடங்கிவிடும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அவள் இந்த விஷயத்தை வெளியே (தம்மை சேர்ந்தவர்களிடம்) சொன்னதில் ஒரு தாத்பர்யம் இருந்தது. இந்த விஷயம் எப்படியாவது சால்மன் கம்பெனிக்குத் தெரிந்து விடும். 'நீ எங்களுக்கு அடி கொடுத்தாய். நான் உங்கள் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்ய வைத்து உன்னை பழி வாங்க விட்டேன்' என்று மறைமுகமாக சால்மனுக்கு தெரிய வேண்டும். குறைந்தது பத்து நாட்களுக்கு வேலை நிறுத்தம் செய்யப் போவதாக ஒப்பந்தம். முதலில் ரத்தினம் ஐந்து லட்சம் கேட்டான். பேரம் பேசிய பிறகு இரண்டு லட்சத்திற்கு ஒப்புக் கொண்டான்.

''வேலை நிறுத்தத்திற்கு என்ன காரணத்தை சொல்லச் சொல்றீங்க?'' ரத்தினம் எழுந்து கொண்டே கேட்டான்.

''என்ன சொன்னாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. எனக்கு வேண்டியது பத்து நாட்களுக்கு வேலை நிறுத்தம் நடக்க வேண்டும். அவ்வளவுதான்.''

ரத்தினம் கிளம்பிப் போன பிறகு கார்த்திகேயன் கேட்டான். ''என்ன கல்யாணி இதெல்லாம்?''

அவள் சிரித்தாள். ''நாம் வெறுமே கையைக் கட்டிக் கொண்டு உட்காரவில்லை என்று அவர்களுக்கு புரிய வைப்பதற்காக'' என்றாள்.

''அதற்கு இரண்டு லட்சம் லஞ்சமா?''

''ஒரு விதமாக பார்த்தால் அது ரொம்ப குறைவுதான். ஆனால் அந்தத் தொழிலாளர்கள்தான் பாவம், பத்து நாள் சம்பளம் கிடைக்காது.''

''உன்னிடமிருந்து பணத்தை வாங்கிக் கொள்வதற்காகத்தான் அந்தத் தொழிலாளர் தலைவன் இந்தக் காரியத்தை செய்கிறான் இல்லையா?''

''ஆமாம்.''

''உங்கள் சண்டையில் தொழிலாளர்கள் நடுத் தெருவுக்கு வர வேண்டிய நிலைமை. இதெல்லாம் உனக்கு அநியாயமாக தோன்றவில்லையா?''

ஸ்ரீ கல்யாணி அவனை நிமிர்ந்து பார்த்தாள். தன்னைத் தானே சமாளித்துக் கொள்ள முயன்றவளாக ''நம் கப்பல் மூழ்கிப் போனதுமே குறுக்கு வழியில் தொல்லைகளை கொடுத்து நம் கம்பெனியை மூடிவிடுவதற்கு முயன்றார்கள். நம் தொழிலாளர்களை நடுத் தெருவுக்கு தள்ளிக் கொண்டு இருக்கிறார்கள், இது உங்களுக்கு அநியாயமாக படவில்லையா?'' என்றாள்.

அதற்கு மேல் அவனால் பதில் பேசமுடியவில்லை.

இப்பொழுதும் அவன் பேசவில்லை. நேற்றைய உரையாடல் இன்னும் மனதில் பசுமையாக அப்படியே இருந்தது. அவள் ஜெனரல் மேனேஜரைப் பார்த்து ''இன்னும் இரண்டு மூன்று நாட்களில் அவர்களின் அந்தனை ஸ்தாபனங்களின் மீதும் இன்கம் டாக்ஸ் ரெயிட் நடத்தும் விதமாக ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர்களுக்கு சென்ட்ரல் லெவலில் செல்வாக்கு இருந்தால் இருந்து

கொள்ளட்டும். இங்கே மட்டும் நம்முடையதுதான்'' என்றாள்.

அதிகாரிகள் வாயடைத்துப் போனவர்களாக அவளைப் பார்த்தார்கள். போர்க்களத்தில் ஸ்ரீகிருஷ்ணரைப் போல் தென்பட்டாள் அவள் அந்தச் சமயத்தில் அவர்களுடைய கண்களுக்கு.

''இன்றைக்கே இருபது லட்சம் போட்டு அந்தக் கம்பெனியின் ஷேர்களை வாங்குங்கள். வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டு, இன்கம் டாக்ஸ் முற்றுகை நடந்ததுமே பாதி விலைக்கு விற்று விடுங்கள். சால்மன் கம்பெனி மூடப்பட்டு விடுமோ என்ற பீதி மக்களுக்கு ஏற்பட வேண்டும். இந்த விதமாக எல்லாப் பக்கங்களிலிருந்தும் அவர்கள் மீது மறைமுகமாக போர் தொடுக்கப்பட வேண்டும். எப்படி இறங்கி வர மாட்டார்கள் என்று பார்த்து விடுகிறேன்.''

ஜெனரல் மேனேஜர் சொன்னார். ''அப்படி என்றால் நமக்கு நாளைக்கே இருபது லட்சம் வேண்டும். எங்கே இருந்து கொண்டு வருவோம் மேடம்?''

''அந்த விஷயமாக சேட் ரத்தன்லாலிடம் பேசி விட்டேன். நமக்கு எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது கோடி ரூபாய் வரை தருவார்.''

''எப்படி தருவார்?''

''இரண்டு கோடி ரூபாய் வரையில் மதிப்பு கொண்ட என் சொத்துக்கள் அனைத்தையும் அடமானம் வைத்தால் ஏன் தர மாட்டார்? சொத்துக்கள் அத்தனையும்... துடைப்பக் கட்டையிலிருந்து சகலமும்.''

அணுகுண்டு வெடித்த பிறகு ஏற்படும் நிசப்தம்!

கார்த்திகேயன் இன்னும் மௌனமாகவே கேட்டுக் கொண்டிருந்தான். இந்த அடமான விஷயம் அவனுக்கு ஏற்றே தெரியும். அவள் சொன்ன வார்த்தைகள் கூட நினைவுக்கு வந்தன.

''சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லாத போரில் நாம் சாவதா அல்லது எதிரியைக் கொல்வதா என்ற இரண்டே வழிகள்தாம். அடுத்தவனின் கத்திக்கு முன்னால் சமாதானக் கொடியைத் தூக்கிக் கொண்டு போக முடியாது இல்லையா? நான் நாசமடைந்து போகப் போவது உறுதியாகி விட்டால் அவர்களை வேரோடு நாசமாக்கி விட்டுத்தான் போவேன்.''

'நான்' என்றாள் அவள். 'நாம்' என்று சொல்ல வில்லை.

மேலும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அதிகாரிகள் கிளம்பிப் போனார்கள். ஸ்ரீகல்யாணி அவனை நோக்கி திரும்பி ''இதெல்லாம் உங்களுக்கு முருக்கால் அருவருப்பாக தோன்றலாம்'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''நீ தானே சொன்னாய் போரில் காலடி எடுத்து வைத்து விட்டால் வெற்றியோ அல்லது வீர மரணமோ தவிர்க்க முடியாது என்று'' என்றான். இந்த உரையாடல் அவளால் ரொம்பவும் கலக்க மடைந்துவிட்டாள் என்று அவன் முகத் தோற்றத்தை பார்த்தாலே புரிந்தது.

''சரி போகட்டும். நீங்களே சொல்லுங்கள். இந்த நாளை எதுவும் இல்லாமல் நிலைமை பழையபடி மாறுவதற்கு வேறு ஏதாவது வழியிருந்தால், இந்த

நிமிஷமே இதை எல்லாம் விட்டு விட்டு, அந்த வழியை கடைபிடிக்கிறேன்.''

''நான் சொல்ல வந்தது வழிகளைப் பற்றி இல்லை, செயல்பாட்டை பற்றி. புத்தரை போல் நாம் விரக்தியை கடைபிடிக்க வேண்டியதில்லை. கிரிஸ்துவைப் போல் மக்களுக்காக சிலுவையில் ஏறத் தேவையில்லை. ஆனால் கொஞ்சம் அஹிம்சை கொஞ்சம் அமைதி... இதெல்லாம் நம் வாழ்க்கையின் ஒரு பகுதியாக அமையாமல் போனால் பிறகு எதில் போய் முடியும்? நான் சொல்வது நம்மை பற்றி மட்டுமே இல்லை கல்யாணி! இந்த உலகத்தைப் பற்றி, இந்த நாட்டைப் பற்றி. கடைசியில் தேர்தலில் நின்றால் கூட பாடிகார்டுகளை வைத்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டோம். பஸ்களை எரிப்பதும், யாரையோ விடுதலை செய்ய வேண்டும் என்று வேறொரு வரைக் கொலை செய்வதும்... இதெல்லாம் பத்து வருஷங் களுக்கு முன்னால் நமக்குத் தெரியாது. ஹிம்சையை நோக்கி எவ்வளவு வேகமாக போய்க் கொண்டிருக்கிறோம் பாரு-''

''சொல்ல வேண்டிய விஷயத்தை விட்டு விட்டு எங்கேயோ போய்க் கொண்டிருக்கீங்க.''

''இல்லை இல்லை. சமூக விளைவுகளுக்கெல்லாம் மனிதனின் மனம்தான் காரணம் என்று சொல்கிறேன். உனக்கு அவர்கள் விஷம் கொடுப்பார்கள். கடன் தரவிடாமல் வங்கியைத் தடுப்பார்கள். நீ அவர்கள் மீது இன்கம் டாக்ஸ் ரெயிட் நடக்கும் விதமாக ஏற்பாடு செய்வாய். அவர்கள் உன் ஃபேக்டரியைத் தீயிட்டுக் கொளுத்துவார்கள். அதற்கு பழிவாங்குவது போல் நீ மறுபடியும் ஏதாவது... அவர்கள் வேறு எதையோ... இது... இது ஓயாது.''

''ஆனால் இதில் நீங்கள் கூட பங்குதாரர்கள் தான். பெராக்ஸைட் சாயங்களால் தலைமுடிக்கு எவ்வளவு ஆபத்து வருகிறது என்று பத்திரிகைகளில் பிரசுரித்து எதிரிகளை வீழ்த்த வேண்டும் என்ற யோசனை உங்களுடையதுதான்'' என்றாள் அவள் முறுவலுடன்.

''ஆமாம். அதற்காக நான் எவ்வளவு வருத்தப் பட்டேன் தெரியுமா? கடந்த காலத்துத் தவறுகளை நிகழ்காலத்தில் யோசித்துப் பார்த்து எதிர்காலத்தில் அதைத் திருத்திக் கொள்வதுதானே வாழ்க்கை?''

''அதற்காக இப்போ நாம் என்ன செய்ய வேண்டும்?''

''இந்த வேலை நிறுத்தங்கள், லாக்கவுட்டுகள் முதலியவற்றை விட்டு விட வேண்டும்.''

''விட்டு விட்டு? விட்டு விட்டு என்ன செய்வது? நாங்கள் தோற்றுப் போய் விட்டோம் என்று அவர்களிடம் தூது போவோமா?''

''உங்கள் ஜோலிக்கு நாங்கள் வரவில்லை. எங்கள் ஜோலிக்கு நீங்கள் வர வேண்டாம் என்று சொன்னால் அவர்கள் கேட்க மாட்டார்களா?''

''கேட்க மாட்டார்கள். மறுபடியும் டின்னரில் கூடி பிரித்துக் கொள்வார்கள்.''

''ஒரு சான்ஸ் எடுத்துக் கொள்வதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன்.''

''யார் போவார்கள் தூதுக்கு? நீங்க போவீங்களா?''

''போகிறேன்.''

''எனக்கு தட்சயாகம் கதைதான் நினைவுக்கு வருகிறது. உங்களுக்கு அவமானத்தைத் தவிர வேறெதுவும் கிடைக்காது அங்கே.''

''நீ ஒரு முறை சொன்னாய் நினைவு இருக்கிறதா? நூறு தொழிலாளர்களின் வாழ்க்கைக்காக பான்பராக் உற்பத்தியை தொடரத்தான் வேண்டும் என்று வாதாடினாய். நூறு பேருக்காக பான்பராக் உற்பத்தியையே தொடரத்தான் வேண்டும் என்று நினைக்கும் போது ஆயிரம் தொழிலாளர்கள் நடுத் தெருவுக்கு வராமல் இருப்பதற்காக ஒரு அவமானத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியாதா?''

ரத்தம் வற்றி விட்டாற்போல் அவள் முகம் வெளிறிப் போய் விட்டது. ஆனால் அது வினாடி நேரம்தான். உடனே தேறிக் கொண்டு ''இப்படிப்பட்ட வாதங்கள் எல்லாம் வெறுமே தியரியில் சொல்வதற்கு மட்டும்தான் பயன்படும்'' என்றாள். தன் வாதத்தில் தவறு இல்லை என்று அவளுக்குத் தெரியும். இந்தப் போட்டி உலகத்தில், வித்தியாசமான கொள்கைகள் கொண்ட வியாபார உலகில் சமாதானம் என்ற பேச்சுக்கே இடம் இருக்காது என்று அவனுக்கு எப்படி எடுத்துச் சொல்வது? இந்த ஐடியலிஸ்டுகளோடு இதுதான் பெரிய சிக்கல். அவர்கள் வாதங்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் பலமாக இருக்கும், நடைமுறையில் தவிர.

அவள் அதே வேகத்தில் சொன்னாள். ''அப்படி என்றால் இப்போ நான் செய்வதெல்லாம் தவறு என்கிறீங்களா?''

''நீ செய்வது தவறா இல்லை சால்மன் கம்பெனிக் காரர்கள் செய்வது தவறா என்று எனக்குத் தெரியாது. இரு வியாபார மேதாவிகள் சண்டை போட்டுக் கொண்டால் நடுவில் நலிந்து போகிற அப்பாவி மக்களைப் பற்றித்தான் பேசுகிறேன்.''

''பேச என்னாலும் முடியும். நடைமுறையில் என்ன செய்ய முடியும் என்பதுதான் பிரச்னை.''

அவன் மனம் புண்பட்டது. ஆனாலும் அதை மூடி மறைத்துக் கொண்டு சொன்னான். ''நீ அந்தத் தொழிலாளர் தலைவனோடு பேசியபடி சால்மன் கம்பெனிக்காரர்கள் பணிந்து வரும்வரை அவன் வேலை நிறுத்தம் செய்ய வைப்பான். அப்படித்தானே?''

''ஆமாம். அதற்காகத்தானே சொத்தை எல்லாம் அடமானம் வைத்து பணம் தந்ததே.''

''அவர்கள் அதற்கும் பணிந்து வரவில்லை என்றால் கடை அடைப்புகளும், சாகும் வரை உண்ணா விரதங்களும்-''

''நடக்கலாம்.''

''யூனியன்கள், கடையடைப்புகள், போலீஸ் துப்பாக்கி சுடுவது, மக்கள் இறந்து போவது...''

''அப்படியும் நடக்கலாம்.''

''இத்தனையும் ஒரு சின்ன விஷயத்திற்காக. காஸ்மெடிக்ஸ் துறையில் நீ உயர்ந்தவளா இல்லை சால்மன் உயர்ந்தவனா என்று தெரிந்து கொள்வதற்கு'' என்று நிறுத்திவிட்டு கார்த்திகேயன் மெதுவாக சொன்னான். ''அஸ்ஸாமில் தீவிரவாதிகள் மத்திய அரசாங்கத்தோடு மோதிக் கொண்டு அப்பாவிகளான இஞ்ஜினியர்களை கொலை செய்தார்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் கல்யாணி?''

அவள் முகத்தில் ஜிவ்வென்று ரத்தம் பாய்ந்தது. ஆவேசத்தில் குரல் நடுங்கச் சொன்னாள். ''ஆமாம். நாங்கள் அரக்கர்கள்தான். நாங்கள் மனிதர்களைக் கொன்று தின்போம். ஆனால் உங்களுக்குத் தெரியுமா? இந்த உலகத்தின் அட்லாஸ் போன்றவர்கள் நாங்கள். உற்பத்தியை எப்படி

பெருக்குவது என்று இரவும் பகலுமாக தூங்காமல் யோசித்துக் கொண்டிருப்போம். அதற்குத் தேவையான வழிகளை கண்டுபிடிக்க இடைவிடாமல் உழைத்துக் கொண்டிருப்போம். வருமானத்தில் பாதியை அரசாங்கத்திற்கு தந்துவிடுவோம். நாங்கள் செலுத்தும் வரிப்பணத்தில்தான் காவல் துறை செயல்படுகிறது. ராணுவம் நாட்டை காவல் காத்து வருகிறது. அந்தப் பாதுகாப்பில், அந்த நிழலில் உங்களைப் போன்ற கவிஞர்களும், கலைஞர்களும் நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வேலை வெட்டி எதுவும் இல்லாமல் எங்களை விமரிசனம் செய்து கொண்டிருப்பார்கள்.''

கூர்மையாக தீட்டிய அம்பு நேராக வந்து குத்தியது. இதயத்தின் ஆழத்தைக் கிழித்துக் கொண்டு போய் மிக நுட்பமான பகுதியைத் தூள் தூளாக்கிவிட்டது.

அவனுடையதை அல்ல. அவளுடையதை.

அவள் துடிதுடித்துப் போனாள். வார்த்தைகளை அள்ளி விட்ட பிறகு புரிந்தது அவளுக்கு, தான் எவ்வளவு தவறாக பேசிவிட்டோம் என்று.

ஒரு பக்கம் பொருளாதார ரீதியான நெருக்கடி, இன்னொரு பக்கம் உடல் நலக் குறைவு. மற்றொரு பக்கமோ நிலைமை கை நழுவிப் போய்க் கொண் டிருக்கிறதே என்ற சுய இரக்கம். எல்லாப் பக்கங்களி லிருந்தும் பிரச்னைகள் சூழ்ந்து கொள்ளவும் அவள் ஒரு நிமிடம் நிலைதடுமாறி விட்டாள். எந்த வேலையும் செய்யாமல் உழைப்பாளிகளின் வியர்வையை பற்றி உயர்வாக வாய் கிழிய பேசுபவர்களின் மீது அவளுக்கு இருந்து வந்த மனக்குமுறல் அந்த விதமாக வெளிப்பட்டு

விட்டது. அதற்கு இலக்கானவன் அவன். மிக கொடூரமான அடி அது.

ஆனால் அவன் மட்டும் சட்டென்று தேறிக் கொண்டான். உண்மையில் அவள் அவ்வளவு நேராக நாக்கியதைப் பார்த்து அவனும் வாயடைத்துப் போய் விட்டான். ஆனால் அதை சொல்லி முடித்ததுமே அவள் உடனே வருத்தப்பட்டதையும் அவன் கவனித்தான். அவள் தன்னை கவனிப்பதற்கு மயிரிழை நேரத்திற்கு முன்னால் அவன் அவளை கவனித்து சுதாரித்துக் கொண்டு விட்டான்.

வாய் தவறி அடுத்தவர்கள் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அதைப் பிடித்துக் கொண்டு வாதம் புரிந்து வெற்றி பெறுவதும், அடுத்தவரைத் தோற்கடித்து விட்டு மன்னிப்பு கேட்டுக் கொள்ளும்படி செய்வதும் உயர்ந்தவர்களின் லட்சணமாக இருந்தால் இருந்து கொள்ளட்டும். ஆனால் அடுத்தவர்கள் வாய் தவறி ஏதாவது சொல்லிவிட்டால் அதை கவனிக்காதது போல் நடந்து கொள்வது மிகவும் உயர்ந்தவர்களின் லட்சணம்.

கார்த்திகேயன் சிரித்துக் கொண்டே ''என்ன விஷயம்? இன்றைக்கு ரொம்பவும் சூடாக இருக்கிறாயே'' என்றான்.

ஆனால் பலன் இல்லாமல் போய் விட்டது. தன் வார்த்தைகள் அவன் இதயத்திற்குள் ஊடுருவிக் கொண்டு போய் தைத்து விட்டதை அவள் உணர்ந்தாள். அதற்கு பிறகு இருவரும் அந்த விஷயத்தை மறந்து போனாற்போல் நடித்து ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். எங்கேயோ வெறுமை அவளுக்குத் தென்பட்டுக் கொண்டே இருந்தது. இரு மேதாவிகளுக்கு இடையே காதல் சாத்தியப் படாதோ என்று அவளுக்குத் தோன்றியது.

அப்படியும் காதலிக்கணும் என்றால் இருவரில் ஒருத்தர் அப்பாவியாகவாவது இருக்க வேண்டும். அல்லது தன்னையே மறந்து போகக் கூடிய அளவுக்கு காதலில் ஆழமாக மூழ்கியிருக்க வேண்டும்.

''நான் என் வியாபாரத்தை அதிகமாக நேசிக்கிறேனா அல்லது கார்த்திகேயனை அதிகமாக நேசிக்கிறேனா?'' என்ற சந்தேகம் அவளுக்கு முதல் முதலாக தோன்றியது. அது மட்டுமே இல்லை. மூளையைக் குழப்பக் கூடிய எத்தனையோ யோசனைகளும்.

கார்த்திகேயனுக்கு தன்மீது இருப்பது காதலா இரக்கமா? தன் பணத்தின் மீது அவனுக்கு ஆசை இல்லை. பின்னே தன்னை ஏன் நேசிக்கிறான்? தான் தாம்பத்திய சுகத்திற்குக் கூட பயன்படாதவள் ஆயிற்றே? பண்பாட்டு நெறியா? மனைவி என்ற ஸ்தானத்தில் இருப்பதால் நேசிக்கிறானா? அப்படி என்றால் தன் இடத்தில் வேறு யாரு இருந்தாலும் இதே போல் தான் நேசிப்பான் போலும். ஆமாம் பின்னே! அவனுக்குப் பிடித்த குணம் தன்னிடம் ஒன்று கூட இல்லை. எவ்வளவு பரிதாபகரமான நிலைமை? அவளிடம் உயர்ந்த குணங்கள் நிறைய இருக்கலாம். ஆனால் அவை அவனுக்குப் பிடிக்காதவை. அவன் கண்ணோட்டத்தில்ங அவள் ஒரு உயர்ந்த மனுஷி. அவ்வளவுதான். ஆனால் காதல் என்றால் ஒருத்தரை ஒருத்தர் புகழ்ந்து கொள்வது இல்லை. சண்டை போடணும். திட்டிக் கொள்ளணும். அதற்குப் பிறகு ஒன்று சேர்ந்து விட வேண்டும். ஒருவருக்காக ஒருவர் உருக வேண்டும்.

இவை எதுவுமே தங்களுக்கு இடையில் இல்லை. முதல்முதலாக இந்த விஷயத்தை உணரத் தொடங்கியதுமே

அவள் உடல் சிலிர்த்தது. அன்றிரவு அவள் நிறைய காம்போஸ் மாத்திரைகளை போட்டுக் கொண்டாள்.

வியாபாரத் துறையில் இருப்பவர்களும், லேவா தேவி விவகாரங்களில் மூழ்கியிருப்பவர்களும் ஆணாக இருந்தால் ஸ்காட்ச்சையும், பெண்ணாக இருந்தால் காம்போஸையும் பயன்படுத்துவது சகஜம்தான். அவள் அளவுக்கு அதிகமாக போட்டுக் கொண்டு விட்டதால் நிலைமை மோசமாகிவிட்டது.

ஏற்கெனவே நரம்புகள் பலவீனமாக இருந்ததால் நள்ளிரவு தாண்டியதும் கன்வல்ஷன்ஸ் தொடங்கிவிட்டது. இரவோடு இரவாக அவளை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியிருந்தது. இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்து விட்டு அவள் வீட்டிற்கு வந்தாள்.

இந்த இரண்டு நாட்களுக்குள் அவள் கம்பெனியின் பொருளாதார நிலைமை மேலும் மோசமாகி விட்டிருந்தது. வேலை நிறுத்தத்தின் மூலமாக சால்மன் கம்பெனியில் எதிர்பார்த்த அளவுக்கு குழப்பம் ஏற்படவில்லை.

அவள் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாக வதந்தி பரவியதால் வங்கிக்காரர்கள் மேலும் கெடுபிடி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஷேரின் விலை மேலும் வீழ்ந்து விட்டது. அதிகாரிகள் மேலும் கலக்கமடைந்து விட்டார்கள்.

ஆ...னா...ல்...

கல்யாணி இதை எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை. கணவனை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த இரண்டு நாட்களும் அவன் ஆஸ்பத்திரியில் அவளை விட்டு நகரவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் அவளுக்கு

தேவையான பணிவிடை செய்து வந்தான். அவள் திரும்பி வரும் வரையில் அவளுடனேயே இருந்தான். கடைசியில் அவள் வாந்தி எடுத்த போது கூட அவனே சுத்தம் செய்தான்.

ஸ்ரீகல்யாணி இதையெல்லாம் கவனித்துக் கொண்டே இருந்தாள். இந்த கவனிப்பு என்பது ஆழ்ந்த அன்பில் திளைத்திருக்கும் பொழுது ஏற்படாது. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் காதலித்தால் முதலில் கவனிப்பு என்பதே இருக்காது. கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வந்த பிறகு எரிச்சல் ஏற்படத் தொடங்கும். ஆனால் ஸ்ரீ கல்யாணிக்கு கார்த்திகேயன் மீது எரிச்சல் ஏற்படவில்லை. அளவுக்கு மீறி விருப்பம் ஏற்பட்டது. அந்த விருப்பம் தன் மீதே தனக்கு எரிச்சலை தோற்றுவித்துக் கொண்டிருந்தது. மனித உறவுகள் அத்தனையுமே சுயநலத்தோடு கூடியவை தான் என்ற அவளுடைய ஆழ்ந்த அபிப்பிராயத்திற்கு ஒரு கேள்விக் குறியாக இருந்தான் அவன்.

தொடக்கத்தில் அவனுடைய அபூர்வமான அன்பில் அவள் உருகிப் போனது உண்மைதான். ஆனால் இப்பொழுது அந்த மயக்கத்திலிருந்து தேறிக் கொண்டாள். தேறிக் கொண்டு பார்த்தபொழுது எல்லாம் பெற்றுக் கொண்டது தான் தென்பட்டது. கொடுத்து எதுவும் தென்படவில்லை.

ஆனாலும் கார்த்திகேயன் அவளை நேசிக்கிறான். 'நீங்க என்னிடம் எதைப் பார்த்து விட்டு காதலித்தீங்க?' என்று கேட்க வேண்டும் என்று நுனி நாக்கு வரை வந்த கேள்வியை அப்படியே நிறுத்திக் கொண்டு விடுவாள். அவன் சிரிப்பே பதிலாக இருக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

அடுத்தவரிடம் நமக்குப் பிடித்த சில லட்சணங்கள் இல்லை என்றால் நம்மால் அவரைக் காதலிக்கவோ, அவர்களால் காதலிக்கப்படவோ முடியாது. அதனால்தான் ஒருத்தரைப் பற்றி இன்னொருத்தர் தெரிந்து கொள்ளாமல் கண்டதும் காதல் என்று தோன்றும் சினிமாத்தனமான காதல்கள் அதிகநாள் நிலைக்காது.

தங்களுடையதும் அப்படிப்பட்ட காதல்தானா?

அவனிடமிருந்த அபூர்வமான கலையின் மீது அவளுக்கு எந்த விதமான ஆர்வமும் இல்லை. அவளுடைய உலகமான வியாபாரத்தின் மீது அவனுக்கு (வெளியில் தென்படாமல் போனாலும்) எந்த மதிப்பும் கிடையாது. ஆனால் தம் இருவரையும் கட்டிப் போட்டு வைத்திருப்பது எது?

கேவலம் தாலிதானா?

சில நாட்களுக்கு முன்னால் கோவிந்த் அனுஜாவை கேட்டான், ''எதைப் பார்த்து நீ கார்த்திகேயனை காதலிக்கிறாய்?'' என்று. இப்பொழுது கல்யாணி அதே கேள்வியைத் தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள், ''எதைப் பார்த்து கார்த்திகேயன் என்னைக் காதலிக்கிறான்?'' என்று.

இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் அவனுடைய நடவடிக்கைகளைப் பார்த்த பிறகு அவளால் அதற்கு மேல் மன உறைச்சலைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''என்னால் உங்களுக்கு என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டாள்.

அவன் வியப்படைந்து ''நீ எனக்கு செய்வதா? எதற்கு?'' என்றான்.

''அதான். என்னால் ஒன்றுமே செய்ய முடியாது. அதைத்தான் சொல்கிறேன்'' என்றாள்.

''நீ வெறுமே இருப்பதால் எதை எதையோ யோசித்துக் கொண்டிருக்கிறாய் கல்யாணி!''

''இதோ பாருங்கள். நான் உங்கள் மனதை ஆழமாக காயப்படுத்தி விட்டேன் என்று எனக்குத் தெரியும். 'உங்களுக்கு எதுவும் கையாலாகாது' என்று எந்த மனைவியாவது கணவனிடம் சொன்னால் அதை விட அவமானம் வேறு இருக்காது. உங்க இடத்தில் வேறு எந்த ஆண் இருந்தாலும் கன்னத்தில் அடித்திருப்பான். ஒருக்கால் ரொம்பவும் செண்டிமெண்டலான ஆசாமியாக இருந்தால் நான் அப்படிச் சொன்னதுமே, எந்த ஹோட்டலிலாவது சர்வராக வேலைக்கு சேர்ந்து அந்த விஷயம் எனக்குத் தெரியும் விதமாக செய்து விட்டு தான் ஒரு ஹீரோவாகி விட்டிருப்பான். அந்த விஷயம் எனக்குத் தெரிந்ததுமே கண்ணீர் வடித்து, 'நான் அந்த உத்தேசத்தில் சொல்ல வில்லைங்க' என்று சொன்ன பிறகு பரந்த உள்ளத்தோடு என்னை மார்போடு அணைத்துக் கொண்டு மன்னித்து விட்டாற்போல் நடந்து கொண்டிருப்பான். நீங்க இதில் எதையுமே செய்யவில்லை. பொருட்படுத்தவும் இல்லை. அதுதான் என்னை வருத்தப்படுத்துகிறது. ஏதாவது செய்யுங்கள் ப்ளீஸ்!''

''சரி. உன் கன்னத்தை இப்படிக் காட்டு'' என்றான் கார்த்திகேயன் சிரித்துக் கொண்டே.

''எதுக்கு?''

''கண்களை மூடிக் கொள். சொல்கிறேன்'' என்று அவள் கன்னத்தில் அழுத்தமாக முத்தம் பதித்துவிட்டு

''கையில் கொடுக்கும் முத்தத்தை விட கன்னத்தில் கொடுப்பது தான் இதயத்தில் அழுத்தமாக பதியுமாம்'' என்றான்.

அவள் அந்த ஜோக்கை ரசிக்கும் நிலையில் இல்லை. ''நீங்க ஏதாவது செய்யும் வரையில் எனக்கு மன நிம்மதியே இருக்காது'' என்றாள்.

''நான்தான் தினமும் ஆபீசுக்கு போய்க் கொண்டிருக்கிறேனே கல்யாணி?''

''ஆனால் எந்த முடிவுகளையும் எடுத்துக் கொள்வதில்லையே?''

''நான் ஏதாவது முடிவை எடுத்துக் கொண்டால், புதிதாக பிரச்னை வந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது.''

''அப்படி என்றால் எதற்காக போறீங்க? என்னை சந்தோஷப்படுத்த வேண்டும் என்பதற்காகவா?''

அவன் பதில் பேசவில்லை.

''இதோ பாருங்கள். இந்த வியாபாரம், இதில் இருக்கும் கஷ்ட நஷ்டங்கள் இதெல்லாம் எனக்கு சிறுவயதிலிருந்தே இருந்து வந்தவைதான். இதெல்லாம் இல்லாவிட்டால் எனக்கு எதுவும் ஓடவும் ஓடாது. நீங்க அவற்றை பொருட்படுத்த தேவையில்லை. என்னிடம் விட்டுவிடுங்கள்.''

''விட்டு விட்டு?''

''மருத்துவப் படிப்பை முடியுங்கள்.''

''இப்பொழுதா?''

''ஏன்? அப்பொழுதுதான் பணம் இல்லை என்று சொன்னீங்க. இப்பொழுது அதற்குக் குறைவே இல்லையே?''

''நான் படிப்பை முடிக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் எப்படியாவது முடித்திருப்பேன். எனக்கு ஏனோ ஆர்வம் இல்லை கல்யாணி. பெரிய பெரிய படிப்பு படித்த டாக்டர்கள் கூட மருத்துவம் பார்க்காமல் பிசினெஸ் செய்து கொண்டு இருப்பார்கள். ஏன்? அந்தத் தொழில் மீது ஆர்வம் இல்லாததால். அதே போல் எனக்கு மெடிசன் படித்துக் கொண்டிருக்கும் போதே அதன் மீது ஆர்வம் போய் விட்டது.''

''உங்களுக்கு ஓவியம் வரைவது தவிர வேறு எதிலுமே இன்ட்ரெஸ்ட் இல்லை. அப்படித்தானே?''

அவன் பதில் சொல்லவில்லை.

''உங்களுக்கு எந்த ஏற்பாடு வேண்டுமானாலும் நான் செய்து தருகிறேன். மறுபடியும் வரைய தொடங்குங்கள்'' - கெஞ்சுவது போல் சொன்னாள்.

அவன் அவளை சலனமில்லாமல் பார்த்தான். 'என்னுள் எங்கேயோ ஏதோ தொடர்பு அறுந்து விட்டது என்று உனக்கு எப்படி சொல்வேன்?' மனதில் நினைத்துக் கொண்டான்.

மனப் போராட்டத்தின் சிவப்பையோ, இதய நெகிழ்ச்சியின் மஞ்சள் நிறத்தையோ கலைத்தாயின் கால்களுக்கு பராணியாக பூச வேண்டும் என்றால் முக்கியமாக ஒருமித்த மனம் இருக்க வேண்டாமா?

அதே தூரிகை... அதே இதயம். ஆனால் துடிப்புத்தான் வித்தியாசம்.

''சொல்லுங்கள். வரைவீங்களா?''

''வேண்டாம் கல்யாணி! கொஞ்ச நாள் பொறுத்திருப்போம். இந்தப் பிரச்னைகள் எல்லாம் முடியட்டும்.'' அவன் தலை குனிந்தபடி அந்த அறையை விட்டு வெளியே நடந்தான்.

அவன் போன திசையையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் அவள்.

25

''உட்காருங்கள்'' என்றார் டாக்டர் பரத்வாஜ்.

விவேகாநந்தன் எதிர் சீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டே ''என்ன டாக்டர்? ரொம்ப அவசரமாக பேசணும் என்று வரச் சொன்னீங்களே'' என்றார் முறுவலுடன்.

பரத்வாஜ் பதில் பேசவில்லை. மௌனமாக அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்ன டாக்டர்? என் ரிப்போர்ட்டில் ஏதாவது பிரச்னையா?''

பரத்வாஜ் மெதுவாக சொன்னார். ''உங்கள் ரிப்போர்ட்டில் இல்லை. உங்கள் மகள் ரிப்போர்ட்டில்.''

விவேகாநந்தனின் முகத்தில் சிரிப்பு மாயமாகி விட்டது. ''என்ன பிரச்னை டாக்டர்?'' பதற்றத்துடன் கேட்டார்.

மேஜை மீது இருந்த ஃபைலிலிருந்து அனுஜாவின் பிளட் ரிப்போர்ட்டை எடுத்து ''சாரி சர். உங்கள் மகள் ஹாட்கின்ஸ் நோயால் தாக்கப்பட்டிருக்கிறாள்'' என்றார்.

விவேகாநந்தனுக்கு புரியவில்லை. ''அப்படி என்றால்?'' என்று கேட்டார் குழப்பத்துடன்.

''ஒரு விதமான லிம்போ பிளாஸ்டிக் ஸிம்ப்டம். கடைசி வரைக்கும் தெரியாது. கடைசி காலத்தில்தான் வெளிப்படும்.''

''நோ... நோ...'' முணுமுணுத்துக் கொண்டார் விவேகாநந்தன்.

டாக்டர் தொடர்ந்தார். ''உங்களுக்குத் துணையாக வந்து விட்டு, விளையாட்டாக தானும் பரிசோதனை செய்து கொண்டாள் உங்கள் மகள். அதில் இந்த நோய் வெளிப்பட்டது துரதிர்ஷ்டம்தான்.''

''அதற்கு மருந்து?''

''ஹாட்கின்ஸ் நோய்க்கு மருந்து கிடையாது. மரணம்தான்.''

''நோ...'' என்று கத்தினார் விவேகாநந்தன். ''கோடிக் கணக்கில் செலவழித்தாலும் சரி. உலகத்தில் உள்ள எந்த நாட்டிற்கும் அழைத்துக் கொண்டு போயாவது சரி, என் மகளை குணமாக்கிக் கொள்வேன்.''

பரத்வாஜ் அவரை இரக்கத்தோடு பார்த்தார். இந்த உலகத்தில் அடுத்தவருக்கு மிகவும் துரதிர்ஷ்டகரமான செய்திகளை சொல்லுபவர்கள் இரண்டே பேர்தான் 'உனக்கு தூக்குத் தண்டனை விதிக்கிறேன்' என்று சொல்லும் ஜட்ஜும் 'நீ மரணத்திற்கு வெகு அருகில் இருக்கிறாய்' என்று சொல்லும் டாக்டரும்.

''இப்போது நீங்கள் ஒரு முடிவுக்கு வரணும் - இந்த விஷயத்தை நீங்கள் உங்க மகளுக்கு சொல்லணுமா வேண்டாமா என்பதுதான் அது.''

விவேகாநந்தன் சட்டென்று நிமிர்ந்து பார்த்தார்.

பரத்வாஜ் வேதனையுடன் சொன்னார். ''ஆமாம். ரொம்ப கடினமான முடிவு. மகளிடம் சொல்லுவதால் என்ன பயன்? எப்படியும் மருந்து கிடையாது. அதோடு அவளை மனதளவிலும் வேறு இம்சிக்க வேண்டுமா என்ன? ஏதோ சாதாரண சிகிச்சையைத் தொடர்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் இவ்வளவு பயங்கரமான விஷயத்தை சொல்லத்தான் வேண்டுமா என்று நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.''

''அமெரிக்காவுக்கு அழைத்துக் கொண்டு போனால்?''

''அதான் சொன்னேனே, வீணாக அவளை விதவிதமான சோதனைக்கு உட்படுத்தித் துன்புறுத்துவதை தவிர வேறு பிரயோஜனம் இருக்காது என்று.''

''நீங்களாக இருந்தால் என்ன செய்வீங்க டாக்டர்? நோயாளியிடம் சொல்லுவீங்களா மாட்டீங்களா?''

''சாதாரணமாக சொல்ல மாட்டோம். நோயாளிடம் சொல்லி ஏதாவது ஜாக்கிரதைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இருந்தால் வேறு வழியில்லாத பட்சத்தில் சொல்லலாமே தவிர இந்த மாதிரி கேஸ்களில் சொல்லி என்ன பலன்? வீணாக வருத்தப்படுவதைத் தவிர.''

மேலும் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு விவேகாநந்தன் அங்கிருந்து கிளம்பினார். துள்ளாடும் நடையுடன் போய்க் கொண்டிருந்த விவேகாநந்தனை இரக்கத்தோடு பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தார் பரத்வாஜ்.

★

டாக்டர் லாலிடமிருந்து போன் வருமோ என்று ஓரிரண்டு நாட்கள் எதிர்பார்த்து விட்டு பிறகு அந்த விஷயத்தையே மறந்து போய் விட்டாள் அனுஜா. அன்று மாலையில் அவள் பால்கனியில் உட்கார்ந்து கொண்டு இருந்த போது தந்தை காரிலிருந்து இறங்கியதை பார்த்தாள். தளர்ந்த நடையுடன் நோயாளியைப் போல் அவர் உள்ளே வந்து கொண்டிருப்பதை பார்த்து விட்டு ஓடிப் போய் கலவரத்தோடு ''என்ன டாடீ? என்ன நடந்தது?'' என்றாள்.

விவேகாநந்தன் நிமிர்ந்து அவளைப் பார்த்தார். சாதாரணமாக இருப்பதற்கு எவ்வளவு முயற்சி செய்த போதிலும் முடியவில்லை.

''உடம்பு சரியாக இல்லையா டாடீ?''

''நன்றாகத்தானே இருக்கிறேன்.''

''பின்னே ஏன் முகம் வாடியிருக்கு?''

''ஏதோ அரசியல் பிரச்னைகள்.''

அது அவர்களுக்கு பழக்கப்பட்டது தான். அரசியலில் ஒவ்வொரு நிமிஷமும் டென்ஷன் தான்.

''அதை எல்லாம் பொருட்படுத்த வேண்டாம் என்று எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டீங்க.''

தந்தையுடன் உள்ளே நடந்தாள். இருவரும் அவருடைய சேம்பருக்குள் நுழைந்தார்கள். தந்தைக்கு பக்கத்திலேயே சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். குறும்புத்தனமாக பேனாவால் காகிதத்தில் கிறுக்கிக் கொண்டே நிமிர்ந்து பார்த்தாள். தந்தை தன்னையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்பதை கவனித்து விட்டு ''என்ன டாடீ? ஏன் அப்படி பார்க்கிறீங்க?'' என்றாள்.

''ஒன்றும்... ஒன்றும் இல்லையம்மா'' என்றார்.

அவருடைய மூடை மாற்றுவதற்காக ''உங்களிடம் ஒரு விஷயத்தை சொல்வதாக இருந்தேன் டாடீ'' என்றாள்.

''எந்த விஷயம்?''

''சொன்ன பிறகு மாட்டேன் என்று சொல்லக் கூடாது.''

''சொல்ல மாட்டேன். சொல்லு.''

''பிராமிஸ்!''

அவர் மகளை ஈரவிழிகளுடன் பார்த்துக் கொண்டே 'இரண்டு மாதங்களில் எங்களை விட்டுப் போய்விடப் போகிற உனக்காக என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்' என்று மனதில் நினைத்துக் கொண்டார். மேஜை மீது இருந்த புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு விரல் நகங்களுக்கிடையில் வட்டமாக சுழற்றிக் கொண்டே மிகச் சாதாரணமாக தன் மனதில் உள்ள விஷயத்தை சொன்னாள் அவள். அவள் கையில் இருந்த புத்தகத்தில் முதல் பக்கத்தில் இவ்வாறு இருந்தது.

'அனுஜாவுக்கு... வாழ்த்துக்களுடன் கார்த்திகேயேன் கல்யாணி' என்று.

அவள் இன்னும் அதைப் பிரித்துப் பார்க்கவில்லை.

விவேகாநந்தனின் பார்வை மகள் கையிலிருந்த புத்தகத்தின் மீது விழுந்தது. ''கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொண்டு வாம்மா'' என்றார். அனுஜா அவரை வியப்புடன் பார்த்தாள். தந்தை இது போல் என்றுமே கேட்டதில்லை. பக்கத்து அறைக்குப் போய் டம்ளரில் தண்ணீரைக் கொண்டு வந்து தந்தாள். அவர் குடித்துக் கொண்டிருந்த

போது ''இது என்ன புத்தகம் டாடீ'' என்றாள் பரித்துப் பார்த்துக் கொண்டே.

''உனக்காக கார்த்திகேயன் அனுப்பினான். நான்தான் வாங்கிக் கொண்டு வந்தேன்.''

''ஓஹ்!'' கத்தினாள் அவள். ''அதை இப்பொழுது தானா கொடுப்பது?'' பக்கங்களை அப்படியும் இப்படியுமாக புரட்டிக் கொண்டே செல்லமாக சிணுங்கினாள்.

நட்சத்திரங்களை போல் ஜொலித்துக் கொண்டிருந்த மகளின் கண்களையே பார்த்தபடி ''வந்ததுமே ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டாயே?'' என்றார். தன் முகத்தில் எந்த வேதனையும் தென்பட்டு விடாமல் இருப்பதற்காக பெரும் முயற்சி செய்ய வேண்டியிருந்தது.

''ஆஸ்பத்திரி என்றதுமே ஞாபகம் வருகிறது. அந்த பி.பி.டி. லால் உங்களிடம் ஏதாவது சொன்னாரா?''

''பி.பி.டி. லாலா?''

''அதான்... அந்த இளம் டாக்டர்.''

''ஒன்றும் சொல்லவில்லையே? என்ன விஷயம்?''

''ஒன்றும் இல்லை டாடீ.'' அவள் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டாள். ''நான் சொன்ன விஷயத்தை என்ன செய்யப் போறீங்க டாடீ?''

''அதான் சொன்னேனே. இன்றைக்கே கிளம்பி அவங்க ஊருக்குப் போகிறேன்.''

''நான் ஏன் போன் செய்யவில்லை என்று கார்த்திகேயன் கேட்டால், அதற்கு ஒரு பெரிய காரணம்

இருக்குன்னு சொல்லுங்கள். அதோடு கேசட் கிடைத்த தான்னு கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.''

''கேசட்டா? அதென்ன?''

''சொன்னாலும் உங்களுக்குப் புரியாது டாடீ. கிடைத்ததா இல்லையா என்று மட்டும் கேளுங்கள்.'' சிரிப்பை அடக்கிக் கொண்டே சொன்னாள். வீடியோ லவ் லெட்டர் பற்றி நினைவுக்கு வந்ததும் அவள் இதழ்களில் தன்னையறியாமலேயே சிரிப்பு மலர்ந்தது. ஏதோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து போன மகளையே கண்கள் கசியப் பார்த்தார் விவேகாநந்தன்.

அதுவரை உள்ளங்கைக்குள் அடக்கி வைத்துக் கொண்டிருந்த காகிதத்தை மெதுவாக கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டார். கார்த்திகேயன் அனுப்பியிருந்த புத்தகத்தின் முதல் பக்கம் அது. அதைக் கிழித்துப் போடுவதற்காகவே மகளை தண்ணீர் கொண்டு வரும்படி அனுப்பினார் அவர்.

26

''இது தான் நடந்த கதை'' சொல்லி முடித்தான் சத்யன். கார்த்திகேயன் டில்லிக்குப் போனதிலிருந்து அனுஜாவை முத்தமிட்டது வரையில், தான் டில்லியில் சேகரித்த அத்தனை விவரங்களையும் சொன்னான்.

''அசகாய சூரன்தான். நான்தான் சொன்னேனே, வெளியில் அப்படித் தென்படுகிறானே தவிர, நம் எல்லோரையும் விட பரம ரசிகன் என்று'' என்றார் அஸ்வத்தாமன். ''பணத்திற்காக ஸ்ரீகல்யாணியைப்

பிடித்துக் கொண்டிருக்கிறான். மற்ற தேவைகளுக்காக அந்தப் பெண்ணை வழிக்குக் கொண்டு வரப் பார்க்கிறான்'' அவருடைய குரலில் பொறாமை வெளிப்பட்டது.

பிரதாப் கேட்டார். ''என்னவோ கேசட் என்றாயே? அதென்ன?''

''டில்லியிலிருந்து குரியரில் கார்த்திகேயனுக்காக அனுஜா அனுப்பியிருக்கிறாள். ஸ்ரீகல்யாணியுடன் பேசு வதற்காக போன போது என் கண்ணில் பட்டது. என்னதான் இருக்கிறதோ பார்ப்போம் என்று அவர்களுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக எடுத்துக் கொண்டு வந்து விட்டேன்.''

பிரதாப் ஆர்வத்துடன் எழுந்தார். அவர் அவ்வளவு ஆர்வமடைந்து அவர்கள் அதுவரை பார்த்ததில்லை. அவர் கேசட்டை எடுத்துக் கொண்டு உள்ளே நடந்தார். மற்ற இருவரும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். கேசட்டை உள்ளே போட்டு விட்டு ஆன் செய்தார் பிரதாப்.

என்னதான் வரப் போகிறதோ என்று சத்யன் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டான். டி.வி.யில் படம் ஓடத் தொடங்கியது. கோணார்க் சிற்பங்கள்... புறாக்கள்... நடுவில் அனுஜா. திரையில் அனுஜா தென்பட்டதுமே ''அந்தப் பெண்தான். அந்தப் பெண்ணேதான்'' என்று கத்தினான் சத்யன். ''டில்லி விமான நிலையத்தில் கார்த்திகேயனுக்கு விடை கொடுத்துக் கொண்டிருந்த போது பார்த்தேன்.''

அதற்குள் அந்தப் பெண்ணின் குரல் கேட்கவே எல்லோரும் அந்தப் பக்கம் பார்வையைத் திருப்பினார்கள்.

''கார்த்திகேயன்!'' திரையில் அனுஜா சொல்லிக் கொண்டிருந்தாள். ''மனதில் இருக்கும் உணர்வுகளை

பிரியமானவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும், மனத் திரையை அகற்றுவதற்கும் சாதாரணமாக கடிதங்களைத் தான் பயன்படுத்துவார்கள். என் நண்பனுக்கு இன்னும் சிறப்பாக சொல்ல வேண்டும் என்று விரும்பினேன்.'' லேசாக முறுவலித்தாள்.

அஸ்வத்தாமன் நாற்காலியில் விரைப்பாக உட்கார்ந் திருந்தார். அனுஜாவின் அழகு அவரை அசரவைத்து விட்டது.

டி.வி. திரையில் நதி ஒன்று நிலா வெளிச்சத்தில் வேகமாக பாய்ந்து கொண்டிருந்தது. மந்திர ஸ்தாயியில் அனுஜாவின் குரல். ''காற்று தன் கைகளால் நதியின் அலைகளைத் துயிலெழுப்பினாற் போல் உங்கள் நினைவுகள் என் இதழ்களில் சிரிப்பு அலைகளை தோற்று விக்கிறது'' நதியின் மீது நடந்து வருகிறாள் அனுஜா. அவள் நடந்து வருவது அன்னம் நடந்தாற் போல் இருந்தது. கண்கள் தாமரை இதழ்கள். உதடுகள் கோவைப் பழச் சிவப்பு. குரல் தேனீக்களின் ரீங்காரம், பத்து நிமிடங்களில் கேசட் முடிந்து விட்டது.

''குட்!'' என்றார் பிரதாப் திருப்தியுடன். கார்த்திகேயனின் வலையில் அனுஜா நன்றாக விழுந்து விட்டாள் என்று சொல்வதற்கு இந்த ருசுக்கள் போதும். ஆனால் கார்த்திகேயன் சார்பிலிருந்து கூட ஒரு ஆதாரம் வேண்டும்.

''சிம்லாவில் அவர்கள் சேர்ந்து சுற்றினார்கள். முத்தமிட்டுக் கொண்டார்கள்.''

''அது போதாது.'' மறுப்பது போல் தலையை அசைத்தார் பிரதாப். ''இதை நாம் நிரூபிக்கப் போவது

கோர்ட்டில் அல்ல. பார்த்ததுமே புரியக் கூடிய ஆதாரம் வேண்டும்.''

அஸ்வத்தாமன் அவர் வாதத்தை ஏற்றுக் கொள்வது போல ''ஒரு ஆதாரம் கிடைத்து விட்டது இல்லையா? இன்னும் சில நாட்கள் காத்திருப்போம்'' என்றார்.

அனுஜாவின் அழகு சத்யனையும் கவர்ந்து விட்டிருந்தது. ''இவள் இவ்வளவு அழகாக இருக்கிறாளே? இவள் அக்கா எவ்வளவு அசிங்கமாக இருப்பாள் தெரியுமா?''

''அதனால்தான் உனக்குக் கிடைத்திருக்கிறாள்'' என்றார் அஸ்வத்தாமன் நக்கலாக.

சத்யன் சரேலென்று எழுந்து கொண்டு ''நாக்கை அறுத்து விடுவேன் ஜாக்கிரதை'' என்று கத்தினான் கோபமாக.

பிரதாப் இடையில் புகுந்து ''அக்கா தங்கைக்குள் ஒருத்தி அழகாக இருந்தால், இன்னொருத்தி தோற்றத்தில் சுமாராக, மிதமாக பேசுபவளாக, படிப்பில் அதிகம் மூழ்கிப் போயிருப்பவளாக இருப்பாள்'' என்றார்.

''அல்லது சுய இரக்கத்தை வளர்த்துக் கொண் டிருப்பாள்.'' தன் மனோதத்துவ ஞானத்தை பயன்படுத்தி சொன்னார் அஸ்வத்தாமன். ''அல்லது வாழ்க்கையின்பால் அலட்சியத்தோடு வாயாடியாக இருப்பாள். எது எப்படி இருந்தாலும் ஒரு பெண்ணின் வாழ்க்கையை அவளுடைய ஆண் நண்பன்தான் தீர்மானிக்கிறான். ஏனென்றால் இளமையில் அவர்கள் வெறும் மண்பொம்மையாக இருப்பார்கள். நம் சத்யனின் கையில் சிக்கிக் கொண்டு விட்டதால் அந்த மனோஜா அப்படி குடிக்கும், போதை மருந்துக்கும் பழக்கப்பட்டு விட்டாள்.''

சத்யன் சடாரென்று நாற்காலியைப் பின்னால் தள்ளிவிட்டு, ''இன்றைக்கு உன்னை ஒரு கை பார்த்து விடுகிறேன்'' என்றான், ஆபாசமான வார்த்தைகளால் திட்டிக் கொண்டே.

அஸ்வத்தாமன் தணிந்து போய் ''உண்மையைச் சொன்னால் கோபம் வருவானேன்?'' என்றார்.

பிரதாப் எரிச்சலுடன் ''இருவரும் சண்டை போட்டுக் கொள்ளாமல் நான் சொல்லப் போவதை கொஞ்சம் கேட்கிறீங்களா?'' என்றார்.

இருவரும் ஒருவரை ஒருவர் கோபமாக முறைத்து பார்த்து விட்டு மறுபடியும் உட்கார்ந்து கொண்டார்கள். பிரதாப் மறுபடியும் தொடங்கினார். ''சத்யன் சொன்னதை வைத்துப் பார்த்தால் அனுஜா கார்த்திகேயனை கண் மூடித்தனமாக காதலித்துக் கொண்டு இருக்கிறாள் என்று புரிகிறது. நமக்கு ஒரு ஆதாரம் கிடைத்து விட்டது. இந்தப் பக்கத்திலிருந்து இன்னொரு ஆதாரம் கிடைக்க வேண்டும். அவ்வளவுதான்! அத்துடன் கதை முடிந்து விடும். ஸ்ரீகல்யாணியின் சுபாவம் எனக்கு நன்றாக தெரியும். குற்றம் ருசுவாகி விட்டால் கணவனாக இருந்தாலும் சரி, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவாள். பிறகு நம் காரியம் சுலபமாகிவிடும்.''

''எப்படி?''

''எப்படி ஆகும் என்று இதற்குள் எப்படி சொல்ல முடியும்? வேண்டுமென்றால் ஒரு உதாரணம் சொல்கிறேன்.''

''அதென்ன?''

''இந்தக் காதல் விவகாரம் தெரிந்து கார்த்திகேயனை ஸ்ரீகல்யாணி வெளியே துரத்திவிட்டு அடுத்த நாள் அவள்

கொலை நடப்பதாக வைத்துக் கொள். சந்தேகம் கார்த்திகேயன் மீது வரும். அது போதாதா சொத்து முழுவதும் சத்யனுக்குக் கிடைப்பதற்கு.''

அஸ்வத்தாமன் நாற்காலியில் பின்னால் சாய்ந்து உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டார். தன் பங்கிற்கு கிடைக்கப் போகும் சொத்தில் பெரிய நர்ஸிங் ஹோம், அழகான நர்ஸுகள், மனரீதியான பிரச்னைகளோடு வரும் அப்பாவியான நோயாளிகள் - எதிர்காலம் ரொம்ப அழகாக தென்பட்டது அந்த டாக்டருக்கு.

★

வேலை நிறுத்தம் தொடங்கி இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. பலன்தான் இருக்கவில்லை. சால்மன் கம்பெனி இறங்கி வரவில்லை. இதை செய்ய வைத்துக் கொண்டிருப்பது ஸ்ரீகல்யாணி என்று தெரிந்து அவர்கள் மேலும் பிடிவாதமாக இருந்தார்கள். இன்கம் டாக்ஸ் முற்றுகை நடந்தும் கூட லாபமில்லாமல் போய் விட்டது. ஒன்றுமே கிடைக்கவில்லை. அவர்களுடைய ஷேரின் விலை குறைந்து போனது உண்மைதான். ஆனால் இது போல் ரொம்ப நாட்களுக்கு எதிரி கம்பெனியை அழுத்திப் பிடித்து வைத்திருக்க முடியாது என்று ஸ்ரீகல்யாணிக்குத் தெரியும்.

இன்னொரு பக்கம் பண நெருக்கடி அதிகமாகிக் கொண்டிருந்தது. வங்கி முற்றிலுமாக அகௌண்டை முடக்கிவிட்டது. நீயா நானா என்பது போல் மௌன யுத்தம் தொடர்ந்து கொண்டிருந்தது.

தோல்வியின் விளிம்பில் தான் இருப்பதை உணர்ந்து கொண்டாள் கல்யாணி. அவளிடமிருந்த ஒரே ஒரு குறை

உடல் நலக் குறைவு. நடமாடும் சக்தி மட்டும் இருந்திருந்தால் அவள் டில்லிக்குப் பறந்திருப்பாள். அரசியல் அரங்கத்தில் அப்படியும் இப்படியுமாக காய்களை நகர்த்தி, ஆக வேண்டிய காரியத்தை நடத்தி முடித்திருப்பாள்.

இப்படிப்பட்டவை மிக நுட்பமான விஷயங்கள். பத்து, பதினைந்து லட்சங்கள் கட்சி நிதிக்கு தர வேண்டும் என்றாலோ, லஞ்ச விஷயமாக பேரம் பேச வேண்டும் என்றாலோ, அந்தச் சர்ச்சைகளில் அவள் நேரிடையாக கலந்து கொள்ள வேண்டும். தனக்குக் கீழே இருக்கும் அதிகாரிகளை அனுப்பி பேச்சு வார்த்தைகளை நடத்துவது சரியாக வராது. அதே போல் பேங்க் சேர்மனுடனோ அல்லது உயர் அதிகாரிகளுடனோ சர்ச்சைகள் நடத்த வேண்டுமென்றால் அவளே நேரிடையாகப் போக வேண்டும். என்ன செய்வதென்று புரியாமல் அந்தப் பொறுப்புகளை கார்த்திகேயனிடம் ஒப்படைக்கலாம் என்று நினைத்து அவனிடம் பேசினாள். கார்த்திகேயனுக்கு முதலில் புரியவில்லை.

''ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு அகௌண்ட் மாற்றணும் என்றால் பரவாயில்லை. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் சரக்கு இல்லாமல் அந்த இரண்டாவது வங்கி மட்டும் எப்படி கடன் தரும்?''

அவள் சிரித்துக் கொண்டே ''வங்கி சேர்மனும் பிராஞ்ச் மேனேஜரும் மனம் வைத்தால் கொடுக்க முடியும்'' என்றாள். மறுபடியும் அவன் ஏதோ சொல்லப் போன போது கைகளை கூப்பி ''திரும்பவும் எனக்கு பாடம் நற்றுக்கொடுக்காதீங்க ப்ளீஸ்'' என்றாள்.

அவனும் சிரித்து விட்டு ''நான் உன் கண்களுக்கு வாத்தியார் போல் தென்படுகிறேனா?'' என்றான்.

''சாதாரண வாத்தியார் இல்லை. ஒரு கையில் பிரம்பு, மற்றொரு கையில் மூக்குப் பொடி டப்பாவுடன் கிழவாத்தியாரைப் போல் தென்படுகிறீர்கள்.''

''நான் கிழவன் இல்லை என்று நிரூபித்து விடுகிறேன். பந்தயம் கட்டுகிறாயா?''

அவன் சொன்னது புரிந்ததுமே அவள் முகத்தில் படிந் திருந்த இறுக்கம் உருகி, வெட்கம் திரையாக படிந்தது.

வினாடி நேரம்தான். ஆனாலும் கலைஞனான அவன் அதைச் சட்டென்று பிடித்துக் கொண்டான். அவள் அபூர்வ அழகி இல்லை என்றாலும் அவள் முகத்தில் படிந்திருந்த வெட்கம் அவளை அபூர்வ சௌந்தர்யவதியாக எடுத்துக் காட்டியது.

நள்ளிரவில் அவளுக்கு விழிப்பு வந்தபோது பார்த்தால் பக்கத்தில் கார்த்திகேயன் இருக்கவில்லை. பக்கத்து அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் புதிதாக ஓவியம் வரையத் தொடங்கியிருக்கிறான் என்று ஊகித்துக் கொண்டாள். ஆனாலும் அவனை அதைப் பற்றி கேட்கவில்லை. ஒன்று... இரண்டு... மூன்று நாட்கள் கழிந்தன. பகலில் அவன் வழக்கம் போல் ஆபீஸுக்கு போய்க் கொண்டிருந்தான். வீட்டில் இருக்கும் போது அவளுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தான். இரவில் ரொம்ப நேரம் வரை அந்த பெயிண்டிங் அறையில் கழித்து வந்தான். அவன் அவளுடன் இருக்கும் போது அவளையே ஆழமாகப் பார்த்து வந்ததால் தன்னுடைய ஓவியத்தைத்தான் வரைந்து கொண்டிருக்கிறான் என்று புரிந்து கொண்டாள். அவள் மனம் சந்தோஷத்தால் பூரித்து விட்டது. எந்த மனைவிக்குமே அதை விட வேறென்ன வேண்டும்? மூன்று நாட்கள் ஆன பிறகு அதற்கு மேல் தாங்க முடியாமல்

''எனக்கு அந்த ஓவியத்தைக் காட்ட மாட்டீர்களா?'' என்றாள்.

அவன் முகம் வாடி விட்டது. ''இன்னும் முடியவில்லை கல்யாணி'' என்றான்.

அவள் வியப்புடன் ''முற்றுப் பெறவில்லையா?'' என்றாள்.

''இல்லை. இன்னும் ஒரு கோடு கூட வரையவில்லை.''

அவள் திக்பிரமை அடைந்து ''நான் நம்பவில்லை'' என்றாள் அழுத்தமாக. அவன் மௌனமாக பக்கத்து அறைக்குப் போய் அதைக் கொண்டு வந்தான்.

அவன் சொன்னது உண்மைதான். அதில் ஒரு கோடு கூட வரையப்படவில்லை. அவளால் இன்னும் தன் கண்களையே நம்பமுடியவில்லை. ஒரு விதமான புரியாத பயமும், சிலிர்ப்பும், சங்கடமும் கலந்த குரலில் சொன்னாள்.

''பின்னே நீங்கள் மூன்று நாட்களாக...''

''முயற்சி செய்து கொண்டுதான் இருந்தேன்...'' அவள் வார்த்தைகளை இடைமறித்து விட்டு சொன்னான். ''ஆனால் மூன்று நாட்களாக எவ்வளவு முயன்ற போதும் ஒரு கோடு கூட வரைய முடியவில்லை.''

''ஏன்?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை.''

அவனுக்குப் புரியாததில் தவறு இல்லை. அவன் கலைஞன். அதிலும் ஓவியன். கலைஞர்களுக்கு அழகை மட்டுமே தெரியுமே தவிர மனக்குமுறல் இருக்கக்

கூடாது. அவன் உலகத்தில் ரசனையைத் தவிர வேறு எதுவும் இருக்காது. ஆனால் கல்யாணி விஷயம் அப்படி இல்லை. கலைஞர்கள் இயற்கையை கவனித்துக் கொண் டிருந்தால் வியாபாரிகள் உலகத்தைக் கவனித்துக் கொண் டிருப்பார்கள்.

மறுநாள் அந்தக் கண்ணோட்டத்துடன் அவனைப் பார்த்தாள். ஒரே ஒரு நாள் அவனை கவனித்ததும் புரிந்து போய் விட்டது. தன்னால் ஏன் படம் போட முடியவில்லை என்று அவனுக்கு காரணம் தெரியவில்லை. ஆனால் அதற்கு காரணமும், அந்தக் காரணத்தின் அஸ்திவாரமும் அவளுக்குப் புரிந்து விட்டது.

அது 'அவளே' தான்.

அவளுடைய தினசரி வேலைகளை கவனித்துக் கொள்வதற்கு இரண்டு நர்ஸுகள் இருந்தார்கள். ஆனால் கார்த்திகேயன் அவளுக்குச் செய்து வந்த பணிவிடைகளில் கால் பங்குதான் அவர்கள் செய்து வந்தார்கள். காலையில் அவளை எழுப்புவதிலிருந்து எல்லாவற்றையும் கார்த்திகேயனே பார்த்து வந்ததால் அவர்கள் மிக சௌகரியமாக, செய்துதான் ஆகணும் என்ற வேலைகளைத் தவிர மீதி எல்லாவற்றையும் அவனிடமே ஒப்படைத்து விட்டார்கள்.

தன்னை நேசிக்கும் கணவன் கிடைத்து விட்டான் என்ற நிம்மதியில் அவள் தன் வியாபார விஷயங்களை அலட்சியப்படுத்தி விட்டதாக சிலநாட்களுக்கு முன்னால் உணர்ந்து கொண்டாள். இப்பொழுது அதைவிட மிகக் கொடுமையான விஷயம் அவள் கவனத்திற்கு வந்தது. தனக்கு வேண்டிய பணிவடைகளை எல்லாம் கணவனே செய்து கொண்டிருக்கிறான் என்ற விஷயம்.

அந்தக் கலைஞன் தன்னுடைய கலை உலகத்தை விட்டுவிட்டு அவளுடைய உலகத்திற்கு வந்துவிட்டான். காலை எழுந்தது முதல் அவளுக்குப் பணிவிடை செய்வது ஆரம்பமாகி விடுகிறது. ஆபீசுக்குப் போனால் வாதேவி விவகாரங்களில் மூழ்க வேண்டியிருக்கிறது. அந்த விதமாக மாமூல் ரீதியாகவும், மனதளவிலும் அவன் களைத்துப் போய்க் கொண்டிருந்தான். இனி அவனிடமுள்ள 'கலைஞன்' எப்படி உயிரோடு இருக்க முடியும்?

அவளையறியாமலேயே ஒரு கலைஞனை 'சாதாரண மனிதனாக' மாற்றி விட்டாள். அவளுக்கு கலைஞனிடம் அதிகம் நாட்டம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு மனிதனின் வாழ்க்கையை மாற்றி அமைக்கும் அதிகாரம் அவளுக்கு இல்லை. அதுவும் தன் கணவனின் வாழ்க்கையை!

அவள் அந்த விஷயத்தை அவனிடம் சொன்னாள். அவனுக்கு முதலில் புரியவில்லை. ''நான் ஓவியம் வரைய முடியாமல் போனதற்கும், நீ சொன்னதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டான்.

''காலையில் எழுந்தது முதல் உங்கள் வாழ்க்கை என்னைச் சுற்றியே சுழன்று வந்து கொண்டிருக்கிறது. சாதாரண நர்ஸுகள் செய்ய வேண்டிய வேலைகளைக் கூட நீங்களே செய்கிறீர்கள். இனி ஆபீசுக்குப் போனது முதல் யாரை எப்படி ஏமாற்றுவது என்று யோசிப்பதற்கே நேரம் சரியாக இருக்கிறது. ஒரு கலைஞனுக்கு தேவையான தூய்வும், நிம்மதியும் உங்களுக்கு தூரமாகி விட்டன. அதனால்தான் கடந்த மூன்று நாட்களாக உங்களால் ஒரு கோடு கூட வரைய முடியவில்லை.''

அவன் மறுப்பது போல் தலையை அசைத்தான். ''இருக்கலாம். கலைஞனுக்கு தன்னுடையது என்று ஒரு

தனி உலகம் இருக்க வேண்டியது உண்மைதான். ஆனால் இவ்வளவு சின்ன விஷயத்திற்கே அவனிடமுள்ள கலைஞன் மடிந்து போய் விட மாட்டான்.''

''இது சின்ன விஷயமா? கோடிக் கணக்கான ரூபாய்கள் நஷ்டம்! எதிரியை வீழ்த்த திட்டம் போடுவது, அதை செயல்படுத்துவது... இதெல்லாம் எங்கள் வாழ்க்கையில் ஒரு பாகம். ஆனால் உங்களுக்கு அப்படி இல்லை. வெளிப்பார்வைக்கு இவை சாதாரண விஷயங்களாகத்தென்பட்டாலும் உள்ளூர நிறைய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை. உங்களிடமுள்ள மென்மையான இயல்பை போக்கடித்துவிடும்.''

அவன் பதில் பேசவில்லை.

''இனி இரண்டாவது விஷயம். மாதத்திற்கு ஐயாயிரம் வாங்கிக் கொண்டு அந்த நர்ஸுகள் செய்கிற காரியம்தான் என்ன? இவ்வளவு நாட்களாக இத்தனை சின்ன விஷயத்தைக் கூட நான் கவனிக்காமல் இருந்து விட்டேன்.''

''போகட்டும். ஐயாயிரம் ரூபாயில் என்ன நஷ்டம் வந்து விடப் போகிறது?''

''நான் பேசுவது பணத்தைப் பற்றி இல்லை. நேரத்தைப் பற்றி.''

''நான் ஓவியம் வரைவதற்கும் என் நேரத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பகல் முழுவதும் கொளுத்தும் வெயிலில் செருப்பு தைத்துக் கொண்டிருந்த காலத்தில் கூட நான் இரவு நேரத்தில் விடியும் வரையில் படம் போட்டுக் கொண்டிருப்பேன்.''

''ஏன் என்றால் அப்பொழுது மனதளவில் உங்களுக்கு எந்த விதமான தொல்லைகளும் இருந்தது இல்லை.''

''இல்லை என்று நீ ஏன் நினைக்கிறாய்?''

அவளுக்கு எரிச்சலாக இருந்தது. அவன் மீது இல்லை, தன் மீதே. அந்த எரிச்சலில் குரலை உயர்த்தினாள். ''நான் நினைக்கிறது எதுவுமே தவறாக இருக்காது.''

''அது அகம்பாவம்!''

''இல்லை. தன்னம்பிக்கை.''

''நீ நினைக்கிறது எதுவுமே தவறாக இருக்காது என்று நீ நினைத்தால் அந்த நர்ஸுகள் செய்யக் கூடிய வேலைகளை எல்லாம் நான் செய்து வருகிறேன் என்று முதலிலேயே ஏன் தெரிந்து கொள்ளவில்லை?''

''அதான் சொன்னேனே, ஒரு விதமான மயக்கத்தில் இருந்திருக்கிறேன் என்று.''

''அப்படி என்றால் நீ நினைப்பது எல்லாமே சரியில்லை என்றும் அவ்வப்பொழுது மயக்கத்தில் இருப்பாய் என்றும் நிரூபணமாகிறது இல்லையா?''

அவள் மேலும் எரிச்சலடைந்து ''ஆமாம், ஆகிறது. அதனால்தான் அதைத் திருத்திக் கொள்ளணும் என்று விரும்புகிறேன்'' என்றாள். பால் கொண்டு வந்த வேலைக்காரி இந்தக் கத்தலைக் கேட்டு அதே வேகத்தில் திரும்பி விட்டாள். முதல்முதலாக கணவனும் மனைவியும் இவ்வாறு சண்டை போட்டுக் கொண்டது வேலைக்காரர்களுக்குப் புதிதாக இருந்தது.

தானும் உரத்த குரலில் பேசிவிட்டதாக கார்த்திகேயன் உணர்ந்து கொண்டான். பக்கத்தில் வந்து

உட்கார்ந்து கொண்டே ''என்னை என்ன செய்யச் சொல்கிறாய் கல்யாணி?'' என்றான்.

''இந்த நிலை இப்படியே நீடித்தால் உங்களிடமுள்ள கலைஞன் முற்றிலுமாக மடிந்து போய் விடுவான்.''

அவன் பதில் பேசவில்லை.

''உங்களுக்கு இது அகம்பாவமாக தோன்றலாம். ஆனால் என்னுடையது 'அட்லாஸ்' மனதத்துவம். அப்படிப் பட்ட எனக்கு, என்னால் இன்னொருத்தருக்கு அநியாயம் நடந்து விட்டதென்றால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. இவ்வளவு வெளிப்படையாக சொல்கிறேன் என்று தவறாக நினைக்காதீங்க. கொடுக்கத்தான் தெரியுமே தவிர வாங்கிக் கொள்ள முடியாது, அதுவும் உங்களுக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தெரிந்த பிறகு.''

அவன் அவள் முகத்தை கூர்ந்து பார்த்தான். அவள் கண்களை தாழ்த்திக் கொள்ளவில்லை. தாழ்த்திக் கொள்வது என்றால் தோல்வியை ஒப்புக் கொள்வது; அது அவளுடைய சுபாவம் இல்லை. இந்த விஷயத்தை இப்பொழுதே முடிவு கட்டி விட வேண்டும் என்று நினைத்தாள் அவள். ரொம்ப நேரம் மௌனம். அந்த மௌனத்தை சிதறடித்தபடி அவன் மெதுவாக கேட்டான்.

''இதையெல்லாம் நீ ஒரு மனுஷி இன்னொரு நபரோடு பேசுவது போல் சொல்கிறாயா? அல்லது ஒரு கணவனுக்கு மனைவி சொல்வது போல் பேசுகிறாயா?''

அவள் குழப்பமடைந்து ''இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?'' என்றாள்.

''எனக்கே கால் உடைந்து ஒரு மாதகாலம் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியிருந்ததுன்னு வைத்துக் கொள். காலையில் காபியை ஃபிளாஸ்கில் கொண்டு வந்து கொடுத்து விட்டு நீ ஆபீஸுக்கு போய் விடுவாயா? என்னுடன் கூடவே இருப்பாயா?''

அவள் சரேலென்று நிமிர்ந்தாள். அவன் மேலும் தொடர்ந்தான். ''ஆடம்பரமான ஆஸ்பத்திரி, நாளொன்றுக்கு ஐயாயிரம் செலவு, நாலைந்து நர்ஸுகள், நகரத்திலேயே பெரிய டாக்டர்கள், எல்லா ஏற்பாடுகளையும் செய்வாய் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் எல்லாம் இருந்தும் கூட இரவும் பகலும் என் பக்கத்தில் நீயும் இருப்பாய். சொல்லு, இருப்பாயா... மாட்டாயா?''

அவள் தலை குனிந்தாள். அவன் அவள் தலைமீது கையை வைத்துவிட்டு சொன்னான். ''ஏன் என்றால் அது தான் அன்பு. அன்பைவிட உயர்ந்தது எதுவும் இல்லை. கடைசியில் 'கலை' கூட அன்பை விட சிறியதுதான். அதனால் உன்னை விட்டு என்னை தொலைவுக்கு போகும்படி செய்யாதே.''

அவள் கண்களை மூடிக் கொண்டாள். அவன் கிளம்பிப் போனது காலடிச் சத்தத்திலிருந்து புரிந்தது. அவன் வார்த்தைகள் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன. 'எல்லாம் இருந்தாலும் கூட இரவும் பகலும் என் பக்கத்தில் நீயும் இருப்பாய். சொல்லு, இருப்பாயா... மாட்டாயா?'

'இருக்க மாட்டேன்.'

அவள் மனம் நடுங்கியது. ஆனாலும் நினைத்துக் கொண்டாள். 'எப்படி இருக்க முடியும்? ஆஸ்பத்திரி,

நர்ஸுகள், டாக்டர்கள், பணம் எல்லாம் வேண்டும் என்றால் எப்படி இருக்க முடியும் என்னால்?'

இதை வெளியே சொன்னால் பெண் இனமும், மகா பதிவிரதைகளும் தன்னை 'ச்சீ... ச்சீ' என்பார்கள். கலையை விட காதல் உயர்ந்தது தான். ஆனால் காதலை விட வாழ்க்கை முக்கியமானது. இருபத்தி நான்கு மணி நேரமும் பணிவிடை செய்து கொண்டு, இடையிடையே புடவைத் தலைப்பால் கண்களை துடைத்துக் கொண்டிருந்தால் எல்லோரும் சந்தோஷப்படுவார்கள் என்று சொன்னால் அப்படி செய்வதற்கு அவளுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அந்த ஒரு வார்த்தை இருக்கிறதே...

ஒரே வார்த்தை! அதுதான் இந்த உலகத்தில் மிகச் சொற்பமானவர்களை மற்றவர்களிடமிருந்து பிரிக்கிறது.

அந்த வார்த்தைதான். 'டிடாட்ச்மெண்ட்!'

உண்மையான வியாபார மேதைக்கு தேவையானது அதுதான். கார்த்திகேயன் இந்த விஷயத்தை ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறான்? வியாபார மேதைக்கு மட்டுமே இல்லை, கலைஞனுக்குக் கூட அந்த டிடாட்ச்மெண்ட் இருக்க வேண்டும் என்று.

27

மேலும் இரண்டு நாட்கள் கழிந்து விட்டன. ஸ்ரீ கல்யாணிக்கு சிகிச்சை தொடங்கி விட்டது. பத்து லட்சம் ரூபாய் உடனே ஏற்பாடு செய்யவில்லை என்றால் மறுநாள் முதல் கம்பெனியில் சில பிரிவுகளை மூட வேண்டி யிருக்கும் என்று புரொடக்ஷன் மேனேஜர் வந்து

தெரிவித்தார். சிட் ஃபண்ட் கம்பெனிக்கு கடைசி தேதி முடிந்து விட்டது. வங்கியிடமிருந்தும் நோட்டீஸ் வந்து சேர்ந்தது. அப்பொழுதுதான் ஜெனரல் மேனேஜர் வந்து சொல்லிவிட்டு போனார், தம் கம்பெனியின் எல்லா ஷேர்களும் 'பேர்ஸ்' மார்க்கெட்டிற்கு போய் விட்டதாக. அதாவது ஷேரின் விலை வீழ்ச்சி அடைந்து கொண்டிருந்தது. ஒரு முறை விலை இறங்கத் தொடங்கி விட்டால் பிறகு மீளுவது கஷ்டம். என்ன செய்வது என்று புரியாமல் அவள் குழம்பிக் கொண்டிருந்த போது போன் வந்தது. ''ஹலோ!'' என்றாள்.

''ஸ்ரீகல்யாணி இருக்காங்களா?'' மறுமுனையிலிருந்து குரல் கேட்டது.

''நான் தான் பேசுகிறேன். நீங்கள் யாரு?''

''அமைச்சர் விவேகாநந்தனின் பி.ஏ.பேசுகிறேன். அமைச்சர் உங்களுடன் பேச விரும்புகிறார்.'' ஒரு வினாடி கழித்து விவேகாநந்தனின் குரல் கேட்டது. ''யாரு ஸ்ரீகல்யாணியா?''

அமைச்சருக்கு தன்னுடன் என்ன வேலை என்று அவளுக்குப் புரியவில்லை. ''ஆமாம் சார்'' என்றாள்.

''நான் விவேகாநந்தன் பேசுகிறேன்.''

''சொல்லுங்கள்.''

''போனில் இல்லை. நேரில் வந்து பேசுவதாக இருக்கிறேன். ஒரு மணி நேரம் ஒதுக்க முடியுமா?''

''நீங்களே சுயமாக வருவதாக சொன்னால் ஆட்சேபணை என்ன இருக்கப் போகிறது?''

''பத்து நிமிடங்களில் வருகிறேன்.'' நிறுத்திவிட்டு மீண்டும் சொன்னார். ''ரொம்பவும் பர்சனல் விஷயம். தயவு செய்து வேறு யாரும் இல்லாமல் பார்த்துக் கொள், உன் கணவர் உள்பட.''

அவள் புருவம் முடிச்சேறியது. தாம் இருவரும் பேசும்போது தன் கணவன் கூட இருக்க வேண்டாம் என்று அவர் எதற்காக சொன்னாரோ அவளுக்குப் புரியவில்லை. எதுவும் கேட்காமலேயே போனை வைத்து விட்டாள்.

பத்து நிமிஷங்களுக்கு பிறகு கார் வந்து போர்டி கோவில் நின்றது. அதிகம் பேர் இல்லை. அவரும், பாடிகார்டுகள் மட்டுமே. வேலைக்காரன் பணிவுடன் அவரை மாடிக்கு அழைத்துச் சென்றான்.

''வாங்க... உட்காருங்க. ஐயாம் சாரி. என்னால் எழுந்து கொள்ள முடியாது.'' ஸ்ரீகல்யாணி சொன்னாள்.

''பரவாயில்லை. எனக்குத் தெரியும்.'' நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டே சொன்னார் அவர்.

''நாம் ஒரு தடவை சேம்பர் ஆஃப் காமர்ஸில் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்'' என்றாள் அவள்.

''ஆமாமாம்'' என்றார் அவர். ''கார்த்திகேயன் இல்லையா?''

''இல்லை. ஆபீசுக்குப் போயிருக்கிறார். என்ன சாப்பிடுகிறீர்கள்?''

''எதுவும் வேண்டாம். உங்கள் வியாபாரம் எப்படி இருக்கிறது?''

''நன்றாகத்தான் இருக்கு.''

''இவ்வளவு சிறிய வயதில் இவ்வளவு பெரிய வியாபாரத்தை நிர்வாகம் செய்கிறாய் என்றால் ரொம்ப பெரிய விஷயம். இந்த வருஷத்து ''சிறந்த தொழிலதிபர்'' அவார்ட் உனக்குக் கிடைத்திருக்கிறதாமே? ரொம்ப சந்தோஷம்.''

அவள் சிரித்துவிட்டு பேசாமல் இருந்தாள்.

''டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்?'' அவள் உடல் நிலையை பற்றி விசாரித்தார்.

''எப்பொழுது குணமாகும் என்று சொல்ல முடியாதாம். நரம்புகளின் பிரச்னை இல்லையா? அதுவாகவே எப்பொழுதாவது திடீரென்று சரியாகி விடும் என்கிறார்கள்.''

''மருந்துகள் சாப்பிட்டு வருகிறாயா?''

''அதற்கு மட்டும் குறைச்சல் இல்லை.''

''அமெரிக்காவுக்குப் போய் முயற்சி செய்தால்?''

''அதைப் பற்றியும் விசாரித்து விட்டோம். அங்கே போனாலும் லாபமில்லை என்று சொல்லிவிட்டார்கள்.''

''நான் முயற்சி செய்கிறேன்'' என்றார் விவேகாநந்தன்.

அவர் வந்திருப்பது இப்படிப்பட்ட யோக க்ஷேமங்களை விசாரிப்பதற்காக இல்லை என்றும், வேறு ஏதோ வேலை இருக்கும் என்றும் அவளுக்குத் தெரியும். ஆனாலும் தெரியாதது போலவே இருந்தாள். அவர்கூட நான் வந்த காரியத்தைப் பற்றி சொல்வதற்கு தருணம் வந்து விட்டதாக உணர்ந்து விட்டார் போலும். விஷயத்தைத் தொடங்கியபடி ''கார்த்திகேயன் சிம்லாவில் நடந்த போட்டிக்கு வந்திருந்தான் இல்லையா?'' என்றார்.

''ஆமாம். உங்கள் மகளுக்கு முதல் பரிசு கிடைத்ததாமே?''

அவர் சிரித்தார். ''அதெல்லாம் போகஸ். பேப்பர் களில் படித்திருப்பாய். நடந்த மோசடியை என் மகள் பப்ளிக்காக மைக்கில் சொல்லி விட்டாள்.''

''உங்கள் மகள் பற்றி சொன்னதும் நினைவுக்கு வருகிறது. அவளுக்கு திடீரென்று சீரியஸாக இருக்கிறது என்றும், ஒரு நாள் தங்கும்படி இருக்கும் என்றும் கார்த்திகேயன் விமான நிலையத்திலிருந்து போன் செய்தார். அப்புறமாக அதைப் பற்றி விசாரிக்கவே நேரம் இல்லை. என்ன நடந்தது?''

''சீரியஸாக ஒன்றுமில்லை. இறந்துபோய் விட்டதாக நாடகம் ஆடியிருக்கிறாள். நண்பர்களுடன் ஏதோ பந்தயம் கட்டினாளாம். எனக்குத் தெரிந்ததும் நன்றாக கோபித்துக் கொண்டேன்.''

அவள் மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். 'மை காட்! இதற்காகவா சத்யன் அன்றைக்கு அவ்வளவு ரகளை செய்தான். நல்ல வேளை. அவசரப்பட்டுக் கொண்டு அவரிடம் கேட்காமல் போனேனே.'

அவரும் மனதில் நினைத்துக் கொண்டார். 'அன்றைக்கு என் மகள் செத்துப் போய் விட்டதாக நாடகம் ஆடினாள். இன்றைக்கு அந்த விஷயம் உண்மையாகி விட்டதென்று நான் நாடகம் ஆடுகிறேன்.'

''ஆனாலும் இவ்வளவு பிராக்டிகல் ஜோக்கா? இங்கே எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. நீங்க அன்றைக்கு இங்கேதானே இருந்தீங்க. மகள் இறந்து விட்டால் இங்கே எப்படி இருந்திருப்பீங்க என்று எங்களுக்கு சந்தேகம் வந்தது.''

''ஆமாம். அந்த விஷயம் தெரிந்ததும் நானும் ரொம்ப கலங்கிப் போய் விட்டேன். உண்மையில் அங்கே நிறைய வேலைகள் இருந்தன. ஏதோ மாணவர்களுக்குள்ளே பந்தயமாம். மகளை நன்றாக கோபித்துக் கொண்டு அடுத்த பிளைட்டிலேயே திரும்பி வந்து விட்டேன். அப்பொழுதுதான் உன் கணவன் அறிமுகமானான்.''

''சொன்னார். பக்கத்து சீட்டில் நீங்கள் உட்கார்ந் திருந்தீங்க என்று.'' அவள் சொல்லிக் கொண்டிருந்த போது லோ வோல்டேஜ் காரணமாக ஏர்கண்டிஷனர் நின்று விட்டது.

விவேகாநந்தன் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''அந்தப் பயணத்தில் தான் எனக்கு வெர்டிகோ பிராப்ளம் வந்தது. உன் கணவர்தான் ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போய் எல்லாம் கவனித்துக் கொண்டான். உண்மையில் அப்படிப்பட்டவர்கள் ரொம்ப அரிது. உன் கணவன் என்பதற்காக சொல்லவில்லை. இந்தக் காலத்தில் கூட இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கத் தோன்றியது.''

அவள் பதில் பேசவில்லை. சினிமாவில் ஒரு முக்கிய காட்சியை காட்டுவதற்கு முன்னால் ரசிகர்களை அந்தச் சூழலுக்கு அழைத்துச் செல்வதற்காக இசையமைப்பாளர் விட்டு வைத்த நிசப்தத்தைப் போல் அவ்வறையில் நிசப்தம் சூழ்ந்து கொண்டது. அதை சிதறடித்தபடி அவர் சொன்னார்.

—''எனக்கு ஏனோ கார்த்திகேயன் சாதாரண மனிதனாக தோன்றவில்லை. ஏதோ பெரிய சக்தியைத் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் அபூர்வமான மனிதன் போல் தென்படுகிறான். என் அபிப்பிராயத்தை என் மகள் சப்போர்ட் செய்தாள். அப்படிப்பட்ட ஓவியன் ஒருத்தன்

நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தோன்ற முடியும் என்று என் மகள் சொன்ன போது முதலில் நான் நம்பவில்லை. அவன் சிம்லாவில் போட்ட ஓவியங்களை வரவழைத்துப் பார்த்தேன். நான் பார்த்தது மட்டுமே இல்லை. அந்தத் துறையில் நிபுணர்கள் சிலரை வரவழைத்துப் பரிசோதிக்கவும் செய்தேன். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால்...'' அவர் நிறுத்தி விட்டு மேலும் சொன்னார். ''அபாரம்! உண்மையிலேயே அற்புதமான படைப்பு. ஓரிரண்டு நாட்களிலேயே இவ்வளவு சிறந்த ஓவியத்தை வரையமுடிந்தது என்றால் அவன் சாதாரண மனிதனாக இருக்கமுடியாது. உலகத்தில் ஏதோ ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதற்காகவே கடவுளால் அனுப்பப்பட்ட மனிதனாகத்தான் இருப்பான்.''

ஸ்ரீகல்யாணிக்கு அவருடைய உரையாடல் எந்த திசையை நோக்கிப் போகிறது என்று புரியவில்லை. மௌனமாக அவர் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தாள்.

''எல்லோரும் அவனைப் பற்றி அவ்வளவு உயர்வாக சொன்ன பிறகு, அவனுடைய ஓவியங்களை நானும் பார்த்தபிறகு எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அதைப் பற்றி பேசுவதற்காகத்தான் நானே கிளம்பி வந்தேன்.''

கதவைத் திறந்து கொண்டு வேலைக்காரன் டிரேயுடன் உள்ளே வந்தான். காபி கோப்பைகளை வைத்து விட்டு அவன் திரும்பிப் போகும் வரை மௌனமாக இருந்து விட்டு பிறகு தொடர்ந்தார்.

''எனக்கு சித்திரக்கலை என்றால் மிகவும் பிடிக்கும். அந்த விருப்பத்தினால் தான் என் மகளுக்கு அதை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தேன். ஒரு அரசியல் தலைவனுக்கு இதெல்லாம் எப்படி தெரியும் என்று நீ ஆச்சரியப்படக்

கூடும் என்றுதான் இதையெல்லாம் சொல்கிறேன். இனி விஷயத்திற்கு வருவோம். லியோனார்டோ, மைகெலாஞ்சிலோ, பிகாஸோவுக்குப் பிறகு உன் கணவனை அந்த ஓவியக்கலை உலகத்தில் நான்காவது ஆளாக நிலை நாட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கே வந்தேன்.''

பெருத்த ஓசையுடன் ஏர்கண்டிஷனர் மறுபடியும் வேலை செய்ய ஆரம்பித்தது. ஸ்ரீகல்யாணி வெறுமையாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு அவர் சொன்னதுதான் புரியவில்லையோ அல்லது புரிந்ததை ஜீரணித்துக் கொள்ளத்தான் முடியவில்லையோ அவளுக்கே தெரியவில்லை.

''உனக்கு இதெல்லாம் ஆச்சரியமாக இருக்கலாம். நான் இதையெல்லாம் சுயநலமில்லாமல் ஒன்றும் செய்து விடவில்லை. அரசியல் தலைவர்கள் யாருமே சுயநல மில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டார்கள். நான் உன் கணவனின் கையால் ஒரு ஓவியத்தை வரையச் செய்யப் போகிறேன். ஒரு விதமாக சொல்லணும் என்றால் அவனுடைய நேரத்தையும், கலையையும் விலை கொடுத்துப் பிறகு எப்படியாவது அதை விற்றுக் கொள்கிறேன். அது என்னுடைய பிரச்னை. லாபம் வந்தாலும் சரி, நஷ்டம் வந்தாலும் சரி. நான் தாங்கிக் கொள்கிறேன். பெயர் உங்களுடையது. லாபம் என்னுடையது. இந்த ஒப்பந்தம் சரிதானா?''

அவள் இன்னும் தேறிக் கொள்ளவில்லை. அவர் இன்னும் கொஞ்சம் விளக்கமாக சொன்னார்.

''இந்த உலகத்திலேயே மிக உயர்வான ஓவியம் மோனாலிஸா. அது இரண்டாவது இடத்திற்கு போய் விடும்படியாக அற்புதமான ஓவியத்தை கார்த்திகேயன்

கையால் போடச் செய்கிறேன். அதை எப்படி மார்க் கெட்டிற்குக் கொண்டு வருவது, அதன் விலையை எப்படி உயர்த்துவது என்பதை எல்லாம் நான் பார்த்துக் கொள் கிறேன். ஒரு அமைச்சராக அதை சாதிப்பது எனக்கு ஒன்றும் கஷ்டம் இல்லை. சொல்லு கல்யாணி! இதற்கு நீ ஒப்புக் கொள்கிறாயா?''

''நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவர் சம்மதித்தால்...''

''அவனைச் சம்மதிக்க வைக்கணும்.''

''சம்மதிக்க மாட்டார். பணத்திற்காக என்று சொன்னால் அசலுக்கே கேட்டுக் கொள்ள மாட்டார்.''

''அதனால்தான் உன்னிடம் வந்தேன். இல்லா விட்டால் அவனையே நேரிடையாக கேட்டிருப்பேனே.''

அவள் பதில் பேசவில்லை. அவர் சொன்னார். ''இதில் பணம் மட்டுமே இல்லை. வரலாற்றில் என்றுமே நிலைத்து விடும் அளவுக்குப் புகழ்...'' என்று சொன்ன அவர் வார்த்தைகளை இடைமறித்து விட்டு ''வரலாற்றில் நிலைத்து இருப்பது, புகழ்ச்சி... இப்படிப்பட்ட எதையுமே அவர் விரும்பமாட்டார்'' என்றாள்.

''எனக்குத் தெரியும். மோனாலிஸா படம் போட்ட ஓவியர் கூட இதையெல்லாம் எதிர்பார்த்தோ, சரித்திரத்தில் நிலைத்து விடப் போகிறோம் என்று நினைத்தோ அதை வரைந்திருக்க மாட்டார்.''

''என்னால் என்ன செய்ய முடியும்?''

''ஓவியம் வரைவதற்கு சம்மதிக்க வைத்து விட்டு மற்றதெல்லாம் என்னிடம் விட்டு விடு. அந்த ஓவியம்

எப்படியிருந்தாலும் சரி, அதைப் போடுவதற்கு செலவழித்த பணத்திற்கும் நான் விலை கொடுத்து விடுகிறேன்.''

''விலை விஷயம் கிடக்கட்டும். அவருக்கு வியாபகத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதற்காக முந்தா நாள் நான் போடச் சொன்னதற்கே அவரால் படம் போட முடியவில்லை.''

''அது அவனுடைய தவறு இல்லை. இந்தச் சூழ்நிலையின் தவறு. இதிலிருந்து அவனைப் பிரிக்க வேண்டும்.''

''அப்படி என்றால்?''

''அவன் ஓவியம் வரைந்து முடிக்கும் வரையில் என்னுடனேயே இருப்பான். என்னோடு என்றால் என்னுடன் அல்ல. ஏதாவது சுவிட்ஜர்லாண்டிலோ, கன்யாகுமரியிலேயோ, அவன் எங்கே விரும்புகிறானோ அங்கே.''

''எவ்வளவு நாட்களுக்கு?''

''ஓவியம் முடிவடையும் வரையில், எவ்வளவு நாட்களானாலும் சரி. அது இரண்டு மாதங்களாகவே இருக்கட்டும். ஆறு மாதங்களாகவே கூட இருக்கட்டும். அது வரையில் நீ அவனை உன் வியாபாரத்திற்கும், உன் பிரச்னைக்கும் தொலைவில் வைத்திருக்க வேண்டும். அவனைப் பார்க்கக் கூட முயற்சி செய்யக் கூடாது.''

அவள் நெற்றியைச் சுளித்தாள்.

''ஆமாம். அதனால்தான் உன்னிடம் வந்தேன். அவனைக் கொண்டு உலகத்திலேயே தலை சிறந்த ஓவியத்தை வரையச் செய்ய வேண்டும் என்றால், அவனை

நம் உலகத்தை விட்டு தொலைவில் வைத்திருக்க வேண்டும். அதற்கு உன் அனுமதி வேண்டும்.''

அவள் பேசவில்லை. அவர் ப்ரீஃப்கேஸைத் திறந்தார். ''அவன் ஓவியம் வரைவதற்கு எவ்வளவு நாளாகுமோ எனக்குத் தெரியாது. எவ்வளவு மாதங்கள் ஆகுமோ, அவ்வளவு மாதங்கள், மாதத்திற்கு பத்து லட்சம் வீதம் தருகிறேன். நான்கு மாதங்களுக்கு உண்டான பணம் நாற்பது லட்சத்தை அட்வான்ஸாக தருகிறேன்.''

அவள் மூச்சை அடக்கிக் கொண்டாள். நா...ற்...ப...து...ல...ட்...ச...ம்!

அவர் ப்ரீஃப்கேஸை மூடிவிட்டார். அவள் சொன்னாள் ''நீங்களே நேரிடையாக கார்த்திகேயனிடம் பேசினால் நன்றாக இருக்கும்.''

''கேட்டுக் கொள்ள மாட்டான். இந்தக் கலைஞர் களைப் போன்ற பிடிவாதக்காரர்கள் வேறு யாருமே இருக்க மாட்டார்கள். என் மகள் கூட அதே போல்தான், உனக்குத்தான் தெரியுமே. நாற்பது லட்சம் இல்லை. நாலு கோடி ரூபாயை அந்த கார்த்திகேயன் முன்னால் கொண்டு போய் வைத்தாலும் எடுத்துக் கொள்ள மாட்டான்.''

''நான் மட்டும் எடுத்துக் கொள்வேன் என்று எப்படி நினைத்தீங்க?''

''இங்கே வருவதற்கு முன்னால் எல்லாவற்றையும் விசாரித்துவிட்டுத்தான் வந்தேன். உன் பொருளாதார நிலைமை பற்றி எனக்குத் தெரியும்.''

அவள் வியப்பை அடக்கிக் கொள்ள முயற்சி எதுவும் செய்யவில்லை. வாயடைத்துப் போனவளாக அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவர் சொன்னார். ''நான் வங்கி சேர்மேனுடன் பேசுகிறேன். உன் கம்பெனியின் லேவாதேவிகள் எல்லாம் பழையபடியே தொடர்ந்து தொடங்கிவிடும். சால்மன் கம்பெனிகாரர்களை உன் விவகாரத்தில் தலையிட மாட்டோம் என்று எழுத்து மூலமாக உத்திரவாதம் தரும்படியாக செய்கிறேன். எல்லாவற்றையும் விட முக்கியமாக உங்கள் சரக்கை மூழ்கடித்த ஷிப்பிங் கம்பெனி ஒரே மாதத்தில் அதற்குரிய விலையை தந்துவிடும் விதமாக பார்த்துக் கொள்கிறேன் - டாலர்களில்.''

அவள் கண் இமைக்கவும் மறந்து போய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர் ப்ரீஃப்கேஸை எடுத்துக் கொண்டு எழுந்து நின்றபடி சொன்னார். ''இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்று ஆச்சரியப்பட வேண்டாம். களத்தில் இறங்குவதற்கு முன்னால் அங்குள்ள சூழ்நிலையைப் பற்றி அக்கு வேறு ஆணி வேறாக தெரிந்து கொள்வது அரசியல் வாதியின் லட்சணம் இல்லையா?''

''நான் வியப்படைந்தது அதற்காக இல்லை. மாதம் பத்து லட்சம் தந்து, கோடி ரூபாய்க்கு ஒப்பான வங்கியின் தடைகளை நீக்கி... இதெல்லாம் நீங்க வெறும் ஓவியத் திற்காக செய்வதாகச் சொன்னால் நம்ப முடியவில்லை என்னால்.''

அவர் சிரித்தார். ''எதுவுமே யோசித்துப் பார்க்காமல் வியாபாரத்தை செய்வேன் என்று எப்படி நினைத்து விட்டாய்? உன் கணவனால் கண்டிப்பாக சிறந்த ஓவியத்தை வரைய முடியும். அதிர்ஷ்டம் கொஞ்சம் கூடி வந்தாலும் போதும், கோடி ரூபாய்க்குக் குறையாமல் அதை

என்னால் விற்க முடியும். என் நம்பிக்கை வீண் போகாது. ஒரு கலைஞனை சரித்திரத்தில் நிலைக்க வைப்பதற்கு அது மிகக் குறைந்த செலவுதான்.''

அவளுடன் கைகுலுக்கிவிட்டு வெளியே நடந்து கொண்டே தனக்குள் சொல்லிக் கொண்டார். 'பெற்ற மகளின் எஞ்சிய வாழ்நாட்கள் அவள் மனதிற்கு பிடித்தவனோடு கழிய ஏற்பாடு செய்வதற்காக இந்தச் செலவு மிகக் குறைவானதுதான்.'

28

''உனக்கு புத்தி ஏதாவது பிசகி விட்டதா? அவருக்காக நான் ஓவியம் வரைவதாவது? அதற்காக அவர் மாதத்திற்கு பத்து லட்சம் தருவதாவது?''

''எந்த ஓவியனுக்குமே கிடைக்காத அளவிற்கு பணம்'' என்றாள் அவள்.

''நான் பேசுவது பணத்தைப் பற்றி அல்ல. அவருக்குத் தோன்றியிருக்கும் இந்த யோசனையைப் பற்றி.''

''ஏன்? இதில் தவறென்ன இருக்கு? அந்தக் காலத்தில் மகாராஜாக்களும், ஜமீன்தார்களும் இதே போல்தானே கலைஞனுக்குப் பணம் தந்து படம் வரையச் சொல்லு வாங்க? கவிதை பாடச் சொல்லி பரிசு கொடுப்பாங்க?'' என்றாள்.

அதைக் கேட்டு அவன் திக்பிரமை அடைந்து விட்டான். ''நான் ஜமீன்தாரிடம் வேலை பார்க்கும் ஆளாக தென்படுகிறேனா?'' என்றான், எப்படியோ சமாளித்துக் கொண்டு.

''நான் அந்த உத்தேசத்தில் சொல்லவில்லை. மைகெலான்ஜலோ கூட பணத்திற்காகத்தானே வேலை செய்து வந்தார் என்று.''

கார்த்திகேயனால் சட்டென்று பதில சொல்ல முடியவில்லை. எதோ புரிபடாத சங்கடத்துடன் ''இப்படி கெடு வைத்துக் கொண்டு படம் போட என்னால் முடியாது. அதோடு அவர் ஊகித்துக் கொண்டு இருக்கும் அளவுக்கு அவ்வளவு சிறப்பான ஓவியம் என்னால் வரைய முடியாது. கோடி ரூபாய் மதிப்புடைய படமா? என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.''

''அது நம் பிரச்னை இல்லை. அவருடையது.''

''இந்த யோசனை அவருக்கு வந்ததாக இருக்காது. அனுஜாவுடைய யோசனையாகத்தான் இருக்கும்.''

ஸ்ரீகல்யாணி நெற்றியைச் சுளித்துவிட்டு ''அனுஜாவின் யோசனையா?'' என்றாள்.

''என்றாவது அவ்வளவு சிறந்த ஓவியத்தை வரையச் சொல்லி பேச்சுவாக்கில் அவள் சொல்லியிருக்கிறாள்.''

''சொல்ல மறந்துவிட்டேன். அந்தப் பெண் டில்லியிருந்து உங்களுக்கு ஏதோ வீடியோ கேசட் அனுப்பினாள். இங்கேதான் மேஜை மீது வைத்தேன். அப்புறமாக பார்த்தால் அதைக் காணவில்லை.''

அவன் அதைப் பற்றி அவ்வளவு ஆர்வம் காட்டாமல் ''போகட்டும். அதை அப்புறமாக பார்த்துக் கொள்ளலாம்'' என்றான்.

ஸ்ரீகல்யாணி அதே பேச்சை தொடர்ந்தபடி ''அவர் உங்களை தன்னுடன் அழைத்துப் போவதாக சொல்கிறார்.

உங்களுக்கு தேவையான சௌகரியங்களை எல்லாம் செய்து தருவதாகச் சொன்னார்'' என்றாள்.

''அதான் சொன்னேனே, உன்னை விட்டு விட்டு நான் எங்கேயும் போக மாட்டேன் என்று.''

''எவ்வளவு நாட்களுக்கு?''

''உனக்கு உடல்நிலை சரியாகும் வரையில்.''

''எனக்கு வாழ்நாளெல்லாம் சரியாகாமல் இருந்தால்?''

''வாதாட வேண்டாம் கல்யாணி! நீ இங்கேயே இப்படி இருக்கும் போது, என்னால் எங்கேயோ போய் இருந்து கொண்டு ஓவியம் வரைந்து கொண்டு உட்கார்ந் திருக்க முடியாது.''.

''போகட்டும். இங்கேயே இருந்து கொண்டு கேட்டபடியே படத்தைப் போடுங்கள். அதற்கு அவரைச் சம்மதிக்க வைப்போம்.''

''அப்படி என்றால் அவர் மாதத்திற்கு பத்து லட்சம் தரும் நிபந்தனைக்கு ஒப்புக் கொள்ளாமல் போகலாம். உனக்கு என்ன பிரயோஜனம் சொல்லு.''

அவள் நொந்து கொண்டே ''அப்படி என்றால் இதையெல்லளாம் நான் பணத்திற்காக செய்கிறேன் என்று நினைக்கிறீங்களா?'' என்றாள் வருத்தத்துடன்.

''என் அபிப்பிராயம் அது இல்லை. நான் இங்கேயே இருந்து கொண்டு படம் போட்டுத் தருகிறேன் என்று சொன்னால் அவர் 'சரி, அப்படியே போட்டுத் தா. படம் போட்டு முடித்த பிறகே பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறேன்' என்று சொல்லக் கூடும். நான் அப்படித்தான் நினைக்கிறேன்.''

அவள் ரொம்ப நேரம் பேசவில்லை. கடைசியில் ''சரி, அவரை வரச்சொல்லி இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்றாள்.

அவன் வந்து அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பரிவுடன் ''என்னைப் புரிந்து கொள் கல்யாணி! என்னால் படம் போட முடியவில்லை. ஒவ்வொரு கலைஞனுக்கும் வாழ்க்கையில் கொஞ்சநாள் ''வாக்யூம்'' ஏற்படும். அதற்கு நான் விதிவிலக்கு கிடையாது. முதலில் நீ நலம் பெற வேண்டும். அதுவரை என்னை வற்புறுத்தாதே. என்னால் போட முடியும் என்று சொல்லி அவரை ஏமாற்றி நம் காரியத்தைச் சாதித்துக் கொள்ள எனக்கு விருப்பம் இல்லை. நம் பொருளாதாரக் நஷ்டத்தைப் பற்றிச் சொல்கிறாயா? அவற்றை வேறு ஏதாவது வழியில் சரி செய்ய முயற்சிப்போம்'' என்றான்.

அவள் அவனை வெறுமையாக பார்த்தாள்.

அவன் இயலாமையுடன் சிரித்தான். ''கோடி ரூபாய் நஷ்டத்தை எந்த விதமாக சரி செய்ய முடியும் என்று யோசிக்கிறாயா? பார்ப்போம். ஏதாவது ஒன்று நடக்காமல் போகாது இல்லையா?'' என்றான்.

அவன் சொன்னது போல் அந்த 'ஏதோ ஒன்று' நடந்தது.

அன்றிரவே!

ஸ்ரீ கல்யாணியின் கட்டிலுக்கு பக்கத்தில் சின்ன கண்ணாடி ஷோ கேஸில் பொம்மை ஒன்று இருந்தது. சுவிட்ஜர்லாண்டிலிருந்து கொண்டு வந்து பொம்மை அது. மிகவும் ரொமாண்டிக்காக இருக்கும். எழுபத்தி ஐந்து டிக்ரி கோணத்தில் இளைஞன் ஒருவன் நின்று கொண்டிருப்பான்.

கண்ணாடி பொம்மை. அதற்குள் ஈதர் முழுவதும் நிரம்பி யிருக்கும். அறையின் வெப்பத்திற்கு அது உள்ளுக் குள்ளேயே ஆவியானதுமே அந்த இளைஞன் முன்னால் குனிந்து, கீழே மண்டியிட்டு அமர்ந்து கொண்டிருக்கும் பெண்ணை முத்தமிடுவான். பெண்ணின் உதட்டை அவன் உதடு தொட்டதுமே பெண்ணிடமிருந்து மின்சாரம் பாய்ந்து இளைஞன் முதுகுத் தண்டிலிருந்து ஒரு வெளிச்சம் திரவம் போல் இடுப்பு வரையில் பரவும். அந்தப் பாரத்திற்கு இளைஞன் திரும்பம் பழையடியே நிற்பான். அந்தக் காதல் காட்சியை 'இரவு நேரத்தில் பார்த்துக் கொண்டிருப்பது இனிமையான அனுபவம். அன்றிரவு அந்த பொம்மை பற்றி திரும்பியது அவர்களுடைய உரையாடல்.

''நாளுக்கு நாள் நான் பெருத்துக் கொண்டே போகிறேன் இல்லையா?'' என்றாள் கல்யாணி.

''அப்படி ஒன்றும் இல்லையே?'' என்றான் அவளைக் கூர்ந்து பார்த்து விட்டு.

''எந்த விதமான உடற்பயிற்சியும் இல்லாமல் படுத்துக் கொண்டே இருக்கிறேன் இல்லையா, அதான்.''

''அதற்குத் தகுந்தாற் போல் டயட்டைக் கூட ரொம்ப லைட்டாக குறைத்துக் கொண்டு விட்டாயே?'' சமாதானப் படுத்துவது போல் சொன்னான்.

அவள் கடந்த காலத்தை நினைத்துக் கொண்டு கொஞ்சம் வேதனையுடன் ''உடல் நலம் நன்றாக இருந்த காலத்தில் தினமும் எவ்வளவு வேலைகள் இருந்தாலும் குறைந்தது அரைமணி நேரமாவது உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தேன்'' என்றாள்.

அவன் நிலைமையை எளிதாக்க எண்ணி ''இந்த உலகத்தில் ஒல்லியாக இருக்கிறவங்க எல்லோரும் தினமும்

உடற்பயிற்சி செய்கிறார்களா என்ன? கடவுளே மனிதர்களை சில உடற்பயிற்சிகளை கட்டாயமாக செய்ய வைத்து விடுகிறார்'' என்றான் சிரித்துக் கொண்டே.

''அப்படி என்றால்?'' என்றாள் அவள் புரியாமல்.

''அதோ அந்த பொம்மையை பாரு.''

அவள் அதைப் பார்த்து வெட்கப்பட்டுவிட்டு பட்டென்று நிமிர்ந்து ''அந்த இளைஞன் ஐந்து நிமிடங்களுக்கு ஒரு முறை முத்தமிட்டால் எவ்வளவு கலோரிகள் செலவாகும்?'' என்று கேட்டாள்.

''ஒவ்வொரு முத்தத்திற்கும் ஒரு கலோரி ஆகலாம் என்று நினைக்கிறேன். அழுத்தமாக கொடுத்தால் இரண்டு கலோரிகள்.''

''அவ்வளவு சரியாக எப்படிச் சொல்றீங்க?''

''ஊகித்து'' என்றான் கார்த்திகேயன்.

''நான் அமெரிக்காவுக்குப் போயிருந்த போது என் சிநேகிதி ஒருத்தி கம்ப்யூட்டரில் கணக்கு போட்டாள். ரொம்ப வேடிக்கையாக இருந்தது. இப்பொழுது நீங்க சொன்னதும் அதே கணக்குத்தான். அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது'' என்றாள்.

''ஆர்வம் இருந்து பயம் உள்ள பெண்கள் கம்ப்யூட்டரை தஞ்சமடைந்து விவரங்களை சேகரிப்பார்கள். ஆர்வமும், புத்திசாலித்தனமும் கொண்ட ஆண்கள் தர்க்கத்தின் மூலமாக கண்டு பிடிப்பார்கள்'' என்றான் சற்றே பெருமையுடன்.

ஸ்ரீகல்யாணிக்கு சந்தோஷமாக இருந்தது. கடந்த பத்து நாட்களாக அவள் அனுபவித்துக் கொண்டிருந்த மன

அழுத்தம் தற்காலிகமாக விடுபட்டுப் போனாற் போல் இருந்தது. இருவரும் ரொம்ப நேரம் சிரிப்பும் கிண்டலுமாக பேசிக் கொண்டிருந்தார்கள். தூங்கப் போகும் போது நள்ளிரவு தாண்டிவிட்டது. அவன் உடனே தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். அவளுக்கு தூக்கம் வரவில்லை. மனம் முழுவதும் சந்தோஷம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும் போது தூக்கம் எப்படி வரும்?

அந்தச் சமயத்தில்தான் ஒரு சின்ன விருப்பம் சிறியதாக தொடங்கி, விருட்சமாகி விட்டது. அந்த ஆசைக்கு உடல் ஒத்துழைக்கும் நிலையில் இல்லாததால் மனதிலேயே பெருகியது. சற்று தொலைவில் தூங்கிக் கொண்டிருந்த கணவனின் கைகளுக்கு நடுவில் சிறைப் பட்டு கைதியாக வேண்டும் என்ற விருப்பம்தான் அது. ஆனால் அருகில் நெருங்கக் கூட சக்தியில்லை. அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இல்லை. அந்த விஷயம் அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது.

அவன் புரண்டு படுத்ததை அவள் கவனித்தாள். இந்த விஷயத்தில் அவளுக்கு ஏட்டு அறிவுதானே தவிர அனுபவம் இல்லை. தூக்கத்தில் அவன் அசைவுகளுக்கு அர்த்தம் கொஞ்சம் கொஞ்சமாக புரியத் தொடங்கியது. அன்றிரவு ரொம்ப நேரம் கழித்துத்தான் அவளுக்கு உறக்கம் வந்தது.

★

மறுநாள் காலை பத்து மணிக்கு வங்கி அதிகாரிகள் வந்து கிட்டங்கியை பூட்டி விட்டார்கள். ஊழியர்கள் அத்தனை பேரும் செய்வதறியாமல் நின்று கொண்டிருக்கும் போது சரக்குகள் இருந்த அறைகளைப் பூட்டி சீல் வைத்து விட்டார்கள்.

இங்கே இவ்வாறு நடந்து கொண்டிருந்த போது புரொட்க்ஷன் மேனேஜர் போன் செய்து ''என்ன செய்யச் சொல்றீங்க மேடம்?'' என்று கேட்டார்.

''அவர்களுக்கு தேநீர் கொடுத்து அனுப்புங்கள்'' போனை வைத்துவிட்டாள்.

இன்னும் அரை மணி நேரத்திற்குள் அந்தச் செய்தி வியாபார வட்டாரமெல்லாம் பரவிவிடும் என்று அவளுக்குத் தெரியும். அதனால் சிட் ஃபண்ட் கம்பெனி அதிகமாக பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

அவள் காபியை குடித்துக் கொண்டே என்னை செய்யலாம் என்று யோசித்துக் கொண்டு இருக்கும் போது அறைக்குள் கார்த்திகேயேன் நுழைந்தான். அவன் வெளியே போவதற்கு தயாராக வந்திருப்பதை பார்த்துவிட்டு ''எங்கே?'' என்று கேட்டாள்.

''ஆபீசுக்கு?''

''இனி எதற்கு? அங்கே வேலை செய்வதற்கு எதுவுமே இல்லை. வங்கி அதிகாரிகள் பூட்டி விட்டு போய் விட்டார்கள்'' என்றாள்.

''வங்கி சேர்மேனிடம் நான் பேசி பார்க்கட்டுமா?''

''பிரயோஜனம் இருக்காது. அவருக்கும் மேலிடத் திலிருந்து புகார் வந்திருக்கும்'' என்றாள் கல்யாணி. இனி அதைப் பற்றி பேசப் பிடிக்காதவளாக பேச்சை மாற்றி ''டெல்லியிலிருந்து வந்த கேசட் கிடைத்ததா?'' என்று கேட்டாள்.

''இல்லை. நீதானே எங்கேயோ வைத்து விட்டதாக சொன்னாய்?''

''இங்கேதான் வைத்தேன். யாரும் எடுத்திருக்க முடியாதே? அந்த மேஜை மீது பாருங்கள்'' என்றாள். மேஜை மீது நிறைய பொருட்கள் சிதறிக் கிடந்தன. அவன் அவற்றைப் புரட்டிப் பார்த்தான். பல நாட்களாக அவை அப்படியே கிடந்திருக்கின்றன. ஸ்ரீகல்யாணியின் பொருட்கள் அவை. அவன் அவற்றுக்கிடையே தேடிக் கொண்டிருந்தபோது...

பாதியாக திறந்து கிடந்த ஒரு பர்ஸிலிருந்து தென்பட்டது ஒரு டிக்கெட். என்னவாக இருக்கும் என்று அவன் அதை எடுத்துப் பார்த்தான். அவன் ஆச்சரியத்தை யும், சந்தேகத்தையும் இரு மடங்காக்கியது அந்த கல்கத்தா டிக்கெட்!

பல நாட்களுக்கு முன்னால் ஒரு நாள், விதி அவளை சாசுவதமாக படுக்கையில் தள்ளிவிட்ட அன்றைக்கு, ஹோட்டலுக்கு அவள் அவனை அழைத்துச் சென்ற அன்றிரவு, ஹோட்டலில் அவள் நினைவு தப்பி விழுந்து விட்டதும் அவளை அப்படியே ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போன பொழுது கிடந்த பொருட்கள் அவை. யாருமே தொடாமல் இன்றும் அப்படியே கிடந்தன. அதே பர்ஸ்! பர்ஸிற்குள் கல்கத்தாவுக்கு டிக்கெட்!

''என்ன இது?'' அவன் கேட்டான்.

அவள் ரொம்ப சாதாரணமாக சொன்னாள்.

''அன்றைக்கு உங்களை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்ற பொழுது வாங்கி வைத்தது.''

''எதற்கு?''

''உங்களை சாந்தி நிகேதனுக்கு அனுப்புவதற்காக.''

அவன் அவளை நெருங்கி வந்து ''எனக்குப் புரிய வில்லை, கல்யாணி! பின்னே என்னிடம் இந்த விஷயத்தைச் சொல்லவே இல்லையே? ஏன்?'' என்றான்.

''எப்படி சொல்ல முடிகயும்? அதான் ஹோட்டலிலேயே நினைவு தப்பி விழுந்து விட்டேனே.''

ஏதோ இனம் புரியாத சங்கடமான உணர்ச்சி. ''அது இல்லை கல்யாணி! நீ அன்றைக்கு என்னை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றது இந்த நல்ல செய்தியை சொல்வதற் காகத்தானா?''

''ஆமாம். நீங்கள் என் சொத்து முழுவதும் போய் விட்டது என்று நினைத்துக் கொண்டு, என் சார்பில் ஜெயிலுக்குப் போவதற்குக் கூட தயாரானீங்க. என் மனம் ரொம்ப நெகிழ்ந்து போய் விட்டது. அதற்குப் பரிசாக உங்களை சாந்தி நிகேதனுக்கு அனுப்பி நீங்கள் அங்கே எவ்வளவு நாட்கள் தங்கி படிக்கிறீங்களோ அவ்வளவு நாட்களும் உங்கள் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்வதாக முடிவு செய்திருந்தேன். அந்த டிக்கெட்டை உங்களிடம் ஹோட்டலில் கொடுக்கலாம் என்று நினைத்துத்தான் டின்னருக்கு அழைத்தேன்.''

ஆனால் அவன்தான் வேறுவிதமாக நினைத்துக் கொண்டுவிட்டான். அவள் அதற்கு முதல்நாள் அவனிடம் திருமணப் பேச்சை எடுத்தாள். அதற்காகத்தான் டின்னருக்கு அழைத்து வந்திருக்கிறாள் என்று நினைத்து விட்டான். ஹோட்டலில் கூட அவள் ''தினமும் ஜெயிலுக்கு கேரியர் கொண்டு வருவேன்'' என்று சொன்னது அவன் எண்ணத்தை மேலும் பலப்படுத்தியது. அதனால்தான் சொத்து முழுவதும் போய், ஆதரவில்லாத நிலையில்

படுக்கையில் விழுந்து கிடந்த அவளைத் திருமணம் செய்து கொள்வதாக சொன்னான். அவளுடைய சொத்துக்கள் கையை விட்டு போகவில்லை என்று அவனுக்கு அப்பொழுது தெரியாது.

'திருமணம் செய்து கொள்வீர்களா?' என்று அவள் கேட்டது வெறும் விளையாட்டிற்காக என்று அவன் நினைக்கவில்லை.

திருமணத்திற்கு முதல் நாள் இரவு அவள் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. ''உங்களுக்கு என்ன குறைச்சல்? குணம் இருக்கு. அழகு இருக்கு. எல்லா வற்றுக்கும் மேலாக உங்களிடம் சுயநலம் கொஞ்சம் கூட இல்லை. கையில் உயர்ந்த கலை வேறு இருக்கு.''

அவன் சொன்னான் ''என்னை கொஞ்சம் யோசித்துக் கொள்ள விடுங்கள்.''

''என்னிடம் பணம் இல்லைன்னு தானே நீங்கள் தயங்குறீங்க?''

இந்த உரையாடல் எல்லாம் வெறுமே அவனை பரிசோதிப்பதற்காகத்தான். அவன் அதைப் புரிந்து கொள்ளவில்லை. ஒரு சமையல்காரனை எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கல்யாணியைப் போன்ற பசினெஸ் மேக்னெட் திருமணம் செய்து கொண்டு விடமாட்டாள் என்றும், அவளுக்கு அப்படிப்பட்ட எண்ணமே கிடையாது என்றும் அவன் நினைக்கவில்லை.

அவள் வேறொரு காரணத்திற்காக அவனை டின்னருக்கு அழைத்து வந்தாள். அவனோ அதை இன்னொரு விதமாக புரிந்து கொண்டு விட்டான். பலவிதமான எண்ணங்

அருடனும், கலங்கிப் போன மனதோடும் அவன் மனைவியிடம் நெருங்கி வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

''கல்யாணி! நான் தவறு செய்து விட்டேனா? நம் திருமணத்திற்கு முன்னால் உனக்கு என் மீது அது போன்ற அபிப்பிராயமே இருந்தது இல்லை. அப்படித்தானே?''

அவள் அவனை நிமிர்ந்து நேராக பார்த்தாள். அவன் மேலும் சொன்னான். ''உன்னிடம் அந்த அபிப்பிராயத்தை தோற்றுவித்ததே நான் தானோ? வேறு விதமாக சொல்லணும் என்றால் ஆதரவற்ற நிலைமையில் உன்னை இந்தக் கல்யாணத்திற்கு சம்மதிக்கச் செய்துவிட்டேன் போலிருக்கு. அப்படித்தானே?''

அவள் பதில் பேசவில்லை.

''சொல்லு கல்யாணி! உன் ஆதரவற்ற நிலையை நான் பயன்படுத்திக் கொண்டு விட்டேனா?''

ஆழ்ந்த நிசப்தத்தைச் சரேலென்று சிதறடித்தபடி அவள் சொன்னாள். ''ஆமாம்.''

கோடையின் வெப்பத்தை தாங்க முடியாமல் காக்கை குஞ்சொன்று தாகத்தால் செத்துப் போய்க் கொண்டிருக்கும் போது தீனமாக கத்திய கத்தல்... அவன் தொண்டை யிலிருந்து வெளியே வர முயன்று அங்கேயே நின்று விட்டது.

அவள் தெளிவான குரலில் சொன்னாள். ''மனதள வில் ஏற்படும் உறவுகள் எல்லாமே வியாபார ரீதியான தொடர்புகள்தான் என்பது என் நம்பிக்கை என்று

உங்களுக்கு ஆதியிலிருந்தே தெரியும். எந்தச் சூழ்நிலையில் உங்களை திருமணம் செய்து கொண்டேன் என்றும் கூட உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஊகித்தது உண்மைதான். அன்றிரவு உங்களை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றது, ஒரு நேர்மையான ஓவியனை என் சமையல்காரன் என்ற ஸ்தானத்திலிருந்து அகற்றி, அவனுக்குப் பிடித்தமான இடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற உத்தேசம் தான். திருமணம் ஆன நாள் முதல் நான் சுகமாகத்தான் இருந்து வருகிறேன் என்பது கூட உண்மைதான். ஆனால் உங்கள் தியாகங்களும், நேர்மையும் எனக்கு சந்தோஷத்தைத் தராது. இந்த விஷயத்தை உங்களுக்கு எப்படிச் சொல்வது என்றுதான் இவ்வளவு நாட்களாக யோசித்துக் கொண்டிருந் தேன். இன்று யதேச்சையாக நீங்கள் நம்பக் கூடிய சாட்சியம் கிடைத்தது. இப்படி கட்டிலோடு படுத்துக் கிடக்கும் மனைவிக்கு அன்பு என்ற பெயரில் பணிவிடை செய்வதை விட உங்கள் துறையில் நீங்கள் பெயர் பெற்று இந்த உலகத்தில் நம்பர் ஒன் ஓவியராக வந்தால் நான் அதிகம் சந்தோஷப்படுவேன்.''

மறுபடியும் நிசப்தம். இதயத்தை பிளக்கும்படியான நிசப்தம். அவன் எழுந்து தொலைவில் போய் நின்று கொண்டான். அவள் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை.

அவன் ஆழமாக மூச்சை எடுத்துக் கொண்டான். ''விவேகாநந்தனிடம் சொல்லி விடு கல்யாணி, நான் ஒப்புக் கொண்டு விட்டேன் என்று.''

அவன் அறையை விட்டு வெளியேறுவது தெரிந்தது. கதவு மூடிக் கொள்ளும் சத்தம் கேட்டது. அவள் கண்களி லிருந்து தாரையாக நீர் வழிந்து கொண்டிருந்தது.

தன் வாக்கு சாதுரியத்தாலும், திறமையினாலும் வியாபாரத்தில் நிறைய எதிரிகளை முன்பு தோற்கடித்திருக்கிறாள். இப்பொழுது அந்தக் கலை தன்னையே தான் தோற்கடித்துக் கொள்வதில் கூட வெற்றியைத் தந்து விட்டது. அவ்வளவு கடினமாக அவள் நடந்து கொள்ளவில்லை என்றால் அவன் தன்னை விட்டுப் போகவே மாட்டான் என்று அவளுக்குத் தெரியும்.

மேஜை மீது இளைஞனின் பொம்மை ஆடிக் கொண்டே இருந்தது.

★

மேகங்களைக் கிழித்துக் கொண்டு விமானம் போய்க் கொண்டிருந்தது. சீட்டில் பின்னால் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டான் கார்த்திகேயன். விமானம் அந்தமான் தீவுகளை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. விமான நிலையத்தில் அவனை வரவேற்க வந்த நபர் அவனைக் காரில் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு பிற்பகலில் மறுபடியும் வருவதாக சொல்லிவிட்டுப் போய் விட்டான். கார்த்திகேயன் இயந்திர கதியில் செயல்பட்டுக் கொண்டிருந்தான். அதற்காக விரக்தியாகவும் இருக்க வில்லை. பட்டைத் தீட்ட தீட்ட வைரம் இன்னும் மெருகேறுவது போல் அனுபவங்கள் அவன் மனதை மேலும் பதப்படுத்தின.

மனைவி அவனை ஓவியம் வரையச் செய்வதற்கு இணங்க வைத்த போது அவன் வருத்தப்பட்டது உண்மை தான். ''நான் உங்களை காதலிக்கவில்லை'' என்று அவள் சொன்ன போது இதயம் நொறுங்கிப் போனது கூட உண்மைதான். ஆனால் மறுநாள் காலையில் நடந்த

இன்னொரு சம்பவம் மனித உறவுகளைப் பற்றி அவனுக்கு புது அத்தியத்தை திறந்து காட்டிவிட்டது.

விடியற்காலையில் ஐந்து மணிக்கு போன் வந்தது. மறுமுனையில் உஸ்மான்.

''என்ன பாய்! இவ்வளவு காலையிலேயே போன் செய்தாய்?'' கார்த்திகேயன் தூக்கக் கலக்கத்துடன் கேட்டான்.

''தீதியை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறோம். மறுபடியும் வயிற்றுவலி வந்துவிட்டது'' என்றான் உஸ்மான். தீதி என்றால் ஒரு காலத்தில் அவன் குடியிருந்த அறையின் சொந்தக்காரரின் மனைவி.

''மை காட்! இதோ வருகிறேன்.''

மறுமுனையில் கொஞ்சம் தடுமாற்றம். ''டாக்டர் ஆபரேஷனுக்கு பத்தாயிரம் வேண்டும் என்று சொல்கிறார்.''

''ஆஸ்பத்திரியில் சேர்த்து எவ்வளவு நாளாகிறது?''

''நேற்றிரவு.''

''பின்னே இதுவரைக்கும் ஏன் தெரியப்படுத்த வில்லை?''

''சேர்ந்ததுமே நான் உங்கள் வீட்டுக்கு வந்தேன் பாய்! அந்த இரவு நேரத்தில் கூர்க்கா உள்ளே விடவில்லை.''

அந்தஸ்தால் ஏற்பட்ட பிளவை மௌனமாக ஏற்றுக் கொண்டு ''நான் வருகிறேன் உஸ்மான்'' என்று போனை வைத்து விட்டான்.

அவன் போன பொழுது அந்த வயதான பெரியவர் வராண்டாவில் கவலையுடன் காட்சி தந்தார். அவருடைய

மகன்கள், மகள்கள் வருத்தம் தோய்ந்த முகத்துடன் தென்பட்டார்கள். கார்த்திகேயன் உள்ளே போய் டாக்டர் களுடன் பேசினான். அவன் யார் என்று தெரிந்ததும் டாக்டர்கள் மளமளவென்று ஏற்பாடுகளை செய்தனர். நிதியை ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் சென்ற பிறகு கார்த்திகேயன் உஸ்மானுடன் தொலைவில் வேப்ப மரத்தடியில் இருந்த டீக்கடையை நோக்கி நடந்தான். ரொம்ப நாட்களுக்கு பிறகு மறுபடியும் அதே போன்ற டீக்கடையில் சேர்ந்து தேநீர் குடிப்பது மகிழ்ச்சியாக இருந்தது. குளிரினால் உடம்பு லேசாக நடுங்கியது. கோட்டை இழுத்துப் போர்த்திக் கொண்டே ''ரொம்ப நாளாச்சு இல்லையா உஸ்மான், நாம் இப்படி சேர்ந்து தேநீர் குடித்து?'' என்றான்.

அதுவரை ஒரு நிசப்தமான கோட்டைக்குள் இருந்து வந்த உஸ்மான சட்டென்று உணர்ச்சி வசப்பட்டவனாக ''நீ வருவாயோ மாட்டாயோ என்று ரொம்ப பயந்தேன் பாய்! நேற்றிரவு உங்கள் கூர்க்கா என்னை அவ்வளவு பயமுறுத்தி விட்டான்'' என்றான். கார்த்திகேயன் இவ்வாறு விடியற் காலை வேளையில் வந்து கைக்கொடுத்தது அவனுக்கு வியப்பாகவும் தாங்க முடியாத சந்தோஷமாகவும் இருந்தது.

உஸ்மானுடன் பேசிக் கொண்டே கார்த்திகேயன் யோசனையில் ஆழ்ந்தான். தேநீர் குடித்த பிறகு தாமதம் செய்யாமல் கைக்குக் கிடைத்த தன் ஓவியங்கள் மூன்றை எடுத்துக் கொண்டு கிரிதர்லால் சமன் வீட்டுக்குப் போனான்.

கிரிதர்லால் சமன் விலை மதிப்பு வாய்ந்த பழைய பொருட்கள், ஓவியங்கள், சிற்பங்கள் போன்றவற்றை வாங்கி விற்றுக் கொண்டிருந்தான். அவற்றை

பார்ப்பதற்காக கார்த்திகேயன் அவ்வப்பொழுது போவான். அந்த விதமாக அறிமுகம்.

''ஆயியே சாப்! சொல்லுங்கள்.'' வரவேற்றபடி கேட்டார் கிரிதர்லால்.

''ஒன்றிரண்டு படங்களை விற்பதற்காக வந்தேன்'' என்று அவற்றைக் காட்டினான்.

கிரிதர்லால் அவற்றை பரிசீலித்துவிட்டு ''ஐயாயிரம் தருகிறேன் சாப்'' என்றார்.

கார்த்திகேயன் வியப்புடன் ''ஐயாயிரமா?'' என்றான்.

''சமீபத்தில் டுப்ளிகேட் ஓவியங்கள் வந்த பிறகு ஒரிஜினல் ஓவியங்களுக்கு டிமாண்ட் குறைந்து போய் விட்டது. இரண்டாயிரம் விலை சொன்னால் கஸ்டமர்கள் திரும்பிப் போய் விடுகிறார்கள்'' என்றார்.

கார்த்திகேயனுக்கு ஸ்ரீகல்யாணியுடன் நடந்த உரையாடல் நினைவுக்கு வந்தது. சொத்து முழுவதும் தந்தாலும் விற்க மாட்டேன் என்று சொன்னது நினைவுக்கு வந்து சிரிப்பு வந்தது.

அதற்குள் கிரிதர்லாலின் பார்வை கார்த்திகேயன் கையிலிருந்த மற்றொரு ஓவியத்தின் மீது விழுந்தது. அதை வாங்கிப் பார்த்தவர் அப்படியே அசந்து போய் விட்டார். ''அபாரம்!'' என்ற வார்த்தை அவர் வாயிலிருந்து வெளி வந்தது. ''இந்த ஓவியமாக இருந்தால் ஐயாயிரம் தருகிறேன் சாப்'' என்றார்.

தன்னுடைய தவிப்பை, ஒரு பெண்ணின் இதயத்தி லிருந்து பொங்கிய ரசனையை ஒன்றாக இணைத்து தீட்சை யுடன் வரையப்பட்ட ஓவியத்திற்கு வெறும் ஐயாயிரம் தானா என்று கார்த்திகேயன் நினைக்கவில்லை.

அந்த ஓவியத்தை சலனமில்லாமல் பார்த்துக் கொண்டே ''அவை வர்ணங்கள் இல்லை கிரிதர் ஜீ! ரத்தத்துடன் கலந்த இயற்கை தைலம். அதிக நாள் நீடிக்காமல் போகலாம்'' என்றான்.

''பரவாயில்லை. இதை நான் விற்க மாட்டேன். வீட்டில் மாட்டி வைப்பேன்.''

அவரிடமிருந்து பத்தாயிரம் பெற்றுக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்து பணத்தை கட்டினான் கார்த்திகேயன். வராண்டாவை விட்டு வெளியே வந்து கொண்டிருந்த போது தீதியின் கணவன் ஓடி வந்தான். அந்தக் கிழவனின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது. கார்த்திகேயனின் கைகளைப் பிடித்துக் கொண்டு உருது மொழியில் சொன்னான். ''வயிற்றுக்குள்ளே குடல் சுருட்டிக் கொண் டிருக்கிறதாம். இத்தனை வருடங்களாக பட்ட வேதனைக்கு காரணம் அதுதானாம். இப்பொழுது சரி செய்து விட்டார்களாம். இனி வாழ்நாள் முழுவதும் அந்த வலியே இருக்காதாம்'' என்றார் உணர்ச்சி பெருக்குடன்.

எந்தத் தூரிகையாலும் வரைய முடியாத சந்தோஷம் தீதியின் குழந்தைகளின் முகத்தில் தென்படவே கார்த்திகேயன் மனதில் எண்ணிக்கொண்டான். 'உன்னுடன் சேர்ந்து போட்ட அந்தப் படத்தை விற்கும் போது என் மனதில் எந்த மூலையிலாவது வருத்தம் இருந்திருந்தால் அது இந்த நிமிடமே போய் விட்டது. உன் ரத்தத்திற்கும், என்னுடைய உழைப்பிற்கும் இதைவிட சாசுவதநிலை எங்கே கிடைத்து விடும்?'

— அந்தக் குடும்பத்தின் ஆனந்தத்திற்கு பிரத்யட்ச சாட்சியாக அவன் அவ்வாறு நினைத்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் அவன் மனதில் புதிய கோணம் ஒன்று

உருவானது. இதுவரை அவன் இந்தக் கோணத்திலிருந்து யோசித்துப் பார்க்கவில்லை. இதில் தவறு எதுவும் இல்லை. கம்யூனிகேஷன் கேப்தான் இதற்குக் காரணம்.

ஸ்ரீகல்யாணி அன்றைக்கு ''உங்க பணிவிடைகள் எனக்கு தேவையில்லை. என் ஆதரவற்ற நிலைமையை பயன்படுத்திக்கொண்டு என்னைத் திருமணம் செய்து கொண்டீங்க. ஒரு கணவனாக அல்லாமல் ஒரு மனிதனாக நீங்கள் வெளி உலகத்திற்குப் போய் உங்கள் கடமைகளை நிறைவேற்றினால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன்'' என்று சொன்னபோது அவன் வருத்தப்பட்டான்.

ஆனால் இப்போது யோசித்துப் பார்க்கும் போது தன் வருத்தத்திற்கு அர்த்தம் இல்லை என்று தோன்றுகிறது. எந்த விஷயமாக இருந்தாலும் எதிர்மறையான கண்ணோட்டத்து டன் எதற்காக யோசிக்கணும்? சரியான முறையில் யோசித்தால் யாருடைய தவறுமே தென்படாது. வெறும் அபிப்பிராயங்கள்தான் தென்படும்.

நம்பிய கொள்ளைக்காக மனைவியை விற்ற அரிச்சந்திரன் உயர்ந்தவன் என்றால், நேரத்தையும் கலையையும் விற்ற ஸ்ரீகல்யாணியும் உயர்ந்தவள்தான். ஆனால் இதிகாசத்தில் அரிச்சந்திரனுக்கு இருந்த ஸ்தானம் சந்திரமதிக்கு இல்லை. எந்தக் கவிஞனாவது அவள் மனதை ஊடுருவிப் பார்த்தால் கணவனுக்கு உதவி செய்கிறோம் என்ற திருப்தி தான் தென்பட்டிருக்குமோ என்னவோ? சந்திரமதி இதிகாசத்தில் இடம் பெறுவதற்காக செய்ய வில்லை. கணவனுக்காக செய்தாள்.

தன்னுடைய ஓவியங்கள் விலை மதிப்பிட முடியாதவை என்று ஒரு காலத்தில் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். அவை ஒரு ஏழை குடும்பத்திற்கு

சந்தோஷம் அளித்ததை பார்த்தபோது அவற்றின் உண்மையான மதிப்பு தெரிந்தது.

அதே சந்தோஷத்தை கல்யாணிக்கு ஏற்படுத்தித் தந்தால் அவனுக்கும் அது மகிழ்ச்சிதானே? இங்கே அவள் தன் மனைவியா இல்லையா என்பதல்ல கேள்வி. ஒரு நபருக்கு சந்தோஷத்தைக் கொடுப்பது. அதுதான் முக்கியம்.

இந்த விதமான எண்ணம் தோன்றியதும் அவனிடமிருந்த வருத்தம் போய்விட்டது. தீதி அந்த விதமாக அவனுக்கு உபகாரம் செய்திருக்கிறாள்.

29

கார்த்திகேயன் ஹோட்டல் அறைக்கு வந்து சேர்ந்த நான்கு மணி நேரம் கழித்து அவனை விமான நிலையத்தில் சந்தித்த நபர் திரும்பி வந்து ''புறப்படலாமா சார்?'' என்றான்.

கார்த்திகேயன் சாமான்களை எடுத்துக் கொண்டு அறையை காலி செய்து விட்டு வெளியே வந்தான். இருவரும் கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே அவர்களுக்காக ஸ்பீட் போட் ஒன்று காத்துக் கொண்டிருந்தது. இருவரும் ஏறிக் கொண்டதும் அது கிழக்குப் பக்கமாக வேகமாக புறப்பட்டது.

வங்காள விரிகுடாவில் ஏறக்குறைய முன்னூறு தீவுகள். அவற்றில் இருபது நிகோபார். மற்றவை அந்தமான். அந்தத் தீவுகளுக்கிடையே உள்ள கடல் வழியாக அவர்களுடைய படகு சுமார் ஒரு மணி நேரம் பயணம் செய்தது. சென்னையிலிருந்து சுமார் ஆயிரம் கி.மீ.

தொலைவில் உள்ள இந்தத் தீவுகளில் மாயர்பந்தர், நான்கௌரி, தென் அந்தமான் போன்றவற்றைத் தவிர மீதி எல்லாமே சின்னச் சின்ன தீவுகள்தாம். சில தீவுகளில் விவசாயம் தொடங்கப்பட்டிருந்தது. பழங்காலத்து 'ரிக்ரிடேர்' சந்ததியைச் சேர்ந்த ஆதிவாசிகள் கூட மக்கள் தொகையில் சேர்ந்து விட்டார்கள். அழகான இந்தத் தீவுகளில் சில பிரமுகர்கள் பெரிய பெரிய பங்களாக்களை கட்டிக் கொண்டு ஓய்வு விடுதிகளாக அவற்றைப் பயன்படுத்தி வந்தார்கள்.

அவர்கள் ஏறிக் கொண்ட படகு தீவை வந்து அடைந்தது. நூறு ஏக்கர்கள் பரப்புள்ள தீவு அது. நடுவில் அரண்மனையைப் போன்ற பங்களா ஒன்று இருந்தது. சுற்றிலும் காம்பவுண்டு சுவர். பம்பாயில் இருக்கும் பெரிய வைர வியாபாரி ஒருவரின் பங்களா என்று சொன்னான் அழைத்து வந்தவன். விவேகாநந்தனுக்கு நெருங்கிய நண்பராம் அந்த வியாபாரி.

தொலைவிலிருந்து கடலின் பேரிரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. அடையாளம் தெரியாத பறவைகளின் கலகல சத்தம் அந்தப் பேரிரைச்சலோடு சேர்ந்து கொண்டது. இந்த ஓசைகளைத் தவிர வேறு ஓசை எதுவும் கிடையாது அந்தத் தீவில். அவர்கள் பத்து நிமிஷங்கள் நடந்து அந்த பங்களாவுக்கு வந்து சேர்ந்தார்கள். உயரமான காம்பவுண்ட் சுவற்றின் விசாலமான கேட்டை திறந்து கூர்க்கா சல்யூட் செய்தான். உள்ளே நுழைந்ததுமே அங்கே தென்பட்ட அரிஸ்டோக்ரஸீயை, அழகை, பார்த்து கார்த்திகேயன் பிரமித்து விட்டான். செயற்கை நீர்வீழ்ச்சி, பலவித நிறங்களில் பூச்செடிகள், பச்சை கம்பளம் விரித்தாற் போல் பசுமையான புல்வெளி, நடுவில் புறாவைப் போல் வெண்மை நிறத்தில் பங்களா.

பங்களாவுக்குள் நுழைந்ததுமே நீளமான படிகள் சுமார் இருபது இருந்தன. பிறகு விசாலமான வராண்டா. நூண்டுகளுக்கு அருகில் அழகான பளிங்குச் சிலைகள்.

வராண்டாவை அடுத்து சுமார் பன்னிரெண்டு அடிகள் உயரம் கொண்ட வாசற்படி இருந்தது. அழகான வெல்வெட் திரைச்சீலை இரண்டாக பிரிந்து வரவேற்பு அளிப்பது போல் அசைந்து கொண்டிருந்தது. கார்த்திகேயன் உள்ளே நுழையும் போது இனிமையான குரல் கேட்டது ''வெல்கம்... வெல்கம் டு தி க்ரீன் ஐலேண்ட்.''

அங்கே அனுஜா சிரித்துக் கொண்டிருந்தாள்.

★

மாலை ஆகி விட்டது.

அருவிக்குப் பக்கத்தில் இருந்த டென்னிஸ் கோர்ட்டில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள் விவேகாநந்தனும், கார்த்திகேயனும். அனுஜா மீன் பிடிக்கச் சென்றிருந்தாள்.

''இங்கே எப்படி இருக்கிறது?'' விவேகாநந்தன் கேட்டார்.

''இங்கே இருக்கும் அழகையும், விலை மதிப்பையும் பார்க்கும் போது இந்தியா ஏன் நாளுக்கு நாள் வறுமையை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது என்று புரிகிறது.''

விவேகாநந்தன் சிரித்தார். ''இந்தத் தீவு என் நண்பனுடையது. ஐந்தாறு மாதங்களுக்கு நமக்குத் தந்திருக்கிறார். இங்கே எந்த விதமான தொல்லையும் இருக்காது. எந்தப் பொருள் வேண்டுமென்றாலும் போர்ட் பிளேருக்கு போய் வாங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

உனக்கு வேண்டிய வர்ணங்களை, தூரிகைகளை, கொண்டு வந்திருக்கிறாய் இல்லையா?''

''கொண்டு வந்திருக்கிறேன்.''

அவர் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு ''நீ சொன்னது உண்மைதான். நிறைய பேர் செல்வந்தர்கள் இந்தத் தீவை ஒரு உல்லாச விடுதியாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். பதவியில் இருக்கும் எங்களைப் போன்றவர்களுக்கு இங்கே விடுதியை அமைத்துத் தருகிறார்கள். சில நாட்களுக்கு முன்னால் பிரதமரின் மகன் இங்கே வந்து விட்டுப் போனான். எவ்வளவு செலவு என்று தெரியுமா? இருபத்தைந்து லட்சம்! அதற்குப் பிறகு டயர்களின் காண்ட்ராக்ட் என் நண்பருக்குக் கிடைத்தது.''

கார்த்திகேயன் அவருடைய நேர்மையை விரும்பினான். அரசியல் தலைவர்களுக்குள் பதவியில் இருந்து கொண்டே இப்படி வெளிப்படையாக பேசுவது அரிது.

''மூன்று நான்கு மாதங்களுக்கு இந்த கெஸ்ட் ஹவுஸை நமக்குத் தருவதென்றால் கஷ்டம்தான். ஆனால் அவர் என்னுடைய நெருங்கிய நண்பர். காரணத்தைச் சொன்னதுமே அவரால் மறுக்க முடியாமல் போய் விட்டது.''

''நான் படம் போடுவதற்கு இவ்வளவு விலை உயர்ந்த சூழ்நிலை தேவையில்லை. டில்லிக்கு வந்து போடச் சொன்னாலும் போடுவேன். அது சரி... ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்து விட்டேன். நீங்கள் வியர்த்த மாக என் மீது இவ்வளவு முதலீட்டைப் போடுகிறீர்கள் என்று தோன்றுகிறது. நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது

போல் அவ்வளவு விலை மதிப்பு வாய்ந்த ஓவியத்தை என்னால் போட முடியாது.''

''அந்த விஷயத்தை நான் பார்த்துக் கொள்வதாக கல்யாணியிடம் முன்பே சொல்லிவிட்டேனே.''

''சரி. உங்கள் விருப்பம்.''

''நான் நாளை காலையிலேயே டில்லிக்குப் போய் விடுவேன். அனுஜா இங்கேயே இருப்பாள்.''

சாதாரணமாக கேட்டுக் கொண்டிருந்த கார்த்திகேயன் சரேலென்று நிமிர்ந்தான். அதுவரை தெளிவில்லாமல் இருந்த ஏதோ சந்தேகம் உருப்பெற்று விட்டாற்போல் தோன்றியது. ''அ...னு...ஜா...வா!'' என்றான் தனக்குள் பேசிக் கொள்வது போல்.

''ஆமாம். இந்த நாலு மாதமும்.''

''வேண்டாம்.'' சட்டென்று சொன்னான். ''அவள் எதுக்கு என்னுடன்?''

''அவள்தான் இருக்கிறேன் என்றாள். ஒரு விதமாக சொல்லப் போனால் இதெல்லாம் அவளுடைய ஏற்பாடுதான். எப்படியாவது உன் கையால் ஒரு நல்ல ஓவியம் வரைய வைத்து விட வேண்டும் என்று.''

மனதில் இருக்கும் உணர்ச்சிகள் வெளியே தென்பட்டு விடாமல் கவனமாக இருந்து கொண்டே ''உத்தேசம் நல்லதுதான். ஆனால் அதற்காக அவள் என்னுடன் இந்தத் தீவில் தனியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை'' என்றான்.

''தனியாக ஏன் இருக்கப் போகிறாள்? அதான் அத்தனை பேர் வேலைக்காரர்கள் இருக்காங்களே?''

''நான் என்ன பேசுகிறேன் என்று புரிந்தும் புரியாதது போல் பேசுகிறீர்கள்.''

விவேகாநந்தன் பதில் பேசவில்லை.

''அனுஜாவுக்கு என் கையால் படம் போட வைக்க வேண்டும் என்ற ஆவல் இருப்பது எனக்குத் தெரியும். மரணப்படுக்கையில் இருப்பது போல் நடித்த பொழுது கூட இதே வாக்குறுதியை வாங்கிக் கொண்டாள். ஆனால் அதையும் விட முக்கியமான விஷயம், ஒரு தந்தையாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்று இருக்கிறது.''

''எது? உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்றும்... இப்படி கல்யாணம் ஆக வேண்டிய பெண்ணை உன்னுடன் தனியாக விட்டுவிட்டுப் போகக் கூடாது என்றும்...''

''ஆமாம். அதனால்தான் நானும் என் மனைவியும் கையொப்பம் இட்டது போல் எழுதி ஒரு புத்தகத்தை அவளுக்குப் பரிசாக தந்தேன்.''

அவன் வார்த்தைகளை முடிப்பதற்குள்ளேயே விவேகாநந்தன் குறுக்கிட்டுச் சொன்னார். ''அந்தக் கையெழுத்திட்ட பக்கத்தை நான் கிழித்துப் போட்டு விட்டேன்.''

கார்த்திகேயன் அதிர்ந்து போய் ''ஏன்?'' என்றான்.

''மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் என் மகளுக்கு அந்த விஷயம் தெரிவதில் விருப்பமில்லாத தால்.''

சூரியன் முழுவதுமாக மறைந்து விட்டதால் அந்த இடத்தில் இருள் சூழ்ந்து கொண்டது. திடீரென்று காற்றின் வேகம் அதிகரித்தது. அந்தக் காற்றுதான் நடுங்கச் செய்ததோ

அல்லது விவேகாநந்தனின் வார்த்தைகளில் இருந்த உண்மைதான் நடுங்கச் செய்ததோ தெரியாது. அவன் நடுநடுங்கி விட்டான். அனுஜா சொல்லியிருந்தால் நம்பியிருக்க மாட்டான். ஆனால் சொன்னது அவளுடைய தந்தை. அந்த விஷயத்தைக் கேட்டதுமே அவனால் மேற்கொண்டு யோசிக்க முடியவில்லை.

விவேகாநந்தன் சொல்லத் தொடங்கினார். ''அனுஜாவுக்கு ஹார்ட்கின்ஸ் நோய். எந்த வேதனையும் இல்லாமல் நம்மை விட்டு போய் விடப் போகிறாள். அது வரையில் அவள் அதிர்ஷ்டசாலிதான். உனக்குத் தோன்றலாம், இப்படிப்பட்ட செய்தியைக் கேட்ட பிறகும் நான் சாதாரணமாக எப்படித்தான் இருக்கிறேன் என்று? ஆம்! இருக்கிறேன். காரணம், என் மகளுக்கு இந்த விஷயம் தெரியக் கூடாது என்பதால். எப்படியும் மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்ற பொழுது, அவளிடம் அதை முன் கூட்டியே சொல்லி மனதை மேலும் நோகடிப்பானேன் என்றுதான். அந்த நோய்க்கு மருந்து கூட இல்லையாம். அவள் நிம்மதியாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்தத் தீவுக்கு அழைத்து வந்தேன். வருவதற்கு முன்னால்தான் எனக்குத் தெரிந்தது, அவள் உன் மீது காதல் வயப்பட்டிருக்கிறாள் என்று. முதலில் உன் மீது தாங்க முடியாத கோபம் வந்தது. ஆனால் விவரங்கள் எல்லாம் அப்புறமாக தெரிய வந்தன. அதற்குப் பிறகு உன் விஷயங்களை அவளிடம் சொல்லவே இல்லை. அந்த விதமாகக் கூட அவளுக்கு வருத்தம் தருவதில் விருப்ப மில்லை. நீ ஓவியம் வரைவாயோ மாட்டாயோ உன் விருப்பம். எனக்கு வேண்டியதெல்லாம் என் மகள் இருக்கும் வரை நீ இங்கேயே இருப்பது. அவளை சந்தோஷமாக வைத்திருப்பது. அவ்வாறு வைத்திருக்க

வேண்டும் என்பதற்காக உன் மனைவியின் பிரஸ்தாபனைனை அவளிடம் எடுக்காமல் இருப்பது'' என்று சொல்லிவிட்டு திரும்பிப் பார்த்து ''சொல்லு கார்த்திகேயன்'' என்று ஏதோ சொல்ல வந்தவர் நிறுத்திவிட்டார்.

கார்த்திகேயன் அங்கே இல்லை.

★

அழகான அலை ஒன்று கடலில் ஒய்யாரமாக உருவாகி, புறப்பட்டு மனதை கவரும் விதமாக நெருங்கி வந்து, எதிர்பாராத உயரத்திற்கு எழும்பி பெருத்த ஓசையுடன் விழுந்து உருத் தெரியாமல் போனாற் போல், அழகான நட்பு ஒன்று கனவு போல் கலைந்து போய் விடப் போகிறது.

அவன் கரையில் நின்றபடி பார்த்துக் கொண் டிருந்தான். அவன் உள்ளத்திலும் கடல் அலைகளின், பேரிரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. அவள் இனி இருக்க மாட்டாள் என்று தெரிந்ததும் அவள் இருப்பதில் இருக்கும் மதிப்பு புரியத் தொடங்கியது.

தொலைவிலிருந்து ''மித்ராஜீ!'' என்ற குரல் கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான். அனுஜா ஏறக்குறைய ஓட்டமும் நடையுமாக அருகில் வந்தாள். ''இங்கே என்ன செய்துக்கிட்டு இருக்கீங்க?''

அவன் பதில் சொல்லவில்லை. அவள் மேலும் சொன்னாள். ''நீங்கள் இங்கே வந்ததுமே முதலில் தன்னிடம் உங்களை விட்டுவிட வேண்டும் என்று அப்பா சொன்னார். அதனால்தான் நான் மீன் பிடிக்கப் போய் விட்டேன். நிறைய மீன்கள் கிடைத்தன. ஆனால் அவை

துடிதுடித்ததை பார்த்ததும் விட்டு விட்டேன். அது போகட்டும். அப்பா என்ன சொன்னார்?''

அனுஜா அவர் தன்னுடன் என்ன பேச விரும்பினார் என்று கார்த்திகேயனுக்குப் புரிந்தது.

''அப்பா என்ன சொன்னார் என்று கேட்டால் ஏன் சொல்ல மாட்டேங்கறீங்க?''

''ஓவியத்தை எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக முடித்து விடு என்றார்'' தன் வாழ்க்கையில் பொய் பேசுவது இந்த விதமாக தொடங்கி விடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

''அதைச் சொல்வதற்கு என்னைக் கூட இருக்க வேண்டாம் என்று ஏன் சொல்லணும்?''

''நீ கூட இருந்தால் எவ்வளவு நாளானாலும் பரவாயில்லை என்று சொல்லிவிடுவாயே என்றுதான்.''

அனுஜா சிரித்தாள். ''உண்மைதான். இந்தத் தீவில் நாம் இருவரும் வாழ்நாள் முழுவதும் இருப்போம் என்ற யோசனையே ரொம்ப த்ரில்லிங்காக இருக்கிறது.''

''ஆனால் இந்தத் தீவின் சொந்தக்காரர் நாலைந்து மாதங்களுக்குத்தான் கெடு கொடுத்திருக்கிறார். அதற்குள் முடித்து விட வேண்டும்.''

அவள் அவனை நெருங்கி வந்து முகத்தை அப்பாவியாக வைத்துக் கொண்டு ''என் மீது உங்களுக்குக் கோபமாக இருக்கிறது இல்லையா? நான் அப்பாவிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். நம் காதல் விஷயத்தை சொல்லிவிட்டு வருங்கால மாப்பிள்ளையைப் பற்றி வேண்டுமானால் சுயமாக விசாரித்துக் கொள்ளுங்கள்

என்றேன். ஒரு முறை உங்களைப் பற்றி தெரிந்துவிட்டால் தெரியும்'' என்று சொல்லிவிட்டு சிரித்தாள்.

அவன் அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தான். கண்களில் துளிர்த்த நீரை அவள் பார்த்துவிடாமல் இருக்க பாடுபட்டான்.

அவள் மேலும் சொன்னாள். ''கடைசியில் அப்பாவிடம் சிம்லா விஷயத்தையும் சொல்லிவிட்டேன். 'முதலில் படம் போட வை அனுஜா! அப்புறமாக கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்' என்றார். எனக்கும் சரி என்று பட்டது. நீங்கள் என்னுடன் இருக்கும் போது கல்யாணத்திற்கு என்ன அவசரம்? இந்தத் தீவு ரொம்ப அழகாக இருக்கிறது இல்லையா? இங்கே நாம் இருவரும் நாலைந்து மாதங்கள் தங்கியிருக்கப் போகிறோம் என்று நினைத்துப் பார்க்கும் போதே ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. அது போகட்டும். நான் ஒரு முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறேன். இந்த நாலைந்து மாதங்களில் குறும்புத்தனம் செய்து உங்களை தொந்தரவு செய்யக் கூடாது என்று. என்னுடைய முடிவு உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?''

''என்னதான் வேண்டாம் என்று நினைத்தாலும் நீ என்னைத் தொந்தரவு செய்துகொண்டேதான் இருப்பாய்.''

''ஆமாமாம். அது என் ரத்தத்திலேயே ஊறிவிட்ட விஷயம். ரத்தம் என்றதுமே நினைவுக்கு வருகிறது. அன்றைக்கு மாஸ்டர் செக்கப் செய்து கொள்ள அப்பா ஆஸ்பத்திரிக்கு போன போது கூடவே நானும் போனேன். அங்கே ஒரு டாக்டரைச் சந்தித்தேன். மிஸ்டர் போபட்லால். ஜோக்கர் போல் இருந்தார். எனக்கும் பரிசோதனை செய்வதாக சொன்னார். பண்ணவும் செய்தார்.''

அவன் மேற்கொண்டு கேட்க விரும்பாதவன் போல் ''அதென்ன புத்தகம்?'' என்று பேச்சை மாற்றினான்.

அவள் தன் கையிலிருந்த புத்தகத்தை பார்த்து விட்டு ''நீங்கள் அனுப்பியதுதான். அத சரி. நான் அனுப்பிய வீடியோ கேசட் கிடைத்ததா?'' என்று கேட்டாள்.

அவன் அதற்கு பதில் சொல்லாமல் சட்டென்று அவள் கையிலிருந்த புத்தகத்தை வாங்கி முதல் பக்கத்தைத் திருப்பினான். அவன் கையெழுத்து போட்டிருந்த பக்கம் கிழிக்கப்பட்டிருந்தது.

அவன் பரபரப்பை அவள் வேறுவிதமாக புரிந்து கொண்டு ''நீங்க இந்தப் புத்தகத்தைப் படித்தீங்களா?'' என்று கேட்டாள்.

''இல்லை. நீ எப்போதோ பேச்சு வாக்கில் கீதாஞ்சலி பற்றி சொல்லியிருந்தாய். நான் புத்தகக் கடைக்குப் போன பொழுது கண்ணில் பட்டது. வாங்கி வந்தேன்.''

''நான் சொன்னது இந்த கீதாஞ்சலி இல்லை. ரவீந்திரநாத் டாகூரின் கீதாஞ்சலி. அஃப் கோர்ஸ். இது இன்னும் நன்றாக இருக்கிறது. இதற்கு பின்னால் இருக்கும் கதை உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''கல்கத்தா தேயிலை தோட்ட முதலாளியும், கோடீஸ்வரனுமான கார்டன் ஃபாக்ஸிற்கு ஒரு நாள் பம்பாய் கடற்கரை மணலில் ஒரு காகிதம் காலில் தட்டுப்படுகிறது. இலஸ்ட்ரேடட் வீக்லீயில் பிரசுரமான ஒரு கவிதை அது. அதைப் படித்துவிட்டு அவர் மிகவும் பாதிக்கப்பட்டு அந்தப் பத்திரிகை ஆசிரியர் ப்ரிதீஷ் நந்திக்கு அதைப் பற்றி தெரிவித்தாராம்.

பல நாட்களுக்கு முன்பு ஒரு பெண்மணி அந்தப் பத்திரிகை ஆசிரியரிடம் வந்து அந்தக் கவிதையை கொடுத்து பிரசுரிக்கும்படி கேட்டுக் கொண்டாளாம். அந்தக் கவிதை நன்றாக இருந்ததால் அதை யார் எழுதினார்கள் என்று கேட்ட பொழுது பதினாறு வயதில் இறந்து விட்ட தன் மகள் எழுதியதாக சொன்னாளாம். பிறகு அவள் வீட்டில் தேடிப் பார்த்த பொழுது தலையணை உறைக்குள்ளும், சோபா சீட்டுக்கு அடியிலும் சின்னச் சின்ன காகிதங்களில் எழுதியிருந்த பல கவிதைகள் கிடைத்தனவாம். அந்தப் பெண்ணின் பெயர் கீதாஞ்சலி. தான் இறக்கப் போவது அந்தப் பெண்ணுக்குத் தெரியும். தாய்க்குத் தெரியாது. உணர்வுகளைப் பகிர்ந்து கொள் வதற்கு யாரும் இல்லாமல், துன்பம் தாங்க முடியாமல் போகும் போது தனிமையில், நள்ளிரவு நேரத்தில் கவிதைகளை எழுதி மறைத்து வைப்பாளாம்.'' கொஞ்ச நேரம் நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தாள் அனுஜா. ''1961-இல் பிறந்து 1977 ல் இறந்து விட்ட கீதாஞ்சலியின் கவிதைகளை ப்ரிதீஷ்நந்தி தன் பத்திரிகையில் பிரசுரித்ததுமே எதிர்பாராத அளவுக்கு ஆயிரக்கணக்கான கடிதங்கள் வந்து குவிந்தனவாம். சிறு வயதில் இறந்து போன தம் குழந்தைகளை நினைத்து குமுறிக் கொண்டே எழுதி யிருந்தார்களாம் பெற்றோர்கள். மரணத்துடன் கடைசி வரையிலும் துணிச்சலுடன் போராடிவிட்டு, தம் புதல்வர்கள் எப்படி தோற்றுப் போனார்கள் என்று கீதாஞ்சலியின் கவிதைகளைப் படித்துவிட்டு அந்தப் பெற்றோர்கள் நினைவுப்படுத்திக் கொண்டார்களாம். கீதாஞ்சலியின் கவிதைகளில் அவளுக்கு தன் நிலைமையின் பால் இரக்கமோ, மரண பயமோ இருந்ததாக தென்பட வில்லை. சில கேள்விகள், யாராலுமே பதில் சொல்ல

புரியாதவை. கடவுளோடும், இயற்கையோடும் உரையாடல் புரிவது மட்டுமே அப்பாடல்களில் தென்படும். அந்தப் பாடல்களில் இலக்கியம் இல்லை. இதயத்தையே உருக்கக் கூடிய நெகிழ்ச்சி இருந்தது.

''நாங்கள் என்ன பாவம் செய்தோம்? எங்களை இந்தச் சின்ன வயதிலேயே ஏன் எடுத்துக் கொண்டு போகிறாய்? போவதுதான் போகிறாய், உடனே எடுத்துக் கொண்டு போகாமல் இப்படி ஏன் துன்புறுத்துகிறாய்? நாங்கள் செய்த தவறுதான் என்ன?'' என்ற கேள்விதான் இருக்கிறது. இவ்வளவு நல்ல கவிதைகளை உலகத்திற்கு எப்படிக் கொண்டு போய்ச் சேர்ப்பது என்று ப்ரிதீஷ்நந்திக்கு தெரியவில்லை. சரியாக அந்தச் சமயத்தில்தான் அவருக்கு லார்டன் ஃபாக்ஸிடமிருந்து செய்தி வந்தது. லண்டனில் இந்தப் புத்தகத்திற்கு அஸ்திவாரம் போடப்பட்டது. அந்த விதமாக இந்தக் கவிதைகள் வெளிச்சத்திற்கு வந்தன. ஒரு சின்னப் பெண், வாழ்க்கையின் மீது ரொம்ப ஆசையோடு இருந்த பெண்... கடவுள், மதம் எல்லோருக்கும் ஒன்றுதான் என்று சின்னச் சின்ன வார்த்தைகளால் நமக்கு எடுத்துச் சொல்கிறாள், இந்த கீதாஞ்சலி என்ற புத்தகத்தின் மூலமாக.''

கார்த்திகேயன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். தன் மனக் குமுறலை, சஞ்சலனத்தை அடக்கிக் கொள்ள அவன் பெரும் மயற்சி செய்ய வேண்டியிருந்தது.

அனுஜா சொன்னாள். ''நீங்கள் படம் போட்டு முடிக்கும் வரையில் நான் என்ன செய்வது? இந்தப் பாடல்களை தமிழில் மொழி பெயர்க்கிறேன். தமிழிலும் இந்தக் கவிதைகளுக்கு ஒரு இடத்தை உருவாக்குகிறேன்.'' கையிலிருந்த காகிதத்தை அவனிடம் தந்து ''மாதிரிக்கு ஒரு

கவிதை மொழி பெயர்த்திருக்கிறேன். எப்படி இருக்கிறது என்று சொல்லுங்கள்'' என்றாள்.

தன் கைகள் நடுங்குவது அவள் கண்ணில் பட்டுவிடாமல் கவனமாக இருந்து கொண்டே அதை வாங்கிப் படித்தான்.

தூக்கமே... தூக்கமே
நாமிருவரும் எப்பொழுது சந்தித்துக் கொண்டோம்?
நீயும் நானும் எவ்வளவு அறிமுகமில்லாதவர்களாக மாறி விட்டோம்?
ஒரு காலத்தில் நீ எனக்கு எவ்வளவு நல்ல சிநேகிதியாக இருந்தாய்?
இருட்டிவிட்டால் போதும் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் விடுவாய். தூரத்து மலைத் தொடர்ச்சியின் நிசப்தத்தில், உன் ஆளுமையில் நான் ஒரு கனவுமாளிகையை உருவாக்கினேன். பொழுது விடிந்ததுமே திருப்பிக் கொண்டு வந்து விட்டு விடுவாய். ஆனால் இப்பொழுதோ...
கனவுகள் இல்லை, எல்லாமே நினைவுகள்தாம். நிசப்தமாக உன் வருக்கைக்காக இருட்டில் காத்துக் கொண்டிருக்கிறேன். உன் பழைய சிநேகிதியான என்னைச் சந்திப்பதற்கு நீ என்றாவது வருவாய் என்று தெரியும். அதற்குப் பிறகு இனி கனவுகள் இராது. எல்லாமே தூக்கம் தான்... மீளாத துயில்தான்.

படித்து முடித்ததுமே அவனால் துக்கத்தை கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் போய் விட்டது. ஆனால் அவன் துக்கத்தை அவள் வேறு விதமாக புரிந்து கொண்டு விட்டாள்.

''நீங்கள் இவ்வளவு சென்ஸிடிவ்வாக இருந்தால் எப்படி?'' என்றாள்.

அவன் தேறிக் கொண்டான். 'இந்தக் கவிதைகளை போலவே உனக்கும் நான் ஒரு சாசுவதமான இடத்தை உருவாக்குவேன்.' வெளியே சொல்லவில்லை. மனதில் நினைத்துக் கொண்டான்.

★

சாதாரண ஸ்கெட்ச் போட்டு முடிக்கவே ஒரு வாரமாகிவிட்டது. கார்த்திகேயன் வேலையை தொடங்கிய அன்றைக்கே விவேகாநந்தன் கிளம்பிப் போய்விட்டார்.

பத்து நாட்களுக்குப் பிறகு அவர் டில்லியிலிருந்து திரும்பி வந்த போது...

கார்த்திகேயன் இன்னும் அதே நிலையில் இருந்தான். ''பத்து நாட்களில் இவ்வளவு வேலைதானா முடிந்தது?'' வியப்புடன் கேட்டார் விவேகாநந்தன்.

கார்த்திகேயன் வேதனையுடன் சிரித்தான். ''ஒரு கோடு கூட வரைய முடியவில்லை. அனுஜா எதிரே இருக்கும் போது அவளுக்குப் பின்னாலிருக்கும் உண்மை தான் பூதாகாரமாக தென்படுகிறது'' என்றான்.

''எனக்கும் அங்கே எந்த வேலையுமே ஓடவில்லை. எல்லா டாக்டர்களையும் சந்தித்தேன். சில தெரபிகள் இருக்கிறதாம். ஆனால் சில மாதங்கள் மட்டுமே வாழ்நாளை நீடிக்கச் செய்யுமாம். சிகிச்சை மட்டும் ஆளை ரொம்பவும் துன்புறுத்துமாம். 'சில மாதங்கள் வாழ்நாளை நீடிக்கச் செய்வதற்காக எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு அந்த உடம்பை இம்சைக்கு உட்படுத்துவதா? அல்லது இப்படியே அமைதியாக மரணமடையச் செய்வதா? என்னால் எந்த முடிவுக்குமே வர முடியவில்லை.''

''அனுஜாவிடம் மட்டும் எந்த மாறுபாடும் இல்லை.''

''அந்த நோயின் தன்மையே அப்படித்தானாம். கடைசி வரையில் ஒன்றுமே தெரியாது.''

இருவரும் ஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது மணி பன்னிரெண்டு.

''என்னை மன்னியுங்கள். என் நிலையை நினைக்கும் போது எனக்கே வெட்சக்கேடாக இருக்கிறது'' என்றான் கார்த்திகேயன் நொந்து கொண்டே. ''அனுஜாவின் மீது எனக்கு இவ்வளவு அன்பு இருக்கிறது என்று எனக்கே தெரியவில்லை. அப்படிப்பட்ட அனுஜா இனி இருக்க மாட்டாள் என்று சொன்னால் என் கைகள் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. ஆனால் எப்படியாவது சரி, அந்த ஓவியத்தை முடித்தே தீருவேன்.''

''எவ்வளவு சமயம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள். கடைசி நாட்களில் என் மகளை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்ற விருப்பத்தோடு உன்னை வரவழைத்தேனே தவிர எனக்கு அந்த ஓவியத்தின் மீது எந்த ஆர்வமும் இல்லை.''

அப்பொழுது கதவிற்கு அருகில் சந்தடி கேட்டது. அனுஜா அங்கே நின்று கொண்டிருந்தாள். அவர்களுடைய உரையாடல் முழுவதும் கேட்டு விட்டாற்போல் அவள் முகம் வெளிறிப் போயிருந்தது. துக்கத்தையும், குழப்பத்தை யும் அடக்கிக் கொள்வதற்கு பெரும் முயற்சி செய்து கொண் டிருப்பது போல் உதடுகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

இருவரும் அவளைப் பார்த்து விட்டு தம்மை அறியாமல் நாற்காலிகளை விட்டு எழுந்து நின்றார்கள்.

விவேகாநந்தன் அவளை நோக்கி வந்து ''அனுஜா!'' என்றார்.

''எல்லாவற்றையும் கேட்டு விட்டேன் டாடீ!''

''இல்லையம்மா. ஒன்றுமே நடக்கவில்லை. வெறுமே சந்தேகப்பட்டு விட்டு சொன்னாங்க ஆஸ்பத்திரியில். அவ்வளவுதான்.''

''நாட்டிலேயே பெரிய ஆஸ்பத்திரி டாடீ அது. அங்கே பொய் சொன்னதாக ஆத்மவஞ்சனை செய்து கொண்டு நீங்க உங்கள் மகளை நம்ப வைக்கத் தேவையில்லை.''

''அனுஜா!''

''ஒரு நபருக்கு மரணம் நெருங்கி விட்டது என்று தெரியும் போது, அந்த விஷயத்தை அந்த நபரிடம் தெரிவித்தால் எஞ்சிய காலத்தை எப்படி கழிக்கலாம் என்று தீர்மானித்துக் கொள்ளும் உரிமை அந்த நபருக்கு உண்டு டாடீ! மரணமடையப் போகும் அந்த நபர் என்னதான் உங்கள் மகளாக இருந்தாலும் அவள் தன் வாழ்நாளின் கடைசி தருணத்தை எப்படி கழிக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை உங்களுக்குக் கிடையாது.''

சிறு பையனைப் போல் அழுவதற்கும் தயாராக இருந்தார் விவேகானந்தன். ''அப்படி சொல்லாதேம்மா. நீ என்ன சொன்னாலும் அதை அப்படியே செய்து விடுகிறேன். நீ என்ன கேட்டாலும் அதை கொண்டு வந்து தருகிறேன்.''

''இது பொய் இல்லையே டாடீ?''

மனம் நெகிழ்ந்து போன விவேகாநந்தன் மகளை சட்டென்று இழுத்து அணைத்துக் கொண்டு ''மரணத்திற்கு

இன்னும் மூன்று மாத காலமே உள்ள மகளிடம் எந்தத் தந்தையுமே பொய் சொல்ல மாட்டான் அம்மா'' என்றார்.

தந்தையின் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டிருந்த அனுஜா, தலையை மெதுவாக தூக்கி பின்னால் இருந்த கார்த்திகேயனை பார்த்துக் கண்ணடித்தாள். தொலைவில் நின்று அவ்விருவரையும் பார்வையாளனைப் போல் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திகேயனுக்கு அது சரியாக தென்படவில்லை.

''டாடீ!'' என்றாள் நாடக பாணியில். ''நான் சுமங்கலியாக செத்துப் போக வேண்டும். காதலனே எனக்குக் கணவராகி, என் கால்களில் மெட்டியை அணிவித்து, என் முகத்திற்கு மஞ்சள் பூசி, என்னை சிதையில் ஏற்றினால் அந்தத் திருப்தியோடு போய்ச் சேர்ந்து விடுவேன். உடல் சிதையில் ஏறுவதற்கு முன்னால் என் கழுத்தில் மாங்கல்யம் ஏறி விட வேண்டும். என் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பீங்களா டாடீ'' என்றாள்.

மகளை மேலும் அழுத்தமாக அணைத்துக் கொண்டு ''கண்டிப்பாக தீர்த்து வைக்கிறேன் அம்மா'' என்றார். '

கார்த்திகேயன் கலவரத்துடன் முன்னால் வந்து ''அனுஜா!'' என்றான்.

அனுஜா அவனைப் பார்த்துச் சிரித்து விட்டு தந்தையின் பக்கம் திரும்பினாள். ''தாங்க்யூ டாடீ! தியேட்டர் டிராமா வகுப்பில் பாடம் சொல்லித்தரும் போது எங்கள் லெக்சரர் சொல்லுவார், சரியாக நடிக்காவிட்டால் மெலோ டிராமா எவ்வளவு கன்றாவியாக இருக்கும் என்று. ஸ்ட்ரீட் ப்ளே, ஸ்டேஜ் ப்ளே மட்டுமே இல்லை மெலோ டிராமா கூட என்னால் அவ்வளவு நன்றாக நடிக்க முடியும்

என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது'' என்றாள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

''என்னம்மா இது?'' என்றார் விவேகாநந்தன் குழப்பத்துடன்.

''பின்னே என்ன டாடீ? எனக்கு ஹாட்கின்ஸ் நோயா? என்னிடம் சொல்லாமல் நீங்கள் இதை இவ்வளவு நாளாக மறைத்து வைத்திருந்தீங்களா? உங்களுக்குள் நீங்கள் குமுறிக் கொண்டே ஏதேதோ முடிவுகளை எடுத்துக் கொண்டீர்களா? அதற்காகத்தானா கார்த்திகேயனை நான் காதலிப்பதாக சொன்னதுமே அழைத்து வந்து இந்தத் தீவில் எங்கள் இருவரையும் விட்டு விட்டீர்கள்? ரொம்ப அழகு நான்! அதிர்ஷ்டவசமாக நான் மறை விலிருந்து உங்களுடைய உரையாடலை இன்று கேட்டிருக்கவில்லை என்றால் அந்த ஓவியம் முழுவதுமாக வரைந்து முடிந்த பிறகு இனி எப்பொழுது சாவேனோ என்று நீங்கள் இருவரும் காத்துக் கொண்டு உட்கார்ந்து இருந்திருப்பீங்க. அப்படித்தானே?''

''நீ என்னதான் சொல்கிறாய்?''

''போபட்லால் என்ற டாக்டரை அழவைப்பதற்காக நான்தான் ரிப்போர்ட்டுகளை மாற்றினேன். என்னுடையதை எடுத்துவிட்டு ஹாட்கின்ஸ் வியாதி உள்ள பெண்ணின் ரிப்போர்ட்டை என் ஃபைலுக்குள் வைத்து விட்டேன்.''

அவள் மிகச் சாதாரணமாக பேசிய அந்த இரண்டு வாக்கியங்களும் புரிவதற்கு கொஞ்ச நேரம் பிடித்தது அவ்விருவருக்கும். நாளெல்லாம் பாலைவனத்தில் திசை தெரியாமல் அலைந்து கொண்டிருந்தவனுக்கு நீர் ஊற்று

தென்பட்டால் எப்படி இருக்குமோ அவ்வளவு உற்சாகத் துடன் பாய்ந்து சென்று மகளை அலாக்காக தூக்கிக் கொண்டார் விவேகாநந்தன்.

தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கார்த்திகேயனின் மனநிலை கூட அதற்கு சற்றும் குறைந்தது இல்லை. அவன் இதயம் வேகமாக துடித்துக் கொண் டிருந்தது. தான் சந்தோஷப்பட்டது அவனுக்கே ஆச்சரிய மாக இருந்தது. மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டே அந்த நபரின் சித்திரத்தை வரைவது எவ்வளவு கடினமானது என்று அவன் மட்டுமே அறிவான். அந்தப் படம் சரியாக வரவில்லை என்று அவனுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் யோசனையில் மூழ்கியிருந்தாலும் தந்தையும் மகளும் பேசிக் கொண்டது காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது.

''எல்லா சாமான்களையும் எடுத்து பெட்டியில் வைத்துக் கொள் அனுஜா! இன்னும் நாலுமணி நேரத்தில் போர்ட் ப்ளேரிலிருந்து விமானம் வந்துவிடும், போகலாம்.''

''அப்படி என்றால் அந்த ஓவியம்?''

''இன்னும் ஓவியமாவது? அந்த விஷயத்தை அப்புறமாக பார்த்துக் கொள்ளலாம். முதலில் அர்ஜெண்டாக நாம் டில்லிக்குப் போகணும்.''

அனுஜா கார்த்திகேயனிடம் வந்தாள். ''என்ன? எப்படி இருக்கிறது? இவ்வளவு கலங்கடித்து விட்டதற்கு என் மீது கோபமாக இருக்கிறதா?'' சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''இல்லை. ஏதோ பாரம் இறங்கி விட்டாற் போல் இருக்கிறது. உண்மையில் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன்

அனுஜா! இவ்வளவு நாளாக நாங்கள் மனதிற்குள்ளேயே எவ்வளவு குமுறிக் கொண்டிருந்தோம் என்று உனக்குத் தெரியாது.''

அவள் மேலும் சிரித்துவிட்டு ''சொல்லத் தேவையில்லை. உங்கள் கண்களில் பளபளக்கும் ஈரமே எடுத்துச் சொல்கிறது'' என்றாள்.

அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான் தன் கண்கள் ஈரமாகியிருப்பதை. அவன் கண்களைத் துடைத்துக் கொண்டிருக்கும் போது அவள் சொன்னாள். ''தாங்க்ஸ்! இவ்வளவு நாட்களாக என் மனதில் ஏதோ ஒரு மூலையில் கொஞ்சம் சந்தேகம் இருந்து வந்தது, நான் காதலிக்கும் அளவுக்கு நீங்கள் என்னை காதலிக்கவில்லையோ என்று. உங்கள் கண்ணீர்த் துளி சொல்லி விட்டது என் மீது உங்களுக்கு இருக்கும் காதலை. தாங்க்ஸ்!''

30

''அசம்பவம்'' என்றார் பரத்வாஜ். அவர் முகம் சிவந்து விட்டிருந்தது.

''ஆமாம் டாக்டர். என் மகள் இந்த விஷயத்தை சொன்னதுமே அங்கே ஒரு நிமிஷம் கூட தங்காமல் அழைத்துக் கொண்டு வந்து விட்டேன். இதே நோய் இருந்த மற்றொரு பேஷண்டின் பிளட் ரிப்போர்ட்டை மாற்றி விட்டாளாம். ஐ யாம் சாரி டாக்டர்.''

பரத்வாஜுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. இருவரையும் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தார். அனுஜா நொந்து கொண்டே ''மன்னித்துக் கொள்ளுங்கள்

டாக்டர். இது இவ்வளவு சீரியஸாகி, என்னை சேர்ந்தவங்க அத்தனை பேரையும் கலங்கடித்து விடும் என்று நினைக்க வில்லை. உங்கள் அசிஸ்டெண்ட் பி.டி.லால் லூயி பாஸ்சர் என்றால் யார் என்றே தெரியாது என்று சொன்னார். அவருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தேன். சுஜாதா என்ற நோயாளியின் பிளட் ரிப்போர்ட்டை எடுத்து என்னுடைய ஃபைலுக்குள் வைத்து விட்டேன். அதைப் பார்த்து விட்டு அந்த லால் எனக்கு போன் செய்து ரகளை கிளப்புவார் என்றும், குறைந்த பட்சம் ரிப்போர்ட் மீது உள்ள நோயாளியின் பெயரை சரி பார்த்து விட்டு வியாதியை பற்றி முடிவு செய்யும்படி சொல்ல வேண்டும் என்றும், அதற்கும் முன்னால் லூயி பாஸ்ச்சரை பற்றி தெரிந்து கொள்ளச் சொல்லியும் நன்றாக டோஸ் விடுவோம் என்றும் எண்ணியிருந்தேன்'' என்று சொல்லி முடித்தாள்.

''என்ன? லாலுக்கு லூயி பாஸ்சர் யார் என்று தெரியாதா?''

''ஆமாம். லூயி பாஸ்ச்சர் லோஹியா ஆஸ்பத்திரியின் சூபரின்டென்டெண்ட் என்று சொன்னால் நம்பக் கூடிய நிலையில் இருந்தார் அவர். அப்படிப் பட்டவருக்கு சாதாரணமாக சொல்லுவதை விட இப்படி புத்தியில் உறைக்கும் விதமாக சொல்லுவது நல்லது என்று நான் தான் ரிப்போர்ட்டுகளை மாற்றினேன். அவரிடமிருந்து போன் வராமல் போகவே, நீங்கள் இந்த ரிப்போர்ட்டுகள் மாறிய விஷயத்தை கவனித்து விட்டீர்கள் போலிருக்கு, அதான் பேசாமலிருந்து விட்டீர்கள் என்று நினைத்து விட்டேன். எனக்கு பின்னால் இவ்வளவு கதை நடந்து கொண்டிருக்கும் என்று ஊகித்தும் பார்க்கவில்லை. ஐ யாம் சாரி டாக்டர்.''

பரத்வாஜ் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டு ''என்னுடன் வாங்க'' என்று உள்ளே நடந்தார். இந்த விஷயத்தால் அவர் மனம் காயப்பட்டதோ அல்லது நடந்த தவறுக்காக வெட்கி பச்சாத்தாபமடைந்ததோ தெரிய வில்லை. மொத்தத்தில் சீரியஸாக இருந்தார்.

அவள் கை நாளத்தில் ஊசியைக் குத்தி ரத்தத்தை எடுத்து பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். அங்கிருந்து ரிக்கார்ட் ரூமுக்குப் போனார். பதினைந்து நிமிடங்கள் தேடிப் பார்த்து விட்டு கடைசியாக ஃபைலை கண்டு பிடித்து விட்டார். அதை எடுத்துக் கொண்டு தன் சேம்பருக்குள் வந்தார். சேம்பருக்கு முன்னால் சோபாவில் உட்கார்ந்து கொண்டிருந்த விவேகாநந்தனுக்கும், கார்த்திகேயனுக்கும் உள்ளே என்ன நடந்து கொண்டிருக் கிறது என்று தெரியவில்லை. பரத்வாஜ் வந்து தன்னுடைய நாற்காலியில் அமர்ந்து கொண்டு கையால் ஜாடை காட்டி ''உட்காருங்கள்'' என்றார். அதுவரை மௌனமாக அவரைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த அனுஜா அவருக்கு எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். கையில் இரத்தம் எடுத்த இடத்தில் கடுத்தது. கட்டை விரலால் அந்த இடத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டே அவர் கொண்டு வந்த பைல்களையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். பரத்வாஜ் டிராயரிலிருந்து 'அனுஜா' என்று எழுதப்பட்டிருந்த ஃபைலை வெளியே எடுத்தார்.

முதல் நாலைந்து பக்கங்களை திருப்பிய பிறகு தென்பட்டது பிளட் ரிப்போர்ட்! அவர் அதைப் பார்த்து விட்டு புருவங்களை உயர்த்தி திரும்பவும் பார்த்தார். A.S. என்ற எழுதியிருந்தது. அவர் சுஜாதாவின் பைல் மீது இருந்த பெயரை பார்த்தார். A. Sujatha. அனுஜா அவருடைய குழப்பத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பரத்வாஜ் சுஜாதாவின் பையை அருகில் இழுத்துக் கொண்டு அதிலிருந்த பிளட் ரிப்போர்ட்டை எடுத்தார். புதிதாக இருந்தது. அந்த காகிதம் தான் வைத்ததுதான் என்று அனுஜாவுக்குப் புரிந்தது. காகிதத்தின் மீது இருந்த பெயரை பார்த்தார். K. அனுஜா என்று இருந்தது.

பிளட் ரிப்போர்ட்களில் மாறுபாடு நிகழ்ந்தது உண்மைதான். அதில் சந்தேகம் இல்லை. ஆனால்..

★

டாக்டருடன் சேர்ந்து வெளியே வந்து கொண்டிருந்த மகளைப் பார்த்து கலக்கத்தோடு எழுந்து நின்றார் விவேகாநந்தன். கார்த்திகேயன் தன் உணர்வுகளை அடக்கிக் கொள்ள மிகவும் பாடுபட வேண்டியிருந்தது.

உள்ளேயிருந்து வெளியே வந்துகொண்டிருந்தவர் களுக்கும் வெளியே காத்துக் கொண்டிருந்தவர்களுக்கும் இடையே நிலவியிருந்த நொடிப் பொழுது நிசப்தத்தை சிதறடித்துக் கொண்டிருந்த ஸ்பிரிங் கதவின் சத்தமே பயங்கரமாக கேட்டது. அந்த பயங்கர சத்தத்தை தொடர்ந்து மறுபடியும் நிசப்தம். நாடகத்தனமாக இருப்பதற்காக அனுஜா உண்டாக்கிய சத்தம்தான் அது.

அவ்வளவு இறுக்கமான சூழ்நிலையை உருவாக்கிய பிறகு திடீரென்று அதை எளிதாக்கியபடி சிரித்து விட்டாள் அனுஜா. சிரித்துக் கொண்டே மேலும் சொன்னாள். ''வாங்க டாடீ! கிராண்டாக பார்ட்டீ கொடுக்கணும் எனக்கு.''

''அப்படி என்றால்?''

''ரிப்போர்ட்டுகள் மாறிவிட்ட விஷயம் உண்மைதான்.''

அதுவரை இதயத்தில் இருந்து வந்த துன்பத்தை எல்லாம் திடீரென்று யாரோ ஒரே திரியாக துடைத்தெறிந்து விட்டாற்போல் இருந்தது. கார்த்திகேயன் விவேகாநந்தனை விட அதிகமாக ஆறுதல் அடைந்தான். ஒரு அலையானது சந்தோஷமாக பொங்கி வந்து மனதை வருடிக் கொடுத்தது.

''இதென்ன? இரண்டு பேரும் கண்ணிமைக்காமல் அப்படியே பார்த்துக் கொண்டு இருக்கீங்களே?''

அதற்குள் விவேகாநந்தன் தேறிக் கொண்டார். டாக்டரை அனல் கக்கும் விழிகளுடன் பார்த்தார். ''ஒரு சிறிய காகிதம் ஒரு ஃபைலிலிருந்து இன்னொரு ஃபைலுக்கு மாறும் அளவுக்கு நீங்கள் பொறுப்பு அற்றவர்களாகவும் மெத்தனமாகவும் இருக்கலாமா? இதெல்லாம் உங்களுக்கு சிறு பிள்ளைகளின் விளையாட்டாக தோன்றுகிறதோ?''

பரத்வாஜ் மௌனமாக தலையைக் குனிந்து கொண்டார்.

''அமைச்சர் மகளின் விவகாரத்திலேயே இவ்வாறு நிகழ்ந்தால், சாதாரண மக்களிடம் நீங்கள் எவ்வளவு அலட்சியமாக இருப்பீங்க என்று புரிகிறது.''

அனுஜா இடையில் புகுந்தாள். ''இதெல்லாம் அவர்களுடைய தவறுதான் என்பது போல் இப்படி அவர்கள் மீது பாய்கிறீங்களே டாடீ! இதில் தவறு என்று ஏதாவது இருந்தால் அது என்னுடையதுதான். ரிப்போர்ட்டு களை மாற்றி வைத்தது நான்தான் என்ற விஷயத்தை மறந்து போய் விட்டீங்களா? ஆனாலும் இந்தச் சமயத்தில் கோபம் எதற்கு? கோபத்திற்காக சந்தோஷத்தை கைவிடுகிறவர்கள் துரதிர்ஷ்டசாலிகள். சந்தோஷப்பட வேண்டிய சமயத்தில் அதை கோபத்தால் மறைப்பவர்கள் மூடர்கள். என்ன மித்ராஜீ? சரிதானே?''

கார்த்திகேயன் சிரித்துவிட்டு பேசாமல் இருந்தான். உண்மையில் அவன் அவள் சொன்னதை காதில் வாங்க வில்லை. வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்த அபூர்வமான கலைப்படைப்பு நாசமடைந்து போகவில்லை என்று தெரிந்த பிறகு தவிப்போடு அதை அபூர்வமாக பார்த்துக் கொண்டிருக்கும் சிற்பியைப் போல் அனுஜாவைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

டாக்டரிடம் நன்றி தெரிவித்துவிட்டு மூவரும் வெளியே வந்தார்கள். அனுஜா சொன்னாள். ''இந்தச் சந்தோஷ சமயத்தில் டாடீ பார்ட்டீ தருவதாக சொல்லி யிருக்கிறார். நீங்க என்ன தரப் போறீங்க?''

''என்ன வேண்டும் உனக்கு?''

''கேட்ட பிறகு மாட்டேன் என்று மறுத்து விடக் கூடாது. பிராமிஸ்?''

''பிராமிஸ்!''

''அந்த ஓவியத்தை முடித்து விட வேண்டும்.''

கார்த்திகேயனும் விவேகாநந்தனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அனுஜா தொடர்ந்தாள். ''நான்தான் உங்களுடைய உரையாடலைக் கேட்டு விட்டேனே. கண் எதிரே நான் மரணமடைந்து கொண் டிருக்கும் போது அந்தத் துன்பத்தை தாங்கிக் கொண்டு ஓவியம் வரைய முடியவில்லை என்று சொன்னீங்க. இப்பொழுது நான் மரணமடையப் போவதில்லை என்பதால் உங்களால் பிரமாதமாக வரைய முடியும். அந்தமாக தீவுக்குப் போகத் தேவையில்லை என்றால் இங்கேயே வரையலாம். ஆனால் படத்தை மட்டும் முடித்து விட வேண்டும்.''

''ஆனால் இதுவரை போட்ட கோடுகளே நன்றாக வரவில்லை.''

''மறுபடியும் முதலிலிருந்து போடுங்கள். வாக்குறுதி தந்து விட்டீர்கள் இல்லையா?''

விவேகாநந்தன் குறுக்கிட்டு ''இந்த நிமிஷமே எல்லாவற்றையும் முடிவு செய்ய வேண்டுமா என்ன? முதலில் இந்த சந்தோஷத்தை கொண்டாடுவோம். வாங்க'' என்று டிரைவரை பார்த்து ஹோட்டலுக்குப் போகச் சொன்னார்.

அன்று மாலையில் பெரிய பார்ட்டீ நடந்தது. துணை பிரதமரும் வந்திருந்தார். சுமார் இரண்டு ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் பலவண்ண மின் விளக்குகளுக்கு நடுவில் மேஜைகளை போட்டிருந்தார்கள்.

அரசியல் தலைவர்களும், வியாபார மேதைகளும் அத்தனை பேரும் அவ்விடத்தில் கூடியிருந்தார்கள். அனுஜாவுக்கு வரவிருந்த அபாயகரமான நோய் தானாகவே நீங்கி விட்டதாக எல்லோரிடமும் சொன்னார் விவேகாநந்தன். ரிப்போர்ட்டுகள் மாறிய விஷயத்தை சொல்லவில்லை. எல்லோரும் வந்து அவளைப் பாராட்டத் தொடங்கினார்கள். அவள் முறுவலுடன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருந்தாள்.

பார்ட்டிக்கு வந்த பிரமுகர்களுக்கு கார்த்திகேயனை சிறப்பு விருந்தினராக அறிமுகப்படுத்தினார் விவேகாநந்தன். ஒரு அபூர்வ கலைப்படைப்பை அவனைக் கொண்டு போடச் சொல்லப் போவதாக அறிவித்தார். எல்லோரும் பாராட்டு தெரிவித்த போது கார்த்திகேயனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அதைவிட பெரிய சங்கடம் இன்னொன்று அவன் மனதில் தோன்றிக் கொண்டிருந்தது.

இதற்கு முன்பாக இருந்தால் அனுஜா பிழைத் திருக்கப் போவதோ சில நாட்கள்தான். வீணாக அவளை எதற்காக வருத்தப்படுத்த வேண்டும் என்று ஸ்ரீ கல்யாணி யின் விஷயத்தைச் சொல்லவில்லை. ஆனால் எவ்வளவு நாட்களுக்கு இது போல் மறைத்து வைத்திருப்பது? எவ்வளவு நாட்கள் அந்தப் பெண்ணின் மனதில் ஆசைகள் கிளை விட்டு படர்ந்து கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டே சும்மா இருப்பது?

மறுநாள் வரையில் கூட காத்திருக்க முடியவில்லை அவனால். விவேகாநந்தன் மகள் மீது எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார் என்று அவன் அறிவான். மகளுக்காக மறுபடியும் புதிதாக ஏதாவது திட்டம் யோசிப்பதற்குள், தான் இந்த விஷயத்தை அனுஜாவிடம் சொல்லி விட வேண்டும். அவன் அங்கே போன போது விவேகாநந்தன் வந்த விருந்தினருக்கு விடை கொடுத்துக் கொண்டிருந்தார். அனுஜா தந்தையின் பக்கத்தில் நின்று கொண்டு முறுவலுடன் வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தாள். எல்லோரும் போன பிறகு விவேகாநந்தன் காலியாக இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். வேலைக்காரர் களும், சர்வர்களும் தொலைவில் காலியான பாத்திரங்களை எடுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். அது வரையில் பரபரப்பாக இருந்த சூழ்நிலையில் நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டதால் ஏதோ வெறிச்சோடினாற் போல் இருந்தது. டில்லியின் குளிர் வெண்மையான பனித்திரையை போர்த்திக் கொண்டிருந்தது.

''என்ன? தனியாக உட்கார்ந்திருக்கீங்களே?'' கார்த்திகேயனின் கேள்விக்கு கண்களைத் திறந்து பார்த்தார் விவேகாநந்தன். ''நீயா! வா... உட்காரு.''

''ரொம்ப களைப்படைந்து விட்டீர்கள் போலிருக்கு.''

''என்ன பெரிய காரியத்தைச் செய்து கிழித்து விட்டேன்?''

ஒரு வினாடி மௌனம்.

விவேகாநந்தன் சொன்னார். ''உன்னைப் பற்றி எல்லோரும் ரொம்ப உயர்வாக நினைத்துக் கொண்டு இருக்காங்க. அவர்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு தகுந்தாற் போல் இருக்கணும் உன் ஓவியம்.''

''இப்பவும் நீங்கள் அதே எண்ணத்தில்தான் இருக்கீங்களா? என் கையால் படம் போட வைத்துவிட வேண்டும் என்ற அபிப்பிராயம் இன்னும் இருக்கிறதா?''

அவர் புருவங்களை உயர்த்திக் கொண்டே ''இல்லை என்ற அபிப்பிராயம் உனக்கு ஏன் ஏற்பட்டது?'' என்று கேட்டார்.

''இதற்கு முன்பானால் அனுஜாவுக்காக என்று நினைத்துக் கொண்டிருந்தோம். இப்போ இனி அந்தத் தேவை இல்லையே?''

''அனுஜாவுக்காக தேவையில்லை. ஆனால் நீ படம் போடுவதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?''

கார்த்திகேயனுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. விவேகாநந்தன் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். ''எனக்கு இன்றைக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது கார்த்திகேயன்! நீ எனக்குச் செய்த உதவி கூட குறைந்தது ஒன்றுமில்லை. அதிர்ஷ்டவசமாக என் மகளுக்கு ஒன்றும் ஆகவில்லை. ஆனால் இப்பொழுது என் மகள் குணமாகிவிட்டதால் என் பணத்தைத் திருப்பித் தரச்

சொல்லி உன் மனைவியிடம் கேட்க மாட்டேன். அந்த நாற்பது லட்சமும் அவளிடமே இருக்கட்டும். அவள் வியாபாரத்தில் ஊன்றிக் கொண்ட பிறகு நாங்கள் அந்த விஷயத்தைப் பார்த்துக் கொள்கிறோம். நீ தொடர்ந்து படம் வரையணும். அதை நிறுத்தி விடாதே. அந்தத் தீவு எப்படியும் கொஞ்ச நாள் நம் சுவாதீனத்தில் இருக்கும். நீ தனியாகப் போ. உலகத்திலேயே தலை சிறந்த ஓவியத்தைத் தீட்டு. அனுஜாவிடம் எப்படிச் சொல்வது என்ற விஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ மட்டும் இதையெல்லாம் மறந்து விட்டு உன் வேலையில் ஈடுபடு. அனுஜா உன்னுடன் வர மாட்டாள். சரிதானே?''

கார்த்திகேயன் பேசுவதற்கு எதுவும் இல்லாமல் போய் விட்டது. அவன் அங்கிருந்து எழுந்து கொண்டு இருளில் கலந்து விட்டான்.

★

அவன் வாழ்க்கையில் மிக முக்கியமான, வேதனை மயமான அத்தியாயம் அது. டில்லியிலிருந்து அந்தமானுக்கு போய் கழித்த அந்தப் பதினைந்து நாட்கள்.

அது வேதனை கூட இல்லை, சூனியம். ஒரு காலத்தில் அவனே சொன்னான், தன்னுள் வெறுமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும், ஒரு கோடு கூட தன்னால் வரைய முடியவில்லை என்றும். இப்பொழுது அதையும் விட மோசமான நிலைக்கு வந்து சேர்ந்து விட்டான்.

அனுஜா மறுபடியும் கல்லூரியில் சேர்ந்து விட்டாளா இல்லையா என்று கூட அவனுக்குத் தெரியாது. அவன் மட்டும் தனியாக அந்தமானுக்கு வந்தான். அவள் தந்தை

என்ன சொன்னார் என்று கூட அவன் பொருட்படுத்த வில்லை.

எந்தக் கலைஞனுமே ஆரம்பத்தில் அன்று மலர்ந்த ரோஜா போல் இருப்பான். வெண்மையான பனியில் நனைந்து மெய் மறந்து போய் விட வேண்டும் என்று விரும்புவான். வெளி உலகத்தைப் பற்றி எதுவும் அவனுக்குத் தேவையில்லை. தன்னை சுற்றிலும் ஒரு கோட்டைக் கிழித்து கொண்டு தன் சின்ன சாம்ராஜ்ஜியத்திற்கு தானே ராஜாவாக இருப்பான்.

ஒரு காலத்தில் கார்த்திகேயன் அந்த நிலையில்தான் இருந்து வந்தான். இதயத்திலிருந்து பொங்கி வெளிவந்ததை எல்லாம் தூரிகையில் சிறைப்படுத்திவிடுவான். அது யாருக் காகவும் இல்லை. அவனுக்காகவே தான். பாராட்டுக்கள் கலைஞனுக்கு உற்சாகத்தை தரக்கூடியவை. ஆனால் ஸ்ரீகல்யாணி அவன் கலையை என்றுமே உணர்ந்து கொண்டதில்லை. அப்படிப்பட்ட நிலையில் வேறு ஒரு பெண் அவனுள் இருந்த கலைஞனை உணர்ந்து கொண்டு உற்சாகப்படுத்தினாள். ரத்தம் கொடுத்து ஓவியத்தை வரையச் செய்தாள். ஒழுக்கத்திற்கு மதிப்பு தந்து அவன் அவளிடமிருந்து விலகியே இருந்தான்.

ஆனால் துரதிர்ஷ்டம் என்னவென்றால் இது ஒழுக்கமா இல்லையா என்ற விஷயத்தை 'கலை' பார்க்காது. அதனுடைய தாகம் வேறு. அதுதான் அவனை நயையின்றி துன்புறுத்திக் கொண்டிருந்தது. அவன் அந்தரங்கத்தில் ஏதோ ஒரு மூலையில் அவளை விரும்பிக் கொண்டிருந்தான். ஒரு காதலியாகவோ, சிருங்காரத்திற் காகவோ அல்லாமல் இருக்கலாம். ஆனால் அவளுடைய நெருக்கம் அவனுக்குத் தேவை. ''யாருக்காக நான்

இதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறேன்?'' என்று ஒவ்வொரு மனிதனும் என்றாவது ஒரு நாள் நினைத்துக் கொள்வான். அப்படி நினைக்காவிட்டால் அது மனச்சாட்சியை ஏமாற்றிக் கொள்வது போல் ஆகும். அவன் அந்தச் சமயத்தில் அனுஜாவுக்காக அவ்வளவு தூரம் பரிதவிப்பதை யாராவது பழமைவாதிகள் குத்திக் காட்டினால், அவர்களுக்கு உண்மையான கலைஞனை பற்றி தெரியாது என்று அர்த்தம்.

அவன் கடற்கரையில் மணிக்கணக்காக உட்கார்ந்து கொண்டிருப்பான். வந்து போகும் அலைகளையே பார்த்துக் கொண்டிருப்பான். அந்தத் தீவில் யாரும் அவனுடன் பேசத் துணிய மாட்டார்கள்.

அவன் அவ்வாறு தனியாக சூரியோதயத்தையும், அஸ்தமனத்தையும் பார்த்துக் கொண்டே நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கும் போது பகல் பொழுது வருத்தத்துடன் கழியும், இருள் இரக்கத்தோடு சேதி விசாரிக்கும். அவனுக்குக் கடல் ஒன்றுதான் துணை.

அடிக்கடி ஸ்ரீகல்யாணியின் நினைவு வரும். சரிந்து விட்ட வியாபாரத்தை தூக்கி நிறுத்தச் செய்யும் முயற்சியில் மூழ்கிப் போய் விட்டிருப்பாள் அவள். அனுஜாவின் நினைவு வரும். ஏறக்குறைய புனர்ஜென்மம் இல்லையா? பழைய சிநேகிதிகளோடு சந்தோஷமாக கழித்துக் கொண்டிருப்பாளாய் இருக்கும். தண்ணீருக்காக தவித்துக் கொண்டிருந்தவனை எல்லோரும் விட்டு விட்டு போய் விட்டாற்போல் இருந்தது. அதற்குள் 'இதென்ன? நான் இப்படியெல்லாம் யோசிக்கிறேனே?' என்ற மனப் போராட்டம்.

அவ்வளவு மனப் போராட்டத்திற்கு இடையிலும் அவன் தன் கடமையை மறந்து விடவில்லை. அடிக்கடி படம் வரைய முயற்சி செய்தான். ஒரு கோடு கூட அவனால் போட முடியவில்லை. அன்றைக்கு எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் சரி. ஓரளவுக்காவது படம் போட வேண்டும் என்று நினைத்தான். அதற்குள் அவன் அங்கே வந்து பதினைந்து நாட்களாகி விட்டன.

மனதிலிருந்த யோசனைகளை எல்லாம் ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்து விட்டு, விரல் நுனியில் உறுதியை வரவழைத்துக் கொண்டு ஒரு மணி நேரம் வரைந்தான். கடைசியில் பார்த்த போது அவன் மனதைப் போலவே ஓவியம் தெளிவில்லாமல், குழப்பமாக இருந்தது.

துக்கம் தான் வந்தது. கேன்வாஸை உருவி கிழித்தெறிந்தான். காலியான ஃப்ரேம் அவனைப் பார்த்துப் பழித்தது. ஹாலை விட்டு வெளியே வந்தான். தொலைவில் கடல் இரக்கத்துடன் பார்த்தது. மணலில் நடந்தான். அந்த நேரத்தில் தன்னைப் போல் இந்த உலகத்திலேயே வேறு யாருமே தனியனாக இருக்க முடியாது என்று தோன்றியது. நாட்டைவிட்டு வெகு தொலைவில்... சுற்றிலும் கடல், தீவில் தனிமை. ஸ்ரீகல்யாணி கடைசியாக சொன்ன வார்த்தைகள் மனதை அம்பாக துளைத்தன. தனக்கு என்ன வேண்டும் என்று அவனுக்கே தெரியவில்லை தன்னால் ஏன் படம் போட முடியவில்லை என்றும் புரியவில்லை. இந்த அதிருப்தி ஏன் என்றும் அவனுக்கே தெரியவில்லை.

காதல் என்றால் அடுத்தவர் நாம் இல்லாத போது நம்மைப் பற்றியே ஒவ்வொரு நிமிஷமும் நினைத்துக் கொண்டிருப்பார் என்ற நம்பிக்கை. அந்த நம்பிக்கை போய் விட்டால் பிறகு எல்லாமே வேதனைதான்.

ஒரு நாள் அவ்வாறு சுற்றிச் சுற்றி களைத்துப் போய் நள்ளிரவில் பங்களாவுக்குத் திரும்பி வந்தான். ஆச்சரியமாக இருந்தது. தூக்கக் கலக்கத்துடன் சாய்ந்தாடும் சமையல் காரனைக் காணவில்லை. ஒரு புதிய ஒளி அந்த இடமெல்லாம் பரவியிருப்பது போல் இருந்தது.

''அம்மா வந்திருக்காங்க சாப்'' என்றான் கூர்க்கா.

31

''இதென்ன? இப்படி மாறி விட்டீங்களே?''

அவன் சிரிக்க முயன்றபடி ''நன்றாகத்தானே இருக்கிறேன் அனுஜா'' என்றான்.

''இல்லை. உங்களிடம் மாறுபாடு நன்றாக தெரிகிறது. இதுவரை போட்ட படத்தைக் கூட கிழித் தெறிந்து விட்டீர்களாமே.''

''ஆமாம். எனக்கே பிடிக்காமல் கிழித்துப் போட்டு விட்டேன். அது கிடக்கட்டும். இதென்ன? நீ இப்படி சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கிறாயே?'' பேச்சை மாற்றினான்.

அவள் சிரித்தாள். ''அப்பா வெளிநாட்டுக்குப் போயிருக்கிறார். அதான் இப்படி வந்தேன். இன்றைக்கு கார்த்திகை பௌர்ணமி. எது எப்படி இருந்தாலும் நீங்கள் படம் போட்டு முடிக்க வேண்டும்.''

''ஒரே நாளிலேயா?''

''ஒரு நாளில் முடியாவிட்டால் ஒரு மாதம்! அடுத்த பௌர்ணமிக்குள். ஏன்? சிம்லாவில் ஒரே நாளில் வரைய

வில்லையா? முதலில் தொடக்கம் என்ற ஒன்று வேண்டாமா? அது சரி. உங்கள் அறையை நான் மாற்றி விட்டேன். இவ்வளவு நாட்களாக நீங்கள் படம் போடாமல் போனதற்கு காரணம் அந்த அறைதான் என்று தோன்றியது. வாங்க... புது இடத்தைக் காட்டுகிறேன்'' என்று மாடிக்கு அழைத்துச் சென்றாள். அவன் அவளைப் பின் தொடர்ந்தான். உண்மையிலேயே அந்த அறை ரொம்ப நேர்த்தியாக, உற்சாகம் ஊட்டும் விதமாக இருந்தது. ஜன்னலைத் திறந்தால் கடல் தெரிந்தது. ஜன்னல் திரைச் சீலையிலிருந்து ஒவ்வொரு பொருளும் அவ்வறையில் அமைக்கப்பட்டிருந்த விதம் ஒரு கலைஞனை உற்சாகப் படுத்தும் விதமாக இருந்தது.

''நீங்கள் படத்தை போட்டு முடிக்கும் வரையில் இந்த அறையை விட்டு வெளியே வரக் கூடாது. எல்லா வற்றையும் இங்கேயே அனுப்பச் சொல்லிவிட்டேன் வேலைக்காரர்களிடம். அது மட்டுமே இல்லை. நீங்கள் படம் போட்டு முடிக்கும் வரையில் நான் உங்களுடன் பேசப் போவதில்லை.''

''அனுஜா! இதெல்லாம்...'' அவன் கலவரத்துடன் ஏதோ சொல்லப் போன பொழுது அவள் ஆள்காட்டி விரலை உதட்டின் மீது வைத்து 'இனி பேச மாட்டேன்' என்பது போல் ஜாடைகாட்டி விட்டு நாக்கை நீட்டி அழகு காட்டி விட்டு போய் விட்டாள்.

அவன் நாற்காலியில் சரிந்தான். ஸ்டாண்டும், காலியான கேன்வாஸும் அவன் உத்தரவுக்காக காத்திருக்கும் வேலைக்காரர்களை போல் காத்திருந்தன. அவன் தூரிகையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

பிகாஸோ புருவத்தை உயர்த்தி தன்னை பார்த்து 'எந்தத் தைரியத்தில் உலகப் புகழ் பெறப் போகும்

ஓவியத்தை வரையப் போகிறாய்?' என்று கேட்டாற்போல் தோன்றியது.

சலிப்புடன் தூரிகையை வீசியெறிந்து விட்டு வந்து உட்கார்ந்து கொண்டான். கேசங்களில் விரல்களை அளைய விட்டுக் கொண்டு ஏமாற்றத்துடன் கண்களை மூடிக் கொண்டான்.

அனுஜா அவனுடைய ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டிருந்ததை அவன் அறியான். அவனை இரக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். அவன் அவ்வாறு எவ்வளவு நேரம்தான் இருந்தானோ அவனுக்கே தெரியாது. சூரியன் அஸ்தமித்து இருள் சூழ்ந்து கொண்டதைக் கூட அறியவில்லை. குழந்தையின் அழுகையை கேட்டு விட்டு என்ன செய்வது என்று அறியாமல் துடிக்கும் தாயைப் போல் அவள் தவிதவித்துப் போனாள்.

அந்தச் சமயத்தில் மின்னல் ஒன்று மின்னியது.

அவன் அவ்வாறு ஆடாமல் அசையாமல் சமாதியில் ஆழ்ந்திருப்பது போல் உட்கார்ந்திருந்த போது மெதுவாக கதவு திறந்து கொண்டது. நிலா மேலே எழும்பி வந்ததுமே ஜன்னல் வழியாக வெளிச்சம் உள்ளே பாய்ந்தாற்போல் ஒளி அந்த அறைக்குள் பரவியது. அவன் நிமிர்ந்து பார்த்தான். நிலா வெளிச்சத்தின் நடுவில் அவள் நின்று கொண் டிருந்தாள். அவன் கண்கள் வியப்பால் விரிந்தன.

அவள் உடம்பில் மெல்லிய ஆடை ஒன்று மட்டுமே இருந்தது. அவள் மேனியின் தங்க நிறம் அந்த மங்கலான வெளிச்சத்தில் பிரகாசமாக மினு மினுத்துக் கொண் டிருந்தது. நிலவின் ஒளி அவள் மேனியில் பட்டு மந்தாகினியாக உருகி வழிந்து கொண்டிருந்தது.

அவன் தூரிகையைக் கையில் எடுத்துக் கொண்டான். அவளை தலை முதல் கால் வரையில் ஒரு முறை கூர்ந்து பார்த்தான். அந்தப் பார்வை கேன்வாஸின்மீது தூரிகையால் நிதானமாக கோடு இழுத்தாற் போல் இருந்தது. அவள் லேசாக நடுங்கினாள். என்ன இருந்தாலும் பெண் இல்லையா!

அவன் அவள் அழகை சரியான கோணத்தில் பிடித்துக் கொள்வதற்காக தலையைச் சாய்த்து அப்படியும் இப்படியுமாக திரும்பி அவளைப் பார்த்தான். குளிர்ந்த கடலுக்கடியில் எங்கேயோ எரிமலை வெடித்தாற் போல் அழகான சங்கடம்.

அவன் தூரிகையை வர்ணத்தில் தோய்த்தான். அவன் கோடுகளைக் கிழித்து அளவுகளை சரி பார்த்துக் கொள்ள வில்லை. ஒரேயடியாக வர்ணத்தோடு தொடங்கி விட்டான். அவன் இந்த உலகத்திலேயே இல்லை. அந்தப் புருவங்களைத் தீற்றி முடிக்க அவனுக்கு இரண்டு மணி நேரம் பிடித்தது. அவள் அப்படியே நின்று கொண் டிருந்தாள். கலைத்தாயின் கால்களுக்கு பராணி இட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் ஒரு முனிவரைப் போல் தோன்றினான் அவளுக்கு.

கவனம் பிசகாத நிலையில் அவள் லேசாக அசையும் சத்தத்தைக் கூட தன் ஓவியத்தில் பதிவு செய்து கொண் டிருந்தான். அந்த கவனம் ஒன்றிப் போய் விட்ட பிறகு அவன் அவளைப் பார்க்கவில்லை.

கண்ணிமைகளிலிருந்து கால் நகம் வரையில் தன் உருவம் அவன் மனதில் பதிந்து போய் விட்டதை அவள் உணர்ந்து கொண்டாள். இனி தான் நிற்க வேண்டிய தேவையில்லை என்றும் புரிந்து கொண்டாள். அவன்

எங்கும் திரும்பாமல் அவள் அழகைச் செதுக்கிக் கொண்டிருந்தான். அவள் அவன் கவனத்திற்கு பங்கம் விளைவிக்கவில்லை. தொலைவிலிருந்தே மௌனமாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு வேண்டியதை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். அவன் நிமிர்ந்து கூட பார்க்க மாட்டான். அவன் தாடி வளர்ந்தது. கண்கள் குழி விழுந்தன.

கலையானது அழிவில்லாதது. வாழ்க்கை அழியக் கூடியது என்று நினைத்தான் அவன். தான் சாசுவதம் இல்லை. அனுஜாவின் மீது தனக்கு இருக்கும் அன்பும் நிரந்தரமானது அல்ல. இந்த ஓவியம் ஒன்றுதான் சாசுவதம்.

அவனுக்கு அளவில்லாத திருப்தி ஏற்பட்டது. வேதனையும் ஏற்பட்டது. திருப்தியிலிருந்து உண்டாகும் வேதனையைப் பற்றி வேதாந்திகளுக்கு மட்டும்தான் தெரியும். அந்த ஓவியம் வரைந்ததன் மூலம் அவன் வேதாந்தியாகி விட்டான். ஓவியம் முடிந்ததும் அவனுக்குத் தாங்க முடியாத சந்தோஷத்துடன் துக்கமும் ஏற்பட்டது.

அவன் அந்த நிலையில் இருந்த போது அவள் அறைக்குள் நுழைந்தாள். அந்த ஓவியத்தைப் பார்த்து விட்டு அவள் கண்கள் அளவில்லாத ஆச்சரியத்துடன் அகல விரிந்தன. 'ஆஹ்!' என்ற சத்தம் தன்னை அறியாமல் அவள் வாயிலிருந்து வெளிவந்தது. அவன் எழுந்து நின்றான். கண்ணீர் திரையிட்ட கண்களுக்கு அவள் மங்கலாக தெரிந்தாள். அந்த அன்பில் அவள் கரைந்து போனாள்.

அவனை நெருங்கி வந்தாள். உயிருக்குத் துணிந்து மலை மீது ஏறிக் கொண்டிருக்கும் ஒரு ஜோடி, அந்த வெற்றியை சிகரத்தின் உச்சியில் எந்த விதமாக பாராட்டிக் கொள்வார்களோ அது போன்ற உத்வேகம் அவளிடம் தென்பட்டது.

இன்னும் நெருங்கி வந்தாள். இவ்வளவு நாட்களாக அவன் பால் தனக்கு இருந்த வந்த அன்பை வெறும் வார்த்தைகள் மூலமாகத்தான் வெளிப்படுத்தி வந்தாள். கட்டுப்பாடு என்ற அணைக்கட்டை தனக்குத் தானே போட்டுக் கொண்டாள்.

இப்பொழுது அவள் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போது ஒவ்வொரு அணைக் கட்டாக உடைந்து கொண்டிருந்தது.

ஒரே பாய்ச்சலாக ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டாள். அவன் அவள் கழுத்து வளைவில் தலையை சாய்த்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான். இவ்வளவு நாட்களாக தன் வேதனைக்கு அர்த்தம் தெரிந்து விட்டது. மலைக் குகையில் முனிவர்களுக்கு கிடைக்கும் அமைதி அவனுக்கு அவளுடைய கழுத்து வளைவில் கிடைத்தது. அவன் மூச்சுக் காற்று அவள் கன்னங்களில் உஷ்ணமாக பட்டது. அவன் அவளை விட்டுப் பின்னுக்கு நகர்ந்து கொள்ளப் போனான். அவள் பார்வை அவனைக் கட்டிப் போட்டது. முதுகில் கையை போட்டு அவளை தன்னோடு அணைத்துக் கொண்டான். அவனை தன் இதயத்திற்குள் வரவேற்பது போல் அவள் கைகளை நீட்டினாள்.

அந்த நேரத்தில் அவள் கழுத்தில் சங்கிலியை பார்த்த பொழுது திருமாங்கல்யம் நினைவுக்கு வந்தது. மின்னல் வேகத்தில் சட்டென்று பின்னால் நகர்ந்து கொண்டான். அவள் நிமிர்ந்து பார்த்த பொழுது அவன் ஜீவன் இல்லாமல் தொலைவில் தளர்ந்து போய் தென்பட்டான். அவள் மெதுவாக எழுந்து போய் அவன் காலடியில் உட்கார்ந்து கொண்டு மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

அவன் அவள் தலை மீது கையை வைத்து ''என்னை மன்னித்து விடு'' என்றான்.

''எதுக்கு?'' அவள் நிமிர்ந்து பார்க்காமலேயே உணர்ச்சியற்ற குரலில் கேட்டாள்.

''நான் உன்னிடம் எப்படி சொல்லுவேன்? இவ்வளவு நாளாக உனக்குத் தெரியப்படுத்த முடியாமல் இருந்தது எனக்கே வெட்கமாக இருக்கு.''

''எதைப்பற்றி?''

''அனுஜா! எனக்குத் திருமணம் முடிந்து விட்டது. நான் உன்னிடம் சிம்லாவில் சொன்னது உண்மைதான். நான் திருமணம் ஆனவன் என்ற விஷயம் உங்க அப்பாவுக்குக் கூட தெரியும். என் மனைவியின் பெயர் ஸ்ரீகல்யாணி.''

அவள் சுருக்கமாக ''தெரியும்'' என்றாள்.

அவன் திடுக்கிட்டு குழப்பத்துடன் அவளைப் பார்த்தான்.

அவள் தலை குனிந்தபடி சொன்னாள். ''ஆமாம். அப்பா சொன்னார்.''

அவனால் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீள முடியவில்லை. அவள் மேலும் தொடர்ந்தாள். ''முதலில் நீங்கள் சொன்னதெல்லாம் கட்டுக்கதை என்றுதான் நினைத்தேன். நான் ஷோலே சினிமா கதை போல் சொன்னால் அதற்கு இணையாக வேறொரு கதையை புனைந்து சொல்கிறீர்கள் என்று எண்ணியிருந்தேன். நானும் அப்பாவும் ஆஸ்பத்திரிக்கு போன அன்று நான் என் காதல் விஷயத்தை அப்பாவிடம் சொன்னேன். அப்பொழுது

அவர் எனக்கு ஹார்ட்கின்ஸ் நோய் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தார். சாகப் போகும் மகளுக்காக அவர் ஐம்பது லட்சங்கள் செலவழிக்கப் போகிறார் என்று எனக்குத் தெரியாது. நான் அப்பாவிடம் கேட்டது இந்த அந்தமான் நீவையும், இந்த சொகுசையும் அல்ல. நான் உங்களை எந்த அளவுக்குக் காதலிக்கிறேன் என்றும், நம் அறிமுகம் எப்படிப் பட்டது என்றும், சிம்லாவில் நீங்கள் ரத்தத்தால் படம் போட்ட கதை... எல்லாவற்றையும் சொன்னேன். 'அப்படி என்றால் அவனைக் கொண்டு இன்னொரு படத்தை போட வைத்து விடுவதாக வாக்குறுதி வாங்கிக் கொண்டு இருக்கிறாய் என்று சொல்லு' என்றார் அப்பா. 'ஆமாம். அந்த யோசனை எனக்கு என்றோ தோன்றி விட்டது. சிம்லாவில் இறந்து போவது போல் நடித்த பொழுது உறுதி மொழி வாங்கிக் கொண்டேன்' என்று சொன்னேன். அந்த வெற்றியை சாதித்துக் கொண்ட பிறகு கல்யாணம் ஆனால் நன்றாக இருக்கும் என்று அப்பா சொன்ன போது எனக்கும் நல்ல யோசனை என்று தோன்றியது. ஆனால் அவருடைய யோசனை வேறு என்றும், என் திருமணத்தை என் மரணத்திற்கு அந்த பக்கமாக தள்ளி விட முயற்சி செய்து கொண்டிருக்கிறார் என்றும் எனக்குத் தெரியாது. என் சந்தோஷத்திற்காக நீங்க இருவரும் மௌனமாக இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதெல்லாம் என் மீது இருக்கும் அன்பு என்று நினைத்து பூரித்துப் போய் விட்டேன்'' என்று நிறுத்தி விட்டு மீண்டும் சொன்னாள்.

''ஆனால் எனக்கு எந்த நோயும் இல்லை என்று தெரிந்ததும் அப்பாவின் போக்கு மாறிவிட்டது. நான் இங்கே உங்களிடம் வருவதற்குக் கூட சம்மதிக்கவில்லை. நான் அப்பாவிடம் நன்றாக சண்டை போட்டேன்.

அப்பொழுது தான் அவர் உண்மையைச் சொன்னார், உங்களுக்குத் திருமணம் ஆகி விட்டதென்று.'' தாங்க முடியாத வேதனை எல்லாம் முதலிலேயே தாங்கிக் கொண்டு விட்டாற்போல் அவள் குரல் பிசிறின்றி ஒலித்தது.

''இந்த உலகத்தில் தன்னலமில்லாத ஒரே ஒரு செயல் 'காதல்'. ஒன்பது மாதங்கள் வயிற்றில் வளர்ந்து கொண் டிருக்கும் குழந்தையின் பால் அன்பை வளர்த்துக் கொண் டிருக்கும் தாய், அக்குழந்தை ஊனத்தோடு பிறந்து விட்டால் அன்பைக் கொன்று போட்டு விடமாட்டாள். இன்னும் அதிக அன்போடு, பரிவோடு அந்தக் குழந்தையை மார்போடு அணைத்துக் கொள்வாள்.''

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாமல் அவன் அவளைப் பார்த்தான். அவள் தலை குனிந்தபடி சொல்லிக் கொண்டிருந்தாள். ''இந்த விஷயம் தெரிந்ததும் நான் திக்பிரமை அடைந்து விட்டேன். உங்களுக்கு திருமணம் ஆகி விட்டது என்று தெரிந்ததால் அல்ல. உங்கள் மனைவியைப் பற்றிய விஷயம் தெரிந்து. எத்தனையோ இரவுகள் எனக்குள் நான் குமுறிக் கொண்டிருந்தேன். எனக்காக இல்லை மித்ராஜீ, உங்களுக்காக! கலைஞர் களுக்கு ரிலாக்ஸேஷன் எப்படி கிடைக்கும் என்று எனக்குத் தெரியும். நெருங்கியவர்களிடமிருந்து பாராட்டுக்கள் வேண்டும். பூக்கள், காற்று, செடி கொடிகள் இவை யெல்லாம் கூட தூண்டுகோலாக இருக்கும் போது உடல் சுவாதீனம் இல்லாத காரணத்தினால் ஊக்கம் தர முடியாமல் போனால் அது போன்ற துரதிர்ஷ்டம் வேறு இல்லை. மன்னியுங்கள். மற்றவர்ளைப் பற்றிப் பேசும் அருகதை எனக்கு இல்லை. உங்களுடைய நிலைமையைப் பற்றி என்னுடைய உணர்வுகளைச் சொல்கிறேன். அவ்வளவு தான்.''

''காதல் இரக்கத்தின் மூலம் பிறக்காது.'' கடுமையான குரலில் சொன்னான்.

''நான் அதைச் சொல்லவில்லை. ஒரு அபூர்வ படைப்பிற்காக இரவுபம் பகலும் பாடுபட்டு அந்தப் போராட்டம் முடிவடைந்து வெற்றியை சாதித்த பிறகு கலைஞனுக்குப் பூரணமான ஓய்வு கிடைத்தால் தவிர இன்னொரு போருக்குத் தயாராக முடியாது என்று சொல்கிறேன். கலைஞன் தன் வேலையில் ஆழ்ந்து போய் நிரந்தர போராட்டத்திற்கு ஆளாகும் போது உடலளவிலும், மனதளவிலும் எஜாக்யுலேஷன்ஸ் இல்லாவிட்டால் உன்மத்தனாகி விடுவானாம்.''

கார்த்திகேயனின் முகம் சிவந்துவிட்டது. ''நான் அதற்காக ஒன்றும் தரம் தாழ்ந்து போய் விடவில்லை'' என்றான், கோபத்தை அடக்கிக் கொண்டு.

''தரம் தாழ்ந்து போகவில்லை உண்மைதான். உங்களைச் சுற்றிலும் உள்ள ஒழுக்கம் என்ற கோட்டை அவ்வளவு உறுதியாக இருக்கிறது. ஆனால் நான் இங்கே வந்து பார்த்த போது இருந்த நிலைமை என்ன? நீங்கள் ஒரு பாழடைந்த கோவிலில் இருந்தீர்கள். அதை மறுக்க முடியுமா உங்களால்?''

அவன் பதில் பேசவில்லை.

அவள் சொன்னாள். ''உங்களைத் தூண்டி விட முயன்று நானே தூண்டப்பட்டு விட்டேன். உங்கள் அன்பு என் மனதை என்றோ தொட்டு விட்டது. இப்பொழுது உங்கள் பார்வை தொட்டு விட்ட இந்த உடம்பு கூட உங்களுடையது தான் என்று நினைக்கிறேன். நான் நினைப்பதில் என்ன தவறு?''

அவன் சரேலென்று நிமிர்ந்தான். ''நீ என்ன பேசுகிறாய் என்று உனக்குப் புரிகிறதா?''

''நுட்பமான இது போன்ற விஷயங்களைப் பற்றி வெளிப்படையாக பேச வேண்டிய நிலைமை வந்தது துரதிர்ஷ்டம்தான்'' என்றாள்.

''காதலிப்பதற்கு எதிராளியிடம் சில தகுதிகள் இருக்க வேண்டும்.''

''உங்களுக்கு திருமணம் ஆகியிருப்பது தகுதி யின்மையா?'' அவள் நிமிர்ந்து பார்த்தாள். ''ஒரு தாய் தன் வயிற்றில் இருக்கும் குழந்தையை நேசிக்க வேண்டும் என்றால், எது போன்ற தகுதிகளுடன் பிறக்குமோ முதலில் ஸ்கேனிங் செய்து கொள்ளணும். அப்படித்தானே?''

''அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தம் இருக்கு. சரியாக வருமோ வராதோ என்று கணக்கு போட்டு செயல்படுவது காதல் இல்லை. முற்றுப்புள்ளி எங்கே இருக்குமோ தெரியாத வாக்கியத்தின் முதல் எழுத்துத்தான் காதல்.''

''இது போன்ற வார்த்தை ஜாலங்கள் நமக்கு நாமே சமாதானம் செய்து கொள்ள பயன்படுமே தவிர வேறு எதற்கும் பயன்படப் போவதில்லை.''

''அப்படி என்றால் உங்கள் மீது எனக்கு இருப்பது காதல் இல்லை என்று சொல்றீங்களா?''

''உன்னைப் பற்றி நான் என்ன சொல்ல முடியும்?''

''என்னைப் பற்றி சொல்ல முடியவில்லை என்றால் உங்களைப் பற்றி சொல்லுங்கள்.'' உங்கள் என்ற வார்த்தையை அழுத்திச் சொன்னாள்.

அவன் புருவங்கள் முடிச்சிட்டுக் கொண்டன.

''உங்களுக்கு என் மீது காதல் இல்லையா?'' அழுத்தமான குரலில் கேட்டாள்.

''பிரியம் இருக்கிறது.''

அவள் சட்டென்று அருகில் வந்து அவன் கையை எடுத்துத் தன் தலைமீது வைத்துக் கொண்டு ''சொல்லுங்கள். நீங்கள் என்னைக் காதலிக்கவில்லை என்று'' என்றாள்.

இந்தத் திடீர் செய்கைக்கு அவன் திகைப்படைந்தான். அவள் தலைமீது இருந்த கையை எடுத்து விட்டு ''வேண்டாம் அனுஜா! என்னை சங்கடத்தில் ஆழ்த்தாதே. எதையும் யோசிக்கும் நிலையில் நான் இல்லை. யோசிக்கவும் விருப்பம் இல்லை'' என்றான்.

''எனக்கு பதில் வேண்டும்.''

''எனக்குத் தெரியாது.''

''இல்லை. உங்களுக்குத் தெரியும். தப்பித்துக் கொள்ள பார்க்கிறீங்க.''

அவன் மெதுவாக நிமிர்ந்தான். அவன் முகம் கடினமாக மாறியது. தன் உணர்ச்சிகளை எல்லாம் திரட்டிக் கொண்டு ஒருவிதமான வைராக்கியத்துடன் சொன்னான். ''என் மனைவியின் உடல் நலக் குறைவு பற்றியோ, எங்கள் இருவரின் மன நெருக்கத்தைப் பற்றியோ வேறு யாரோடும் வாதாடுவது எனக்குப் பிடிக்கவில்லை. அவள்பால் நான் நேர்மையுடன் இருப்பதற்கும், அன்பை காட்டுவதற்கும் அவள் என் மனைவி என்ற ஒரே தகுதி போதும்.'' தெளிவாக, உறுதியாக சொன்னான்.

அவனிடம் அவ்வளவு கடுமையை அதற்கு முன்னால் பார்த்திராத அனுஜா, ''மன்னியுங்கள். உங்கள் மனதைக் காயப்படுத்திவிட்டேன்'' என்று அங்கிருந்து நகரப் போனாள்.

அவன் நொந்து கொண்டே ''அனுஜா!'' என்றான். அவள் நின்றாள். ''இதெல்லாம் நான் எனக்காக அல்ல, உனக்காக சொல்கிறேன். புரிந்து கொள்'' என்றான்.

''நான் என்ன செய்யணும் என்பது உங்கள் உத்தேசம்?''

''கூடிய சீக்கிரத்தில் இதையெல்லாம் மறந்து போய் திருமணம் செய்து கொள்.''

''அதனால் உங்களுக்கு என்ன லாபம்?'' அவன் பக்கம் திரும்பாமலேயே கேட்டாள்.

அவன் அடியுண்டவனாக ''அனுஜா!'' என்றான்.

''கூட்டு நன்றாக இல்லை என்றால் அதை விட்டு விட்டு பொரியல் சாப்பிடுவதற்கு இதொன்றும் விருந்து இல்லை, காதல்.''

''ஆனால்...''

அவன் வார்த்தைகள் முடிவதற்குள்ளாகவே அவள் குறுக்கிட்டாள். ''உங்கள் ஒழுக்கக் கட்டுப்பாடு உங்களுக்குத் தடை விதிக்கலாம். ஆனால் உங்களைத் தொந்தரவு செய்யாமல் என்னுள் நான் உங்களைக் காதலித்துக் கொண்டிருந்தால் உங்களுக்கு ஆட்சேபணை இருக்காது என்று நினைக்கிறேன்.''

''எத்தனை நாட்களுக்கு இப்படி...''

''என் காதலில் நேர்மை இருக்கும் வரை.''

''ஆனால் நீ...'' அவன் ஏதோ சொல்லப் போன பொழுது அவள் நிமிர்ந்தாள். ''உங்கள் இருவரையும் பற்றி மற்றவர்களுடன் வாதாடுவது உங்களுக்கு எப்படிப்

பிடிக்காதோ, அதே போல் என் மீது யாராவது இரக்கம் காட்டினாலும் எனக்குப் பிடிக்காது.''

அவனுக்கு சாட்டையால் அடித்தாற் போல் இருந்தது.

அவள் அவனை பொருட்படுத்தாமல் மேலும் சொன்னாள். ''எந்த சுகமும் இல்லாவிட்டாலும் உங்கள் மனைவியுடன் நீங்கள் சேர்ந்திருப்பது உங்கள் கண்ணோட்டத்தில் மனிதப் பண்பு என்றால், என் சுகத்திற்காகக் காதலை துறந்து வேறு நபரை மணப்பது என் கண்ணோட்டத்தில் மானசீக விபச்சாரம்.''

''அனுஜா!'' உரத்த குரலில் கத்தினான்.

அவள் நிறுத்தவில்லை. ''நிரந்தர தியாகத்தால் சந்தோஷத்தை அடையும் நீங்கள், எல்லையில்லாத காதலில் மகிழ்ச்சி அடையும் என்னை வேண்டாம் என்று தடுப்பானேன்? நான் எதையோ இழக்கப் போகிறேன் என்று எல்லாவற்றையும் இழந்து விட்ட உங்களால் எப்படி சொல்ல முடியும்?''

அவன் உடனே பதில் சொல்லவில்லை. அருகில் சென்று பரிவோடு தோள் மீது கையை வைத்தான். ''உன்னிடம் இவ்வளவு கோபமும் ஆத்திரமும் நன்றாகவே இல்லை அனுஜா! நீ குறும்புப் பெண்ணாக இருப்பது தான் அழகு. நீ இவ்வாறு இருந்தால் இனி நான் வாழ்நாள் முழுவதும் துக்கத்தை அனுபவித்துக் கொண்டே தான் இருக்க வேண்டியிருக்கும். உன் காதலை தொடக்கத்திலேயே கிள்ளி எறிந்து விடாமல், பார்த்தும் பார்க்காதது போல் சும்மாயிருந்து விட்டேனே என்ற குற்ற உணர்ச்சி என் மனதை துளைத்தெடுக்கிறது. குறைந்த பட்சம் எனக்காகவாவது உன் எதிர்காலத்தை நன்றாக அமைத்துக் கொள்.''

அவள் அவன் கண்களை கூர்ந்து பார்த்துக் கொண்டே ''என் எதிர்காலம் நன்றாக இருப்பது ஒன்றுதானே உங்களுக்கு வேண்டியது'' என்றாள்.

''ஆமாம்.''

அவள் ஈர விழிகளுக்கு பின்னால் குறும்புச் சிரிப்பு. ''உங்கள் மனைவிக்குத் தெரியாமல் நாம் இருவரும் சேர்ந்து வாழ்ந்தால்... என் எதிர்காலம் முழுவதும்...''

''அனுஜா! பரிகாசம் செய்ய இது சமயம் இல்லை.''

''யாருக்கும் தொந்தரவு தராமல் நாம் சந்தோஷமாக இருப்பதில் தவறென்ன இருக்கும்?''

''நீ என்ன பேசுகிறாய் என்று உனக்கே புரிகிறதா? மகாராணியாக வாழ வேண்டிய நீ, உன் எதிர்காலத்தை இவ்வாறு திருட்டு வாழ்க்கையாக அமைத்துக் கொள்ளப் போகிறாயா?''

''இது ஒழுக்கம், இது ஒழுக்கக் கேடு என்று தீர்மானிப்பது எது?''

''தர்மம்.''

''அதை யார் அமைத்தார்கள்?''

''கடவுள்.''

சட்டென்று துக்கம் வெடித்தது அவளிடம். ''கடவுள்! தர்மம்! அந்தக் கடவுளின் தர்மம்தான் என்ன? காதல் முற்றிலும் நிறைவேறுவதற்குள்ளாகவே அதை நாசமாக்கு வதுதான் கடவுளின் தர்மமா? வாழ்க்கை முற்றிலுமாக மலர்வதற்கு முன்பே திருப்பி அழைத்துக் கொண்டு விடுவது தான் கடவுளின் தர்மமா?''

மின்னல்களோடு கடல் மீது மழை பேரிரைச்சலோடு தொடங்கிவிட்டது. மின்னல் வெளிச்சம் பளிச் பளிச்சென்று அவள் முகத்தின் மீது பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

ஏதோ சிறிய சந்தேகம் இதயத்தில் தீப்பொறியாக பற்றிக் கொள்ளவே நாக்கு உலர அவன் கேட்டான். ''அனுஜா! என்ன சொல்கிறாய் நீ?''

''என் எதிர் காலத்தைப் பற்றி.'' அவள் யோசனைகள் அன்றைக்கு நடந்த சம்பவத்தை நோக்கிச் சென்றன.

★

''இன்றைக்கு டில்லியில்...

''அசம்பவம்!'' என்றார் டாக்டர் பரத்வாஜ். அவர் முகம் சிவந்து விட்டிருந்தது.

''ஆமாம் டாக்டர்! என் மகள் இதே நோயுள்ள இன்னொரு நோயாளியின் பிளட் ரிப்போர்ட்டை மாற்றி விட்டாளாம்.'' விவேகாநந்தன் தன் மகளை சுட்டிக் காட்டினார்.

பரத்வாஜ் என்ன பேசுவதென்று தெரியாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார். அனுஜா நொந்து கொண்டே சொன்னாள்.

''மன்னியுங்கள் டாக்டர்! இது இவ்வளவு சீரியஸாகி என்னை சேர்ந்தவர்களை எல்லாம் வருத்தப்படுத்தும் என்று நினைக்கவில்லை'' என்றாள்.

பரத்வாஜ் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டார். ''என்னோடு வாங்க'' என்று அனுஜாவை உள்ளே அழைத்துச் சென்றார்.

அவளுடைய ரத்தத்தை எடுத்து மற்றொரு முறை பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். அங்கிருந்து ரிகார்டு ரூமுக்குப் போய் பைலை கொண்டு வந்தார். அதற்குப் பிறகு ரிபோர்ட்டுகள் மேலிருந்த பெயர்களை பரிசோதித்தார். சுஜாதா என்ற பைலில் அனுஜாவின் பிளட் ரிப்போர்ட் இருந்தது. ரிப்போர்ட்டுகள் மாறியிருந்த விஷயம் உண்மைதான். ஆனால்...

அனுஜா அவருடைய குழப்பத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பைலில் இருந்த மற்ற காகிதங்களை எடுத்தார் டாக்டர் பரத்வாஜ்.

ரத்தப் பரிசோதனை ரிப்போர்ட்டுகளோடு இணைக்கப்பட்டே இருந்தன அந்தக் காகிதங்கள். அவற்றை பரிசோதித்துக் கொண்டிருந்தார். அதற்குள் அப்பொழுது தான் எடுத்த புதிய ரிப்போர்ட்டும் வந்தது. அவற்றை பார்த்துக் கொண்டே நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டு ''அப்படிச் சொல்லு'' என்றார். அவர் முகம் இப்பொழுது தெளிவாக இருந்தது.

''என்ன நடந்தது டாக்டர்?'' அனுஜா கேட்டாள்.

''அன்றைக்கு உங்களுடைய பிளட் ரிப்போர்ட் வந்த போது நான் ரொம்பவும் கலவரம் அடைந்தேன். நினைவு இருக்கிறதா?''

அவளுக்கு நினைவு இல்லை. ரிப்போர்ட்டுகளை மாற்றிவிட்ட உற்சாகத்தில் இருந்தாள் அன்று.

டாக்டர் மேலும் சொன்னார். ''போன தடவை உங்க ரிப்போர்ட்டை பார்த்ததும் 'வாங்க உங்கள் பரிசோதனை களை நானே சுயமாக செய்கிறேன்' என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனேன்.''

''ஆமாம். மற்ற பரிசோதனைகளை நீங்களே செய்தீங்க. நினைவு இருக்கு.''

''நான் பார்த்தது உங்களுடைய ரிப்போர்ட்தான். நீங்கள் ரிப்போர்ட்டுகளை மாற்றியது நான் உங்கள் மற்ற பரிசோதனைகள் அத்தனையும் செய்து முடித்து விட்டு கொண்டு வந்த பிறகு'' என்றார், எல்லா விஷயமும் சுலபமாக முடிந்து போய் விட்டாற்போல். ''ஆமாம் அனுஜா! உங்கள் ரத்தத்தில் ஹாட்கின்ஸ் லட்சணங்கள் இருக்கின்றன. அதனால்தான் உங்கள் மற்ற பரிசோதனை கள் அனைத்தையும் நானே சுயமாக செய்தேன்.''

பெரிய க்ளோரோஃபாம் சிலிண்டர் வெடித்து அவ்வறையெல்லாம் திடீரென்று குளிர்ந்து விட்டாற் போன்ற உணர்வு. அதுவரை அவள் விரல்களுக்கு இடையே நர்த்தனம் புரிந்து கொண்டிருந்த காகிதம் அவளை அறியாமலேயே நழுவி விழுந்தது. இனி எல்லாம் நிசப்தம் தான்.

பரத்வாஜ் ஃபைலை முன்னுக்கு இழுத்துக் கொண்டார். ''ஹாட்கின்ஸ் நோய்க்கு முக்கியமாக பரிசோதனை செய்ய வேண்டியவை 'கிளாண்டுகள்.' கழுத்திற்கு கீழே, தொடை, புறங்கைகளுக்கு அருகில் உள்ள கிளாண்டுகள் நமக்கு வரும் நோய்களை தடுக்க வல்லவை. அவை பாழானால் நோயை தடுக்கக் கூடிய சத்தி குறைந்து விடும். அதுதான் ஹாட்கின்ஸ் வியாதி'' என்று நிறுத்தினார்.

''உங்கள் ரத்தப் பரிசோதனை ரிப்போர்ட்டைப் பார்த்ததும் வந்த சந்தேகம், உங்கள் நோட்ஸ் பரிசோதனை யில் உறுதியாகி விட்டது. உங்களை கிளாண்ட்ஸ் பரிசோதனைக்கு அழைத்துச் சென்று திரும்பி வந்த

பிறகுதான் நீங்கள் ரிப்போர்ட்டுகளை மாற்றியிருக் கீங்க. நாங்கள் அந்த ரிப்போர்ட்டுகளை பொருட்படுத்தவே யில்லை. லிம்போ ப்ளாஸ்டிக் அனாலிஸிஸ் ரிப்போர்ட்டு வந்ததுமே உங்கள் தந்தையுடன் பேசினேன். நீங்கள் என்னவோ இந்த ரகளை எல்லாம் ரிப்போர்ட்டுகளை மாற்றியதால் வந்தது என்று நினைத்து விட்டீர்கள்.'' சொல்லிக் கொண்டே பரத்வாஜ் அவளைப் பார்த்தார். அவள் முகம் உணர்ச்சியற்று இருந்தது. கூர்ந்து கவனித்தால் கடலுக்கடியில் தோன்றும் எரிமலையின் நிழல் அந்த முகத்தில் நிழலாடிக் கொண்டிருந்ததைக் காண முடியும். கையால் பேப்பர் வெயிட்டை சுழற்றிக் கொண்டே அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

திடீரென்று பரத்வாஜுக்கு தான் செய்த தவறு புரிந்து விட்டது. இதையெல்லாம் அவளிடம் சொல்கிறார்! 'டாக்டர்கள் எவ்வளவு அலட்சியமாக இருந்திருக் கிறார்கள்' என்று தமக்கு ஏற்பட்ட அவப் பெயரால் தன்மானம் பாதிக்கப்பட்டு, தாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை என்ற உண்மையை வெளிப்படுத்தும் ஆவேசத்தில் எல்லா விஷயத்தையும் அவளிடமே சொல்லி விட்டார்.

வருத்தப்பட்டுக் கொண்டே ''ஐ யாம் சாரி'' என்றார்.

அவள் சிரித்தாள். ''எதுக்கு டாக்டர் சாரி? என்னிடம் சொல்லிவிட்டதற்காகவா? நான் மரணமடையப் போவதற்காகவா?''

அவர் மௌனமாக இருந்து விட்டார்.

அவள் ஆழ்ந்து பெருமூச்சு விட்டு ''டாக்டர்! இந்த விஷயம் நம் இருவருக்கும் இடையே மட்டும் இருக்க வேண்டும்'' என்றாள். அவர் புரியாமல் பார்த்தார்.

''ஆமாம் டாக்டர்! இந்த விஷயம் அவர்களுக்குத் தெரிவதால் லாபம் என்ன?'' என்றாள் வெளியே உட்கார்ந் திருந்த தந்தையையும், கார்த்திகேயனையும் உத்தேசித்து.

''ஆனால் அவர்களிடம் சொல்ல வேண்டியது என் கடமை.''

''அப்படி என்றால் அப்போதே முதலில் ஏன் என்னிடம் சொல்லவில்லை? நான் வருத்தப்படுவேன் என்று தானே? இப்போ நானும் அதையே சொல்கிறேன். அவர்களை வீணாக வருத்தப்படுத்தாதீங்க.''

''ஆனால்...''

''அவர்களுக்கு ஒரு நியாயம் எனக்கு ஒரு நியாயம் ஏன் டாக்டர்? எப்படியும் இதற்கு மருந்து இல்லாத போது அவர்கள் தெரிந்து கொண்டு மட்டும் என்ன செய்யப் போகிறார்கள்?''

''ஆனால் நோயாளிக்குத் தேவையான ஆறுதல்கள், பனிவிடைகள்...''

''டாக்டர்!'' அவள் குறுக்கிட்டாள். ''நான் தற்சமயம் ஒரு கவிதைப் புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறேன். ஒரு பதினாலு வயதுப் பெண் தனக்கு கேன்சர் என்ற விஷயத்தை வீட்டில் தெரியாமல் மறைத்து வைத்து, தன் துன்பத்தைக் கவிதை உருவில் வெளிப் படுத்தியிருக்கிறாள். ஒரு சின்னப் பெண்ணே அவ்வளவு சுயநலமில்லாமல் தன் வாழ்நாளின் கடைசி நிமிஷம் வரைக்கும் வாழ முடிந்த போது நான் எதற்காக மற்றவர்களின் இரக்கத்தை எதிர்பார்க்க வேண்டும்?''

''ஆனால் இந்த உண்மையை அதிக நாள் மறைத்து வைக்க முடியாது.''

''தேவையில்லை. கொஞ்சநாள் தெரியாமல் இருந்தால் போதும். முக்கியமாக ஒரு நபருக்கு. அந்த நபர் மீது ஒரு மகத்தான பொறுப்பு இருக்கிறது டாக்டர்! ஒரு அபூர்வமான கலைப் படைப்பை அவர் உருவாக்க வேண்டும். இப்பொழுது உண்மையாகி விட்ட ஒரு பொய்யை அவர் நிஜம் என்று நம்பிக் கொண்டிருந்த போதே கேன்வாஸின் மீது ஒரு கோட்டைக் கூட வரைய முடியவில்லை அவரால். இனி இந்த விஷயம் நிஜமாகவே உண்மை என்று தெரிந்து விட்டால் அவரால் எதுவுமே வரைய முடியாது. அவருக்காகவாவது இந்த விஷயத்தை மறைத்து வைக்க வேண்டும். என் வாழ்க்கையை விட அந்தச் சித்திரம் முக்கியமானது'' என்று சொல்லிவிட்டு எழுந்து நின்றாள்.

இருவரும் வெளியே வந்தார்கள்.

''வாங்க டாடீ! பெரிய பார்ட்டீ கொடுக்கணும் எனக்கு.''

''அப்படி என்றால்?''

''ரிப்போர்ட்டுகள் மாறிய விஷயம் உண்மைதான்.'' கார்த்திகேயனை பார்த்தபடி சிரித்துக் கொண்டே சொன்னாள். அவன் மனதில் அதுவரை இருந்து வந்த வருத்தமெல்லாம் யாரோ துடைத்தெறிந்து விட்டாற் போல் தென்பட்டான்.

''இதென்ன? இரண்டு பேரும் இப்படி கண்ணிமைக் காமல் பார்க்கிறீங்க? இந்த சந்தோஷ சமயத்தில் பார்ட்டீ தருவதாக டாடீ சொல்லியிருக்கிறார். நீங்க என்ன தரப் போறீங்க மித்ராஜீ?''

''உனக்கு என்ன வேண்டும் அனுஜா?''

''கேட்ட பிறகு மாட்டேன் என்று மறுக்கக் கூடாது. பிராமிஸ்?''

''பிராமிஸ்!''

''அந்த ஓவியத்தை முடித்து விட வேண்டும்.'' அவ்வளவுதான். ''இதுதான் நடந்தது.'' அவள் சொல்லி முடித்தாள்.

32

மழை நின்று விட்டது. மேற் கூரையிலிருந்து சொட்டிக் கொண்டிருந்த ஒவ்வொரு சொட்டும் இதயத்தின் மீது சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது.

தொலைவிலிருந்து கடலில் ஏதோ படகு வந்து கொண்டிருந்த சத்தம் கேட்டது. அவன் ஜன்னல் வழியாக வெளியே இருட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான். அனுஜா முறுவலுடன் அவனிடம் வந்தாள். ''என்ன மித்ராஜீ! என் கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க?'' என்று கேட்டாள்.

''என்ன கேள்வி?''

''மறந்து விட்டீர்களா? அல்லது நடிக்கிறீங்களா? என் எதிர்காலத்தை உத்தேசித்துத்தான் என் காதலை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அப்போ சொன்னீங்க இல்லையா? இப்போ என்ன சொல்றீங்க?''

தொலைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த படகுச் சத்தம் கரைக்கு வந்து சேர்ந்து விட்டாற்போல் நின்று விட்டது. கரையில் வந்து நின்ற படகை ஜன்னல் வழியாக பார்த்து விட்டு அனுஜா சொன்னாள். ''டாடீ வந்து விட்டார்.''

கார்த்திகேயனும் அந்தப் பக்கமாக பார்த்தான்.

''டாடீ உள்ளே வருவதற்கு இரண்டு நிமிடங்கள் ஆகும். அதற்குள் உங்கள் முடிவைச் சொல்ல மாட்டீங்களா?''

அவன் பேசாமல் மறுபடியும் ஜன்னல் வழியாக பார்க்கத் தொடங்கினான். மங்கலான வெளிச்சத்தில் விவேகாநந்தன் படகை விட்டு இறங்கி வேகமாக வந்து கொண்டிருப்பது தென்பட்டது.

கார்த்திகேயனையே பார்த்துக் கொண்டிருந்த அனுஜாவின் கண்களில் பரபரப்பு இல்லை. அதற்காக விரக்தியும் இல்லை. எதைக் கேட்க வேண்டியிருக்குமோ என்ற உத்வேகம் இருந்தது.

மனதில் ஏதோ முடிவு செய்து விட்டாற்போல் கார்த்திகேயன் வாயைத் திறக்கப் போனான்.

''வேண்டாம். எதுவும் சொல்ல வேண்டாம்'' என்றாள் திடீரென்று.

''என்னைச் சொல்லவிடு. அனுஜா!''

''ஒரு நிமிஷம் இருங்கள்'' என்றாள் தடுத்து நிறுத்துவது போல். ''ஒருக்கால் நீங்கள் எடுத்துக் கொண்ட முடிவு எனக்கு சந்தோஷத்தை தரக் கூடியதாக இருந்தால் அவ்வளவு பெரிய சந்தோஷத்தை இத்தனைச் சிறிய இதயத்திற்குள் பொத்தி வைத்துக் கொள்ள முடியாமல் உங்கள் மார்போடு ஒன்றறச் சேர்ந்து விடக் கூடிய அவகாசம் இருக்காது. டாடீ வந்து விட்டார்.''

காலடியோசை நெருங்கிக் கொண்டிருந்தது.

''ஒருக்கால் உங்கள் முடிவு வருத்தத்தைத் தரக் கூடியதாக இருந்தால், அதைத் தாங்கிக் கொண்டு டாடீயின்

முன்னால் என்னால் சாதாரணமாக இருக்க முடியாது. தாங்க முடியாத சந்தோஷத்தையோ, எல்லையில்லாத வேதனையையோ வரவேற்பதற்கு இது சமயமில்லை. அதனால் நாம் மறுபடியும் இதே போல் தனிமையில் சந்தித்துக் கொள்ளும் பொழுது அப்பொழுது சொல்லுங்கள். அது வரை யோசித்துக் கொண்டிருங்கள், உங்களைப் பற்றி இல்லை, என் எதிர்காலத்தைப் பற்றி.''

விவேகாநந்தன் உள்ளே வந்து கொண்டே ''அனுஜா!'' என்று ஏதோ சொல்லப் போனார். ஆனால் அதற்குள் எதிரே இருந்த ஓவியத்தைப் பார்த்து விட்டு அப்படியே நின்று விட்டார்.

தான் வெளி நாட்டிற்கு போனதுமே கார்த்திகேயனை பார்க்க கிளம்பி வந்து விட்ட மகளை நன்றாக கோபித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்தார். அவருடைய கோபமெல்லாம் ஓவியத்தைப் பார்த்ததுமே பஞ்சாக பறந்து விட்டது. அவர் தொண்டைக் குழியிலிருந்து வரவிருந்த வார்த்தைகளை இதயத்திலிருந்து வந்த வார்த்தைகள் விழுங்கி விட்டாற்போல் ஒரே ஒரு வார்த்தை வெளி வந்தது.

''ஃபெண்டாஸ்டிக்!''

★

ஸ்ரீ கல்யாணிக்கு ரொம்பவும் கவலையாக இருந்தது. பத்து நாட்களாக கார்த்திகேயனிடமிருந்து தகவலே இல்லை. அவனைப் பற்றித் தெரிந்து கொள்வதற் காக அவள் செய்த முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. அவள் முதலில் டில்லிக்கு போன் செய்தாள். அமைச்சர் அந்தமா னுக்குப் போய்விட்டார் என்றும்,

கார்த்திகேயனைப் பற்றித் தெரியாது என்றும் பி.ஏ. தெரிவித்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் போன் செய்தாள். முதல் நாள்தான் கார்த்திகேயன் டில்லிலியிருந்து திரும்பிப் போனான் என்று சொன்னார்கள். அவளுக்குப் புரியவில்லை. விவேகாநந்தனுக்கு கனெக்ஷன் தரச் சொன்னாள். அமைச்சர் வெளிநாட்டுக்குப் புறப்படும் மும்முரத்தில் இருக்கிறார் என்று சொன்னார்கள்.

அவள் குழப்பம் மேலும் அதிகரித்தது. எங்கேயோ அந்தமானில் படம் போட்டுக் கொண்டிருக்கும் தன் கணவன் ஒரு நாளுக்காக டில்லிக்கு ஏன் வந்தான் என்றோ, மறுபடியும் அதே வேகத்தில் ஏன் திரும்பிப் போனான் என்றோ அவளுக்குப் புரியவில்லை.

''நான் மிஸெஸ் கார்த்திகேயன் பேசுகிறேன். அவர் எதற்காக டில்லிக்கு வந்தார் என்று சொல்ல முடியுமா?''

எந்த மனைவியாவது தன் கணவனைப் பற்றி இப்படிப்பட்ட கேள்வி கேட்டால் அடுத்தவர்களுக்கு ஏற்படும் உணர்வுதான் அவருக்கும் ஏற்பட்டது போலும். இளக்காரம் கலந்த குரலில் ''அமைச்சரின் மகளுடைய உடம்பு குணமாகி விட்ட காரணத்திற்காக மினிஸ்டர் கொடுத்த பார்ட்டியில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தாற் போலிருக்கு மேடம்! மூவரும் சேர்ந்துதான் வந்தாங்க. அப்புறம் அவர் மட்டும் போய் விட்டார்'' என்றார்.

மூவரும் ஏன் சேர்ந்து வரவேண்டும் என்றோ, கார்த்திகேயன் மட்டும் தனியாக ஏன் திரும்பிப் போக வேண்டும் என்றோ கல்யாணிக்குப் புரியவில்லை. ஆனாலும் அவள் அதைப் பற்றி யோசிக்கவில்லை. அவள்

வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது அதற்காக இல்லை. அந்தமான் தீவிலிருந்து எப்படியும் முடியாது. ஆனால் டில்லிக்கு வந்தும்கூட கார்த்திகேயன் தனக்கு போன் செய்யவில்லை. குறைந்த பட்சம் தகவல் கூட சொல்ல வில்லை.

அதுதான் அவளை வருத்தப்படுத்திக் கொண்டிருந்தது. அன்றைக்கு டாக்டர் அவளிடம் ஒரு நல்ல செய்தியைச் சொன்னார். ஸ்கேனிங்கில் நல்ல பலன் தென்படுவதாக வும், விரைவிலேயே நரம்புகள் பழையபடி ஆகி விடலாம் என்றும் சொன்னார். அந்தச் செய்தி கூட அவளைச் சந்தோஷப்படுத்தவில்லை. அந்தச் சந்தோஷத்தை பகிர்ந்து கொள்வதற்கு கார்த்திகேயன் இல்லையே என்ற வருத்தம் தான் அதிகமாக இருந்தது.

தான் கார்த்திகேயனை மிகக் கொடூரமாக காயப்படுத்தி விட்டோம் என்ற வருத்தம் அவளைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது. அவனைக் கடமையின் பக்கம் இட்டுச் செல்வதற்காக செய்த முயற்சியில் அவள் வென்று தோற்றுவிட்டாள்.

அவள் இந்தக் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கையில் டில்லியிலிருந்து போன் வந்ததாக சொன்னார்கள். அவள் உற்சாகத்தோடு போனை வாங்கிக் கொண்டாள். மறுமுனை யிலிருந்து ''நான்தான் விவேகாநந்தன்'' என்ற குரல் கேட்டது.

அவள் உற்சாகம் வடிந்து போனாலும் தன் அதிருப்தியை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ''நான் தான் கல்யாணி. என்ன நடந்தது?'' என்றாள்.

''சாதித்து விட்டோம் அம்மா! நீ ஊகித்தும் பார்க்க முடியாத அளவுக்கு அற்புதமாக வந்து விட்டது ஓவியம்.''

கல்யாணி ஆழமாக மூச்சு விட்டுக் கொண்டாள். மறுமுனையில் அவர் சொல்லிக் கொண்டிருந்தார். ''நான் கூட நினைக்கவில்லை. அந்தப் படம் அவ்வளவு நன்றாக இருக்கிறது. அவன் ஒரு ஜீனியஸ்.''

''அவர்... அவர் அங்கே தான் இருக்கிறாரா?''

''இல்லை. பாஸ்போர்ட் ஆபீசுக்கு போயிருக்கிறான்.''

அவள் வியப்பை அடக்கிக் கொள்ளும் முயற்சி எதுவும் செய்யாமல் ''பாஸ்போர்ட் ஆபீஸுக்கா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். நாளை மறுநாள் நானும் கார்த்திகேயனும் வெளிநாட்டுக்குப் போகிறோம்.''

அவளுடைய கவலை அதிகமாகிவிட்டது. இதெல்லாம் அவளுக்குத் தெரியாமல் நடந்து கொண்டிருக்கின்றன. அவளுக்குத் தெ...ரி...யா..ம...ல்.

''எதற்காக வெளிநாட்டிற்கு?'' அவள் கேட்டாள்.

''வெளிநாட்டு மார்க்கெட்டில் விற்பதற்கு.''

''முதலில் நம் நாட்டில் முயற்சி செய்யவில்லையா?''

''செய்து பார்த்தேன். நம்பிக்கை தரும்விதமாக எதுவும் இல்லை. இருபத்தையாயிரம் தருவதாக சொன்னார்கள்.''

''இருபத்தையாயிரமா?'' அவள் குரல் கிரீச்சென்று ஒலித்தது. நாற்பது லட்சம் முதலீடு போட்ட ஓவியத்திற்கு இருபத்தையாயிரம் வருமானம்!

''ஆமாம். ஏதாவது சொன்னால் முன்பு இருந்த டிமாண்ட் இப்பொழுது இல்லை என்றோ நம் நாடு ஏழை என்றோ கதை அளப்பாங்க.''

''படம் எப்படி இருக்கு?''

''அபாரம்! ஓவியக் கலையில் இவ்வளவு அழகு இருக்கு என்று எனக்கும் இது வரையில் தெரியாது. மோனாலிஸா ஓவியத்தை பழிக்கும்விதமாக இருக்கிறது. நான் இப்பொழுதுதான் வெளிநாட்டு நிபுணர்களிடம் காண்பித்தேன். சரித்திரத்தில் நிலைத்துவிடும் என்றார்கள். அந்தப் படத்தை பார்த்த பொழுது என் மகள் என்றே நினைத்து விட்டேன்.''

''உங்க மகளா? அப்படி என்றால்...'' சட்டென்று கேட்டாள்.

''அந்தப் படத்திற்கு மாடலிங்க் செய்தது என் மகள் அனுஜாதான்.''

கை நகங்களுக்கு என்றோ தீட்டிய சாயம், வெளுத்துப் போய்விட்ட உடம்பு, கம்பளத்தின் மீது சிந்தியிருந்த காபியின் கரை... கட்டிலுக்கு பக்கத்தில் பேட்டரி தீர்ந்து விட்டதால் சலனமின்றி நிற்கும் காதலன் காதலியின் பொம்மை...

அவள் ஒரு நிமிடம் மௌனமாக இருந்தாள். ''கார்த்திகேயன் வந்ததும் ஒருமுறை போன் செய்யச் சொல்றீங்களா?'' என்று கேட்டாள்.

''கண்டிப்பாக. அது சரி. உன் வியாபாரம் எப்படி இருக்கிறது?''

''நீங்கள் செய்த உதவியால் நன்றாக சூடு பிடித்து விட்டது.''

அவள் சொன்னது மிகவும் குறைவு. விவேகாநந்தன் தந்த நாற்பது லட்சத்துடன் அவள் மார்க்கெட்டில்

நுழைந்ததுமே விவகாரங்கள் எதிர்பாராத ரீதியில் மாறிவிட்டன. பலம் மிகுந்த மத்திய அமைச்சர் அவளுக்கு பக்கபலமாக இருப்பதுடன் எதிரி கம்பெனிக்கு எச்சரிக்கை விடுத்தார் என்ற செய்தி ஸ்டாக் மார்க்கெட்டில் பரவியது. உடனே கம்பெனியின் ஷேர் விலை விண்ணை எட்டியது. அதற்குள் கப்பல் கம்பெனியும் நஷ்ட ஈட்டை உடனே வழங்கி விட்டதால் அவள் பொருளாதார நிலையும் ஓங்கி விட்டது. அதற்குப் பிறகு அவளுக்கு நிகர் யாருமில்லாமல் போய் விட்டார்கள்.

''நீங்கள் தவறாக நினைக்கவில்லை என்றால் ஒரு சின்ன ஐடியா?'' கல்யாணி சொன்னாள்.

''என்ன அது?''

''அந்த ஓவியத்திற்கு நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் விலை கிடைக்காத பட்சத்தில் நீங்கள் கொடுத்த நாற்பது லட்சத்தையும் திருப்பித் தந்து நானே அதை வாங்கிக் கொள்கிறேன்.''

''வ்வாட்!''

''ஆமாம் சார்.''

''என்னம்மா இது? உன் கணவனின் கலையின் விலை வெறும் இருபத்தையாயிரம் இல்லை என்று நிரூபித்துக் கொள்வதற்காக அவ்வளவு பணத்தைக் கொடுக்க முடிவு செய்து விட்டாயா? அல்லது உனக்கு இவ்வளவு உதவி செய்ததற்காக எனக்கு இந்த விதமாக நன்றியைத் தீர்த்துக் கொள்கிறாயா?''

''இரண்டுமே இல்லை சார். என் கணவரின் கஷ்டத்தை, உழைப்பை, என்னிடமே நிரந்தரமாக பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.''

விவேகாநந்தன் ஒரு வினாடி வாயடைத்துப் போய் சட்டென்று பேசமுடியாமல் தடுமாறினார். பிறகு சொன்னார். ''பார்த்தாயா கல்யாணி! இவ்வளவு சின்ன யோசனை எனக்குத் தோன்றவில்லை.''

அவள் பதில் பேசவில்லை.

அவர் மேலும் சொன்னார். ''மறுபடியும் யோசித்து பார்க்கும் போது எனக்கு வேறு விதமாக தோன்றுகிறது. இவ்வளவு உயர்ந்த ஓவியத்தை உலகப் புகழ் பெறும் விதமாக செய்யாமல் நாமே முடக்கிப் போட்டு விடுகிறோமா?''

அவள் அதற்கும் பதில் சொல்லவில்லை.

''நான் யோசிக்கிறேன். நீ மட்டும் திருப்பித் தர வேண்டிய பணத்தைப் பற்றி எதுவும் யோசிக்காதே. யாருமே ஓவியத்தின் மதிப்பை உணர்ந்து கொள்ளவில்லை என்பது உண்மை என்றாலும் அதன் மதிப்பு உனக்குத் தெரியும். ஒரு விஷயம்.''

''என்ன?''

''கார்த்திகேயன் ஏனோ ரொம்ப சோர்வாக இருக்கிறான். ஒருக்கால் இந்தப் படம் விற்றுப் போக வில்லையே என்ற காரணத்தினாலோ என்னவோ? அவனிடம் இதைப் பற்றி எதுவும் பேசாதே.''

''அவரை உடனே ஒருமுறை எனக்கு போன் செய்யச் சொல்றீங்களா?''

''கண்டிப்பாக.''

அவள் போனை வைத்து விட்டாள். மறுபடியும் தனிமை சூழ்ந்து கொண்டது. ஒரு மணி நேரம் கழிந்தது.

போன் வரவில்லை. இரண்டு மணி... மூன்று மணி... நான்கு மணி... போன் வரவில்லை.

துக்கமும், கோபமும் கலந்த ஆத்திரம். தன்னை யாருமே புரிந்து கொள்ளவில்லை, சிறுவயதிலிருந்தே. இப்பொழுதும் சரி. அவள் கார்த்திகேயனுக்கு கடிதம் எழுத நினைத்தாள். போஸ்ட் செய்வதற்காக இல்லை. வந்த பிறகு கொடுப்பதற்காக. 'அன்புள்ள கார்த்திகேயனுக்கு'... என்று எழுதிவிட்டு தொடர்ந்து என்ன எழுதுவது என்று தெரியாமல் அப்படியே யோசனையில் ஆழ்ந்து விட்டாள். அப்படியே உறங்கியும் விட்டாள். ஒரு மணி நேரம் கழிந்தது.

சந்தடி கேட்டு அவளுக்கு விழிப்பு வந்தது. பக்கத்தில் கார்த்திகேயன் உட்கார்ந்திருந்தான். அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு வினாடி இது கனவா இல்லை நனவா என்று புரியவில்லை. கனவு இல்லை என்றும் உண்மைதான் என்றும் புரிந்ததும் அவளுக்கு துக்கம் வந்தது. அவன் அவள் நெற்றியில் புரண்ட கேசங்களை மென்மையாக ஒதுக்கினான். தாங்க முடியாத சந்தோஷத்தாலும், நிம்மதியாலும் அவன் கையை அழுத்தமாக பற்றிக் கொண்டே ''நீங்களா!'' என்றாள்.

''போவதற்கு முன்னால் உன்னைச் சந்திக்காமல் போய் விடுவேன் என்று எப்படி நினைத்தாய் கல்யாணி?''

போதும். அந்த ஒரு வார்த்தையில் அவளிடம் இருந்து வந்த சந்தேகங்கள் எல்லாம் பஞ்சாக பறந்து போய் விட்டன. ஒரு பெரிய வெற்றியைச் சாதித்தவனுக்கு அதற்கு முன்னால் இருந்து வந்த பிரச்னைகள் எல்லாம் மிகச் சிறியதாகவும், அபிப்பிராய பேதங்கள் எல்லாம் அற்பமாகவும் தோன்றும். அவன் அந்தப் படத்தைப் போட்டதன் மூலமாக மானசீகமாக அந்த நிலைக்கு வந்து விட்டான்.

ஒரு காலகட்டத்தில் அவன் தன்னை தனியன் என்று எண்ணிக் கொண்டிருந்தான். 'நீ எதையாவது சாதித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வா' என்ற அர்த்தத்தில் மனைவி தன்னை வெளியேற்றிய பிறகு, தன் கற்பனை அழகி இன்னும் கொஞ்ச நாட்கள்தான் உயிரோடு இருப்பாள் என்று தெரிந்த பிறகு அவன் அங்கிருந்து அப்படியே ஏதாவது இமயமலை பகுதிக்குப் போய் விட வேண்டும் என்று நினைத்தான்.

ஆனால் அதற்குள் விவேகாநந்தன் சொன்ன ஒரு செய்தி அவன் முடிவை மாற்றிவிட்டது. அவனை பாஸ்போர்ட் ஆபீசிலிருந்து திரும்பி வந்ததும் விவேகாநந்தன் கல்யாணி போன் செய்த விஷயத்தைச் சொன்னார்.

'என் கணவர் பட்ட கஷ்டத்தை நான் விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறேன்' என்று அவள் சொன்ன வார்த்தைகள் அவன் மனதை வேறு பக்கமாக திசை திருப்பி விட்டன.

ஒரு முறை பின்னோக்கிச் சென்று ஆராய்ந்து பார்த்த போது கல்யாணி எந்த உத்தேசத்தில் தன்னை அனுப்பி யிருக்கிறாள் என்று புரிந்தது. முன்பே சொன்னது போல் 'வெற்றி' யில்தான் இந்த ஆராய்ச்சி சாத்தியமாகிறது. தோல்வி ஏற்படும் போது எரிச்சல் பொறுமையின்மை போன்றவைதான் இருக்குமே தவிர யோசிக்கும் சக்தி இருக்காது.

தன் கை அவள் மீது பட்டதுமே அவளிடம் ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கம் அவன் அத்தனை கேள்விகளுக்கும் பதிலளித்துவிட்டது. அணைப்பு வேறெந்த கேள்விக்கும் இடம் தரவில்லை. அவ்விருவரும் அந்த நிலையில் இருந்த

போது போன் மணி ஒலித்தது. அவன் கல்யாணியை ஒரு கையால் அணைத்துப் பிடித்துக் கொண்டே இன்னொரு கையால் ரிசீவரை எடுத்துக் கொண்டான். மறுமுனையில் ஒலித்த குரலை கேட்டதும் கல்யாணியை விட்டு சரியாக உட்கார்ந்து கொண்டான். ''சொல்லுங்கள்'' என்றான். தான் டில்லியை விட்டு புறப்பட்டு இரண்டு மணி நேரத்திற் குள்ளேயே போன் வந்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மறுமுனையில் கொஞ்ச நேரம் நிசப்தம். பிறகு மெல்லிய குரலில் விவேகாநந்தன் சொன்னார். ''அனுஜா விஷயம் தெரிய வந்தது.''

கார்த்திகேயன் பதில் பேசவில்லை. என்றாவது தெரிய வேண்டிய விஷயம்தான் இது. ''ஐ யாம் சாரி'' என்றான்.

ஆறுதல் வேதனையை குறைத்து விடாது.

''அரை மணிக்கு முன்னால் திடீரென்று நினைவு தப்பிவிழுந்து விட்டாள். கலங்கிப் போய் பரத்வாஜை அழைத்தேன். அவர்தான் சொன்னார் இந்தச் செய்தியை'' விவேகாநந்தனின் குரல் தழுதழுத்தது. துக்கத்தை அடக்கிக் கொண்டே மேலும் சொன்னார். ''அந்தப் படத்தை நான் யாருக்கும் விற்கப் போவதில்லை. என் மகளின் ஞாபகார்த்தமாக நானே வைத்துக் கொள்கிறேன். என் காலத்திற்குப் பிறகு அந்த ஓவியத்தை பாரிஸ் மியூசியத்திற்கு நன்கொடையாக தந்து விடுகிறேன். இவ்வளவு கஷ்டப் பட்டதற்கு உ[illegible] நன்றியை இந்த விதமாக தீர்த்துக் கொள்ள நினைக்கிறேன்.'' போன் கட் ஆகிவிட்டது.

★

"குட்" என்றார் பிரதாப், அனுஜா கார்த்திகேயனுக்கு எழுதிய கடிதத்தை மறுபடியும் ஜாக்கிரதையாக உறைக்குள் வைத்து ஒட்டிக் கொண்டே. சத்யனும், அஸ்வத்தாமனும் மிகவும் பரபரப்பாக இருந்தார்கள். பிரதாப் உறையை சத்யனிடம் தந்து விட்டு "இவ்வளவு நாட்களாக நாம் காத்துக் கொண்டிருந்தது பலித்து விட்டது. எங்கும் தப்பித்துக் கொள்ள முடியாதபடி கொலை கேஸில் சிக்கவைப்பதற்கு இதைவிட நமக்கு வேறு அவகாசம் கிடைக்காது. அவர்களுடைய கடிதங்களையும், போன் கால்களையும் ட்ராப் பண்ணுவதால் இவ்வளவு லாபம் ஏற்படும் என்று நினைத்திருக்கவில்லை. நாளைக்கே இந்தக் கதைக்கு முடிவு ஏற்படப் போகிறது. அஸ்வத்தாமா! நாளைக்கு ஒரு கொலை செய்ய தயாராக இரு. உன்னிடம் பிஸ்டல் இருக்கா?"

"இல்லை."

"குறைந்த பட்சம் அதை பயன்படுத்தும் முறையாவது தெரியுமா?"

"தெரியும்."

"சரி. என் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு போ. சத்யன்! இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு போய் ஜாக்கிரதையாக இருந்த இடத்திலேயே வைத்துவிடு. நாளை முழுவதும் நீ எந்தச் சாக்கிலாவது ஸ்ரீகல்யாணியின் அறையிலேயே இருக்கணும். இந்தக் கடிதத்தைப் படித்து விட்டு கார்த்திகேயன் விமான நிலையத்திற்குப் போனால் சரி. போகாத பட்சத்தில் தாஜ் இண்டர்நேஷனல் ஹோட்டலிலிருந்து அனுஜா அவனுக்கு எப்படியும் போன் செய்வாள். அந்த போனை ஸ்ரீகல்யாணி கேட்கும் விதமாக செய்யணும். புரிந்ததா?"

''புரிந்தது.''

''ஸ்ரீகல்யாணியிடம் துப்பாக்கி இருக்கா?''

''லைசன்ஸ்ட் பிஸ்டல் இருக்கு.''

''குட். இனி இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டிய மற்ற காரியங்களைச் சொல்கிறேன். கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள்'' என்று சொல்லத் தொடங்கினார்.

★

'கடிதம் என்றால் சுருதியை கூட்டிய வீணையைப் போல் ஒவ்வொரு எழுத்தும் மனதை மீட்ட வேண்டுமாம். வாழ்க்கை தந்திகளின் மீது உங்கள் நினைவுகள் சரிகம பதனி வாசித்துக் கொண்டிருக்கையில் நான் சந்தோஷத்தில் ஆழ்ந்து போய், இதோ இவ்வளவு நாட்களுக்கு பிறகு தேறிக் கொண்டு கடிதம் எழுதத் தொடங்கினேன்.

நாளை பிற்பகல் நான் வருகிறேன். தாஜ் இன்டர் நேஷனல் ஹோட்டலில் என் பெயரில் அறை ரிசர்வ் செய்யப்படும். வந்ததுமே போன் செய்கிறேன். போன் செய்த அரைமணிக்குள் நீங்கள் என்னிடம் இருக்க வேண்டும். நீங்கள் வரவில்லை என்றால்...

சரியாக அரைமணி கழித்து தற்கொலை செய்து கொள்வேன்.

உங்கள் அனுஜா'

கடிதத்தைப் படித்துவிட்டு என்ன செய்வது என்று புரியாதவனாக மனைவியின் பக்கம் பார்த்தான். கார்த்திகேயன்.

கல்யாணி ''க்ரைஸிஸ் மேனேஜ்மெண்ட்'' படித்துக் கொண்டிருந்தாள்.

33

டில்லியிலிருந்து வந்த விமானம் ஏர்போர்ட்டில் தரை இறங்கியது. ஐந்து நிமிடங்கள் கழித்து அனுஜா வெளியே வந்தாள். லவுஞ்ஜிற்குள் வந்ததுமே அவள் கண்கள் கார்த்திகேயனை தேடின. அவள் பொறுமையை சோதிப்பது போல் அமைச்சர் ஒருவர் அதே விமானத்தில் வந்ததால் லவுஞ்ஜ் முழுவதும் சந்தடியாக இருந்தது. யார் எங்கே இருக்கிறார்கள் என்று புரியவில்லை.

கார்த்திகேயன் தனக்காக வருவானா? அவளுக்கு பதற்றமாக இருந்தது. அமைச்சரும் அவருடைய தொண்டர் கூட்டமும் கலைந்து போகும் வரையில் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தாள்.

அதற்குள் ஒருத்தன் அவளிடம் வந்தான். ''உங்கள் பெயர் அனுஜாதானே?'' என்றான். ஆம் என்று தலையை அசைத்தாள்.

''என்னை கார்த்திகேயன் அனுப்பியிருக்கிறார், உங்களை ஹோட்டலில் இறக்கிவிடச் சொல்லி.''

''அவர் வரவில்லையா?''

''ஹோட்டலுக்கு வந்து சந்திப்பதாகச் சொன்னார். அவசர வேலை இருந்ததால் அவரால் இங்கே வர முடிய வில்லை. நீங்கள் ஹோட்டலுக்கு போன பிறகு போன் செய்யச் சொன்னார்.

இருவரும் காரில் ஏறிக் கொண்டார்கள். ''தாஜ் இண்டர்நேஷனல் ஹோட்டலுக்குத்தானே மேடம்!''

''ஆமாம்'' என்றாள் அவள். ''உங்கள் பெயரை சொல்லவே இல்லையே?''

''உஸ்மான் என்று அழைப்பார்கள் மேடம்'' என்றான்.

தான் தாஜ் இண்டர்நேஷனலில் அறை எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கூட கார்த்திகேயன் இவனிடம் சொல்லியிருக்கிறான் என்றால் இருவரும் நல்ல நண்பர்கள் போலும் என்று நினைத்துக் கொண்டாள் அனுஜா.

கார் ஹோட்டலுக்கு முன்னால் வந்து நின்றது. ரிசப்ஷனிஸ்ட் சாவியை கொடுத்தாள். அவள் ரிஜிஸ்டரில் பெயர் எழுதப் போன பொழுது ''உங்கள் பெயரையும், அட்ரெஸையும் எழுதாதீங்க'' என்றான் குரலை தாழத்திக் கொண்டு.

அவள் வியப்படைந்தவளாக ''ஏன்?'' என்று கேட்டாள்.

''கார்த்திகேயன் உங்களுடைய உண்மை பெயரை எழுத வேண்டாம் என்று சொல்லச் சொன்னார்.'' மற்ற விஷயங்கள் தனக்கு தெரியாது என்பது போல் சொன்னான். அவள் ஒரு நிமிஷம் தடுமாறிவிட்டு 'ரஜிதா' என்று எழுதினாள். பிறகு இருவரும் லிஃப்டில் ஏறி நாலாவது மாடிக்கு வந்து சேர்ந்தார்கள்.

ரூம் நம்பர் 413. அவளுடன் அறைக்கு வந்து சேர்ந்ததும் ''நான் போய் வருகிறேன் மேடம்'' என்றான்.

''காடை குடித்து விட்டு போங்க உஸ்மான்.''

மறுக்கவில்லை. அவள் போன் செய்து காபியை கொண்டு வரச் சொன்னாள். அவன் இன்னும் நின்று கொண்டே இருப்பதை பார்த்து விட்டு ''உட்காருங்கள்'' என்றாள்.

அவன் உட்கார்ந்து கொண்டான்.

''கார்த்திகேயனை உங்களுக்கு நன்றாக தெரியுமா?'' என்று கேட்டாள்.

''நாங்க இருவரும் ரொம்ப நாட்களாக, அதாவது அவனுக்கு திருமணம் நடப்பதற்கு முன்னாலிருந்தே நல்ல நண்பர்கள். எங்கள் தெருவில்தான் ஒரு அறையில் குடியிருந்தான். இருவரும் பட்டினியோடு படுத்துக் கொண்ட நாட்கள் கூட இருக்கு. ஸ்ரீகல்யாணியை மணந்து கொண்ட பிறகு அவன் அந்தஸ்து மாறிப் போய் விட்டது.''

''பின்னே கோடீஸ்வரியான ஸ்ரீகல்யாணி கார்த்திகேயனை ஏன் திருமணம் செய்து கொண்டாள்? அவருடைய ஓவியக் கலையை பார்த்து ஈர்க்கப் பட்டாளா?''

''அதெல்லாம் பெரிய கதை மேடம். நான் போகணும். நேரம் இல்லை. ஒன்று மட்டும் சொல்ல முடியும்'' அவன் குரலில் லேசான தடுமாற்றம். ''கார்த்திகேயன் கல்யாணியை திருமணம் செய்து கொண்டது முதல் நரகத்தை அனுபவித்து வருகிறான். அவனை அந்தப் பந்தத்திலிருந்து மீட்க உங்கள் ஒருவரால் தான் முடியும்.''

''உங்களுக்கு...'' வியப்புடன் பாதியில் நிறுத்தி விட்டாள்.

''எல்லாம் தெரியும். கார்த்திகேயன் என்னிடம் எதையும் மறைத்து வைக்க மாட்டான். சிம்லாவில் உங்களுக்குள் அறிமுகம் ஏற்பட்டது முதல், விமான நிலையத்தில் நீங்கள் அவனுக்கு பரிசாக தந்த 'கன்னி முத்தம்' வரையில் அத்தனையும் என்னிடம் சொல்லி விட்டான்.''

அவள் மனதில் சுருக்கென்றது. ஒரு அழகான, அபூர்வமான உணர்ச்சி தம் இருவருக்குமிடையே மட்டுமே இல்லாமல் எல்லோருக்கும் தெரிவது...

அவள் தன் மனதில் உள்ள உணர்வுகளை வெளியே காட்டிக் கொள்ளாமல் ''நீங்கள் இருவரும் அவ்வளவு நெருங்கிய நண்பர்கள் என்று சொல்லுங்கள்'' என்றாள்.

''ஆமாம் மேடம்! உங்களைச் சந்திப்பதற்காக கார்த்திகேயன் தவித்துக் கொண்டிருக்கிறான். இவ்வளவு நாள் தாமதம் செய்ததற்கே அவன் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறான்.''

இந்தத் தரக் குறைவான வார்த்தைகள் அவளை மேலும் வருத்தப்படுத்தின.

அவன் காபியைக் குடித்து விட்டு ''சரியாக ஒரு மணிக்கு கார்த்திகேயனுக்கு போன் செய்யுங்கள். உங்களிட மிருந்து போன் வந்ததும் அவன் வந்துவிடுவான்'' என்று கதவை நோக்கி நடந்தவன் நின்றான். ''இன்னொரு முறை சொல்கிறேன் மேடம்! கார்த்திகேயனை எப்படியாவது அந்த கல்யாணியின் பந்தத்திலிருந்து மீட்டு விடுங்கள். அவனுக்கு வாழ்க்கையில் கொஞ்சம் சந்தோஷத்தை ருசி காட்டுங்கள். கல்யாணிக்குக் கூட அவன் மீது ரொம்ப பிரியம் எதுவும் கிடையாது. இருவரும் திருமணம் என்ற பந்தத்திற்கு கட்டுப்பட்டிருக்கிறார்கள். அவ்வளவுதான். அந்தப் பயத்தில்தான் ஹோட்டல் அறையைக் கூட வேறு பெயரில் எடுத்துக் கொள்ளச் சொன்னான். அவனைப் பற்றி எனக்கு நன்றாக தெரியும். நீங்கள் கொஞ்சம் அவனைத் தூண்டி விட்டால் போதும். அவன் அவளைவிட்டு விட்டு வந்து விடுவான்'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டான்.

அவனைத் தொடர்ந்து கதவு மூடிக் கொண்டது. அனுஜா அப்படியே உட்கார்ந்திருந்தாள். ஏனோ தெரியவில்லை. அவளுக்கு கிலியாக இருந்தது. வருத்தம் கலந்த பயம்.

அனுஜாவிடம் உஸ்மான் என்ற பெயரில் அறிமுகம் செய்து கொண்ட நபர் லிப்டில் கீழே இறங்கி ரிசப்ஷனிஸ்டிடம் வந்தான். பக்கத்திலிருந்த போனை எடுத்து பிரதாப்பிற்கு டயல் செய்தான். ''நான்தான் அஸ்வத்தாமன் பேசுகிறேன். ஆபரேஷன் நம்பர் ஒன் ஓ.கே.''

''கார்த்திகேயன் விமான நிலையத்திற்கு வந்தானா?'' மறுமுனையிலிருந்து பிரதாப் கேட்டார்.

''நான் பார்க்கவில்லை. அனுஜா விமானத்திலிருந்து இறங்கியதுமே என் காரில் ஏற்றிக் கொண்டு ஹோட்டலுக்கு அழைத்துப் போனேன்.''

''முட்டாளே! உன் காரிலா?'' பிரதாப் திட்டினார். ''நீ கார்த்திகேயனின் நண்பன் உஸ்மான் என்று சொல்லிக் கொள்ளவில்லையா?''

''சொன்னேன்.''

''பின்னே அவ்வளவு ஏழையிடம் கார் எப்படி இருக்கும் என்று நினைத்துக் கொள்ள மாட்டாளா?''

''கார்த்திகேயன் கொடுத்து அனுப்பியிருப்பான் என்று நினைத்துக் கொள்ளலாம் இல்லையா?''

''பைத்தியக்காரத்தனமான வாதங்களை விடு. நாம் ஒரு காரியத்தை செய்யப் போகிறோம் என்றால் எல்லா பக்கங்களிலிருந்தும் கவனமாக இருக்க வேண்டும். நீ உஸ்மான் என்று சொன்னதை நம்பினாளா?''

''நம்பினாள். சிம்லா அறிமுகம், விமான நிலையத்தில் தந்த முத்தப் பரிசு விஷயம் கூட சொன்னேன். அந்த அறை கூட அனுஜா பெயரில் புக் ஆகவில்லை. பெயரை மாற்றச் சொன்னேன்.''

''குட்! எல்லாவற்றையும் விட முக்கியமான இன்னொரு விஷயத்தைச் சொன்னாயா?''

''சொன்னேன். கல்யாணியிடமிருந்து எப்படியாவது கார்த்திகேயனை பிரித்து அவன் நலனை விரும்பும் நண்பனான எனக்கு உதவி செய்யச் சொன்னேனே.''

''சரி. நீ அந்த ஹோட்டலிலேயே இரு. அப்புறமாக என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு மணி நேரம் கழித்து நீ போன் செய்தால் சொல்கிறேன்.'' பிரதாப் போனை வைத்து விட்டார்.

எதிரியின் பாசறையில் நடந்து கொண்டிருந்த சதித் திட்டங்களை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான் ஒரு ஆள். அவன்தான் பீட்டர். சில நாட்களுக்கு முன்னால் பிரதாப் கல்யாணியைக் கொலை செய்ய முயன்று தோற்றுப் போனதிலிருந்து அவன் ஒவ்வொரு வினாடியும் அவர் களைக் கண்காணித்துக் கொண்டே இருந்தான். பிரதாப்பின் ஆபீசை 'ட்ராப்' செய்து அவன் கையாட்கள் ஆன சத்யன், அஸ்வத்தாமன் மீதும் ஒருகண் வைத்திருந்தான். அவர்கள் மூவரும் எப்பொழுது சந்தித்துக் கொண்டாலும் தனக்கு அந்த விஷயம் தெரியும் விதமாக ஏற்பாடு செய்து வைத்திருந்தான். பிரதாப் ஆபீஸில் ஒற்றர்களை நியமித்து அங்கே நடந்து கொண்டிருந்த விஷயங்களை உடனுக்குடன் தெரிந்து கொண்டான்.

ஸ்ரீகல்யாணியின் வீட்டில் கூட அவன் தன்னுடைய ஆட்களை வைத்திருந்தான். அவள் வீட்டில் புதிதாக

சமையலுக்கு வந்த ஆள் கூட அவளுடைய பாதுகாப்பிற்காக பீட்டர் அமர்த்தியவன்தான். இதையெல்லாம் அவன் எவ்வளவு சாமர்த்தியமாக நிர்வகித்து வந்தான் என்றால் கடைசியில் கல்யாணிக்குக்கூட இது தெரியாது.

தான் எதிர்த்து நிற்பது ஒரு டிடெக்டிவ் ஏஜென்ஸியின் தலைவரை என்று பீட்டருக்கு தெரியும். திட்டங்களை போடுவதில் பிரதாப் குள்ள நரியைப் போன்றவன் என்றும் தெரியும். பட்டப் பகலில் மிகச் சாதாரணமாக வீட்டிற்குள் நுழைந்து ஸ்ரீ கல்யாணியைக் கொலை செய்ய முயற்சி செய்வது போல் நடித்து விட்டு தைரியமாக வெளியேறிய பிரதாப்பை பீட்டர் குறைவாக எடைபோடவில்லை. முதல் நாள் அம்மூவரும் சந்தித்துக் கொண்டதை பீட்டர் கவனித்தான். ஏதோ நடக்கப் போகிறது என்று ஊகித்துக் கொண்டானே தவிர என்ன நடக்கப் போகிறது என்று தெரியாது.

மறுநாள் காலையிலேயே அஸ்வத்தாமன் விமான நிலையத்திற்குப் போன பொழுது பீட்டர் ஏற்பாடு செய்திருந்த ஆள் அவனை நிழலாக பின் தொடர்ந்தான். அந்த அள் பிறகு பீட்டருக்கு போன் செய்தான். டில்லியிலிருந்து வந்த விமானத்திலிருந்து ஒரு பெண் இறங்கினாள் என்றும், பிறகு இருவரும் ஹோட்டலுக்குப் போனார்கள் என்றும் சொன்னான்.

''நீ எங்கிருந்து பேசுகிறாய்?''

''அந்த ஹோட்டலிலிருந்துதான்.''

''அந்தப் பெண்ணின் பெயரைப் பாரு.''

''ஒரு நிமிஷம் சார்.'' அந்த ஆள் கௌண்டருக்குப் போய் தெரிந்து கொண்டு வந்து சொன்னான். ''ரஜிதாவாம் சார்.''

பீட்டருக்கு ரஜிதா யார் என்றோ, டில்லியிலிருந்து வந்து அஸ்வத்தாமனை ஏன் சந்தித்தாள் என்றோ புரிய வில்லை. தான் தவறான வழியில் செல்கிறோமோ என்று ஒரு நிமிஷம் நினைத்தான். ''அவர்கள் இரண்டு பேரும் இன்னும் ரூமில்தான் இருக்காங்களா?'' என்று கேட்டான்.

''இருக்காங்க சார். ஒரு நிமிஷம். லிப்டில் இப்பொழுதுதான் இறங்கினார். போன் பக்கம் தான் வருகிறார்.'' போன் கட் ஆகி விட்டது.

இந்தப் பக்கம் பீட்டரும் போனை வைத்து விட்டான். அஸ்வத்தாமன் பேசிமுடித்த பிறகு அவர் யாருடன் பேசினார் என்று தெரிந்து கொண்டு தன்னிடம் சொல் என்று பீட்டர் சொல்லவில்லை. தனக்குக் கீழே வேலை செய்பவர் களுக்கு இது போன்ற சிறிய விஷயங்களைச் சொல்லத் தேவையில்லை.

பீட்டர் எதிர்பார்த்தது போலவே இரண்டு நிமிடங் களுக்குள் மறுபடியும் போன் வந்தது. மறுமுனையில் அந்த ஆளின் குரல் பரபரப்புடன் ஒலித்தது. ''ரஜிதாவின் உண்மையான பெயர் அனுஜா சார்'' என்றான்.

பீட்டருக்கு மின் அதிர்ச்சி அடைந்தாற் போல் இருந்தது.

''இப்பொழுதுதான் அஸ்வத்தாமன் பிரதாப்புடன் பேசினார். டில்லியிலிருந்து வந்திருப்பது அனுஜாதான். அவள் பெயரில்தான் அறை ரிசர்வ் செய்யப்பட்டிருந்தது. ஆனால் ரிஜிஸ்தரில் ரஜிதா என்று எழுதியிருக்கிறாள்.''

பீட்டரின் யோசனைகள் பல்வேறு கோணங்களில் சென்று கொண்டிருந்தன. அஸ்வத்தாமனுக்கும், சத்யனுக்கும் அனுஜாவுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்று

யோசித்தான். எல்லோருமாக சேர்ந்து கார்த்திகேயனை வலையில் போட்டுக் கொண்டு ஸ்ரீகல்யாணியின் கதையை முடிக்கப் பார்க்கிறார்களா என்று யோசித்தான்.

இந்த சஸ்பென்ஸை தாங்க முடியாதவனாக அவன் ஒரு முடிவுக்கு வந்தான். நேரடியாக தாஜ் இன்டர்நேஷனல் ஹோட்டலுக்கு போன் செய்து 413 ம் நம்பர் அறைக்கு கனெக்ஷன் தரச் சொன்னான். மறுமுனையிலிருந்து ''ஹலோ!'' என்று குரல் கேட்டதுமே ''நான் சத்யனின் நண்பன் மேடம்! உங்கள் பயணம் எப்படி இருந்தது என்றும், ஹோட்டலில் எல்லா சௌகரியமும் இருக்கிறதா என்றும் தெரிந்துகொள்ளச் சொன்னார் சத்யன்'' என்றான்.

''வாட் நான்சென்ஸ்! சத்யன் யாரு? உங்களுக்கு எந்த ரூம் வேண்டும்?'' மறுமுனையிலிருந்து அனுஜாவின் குரல் கேட்டது.

பீட்டர் நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டு ''சத்யன் கார்த்திகேயனின் கசின்'' என்றான்.

கார்த்திகேயனின் பெயரைச் சொன்னதுமே அவள் எரிச்சல் மாயமாகிவிட்டது. ''என்னவோ எனக்குத் தெரியாது. கார்த்திகேயனின் பிரண்ட் உஸ்மான் என்பவர் விமான நிலையத்திற்கு வந்து என்னை இந்த ஹோட்டல் வரைக்கும் அழைத்து வந்தார்.''

பீட்டருக்குச் சந்தேகம் விடுபட்டாற்போல் இருந்தது. அஸ்வத்தாமன் 'உஸ்மான்' என்ற பெயரில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறான் போலும். அவள் போனை வைக்கப் போன பொழுது ''உங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள கஷ்டப்பட்டு விட்டேன். நீங்கள் வேறு

பெயரில் அறை எடுத்துக் கொண்டிருக்கீங்க போலிருக்கு'' என்றான்.

மறுமுனையில் கொஞ்சம் குழப்பம். ''ஆமாம்.''

''அதனால் நீங்கள் எந்தப் பெயரில் அறையை எடுத்துக் கொண்டிருக்கீங்க என்று தெரியாமல் உங்களுடன் போன் மூலம் தொடர்பு கொள்ள முடியாமல் போயிருக்கும் கார்த்திகேயனுக்கு.''

''மை காட்!'' என்றாள் அனுஜா. ''அப்படிச் செய்யச் சொல்லி உஸ்மான்தானே சொன்னார்?''

''சரி மேடம். நான் கார்த்திகேயனிடம் சொல் கிறேன்.'' போனை வைத்து விட்டான் பீட்டர். அவனுக்கு விஷயம் முழுவதுமாக புரிந்து விட்டது.

அனுஜா மறுபடியும் ஷவரை ஆன் செய்தாள். வரவேண்டிய நபர் வராமல் நண்பர்களும், கசின்களும் போன் செய்வது, உபசரிப்பது வித்தியாசமாக இருந்தது. இவ்வாறு வந்தது தவறோ என்று நினைத்தாள். அவளுக்கு உஸ்மான் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

கார்த்திகேயனைச் சந்தோஷப்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட சின்னச் சின்ன விஷயங்களை மறந்து போய் விட வேண்டும். உற்சாகமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு எண்ணிக் கொண்டதும் அதற்குப் பிறகு அவள் எதைப் பற்றியும் யோசிக்கவில்லை. முற்றிலுமாக பாத் டப்பில் மூழ்கி கண்களை மூடிக் கொண்டாள். வந்து கொண்டிருந்த ஆபத்தை உணராதவளாக தாழ்ந்த குரலில் பாட்டை ஹம் செய்து கொண்டே குளிக்கத் தொடங்கினாள்.

சரியாக ஒரு மணி நேரம் கழித்து அஸ்வத்தாமன் போன் செய்ததுமே பிரதாப் தன்னிடம் வரச் சொன்னார். அவர் போன பொழுது சத்யனும் அங்கேயே இருந்தான். அப்பொழுது மணி பிற்பகல் பன்னிரெண்டு.

மூவரும் உட்கார்ந்து கொண்டதும் பிரதாப் சொல்லத் தொடங்கினார். ''இன்னும் ஐந்து நிமிடங்களில் நீங்கள் இருவரும் இங்கிருந்து புறப்படுகிறீர்கள். ஒரு காலத்தில் நான் செய்தது போலவே இப்பொழுது சத்யனின் காரில் பின் சீட்டில் நீ உட்காருவாய். ஒரு காலத்தில் நானே இதே திட்டத்தை பயன்படுத்தி எந்தத் தடையும் இல்லாமல் வெளியேறினேன். இந்தத் திட்டத்தில் எந்த விதமான தொல்லையும் இல்லை என்று நிரூபிப்பதற்காகத்தான் நான் அந்தக் காரியத்தைச் செய்தேன். அதனால் ஸ்ரீகல்யாணியின் கண்ணோட்டத்தில் சத்யனின் மதிப்பு கூடி விட்டது.''

அஸ்வத்தாமன் உள்ளூர கொஞ்சம் பதற்ற மடைந்தாலும் வெளியில் சாதாரணமாகவே இருந்தார். பிரதாப் மேலும் தொடர்ந்தார்.

''சத்யன் காரை விட்டு இறங்கி உள்ளே போவான். அங்கே உள்ள நிலைமையை பார்த்து விட்டு அவன் ஜாடை காட்டியதுமே நீ உள்ளே போய் ஒளிந்து கொள்வாய். அவ்வாறு ஒளிந்து கொள்வதற்குச் சரியான இடத்தை சத்யன் பார்த்து வைத்து விட்டான். மிகப் பாதுகாப்பான இடம். இல்லையா சத்யன்?''

சத்யன் தலையை அசைத்தான்.

''ஸ்ரீகல்யாணியுடன் பேசி தனக்கு அலிபியை உருவாக்கிக் கொள்வதற்காக சத்யன் போய் விடுவான்.

பிறகு ஸ்ரீ கல்யாணி தாஜ் ஹோட்டலுக்கு போன் செய்வாள். அது தான் உனக்கு அடையாளம். அவள் போன் செய்து முடித்ததுமே நீ சைலன்சர் உள்ள துப்பாக்கியால் அவளைக் கொன்று விடுவாய். அதற்குள் சத்யன் ஹோட்டலுக்கு வந்து அனுஜாவிடம் விஷயத்தைச் சொல்லுவான். அவளை மனதளவில் பலவீனப்படுத்தி இந்தக் கொலையை கார்த்திகேயன் செய்தான் என்று நம்பும் விதமாக செய்து விடுவான்.'' பிரதாப் மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டார். ''இங்கே மூன்று விஷயங்கள் நமக்கு உதவுகின்றன. முதலாவது அனுஜா ரஜிதா என்ற பெயரில் அறையை எடுத்துக் கொண்டது. இரண்டாவது ஒரு மணிக்கு கார்த்திகேயனுக்கு போன் செய்யப் போவது... மூன்றாவது ஸ்ரீ கல்யாணி ஹோட்டலுக்கு போன் செய்யப் போவது.

''இந்த விஷயங்களை எல்லாம் ஹோட்டல்காரர்கள் போலீசாருக்கு உறுதிப்படுத்துவார்கள். கார்த்திகேயனும், அனுஜாவும் சேர்ந்து ஸ்ரீகல்யாணியைக் கொன்று விட்டார்கள் என்றும், அதற்காகத்தான் அனுஜா மாறுபெயருடன் இந்த ஊருக்கு வந்திருக்கிறாள் என்றும் சாட்சியம் பலமாக இருக்கும். ஒருக்கால் கார்த்திகேயன் மீது குற்றம் ருசுவாகா விட்டாலும் கொலை குற்றம் நம் மீது வராது. சட்ட ஆலோசகராக கார்த்திகேயன் சத்யன் மீது ஆதாரப்பட்டுக் கொண்டு இருப்பதால் நம் கைக்குள்ளேயே இருப்பான். நமக்கு வேண்டியது கல்யாணியின் மரணமும், சொத்து நம் கைக்கு வருவதும். இந்த இரண்டுமே நடக்கும். வேறு ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?''

அஸ்வத்தாமன் எழுந்து நின்று ''இல்லை'' என்றார்.

சூர்க்கா சல்யூட் செய்து விட்டு கேட்டைத் திறந்தான். சத்யனின் கார் வந்து போர்ட்டிகோவில் நின்றது. வேலைக் காரர்கள் உள்ளே எங்கேயோ வேலை செய்து கொண்டிருந் தார்கள். சத்யன் காரை விட்டு இறங்கி ஹாலுக்குள் நுழைந் தான். சோபாக்களை துடைத்துக் கொண்டிருந்த வேலைக் காரனிடம் காபியை மாடிக்கு அனுப்பி வைக்கச் சொன்னான்.

வேலைக்காரன் சமையலறைக்குப் போனதும், சத்யன் ஜாடை காட்டியதும், அஸ்வத்தாமன் ஹாலுக்குள் வந்ததும் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நடந்து முடிந்து விட்டன. அந்தக் கிழவனிடம் தென்பட்ட சுறுசுறுப்பைப் பார்த்து சத்யன் வியப்படைந்தான். இந்தக் காரியத்தை திட்டமிட்டபடி செய்ய வல்லவன் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

ஸ்ரீகல்யாணியின் படுக்கையறைக்கு முன்னாலிருந்த அறையில் சோபாவுக்கும் சுவற்றுக்கும் இடையே இருந்த இடத்தில் அஸ்வத்தாமனை ஒழிய வைத்து விட்டு சத்யன் மட்டும் உள்ளே போனான். ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்த ஸ்ரீகல்யாணி அவனைப் பார்த்து விட்டு ''வா... சத்யன்'' என்றாள்.

''கார்த்திகேயன் இல்லையா?''

''ஆபீசுக்குப் போயிருக்கிறார்.''

''ஆபீசுக்கா? அங்கே இல்லையே?'' என்று போனை எடுத்து டயல் செய்தான். மறுமுனையில் கார்த்திகேயன் லைனில் வந்ததுமே ''நீ ஆபீசில் தான் இருக்கிறாயா? உனக்காக ஒரு மணி நேரமாக முயற்சி செய்துக்கிட்டு இருக்கிறேன்'' என்றான்.

''ஏன்?'' மறுமுனையிலிருந்து கார்த்திகேயன் கேட்டான்.

''டில்லியிருந்து யாரோ அனுஜாவாம். உனக்காக வந்திருக்கிறாளாம். உன்னிடம் போனில் பேச முயன்று நீ கிடைக்காததால் என்னிடம் சொன்னாள்.''

''எங்கே இருக்கிறாள் இப்பொழுது?''

''ஏதோ ஹோட்டலில் தங்கியிருக்கிறாள். மறுபடியும் ஒரு மணிக்கு உனக்கு போன் செய்கிறேன் என்று சொன்னாள். விமான நிலையத்தில் கூட உன்னைத் தேடினாளாம். நீ போகவில்லையா?''

ஸ்ரீகல்யாணி குழப்பத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு இந்த உரையாடல் புரியவில்லை. மறுமுனையில் கார்த்திகேயன் என்ன பேசிக் கொண்டிருந்தான் என்றும் தெரியவில்லை.

சத்யன் சொல்லிக் கொண்டிருந்தான். ''இல்லை. நீ தான் சொன்னாயாமே தன் பெயரில் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று. வேறு ஏதோ மாறு பெயரில் அறை எடுத்துக் கொண்டிருக்கிறாளாம்.''

''சொல்லவில்லை. உன்னை ஒரு மணிக்கு வீட்டில் இருக்கச் சொன்னாள். அங்கே போன் செய்கிறேன் என்று சொன்னாள். நான் அதையே தான் சொன்னேன். வேறென்ன செய்ய முடியும்? நீ எங்கே இருக்கிறாய் என்று தெரிய வில்லையே? ச்சே... ச்சே... நான் வீட்டிலிருந்து பேசவில்லை. நல்ல வேளை! கல்யாணியின் முன்னிலை யில் பேசிக் கொண்டிருக்கிறாயா என்று கேட்காமல்

போனாயே? அது கூட தெரியாதா எனக்கு?'' போனை வைத்து விட்டான்.

ஸ்ரீகல்யாணி இன்னும் திகைப்பிலிருந்து மீள வில்லை. சத்யன் அவளை நோக்கி திரும்பினான். ''இவ்வளவு நாட்களாக நான் சொல்லி வந்த எந்த விஷயத்தையுமே நீ நம்பவில்லை. கல்யாணி! அதனால் தான் ருசுவுக்காக இத்தனை நாளாக காத்திருந்தேன். கார்த்திகேயனின் உண்மை சொரூபம் இப்பொழுது சாட்சியங்களோடு கிடைத்து விட்டது'' என்று சுருக்கமாக எல்லாவற்றையும் சொன்னான்.

கார்த்திகேயன் வீட்டுக்கு வருவதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. சத்யன் எழுந்து நின்றபடி சொன்னான். ''கார்த்திகேயன் பிரதாப்பின் ஆள்தான் கல்யாணி! அவனும் அனுஜாவும் காதலர்கள். அந்தமானில் தேனிலவை கழித்தார்கள். இப்பொழுது அந்தப் பெண் இதே ஊரிலேயே ஹோட்டலில் மாறு பெயரில் தங்கியிருக்கிறாள். அது உனக்குத் தெரிய வேண்டும் என்றுதான் உன் முன்னிலையில் கார்த்திகேய னுடன் போனில் பேசினேன். இப்போ நீ செய்ய வேண்டிய தெல்லாம் கார்த்திகேயனுக்கு அந்தப் பெண் போன் செய்யும் போது எக்ஸ்டென்ஷனில் கேட்பது தான். அத்துடன் அவர்கள் ஆடும் நாடகம் முழுவதும் வெளிப்பட்டுவிடும்.''

கல்யாணியின் முகம் வெளிறிப் போய் விட்டது. ''என்னால் நம்ப முடியாது. நான் நம்ப மாட்டேன்'' என்றாள். மறுப்பது போல் தலையை அசைத்துக் கொண்டே.

''இவ்வளவு நடந்தும் நீ நம்பாமல் போனால் என்னால் என்ன செய்ய முடியும்? போகட்டும். இதோ

இந்த கேசட்டை பாரு. அனுஜா உன் கணவனுக்கு அனுப்பிய வீடியோ காதல் தூது'' - பரிகாசமாக சொல்லிக் கொண்டே கேசட்டை வீடியோ ப்ளேயரில் போட்டான்.

டி.வி. திரையில் காட்சி தொடங்கிவிட்டது. அனுஜா கேமிராவுக்கு முன்னால் பேசிக் கொண்டிருந்தாள். பின்னால் அருவி... புறாக்கள்...

அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீ கல்யாணியின் முகத் தோற்றத்தை கவனித்தாலே புரிந்து விடும் அவள் எவ்வளவு பதற்றத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள் என்று. அவளிடம் தனக்கு வேண்டிய ரியாக்ஷனை கவனித்த பிறகு சத்யன் சொன்னான்.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் கார்த்திகேயன் வந்து விடுவான். அவன் உள்ளே வராமல் நான் பார்த்துக் கொள் கிறேன். ஒரு மணிக்கு போன் வரும். நீ உள்ளேயிருந்து அந்த உரையாடலைக் கேள். உனக்கு இன்னும் ஏதாவது சந்தேகம் ஒட்டிக் கொண்டிருந்தால் அதுவும் போய் விடும். பிறகு நீ என்ன செய்வாயோ உன் விருப்பம். நான் ஹோட்டலுக்கு போகிறேன். கார்த்திகேயன் அங்கே வந்ததுமே என்ன நடந்தது என்று உனக்கு போன் செய்கிறேன்.''

அவள் பதில் பேசவில்லை. டி.வி.யையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். சத்யன் வெளியே வந்து சோபாவுக்கு பின்னால் பார்த்தான். எல்லாம் சரியாக நடக்கும் என்பது போல் அஸ்வத்தாமன் சைகை செய்தார். அங்கேயிருந்து கீழே வந்தான். கீழே வேலைக்காரனிடம் ''கார்த்திகேயன் வந்தால் மேலே அம்மா ஒரு பத்து நிமிஷம் தன்னை யாரும் தொந்தரவு

செய்ய வேண்டாம்னு சொன்னாங்கன்னு சொல்லுங்க'' என்று போர்ட்டிகோவுக்கு வந்து காரை எடுத்துக் கொண்டு ஹோட்டல் தாஜை நோக்கிப் போய் விட்டான்.

எல்லாம் திட்டமிட்டபடியே நடந்தால் கார்த்திகேயன் கல்யாணி இருவரின் வாக்குவாதத்தை வேலைக்காரர்கள் கேட்பார்கள், கல்யாணியின் கொலைக்கு பிறகு வி.சி. ஆரில் அனுஜாவின் கேசட் போலீசாருக்கு கிடைக்கும்.

34

ஒரு மணி அடிக்க ஐந்து நிமிடங்கள் இருக்கும் போது கார்த்திகேயன் வீட்டிற்குள் நுழைந்தான்.

''மேலே அம்மா ஏதோ முக்கியமான வேலையாக இருக்காங்க. யார் வந்தாலும் தொந்தரவு செய்ய வேண்டாம்னு சொன்னாங்க.''

கார்த்திகேயன் கீழே சோபாவில் உட்கார்ந்து கொண்டான். சத்யன் சொன்ன விஷயம் அவனை கலவரப்படுத்திக் கொண்டிருந்தது. சரியாக ஒரு மணிக்கு போன் வந்தது. அவன் ரிசீவரை எடுத்துக் கொண்டான்.

மாடியில் கல்யாணி எக்ஸ்டென்ஷன் போனை கையில் எடுத்துக் கொண்டாள்.

''நான் தான் அனுஜா பேசுகிறேன். நீங்கதானா? அப்பாடா... இரண்டு மணி நேரமாக உங்களுக்காக முயற்சி செய்கிறேன்.''

''எங்கிருந்து பேசுகிறாய்?''

''தாஜ் ஹோட்டலிலிருந்து தான்.''

''உன் பெயரில் அறை இல்லை என்றார்களே?''

''உங்கள் பிரண்ட்தான் இந்த யோசனை சொன்னார். வேறு பெயரில் அறை எடுக்கச் சொன்னீங்களாமே?''

''யார் சொன்னது?''

''உங்கள் நண்பர்... உஸ்மான்.''

''என்ன?'' கார்த்திகேயனின் குரல் கீச்சென்று ஒலித்தது.

''ஆமாம். அவர்தான் விமான நிலையத்திற்கு வந்திருந்தார். நீங்கள் அனுப்பியதாக சொன்னார்.''

''வேறொன்றும் சொல்லாதே. நான் உடனே கிளம்பி அங்கே வருகிறேன்.'' கார்த்திகேயன் போனை வைத்து விட்டான். ஹாலைத் தாண்டி போர்ட்டிகோவிலிருந்த கார் அருகில் வந்தான்.

அதற்குள் மாடியிலிருந்து மணியடித்த சத்தம் கேட்டது. கார்த்திகேயன் காரில் அமர்ந்து ஸ்டார்ட் செய்யப் போன பொழுது வேலைக்காரன் ஓடி வந்து ''அம்மா உங்களைக் கூப்பிடறாங்க'' என்றான்.

''அரை மணியில் வரேன்னு சொல்லு'' சொல்ல நினைத்தவன் மனதை மாற்றிக் கொண்டு காரை விட்டு இறங்கி மாடிக்குப் போனான்.

கல்யாணியின் கையில் இன்னும் போன் அப்படியே இருந்தது. ''யார் பேசினாங்க உங்களுடன் இப்பொழுது?'' நேரிடையாக கேட்டாள்.

''எல்லாவற்றையும் கேட்டாயா?'' வியப்படைந்த வனாக கேட்டான்.

''கேட்டேன். அதனால்தான் கேட்கிறேன்.''

''என்னைக் கேட்டிருந்தால் எல்லாவற்றையும் சொல்லியிருப்பேனே? இப்படி மறைவாக கேட்பது தவறு இல்லையா?''

'தவறு' என்ற வார்த்தையைக் கேட்டதுமே அவள் பொங்கி வெடித்தாள். ''மனைவி இருக்கும் போது இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக் கொள்வது தவறு இல்லையா?'' திருப்பிக் கேட்டாள்.

அவன் உரத்த குரலில் ''கல்யாணி!'' என்று கத்தினான்.

அவன் இவ்வளவு உரத்த குரலில் கத்தி அவள் கண்டதில்லை. சமாளித்துக் கொண்டே குரலை மேலும் உயர்த்தி ''ஏன்? நீங்கள் செய்தது உங்களுக்கு தவறாக தோன்றவில்லையா?'' என்றாள்.

''என்னைப் போக விடு கல்யாணி! வந்ததும் எல்லாவற்றையும் சொல்கிறேன்.''

''இல்லை. என்னிடம் சொல்லி விட்டுத்தான் போகணும்.''

''அவ்வளவு நேரம் இல்லை.'' வாசலைத் தாண்டிக் கொண்டே சொன்னான் அவன்.

''நில்லுங்கள்.'' பெரிதாக கத்தினாள் அவள். ''என்னால் நகர முடியாது என்பதாலும், நடைப்பிணமாக இப்படியே கட்டிலோடு கிடக்கிறேன் என்பதாலும்தானே உங்களால் போக முடிகிறது?'' கோபமும் இயலாமையும் கலந்த குரலில் உலுக்கி எடுத்தாள்.

கார்த்திகேயன் அவளை நெருங்கி வந்து தலைமீது பரிவுடன் கையை வைத்தான். ''ஆவேசப்படாதே ப்ளீஸ்!'' என்றான்.

அவள் அவன் கையை தட்டிவிட்டாள். அவன் அவளை ஒரு வினாடி பார்த்து விட்டு, வெளியே நடந்தான்.

அந்த வீட்டில் முதல் முறையாக ஒலித்த கணவன் மனைவியின் சண்டையை வேலைக்காரர்கள் கீழேயிருந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று உரையாடல் நின்று போனதையும் கூட கவனித்தார்கள்.

அந்த நிசப்தத்திலிருந்து கார்த்திகேயன் விடு விடென்று ஒரு நிமிஷம் கழித்து படியிறங்கி காரில் ஏறிக் கொண்டு விர்ரென்று போனதை வாயைத் திறந்தபடி பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்கள்.

அந்த வீட்டில் மழைபெய்து ஓய்ந்தாற் போல் திடீரென்று நிசப்தம் நிலவியது. சோபாவுக்கு பின்னாலிருந்த அஸ்வத்தாமன் துப்பாக்கியுடன் எழுந்து கொண்டார்.

★

சமயம் என்பது கணிதத்தில் சைபரை போன்றது. சாதாரணமாக அதற்கு எந்த மதிப்பும் கிடையாது. சில சமயம் அது வாழ்க்கையையே தலைகீழாக மாற்றி விடும்.

அஸ்வத்தாமன் ஸ்ரீகல்யாணியின் அறைக்குள் நுழைவதற்கு ஒரு வினாடி தாமதிக்காமல் இருந்திருந்தால் அவர் பீட்டரின் கண்ணில் பட்டிருப்பார். அதுவே அஸ்வத்தாமன் மேலும் ஒரு வினாடி முன் கூட்டியே அந்த அறைக்குள் நுழைந்திருந்தால் ஸ்ரீகல்யாணியின் கொலை நடந்து முடிந்திருக்கும்.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. அஸ்வத்தாமன் கதவைத் திறக்கப் போனபொழுது பின்னாலிருந்து பீட்டரின் காலடியோசை படிக்கட்டுகளில் கேட்டது. சட்டென்று திரும்பிவந்து மறுபடியும் சோபாவுக்கு பின்னால் மறைந்து கொண்டார்.

பீட்டர் நேராக கல்யாணியின் அறைக்குள் நுழைந்தான். படுக்கையில் உட்கார்ந்திருந்த ஸ்ரீகல்யாணி கதவுச் சத்தம் கேட்டு தலையை திருப்பிப் பார்த்தாள். அவளைப் பார்த்ததுமே பீட்டர் நடுங்கினான். காரணம் தெரியவில்லை. ஏனோ முதுகுத் தண்டு சிலிர்த்தது. அஸ்தமிக்கும் சூரியனை விட அவள் முகம் சிவந்திருந்தது. ஹாலில் வேலைக்காரர்களின் முகத் தோற்றத்தை பார்க்கும் போதே ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது. உள்ளே போய் கல்யாணியை பார்த்ததுமே அந்தச் சந்தேகம் உறுதியாகி விட்டது.

''உங்களை நான் சீஃப் விஜிலென்ஸ் ஆபீசராக நியமிக்கும் போதே சொன்னேன், உங்கள் வேலை என் தொழிற்சாலைகளின் மீது கண்காணிப்பு மட்டுமே இல்லை, என்னைச் சார்ந்தவர்கள் மீதும் கூட என்று, இல்லையா?''

பீடிகை எதுவும் இல்லாமல் அவள் கேட்ட கேள்விக்கு தடுமாற்றம் அடைந்த பீட்டர் ''ஆமாம் மேடம்'' என்றான்.

''பின்னே நீங்கள் என்னை சுற்றிலும் நடந்து கொண்டிருக்கும் எந்த விஷயத்தையும் என்னிடம் ஏன் சொல்லவில்லை? அசல் நீங்க எந்த விஷயத்தையாவது இதுவரையில் துப்புத் துலக்கியிருக்கீங்களா?''

''எந்த ஆதாரமும் இல்லாமல் உங்களிடம் வந்து அவர்களைப் பற்றி குற்றம் சாட்டினால், அவங்க சாமர்த்தியமா திசை திருப்பி விட்டு, இன்னொரு வழியில் உங்களைத் தாக்கக் கூடிய ஆபத்து ஏற்படக் கூடும் என்று நினைத்தேன். அந்த முயற்சியில் என்னையும் வழியி லிருந்து நீக்கிவிடக் கூடும் என்று பயந்தேன். சாட்சியங்கள் இல்லாமல் போனால் நான் சொல்வதை விட மற்றவர்கள் சொல்வதற்குத்தான் அதிகமாக மதிப்பு கொடுப்பீங்கன்னு நினைத்தேன்.''

''நினைத்தேன் நினைத்தேன் என்று எல்லா வற்றையும் நீங்களே நினைத்துக் கொண்டு விட்டால் போதுமா? யாரைப் பற்றி நீங்க நினைத்தீங்க? யாரைப் பற்றி என்னிடம் சொல்வதாக இருந்தீங்க?''

''சத்யனைப் பற்றி.''

வெடிகுண்டு மேலே விழுந்து வெடித்தாற் போல் அவள் அதிர்ந்து விட்டாள், அந்த பதிலைக் கேட்டு. ''ச... சத்யனைப் பற்றியா?'' என்றாள்.

''ஆமாம்'' என்றான் பீட்டர். ''பிரதாப்பும் சத்யனும் சேர்ந்து உங்களை கொலை செய்ய வேண்டும் என்று ரொம்ப நாட்களாக திட்டம் போட்டு வைத்திருந்தார்கள். உங்களைக் கொலை செய்தால் அந்தக் குற்றம் தன் மீது வந்து விடும் என்று சத்யன் பயந்தான். இதற்கிடையில் உங்களுக்கும் கார்த்திகேயனுக்கும் திருமணம் நடந்து விட்டதால் அவர்களின் பாடு திண்டாட்டமாகிவிட்டது. இவரையும் சேர்த்துக் கொலை செய்தாலும் சொத்துக்கு வாரிசு சத்யன் என்பதால் குற்றம் அவன் மீதுதான் விழும் என்று நினைத்தார்கள். அதனால் உங்களையும் கார்த்திகேயனையும் பிரித்து விட முயன்றார்கள்., பிரதாப்

உங்களை கொலை செய்ய வந்த போது சத்யன் காப்பாற்றியது போல் நடித்தது அவர்களுடைய திட்டத்தின் ஒரு பகுதிதான். அது மட்டுமே இல்லை. அன்றைக்கு நீங்கள் சாப்பிட்ட இறால் உணவில் விஷம் கலந்தது கூட பிரதாப்பின் கைவரிசை தான். இதற்கு சம்பந்தப்பட்ட ஆடியோ கேசட் ஒன்று கிடைத்தது. ஆனால் அதில் அஸ்வத்தாமனின் குரல் ஒன்று மட்டும்தான் சாட்சியமாக இருக்கிறது. அதன் மூலம் சத்யன்மீது எந்தக் குற்றமும் நிரூபணமாகாது.''

கல்யாணியால் இதையெல்லாம் நம்பவே முடியவில்லை.

பீட்டர் மேலும் சொன்னான். ''அதனால்தான் நான் இன்னும் கொஞ்ச நாள் காத்திருக்கலாம் என்று நினைத்தேன். காத்திருந்தால் அவர்கள் மேலும் சில தவறுகள் செய்வார்கள்.''

அவள் இன்னும் தேறிக் கொள்ளவில்லை.

''பிரதாப்பின் உண்மை சொரூபத்தை எல்லோருக்கும் முன்னாலேயே கண்டு கொண்டவர் கார்த்திகேயன். அதனால்தான் அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். அதன்மூலமாக அவர்களின் திட்டங்களுக்குக் கொஞ்சம் தடை ஏற்பட்டது.''

ஸ்ரீகல்யாணி அதற்குள் அதிர்ச்சியிலிருந்து மீண்டு விட்டாள். ''நீங்கள் சத்யனைப் பற்றி என்னை முன்பே எச்சரித்து இருக்கணும்'' என்றாள் தனக்குள் பேசிக் கொள்வது போல்.

''ஒரு கால் என்னை நம்பி நீங்கள் சத்யனை விட்டு விலகியிருந்தாலும் அவர்கள் வெளியே இருந்து கொண்டே

உங்களை தாக்கக் கூடும் என்று நினைத்தேன். அவர்களை கம்பி எண்ண வைப்பது ஒன்று தான் வழி. இன்றைக்குக் கூட நீங்கள் இப்படி உலுக்கி எடுத்திருக்காவிட்டால் சத்யனைப் பற்றிச் சொல்லியிருக்க மாட்டேன்.''

அவள் மெதுவாக நிமிர்ந்தாள். ''நான் இதுவரை உங்களை உலுக்கி எடுத்தது சத்யனைப் பற்றி அல்ல. என் கணவன் கார்த்திகேயனைப் பற்றி'' என்றாள்.

இந்த முறை திக்பிரமை அடைவது பீட்டரின் பங்காகி விட்டது. அவனுக்கு கார்த்திகேயன்பால் இருக்கும் மதிப்பு வேறு யார் மீதும் இல்லை. ''கார்த்திகேயனைப் பற்றியா?'' என்றான். கார்த்திகேயன் பற்றி தவறாக பேசினால் கண்பார்வை போய் விடும் என்ற அளவுக்கு நம்பிக்கை அவனுக்கு.

''ஏன்? கார்த்திகேயன் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாதா?'' என்றாள்.

''தெரியும். அவர் அளவுக்கு உயர்ந்த மனிதன் வேறு ஒருத்தர் இருக்க முடியாது.''

''அதைத் தவிர வேறொன்றும் தெரியாது என்று சொல்றீங்க. அப்படித்தானே?''

''தெரியாது.''

''தெரியாதா?'' அவள் திடீரென்று குரலை உயர்த்தினாள். ''உங்களுக்கு அனுஜாவைப் பற்றி தெரியாதா? இருவரும் சிம்லாவுக்கு போனது தெரியாதா? அங்கிருந்து அந்தமானுக்கு போனதும் தெரியாதா?'' கேட்டுவிட்டு நிமிர்ந்தாள். அவள் பார்வை அவனை துளைத்துக் கொண்டு போயிற்று. ''அதே அனுஜா இப்பொழுது இதே ஊரில் ஒரு

பெரிய ஹோட்டலில் ரஜிதா என்ற பெயரில் தங்கியிருப்பது தெரியாதா? தற்சமயம் கார்த்திகேயன் அங்கே போயிருக்கிறார். அது கூட தெரியாதா?''

பீட்டர் உடனே பதில் சொல்லாமல் மெதுவாக சொன்னான். ''அனுஜா ஹோட்டலில் தங்கியிருக்கிறாள் என்று தெரியும். ரஜிதா என்ற பெயரில் அறை எடுத்துக் கொண்டதற்கு காரணம் கார்த்திகேயன் இல்லை.''

''கார்த்திகேயன் இல்லை என்று எனக்கும் தெரியும். தன்னுடைய நண்பனை அனுப்பி செய்திருக்கிறார்.''

''அது கூட உண்மை இல்லை மேடம். அஸ்வத்தாமன் என்ற டாக்டர் உஸ்மான் என்ற பெயரை வைத்துக் கொண்டு அவளிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்'' என்று சொன்னான்.

அவள் அளவு கடந்த ஆச்சரியத்துடன் ''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''பல நாட்களாக அந்த மூவரையும் எங்கள் ஆட்கள் நிழலாக கண்காணித்து வருகிறார்கள் மேடம்.'' பீட்டர் எல்லாவற்றையும் விவரமாக சொல்லத் தொடங்கினான்.

சோபாவுக்கு பின்னால் மறைந்து கொண்டிருந்த அஸ்வத்தாமனுக்கு வியர்த்துக் கொட்டத் தொடங்கியது. உள்ளே பீட்டர் என்ன பேசிக் கொண்டிருக்கிறானோ என்ற பதற்றம் ஒரு பக்கம். அதுவரை இருந்த தைரியம் பீட்டரைப் பார்த்ததும் பயமாக மாறியது.

மேலும் இரண்டு நிமிடங்கள் அப்படியே இருந்து விட்டு இனி பொறுத்துக் கொள்ள முடியாமல் ஜன்னல் அருகில் வந்தார். அது ஏ.சி. அறை என்பதால் ஜன்னல்

கதவுகள் சாத்தியிருந்தன. உள்ளே உரையாடல் தெளிவில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

பீட்டர் சொல்லிக் கொண்டிருந்தான். ''சத்யனைப் பற்றி நான் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். அடிக்கடி ஹெலுசினேஷனுக்கு ஆளாகும் சுபாவம் அவனுடையது. அதற்காகத்தான் சைக்கியாடிரிஸ்ட் அஸ்வத்தாமனிடம் போனான். அந்த விதமாக ஏற்பட்ட அறிமுகம் மேலும் வளர்ந்து கடைசியில் இவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டது.''

''அந்த மூவரையும் எப்படி கையாளுவது என்று எனக்குத் தெரியும். நான் யோசிப்பது அதைப் பற்றி இல்லை'' என்றாள், அப்படிப்பட்ட அற்பமானவர்களைப் பற்றி யோசிப்பது கூட வியர்த்தம் என்பது போல். ''எனக்குத் தெரியாமல் எனக்குப் பின்னால் இவ்வளவு நடந்திருக்கிறது. அதுதான் என்னை வேதனைப்படுத்து கிறது. அஸ்வத்தாமன் போய் தன்னை கார்த்திகேயனின் நண்பனாக அறிமுகம் செய்து கொண்டு இருக்கிறார் என்றால், நமக்குத் தெரியாமல் இதில் ஏதோ சதி நடந்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம். பீட்டர்! நான் ஹோட்டல் தாஜுக்கு போகணும். டிரைவரை ரெடியாக இருக்கச் சொல்லுங்கள்'' என்றாள்.

பீட்டர் அதிர்ச்சி அடைந்து ''நீங்கள் ஹோட்டலுக்கா?'' என்றான்.

''ஆமாம். ஏன்? சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு போகவில்லையா?'' அது போலத்தான்.''

''அதில்லை மேடம்! எதுக்கு என்றுதான்-''

''அனுஜாவுக்காக ஒருத்தர் விமான நிலையத்திற்குப் போனது, சத்யன் என் எதிரிலேயே கார்த்திகேயனுக்கு

போன் செய்தது... இதை எல்லாம் பார்க்கும் போது எதிரிகள் ஏதோ பெரிய திட்டத்திற்கு வலை விரித் திருப்பார்கள் என்று தோன்றுகிறது.''

''ஆனால் நீங்கள் அங்கே போவது-'' மென்று விழுங்கினான்.

''பீட்டர்! இவ்வளவு நாளாக நான் கணித்து எடை போட்டது என்றுமே தவறியதில்லை. ஏதோ நடக்கப் போகிறது.'' டிரைவரை அழைப்பதற்காக இண்டர்காமை எடுத்துக் கொண்டாள்.

ஜன்னலுக்கு பக்கத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அஸ்வத்தாமனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவள் அங்கே போகப் போவது உறுதி என்று தெரிந்த பிறகு தான் அங்கே இருந்து கொண்டு செய்யப் போவது ஒன்றுமில்லை என்று தோன்றியது. அதோடு அவள் வெளியே போன பிறகு தான் வெளியேறுவது கஷ்டம்.

உள்ளே பீட்டர் சொன்னான். ''மேடம்! இன்னொரு முறை யோசித்துப் பாருங்கள். அவர்கள் இரண்டு பேரும் அங்கே இருக்கும் போது நீங்கள் போனால் நன்றாக இருக்காது. நாளைக்கு யாருக்காவது இந்த ரகளை பற்றி தெரிந்துவிட்டால் கேலிக் கூத்தாகிவிடும். வேண்டு மென்றால் அந்தப் பெண்ணைப் பற்றி உங்கள் கணவர் வீட்டுக்கு வந்த பிறகு உலுக்கி எடுத்து விசாரித்துக் கொள்ளுங்கள்.''

ஒரு கையால் இண்டர்காமைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கையால் டிரைவரைக் கூப்பிடுவதற்காக பட்டனை அழுத்தப் போன ஸ்ரீகல்யாணி அப்படியே நின்று பீட்டரை எந்த உணர்ச்சியும் இல்லாமல் பார்த்தாள். பிறகு

தாழ்ந்த குரலில் ''எதற்காக உலுக்கி எடுக்கணும் பீட்டர்? நீங்க என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டு இருக்கீங்க? எனக்குப் பின்னால், எனக்குத் தெரியாமல் இதெல்லாம் நடக்கிறதே என்ற கோபம்தானே தவிர கார்த்திகேயனும் அனுஜாவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பினால், கூடாது என்று நான் அவர்களை தடுத்து விடுவேனா? மனித தொடர்புகள் எல்லாமே வியாபாரம் போல் கொடுக்கல் வாங்கல்கள்தான் என்று நம்பி வந்த நான், என் கணவரின் சகவாசத்தில் அந்த அபிப்பிராயம் தவறு என்று நினைக்கத் தொடங்கிய தருணத்தில் 'இல்லை. உன் அபிப்பிராயம்தான் சரியானது' என்று என் கணவரே நிரூபிக்கப் போகிறார் என்றால் நான் மறுப்பேனா? எதற்கும் உதவாத ஒரு கட்டையுடன் குடித்தனம் நடத்துவதை விட அவரை ஈர்க்கக் கூடிய ஒரு உயிருள்ள சிற்பத்தை திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்றால் நான் எதற்காக மறுக்கப் போகிறேன்? இவ்வளவு சின்ன விஷயம் எனக்குத் தெரியாமல் நடக்கிறதே, இவ்வளவு நாளைய சகவாசத்தில் என் வாழ்க்கை தியரிகளை என் கணவர் புரிந்த கொள்ளவில்லையே என்று தான் வருத்தப்படுகிறேனே தவிர...'' என்று மேலே பேச முடியாமல் பாதியில் நிறுத்தினாள்.

அவள் முகத் தோற்றத்தை கவனிக்க விரும்பினான் பீட்டர். ஆனால் அவள் அந்தப் பக்கமாக திரும்பி டிரைவருடன் பேசிக் கொண்டிருந்ததால் முகம் தென்படவில்லை.

வெளியே இருந்து கேட்டுக் கொண்டிருந்த அஸ்வத்தாமனுக்கு மட்டும் மூச்சே நின்று விடும் போல் இருந்தது. இந்தத் திருப்பத்தை அவர் எதிர்பார்க்கவில்லை. இதற்குள் சத்யன் அனுஜாவை சந்தித்திருப்பான் என்று அவருக்குத் தெரியும். இப்பொழுது இங்கே கதை இப்படி

திரும்பி விட்டது. அனுஜாவை ஸ்ரீகல்யாணி சந்தித்து விட்டால் எல்லா குட்டும் வெளிப்பட்டு விடும். சத்யன் சாட்சியாதாரங்களுடன் பிடிபட்டு விடுவான்.

அஸ்வத்தாமன் மேலும் தாமதம் செய்யவில்லை. மளமளவென்று படியிறங்கி கீழே போனார். மேலே வந்து கொண்டிருந்த டிரைவரை தாண்டிக் கொண்டே, அதுவரை மேலே பேசிக் கொண்டிருந்த விசிட்டரைப் போல வெளியேறினார். காரில் உட்கார்ந்து கொண்டு வேகமாக ஓட்டினார். சத்யனை சந்திக்க வேண்டும் என்ற பரபரப்புடன் அம்பாக பறந்து கொண்டிருந்தார். சத்யன் அனுஜாவைச் சந்தித்து எல்லா விஷயங்களையும் சொல்வதற்கு முன்னாடியே, தன்னால் கல்யாணியை கொலை செய்ய முடியவில்லை என்பதை தெரிவித்துவிட வேண்டும் என்பது அவருடைய உத்தேசம்.

அதனால் மிகவும் பதற்றத்துடன் காரை ஓட்டத் தொடங்கினார். சாலையில் தென்பட்ட போலீஸ்காரர்களை பார்த்ததும் அவருடைய கலவரம் மேலும் அதிகரித்து விட்டது. கொலை செய்யணும் என்று பிரதாப் சொன்ன போதே முதலில் அவர் கலவரமடைந்து ''என்னால் முடியாது'' என்றார். சத்யன் ஏறக்குறைய அவரை அடித்து விட்டு ''சும்மாவே சொத்தில் பங்கு கிடைத்து விடும் என்று நினைத்தாயா?'' என்று மிரட்டி இந்தக் காரியத்திற்குச் சம்மதிக்க வைத்தான்.

பிரதாப் கம்ப்யூட்டர் லெவலில் கணக்கு போட்டு யார் யார் எந்தெந்த சமயத்தில் எந்தக் காரியம் செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டார். இந்த விவகாரம் முழுவதும் தன் காரணமாக பாழடைந்து விட்டதால் அஸ்வத்தாமன் குழப்பமடைந்தார்.

போலீசார் காரை நிறுத்தச் சொல்லி ஜாடை காட்டியதும் ஒரு ஓரமாக கொண்டு வந்து காரை நிறுத்தினார். போலீஸ்காரர் ஒருத்தர் அருகில் வந்து ''காரை செக் செய்யணும் சார்'' என்றார்.

''எதுக்கு?''

''நக்ஸலைட் பந்த். எல்லோரையும் நிறுத்தி செக் செய்து கொண்டிருக்கிறோம்.''

எல்லோரையும் என்றதும் தைரியம் வந்தது அஸ்வத்தாமனுக்கு. ''நான் ஒரு சைக்கியாடிரிஸ்ட். என் பெயர் அஸ்வத்தாமன்.''

அந்தப் போலீஸ்காரர் சிரித்து விட்டு ''சக்கியாடிரிஸ்ட் நக்ஸலைட்டாக இருக்கக் கூடாது என்று சட்டம் ஒன்றும் இல்லையே'' என்று பரிசோதிக்கத் தொடங்கினார்.

காரில் ஒன்றும் கிடைக்கவில்லை. அஸ்வத்தாமன் மறுபடியும் காரில் ஏறி உட்காரப் போன பொழுது ''ஒரு நிமிஷம்'' என்று ஜேபிகளை சோதித்தார். பேண்ட் ஜேபியில் கிடைத்தது துப்பாக்கி.

துப்பாக்கியை பார்த்ததும் கலவரமடைந்த போலீஸ்காரர் பெரிதாக விசில் ஊதினார். மற்ற போலீசார் ஓடி வந்தார்கள். அது வரை அதைப் பற்றியே மறந்து போயிருந்த அஸ்வத்தாமன் அதைப் பார்த்துவிட்டு பாம்பை மிதித்து விட்டது போல் நடுங்கி விட்டார்.

''யாருடைய துப்பாக்கி?''

''என்... என்னோடதுதான்.''

''லைசன்ஸ் இருக்கா?''

''இருக்கு?''

''எங்கே எடுத்துக் கொண்டு போறீங்க?''

''ஹோட்டலுக்கு.''

போலீஸ்காரர் வியப்படைந்து ''ஹோட்டலுக்கா?'' என்றார்.

அதற்குள் அவருக்கு பிரதாப் பற்றிய நினைவு வந்தது. அவர் கூட ஒரு காலத்தில் போலீஸ் டிபார்ட்மெண்ட்தான். அதைச் சொல்லாமல் வீணாக தன்னுடையதுதான் என்று சொல்லி விட்டோமே என்று நொந்து கொண்டே ''பிரதாப் சாரை தெரியுமா? ஒரு காலத்தில் உங்கள் டிபார்ட்மெண்டில் பெரிய அதிகாரி.''

''அதனால் என்ன?''

''அவர் என்னுடைய நண்பர். இந்தத் துப்பாக்கி அவருடையதுதான்.''

''பின்னே உங்களுடையது என்று சொன்னீங்களே?''

''அவர்தான் என்னிடம் தந்தார்.''

''நீங்கள் எங்களுடன் காவல் நிலையத்திற்கு வரவேண்டியிருக்கும். நீங்கள் சொல்கிற விஷயங்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தாமல் இருக்கு. லைசன்ஸ் இருக்கு என்று சொல்றீங்க மறுபடியும் இது என்னுடையது இல்லை என்று சொல்றீங்க.''

''ஆனால் பிரதாப்...''

''அவரையும் வரவழைக்கிறோம்.'' போலீஸ்காரர் ஒருவர் வந்து அவருடைய காரில் முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டு ''காரை ஸ்டார்ட் செய்யுங்கள்'' என்றார். அஸ்வத்தாமன் காரைக் கிளப்பினார்.

''**வ**ணக்கம். என் பெயர் சத்யன்.''

முன்பின் அறிமுகமில்லாத நபர் யாரோ உள்ளே நுழைவதை பார்த்துவிட்டு வியப்புடன் ''யார் நீங்கள்?'' என்று அனுஜா கேட்ட கேள்விக்கு சத்யன் சொன்ன பதில் அது.

''உங்களுக்கு என்ன வேண்டும்?''

''உன்னுடன் கொஞ்சம் பேச வேண்டும்.''

இந்த ஒருமை அழைப்பிற்கு அவள் நெற்றியைச் சுளித்துக் கொண்டே ''என்ன பேசணும்? நீ யார்?'' என்று கேட்டாள்.

''உங்க அக்கா உயிருடன் இருந்திருந்தால் உனக்கு அத்தான் முறை ஆகியிருப்பேன். இப்பொழுது அந்த விஷயத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லை.'' உரிமையுடன் சோபாவில் உட்கார்ந்து கொண்டே சொன்னான். ''என்னிடம் அதிக நேரம் இல்லை. நீ போனில் பேசியதை கேட்டு விட்டு கார்த்திகேயன் புறப்பட்டிருப்பான். அவன் இங்கே வந்து சேருவதற்குள் இந்த பேரத்தை செட்டில் செய்து விட வேண்டும்.''

''என்ன பேரம்? நான் போன் பேசிய விஷயம் உனக்கு எப்படித் தெரியும்?''

''உன்னை விமான நிலையத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த ஆள் சொன்னான். அதெல்லாம் எதுக்கு? முதலில் விஷயத்தைச் சொல்கிறேன், கேட்டுக் கொள். நீ காதலித்த கார்த்திகேயனின் மனைவி எனக்கு உறவு முறையில் மாமன் மகள். ஒரு விதத்தில் சொல்லணும் என்றால் நடுவில் கார்த்திகேயன் வராமல் இருந்திருந்தால்

இந்தச் சொத்து முழுவதும் என்னுடையதாகி யிருக்கும் என்று அர்த்தம்.''

''சரி. விஷயத்தைச் சொல்லு.''

''அதற்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன்.'' சத்யன் மெதுவாக சொன்னான். ''நீயும் கார்த்திகேயனும் நல்ல ஜோடியாக இருப்பீங்க. அந்த விஷயம் எனக்குத் தெரியும். உங்களுக்கு நான் தடையாக இருக்க மாட்டேன். நீங்கள் இருவரும் கல்யாணம் செய்து கொண்டு இங்கிருந்து போய் வட்டால் சந்தோஷப்படக்கூடிய முதல் நபர் நான்தான். வேண்டுமென்றால் உங்கள் கல்யாணத்திற்கு சாட்சி கையெழுத்து கூட போடுகிறேன்.''

''அப்படிப்பட்ட தேவை எதுவும் எனக்கு இல்லை.''

''எனக்கு இருக்கிறது.'' சத்யன் சிரித்தான். ''இந்தச் சொத்து தனக்கு தேவையில்லை என்றும் சத்யனுக்கு தந்து விடுகிறேன் என்றும் கார்த்திகேயன் பேப்பரில் எழுதி ரிஜிஸ்டர் செய்து தர வேண்டும். நீயோ அமைச்சரின் மகள்; உங்க அப்பா கோடிக் கணக்கில் சேர்த்து வைத்திருக்கிறார். இந்தப் பணம் உங்களுக்கு இனி தேவையில்லை. அதனால் கல்யாணியின் சொத்தை எனக்கு விட்டுக் கொடுத்து விடு. உனக்கு அவள் கணவனை விட்டுத் தருகிறேன்.''

''உனக்கு புத்தி பிசகி விட்டது. ஸ்ரீகல்யாணியின் சொத்தை கார்த்திகேயன் உனக்கு எழுதி வைப்பதாவது?''

சத்யன் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். ஒரு மணி பத்து நிமிஷம் ஆகியிருந்தது. நிமிர்ந்து அனுஜாவைப் பார்த்துச் சிரித்தான். ''சரியாக ஒரு நிமிஷத்திற்கு முன்னாடி கல்யாணி மரணமடைந்து விட்டிருப்பாள். அவளுடைய சொத்துக்கு கார்த்திகேயன் வாரிசாகியிருப்பான்'' என்றான்.

அனுஜா திகைத்துப் போனாள். ''என்ன?'' என்றாள் தெளிவு இல்லாமல்.

''அதெல்லாம் எங்களுக்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள். இப்பொழுது நான் சொல்ல வந்தது என்ன வென்றால் கல்யாணியின் கொலை நடந்தது முதல் சந்தேகம் கார்த்திகேயன் மீது தான் போகும். ஆனால் உண்மையில் அந்தக் கொலையைச் செய்தது அஸ்வத்தாமன். உன்னிடம் 'உஸ்மான்' என்று அறிமுகம் செய்து கொண்டவன் கூட அவன்தான். இப்பொழுது நீ எங்களுடன் ஒத்துழைத்தால் நாங்களே அஸ்வத்தாமனை போலீசாரிடம் பிடித்துக் கொடுத்து விடுவோம். அந்தத் துப்பாக்கி யாருடையது என்றும், அவனுக்கு அது எப்படி கிடைத்தது என்று விவரங்களையும் சொல்லி தூக்கு மேடைக்கு அனுப்பி வைத்து விடுகிறோம். அதை நானும் பிரதாப்பும் சேர்ந்து பார்த்துக் கொள்கிறோம். அஸ்வத்தாமன் தூக்கு மேடைக்கும், நீங்கள் தேன் நிலவு கொண்டாடுவதற்கு சிம்லாவுக்கும் போய் விடலாம். என்ன சொல்கிறாய்?''

அவள் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளாதவளாக பேசாமல் இருந்தாள். சத்யன் மேலும் சொன்னான்.

''இதில் யோசிப்பதற்கு எதுவும் இல்லை. இதை விட நல்ல வாய்ப்பு உனக்குக் கிடைக்காது. கல்யாணியின் சொத்தை விட்டுக் கொடுப்பதற்கு உனக்கு என்ன ஆட்சேபணை? உனக்குத்தான் உன் காதலன் கிடைத்து விடுகிறானே?''

அவள் அதைப் பொருட்படுத்தாமல் ''கல்யாணி இறந்து விட்டாளா?'' என்றாள் தனக்குள் சொல்லிக் கொள்வது போல்.

''இதற்குள் சாகவில்லை என்றால் இன்னும் ஒரு மணி நேரம் கழித்துக் கொன்று விடுவோம். அது ஒரு பிரச்னை இல்லை. கல்யாணியின் சாவுக்குக் காரணம் கார்த்திகேயன் தான் என்ற சந்தேகம் போலீசாருக்கு ஏற்படும். நீ டில்லியிலிருந்து இங்கே வந்ததும், ரஜிதா என்ற பெயரில் ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டதும், கணவன் மனைவி சண்டை போட்டுக் கொண்டதை வேலைக்காரர்கள் கேட்டதும்... போதும், கார்த்திகேயனுக்குத் தண்டனை கிடைத்து விடும். நீங்கள் இருவரும் சேர்ந்து தான் இந்தக் கொலையைச் செய்தீர்கள் என்ற முடிவுக்கு ஜட்ஜ் வந்து விடுவார்.''

அவள் தூக்கத்தில் இருந்தாற் போல் இன்னும் சுதாரித்துக் கொள்ள முடியாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கழுத்து வரையில் புதைகுழியில் சிக்கிக் கொண்டிருக்கீங்க நீங்கள் இருவரும். இதிலிருந்து மீள வேண்டும் என்றால் நான் சொன்னது ஒன்றுதான் வழி.''

''இல்லா விட்டால்?''

சத்யன் எரிச்சலடைந்தவனாக, ''எத்தனை தடவை சொல்லுவது? கார்த்திகேயனை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றால் நீ இந்தக் காரியத்தைச் செய்துதான் ஆகணும்'' என்றான்.

''இன்னொரு காரியத்தைச் செய்து கூட கார்த்திகேயனைக் காப்பாற்றலாம்.''

''எப்படி?''

''கல்யாணியை நான்தான் கொலை செய்தேன் என்று சொல்வதன் மூலம்.''

சத்யன் வாயடைத்துப் போய் விட்டான்.

அனுஜா சிரித்தாள். ''ஏன்? இந்த யோசனை நன்றாக இல்லையா?'' என்றாள்.

''நீ என்ன பேசுகிறாய் என்று புரிந்து தான் பேசுகிறாயா?'' பற்களை நறநறவென்று கடித்தான்.

''கார்த்திகேயனை பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது போலிருக்கு. எனக்கு நன்றாக தெரியும். மனைவி இறந்து போய் விட்டாள் என்று தெரிந்தால் அவர் சாதாரண மனிதனாக இருக்கமாட்டார். அது முதல் விஷயம். இப்படிப்பட்ட பிளாக் மெயிலுக்கு பயந்து கையெழுத்துப் போட மாட்டார். அது இரண்டாவது விஷயம்.''

''போடாவிட்டால் தூக்கு மேடை ஏறுவான்.''

''ஏற மாட்டார். விஷயம் அவ்வளவு தூரத்திற்கு வந்தால் நான் அவரைக் காப்பாற்றுவேன்.''

சத்யனிடம் சைகிக் லட்சணங்கள் தென்படத் தொடங்கிவிட்டன. கதை இப்படி திசை திரும்பிவிடும் என்று எதிர்பார்க்கவில்லை.

''உன் வாழ்க்கையை நீயே கெடுத்துக் கொள்கிறாயா? உன் தந்தைக்கு இப்போது உயிருடன் இருக்கும் மகள் நீ ஒருத்திதான். நீயும் போய் விடப் போகிறாயா? கல்யாணம் செய்து கொண்டு சுகமாக வாழாமல் தூக்கு மேடைக்குப் போகப் போகிறாயா?'' என்று கத்தி கூச்சல் போட்டான்.

அவள் மெதுவாக சொன்னாள். ''இந்த கேஸ் கோர்ட்டுக்கு வரும் போது எப்படியும் நான் இந்த உலகத்தில் இருக்க மாட்டேன் சத்யன்! இன்னும் மூன்று நான்கு மாதங்களில் இறந்து விடப் போகிறேன். ஹார்ட்கின்ஸ் நோய் இருக்கிறது எனக்கு.''

பாதி திறந்த சத்யனின் வாய் அப்படியே நின்று விட்டது.

''இப்பொழுது சொல். என் காதலுக்கு இதை விட நல்ல நோக்கம் வேறு இருக்க முடியுமா?''

சத்யனிடம் பேரனாயிட் லட்சணங்கள் தென்பட்டன. ''கார்த்திகேயனை காப்பாற்றுவாய். ஆனால் உன் தந்தையை காப்பாற்றிக் கொள்ள முடியுமா?'' என்றான் கேலியாக. அவன் கையில் சில போட்டோக்களும், ஆடியோ, வீடியோ கேசட்டுக்களும் இருந்தன. ''உன்னுடைய அக்கா மனோஜா என்னுடைய கோர்ல்பிரண்ட். இருவருமாக சேர்ந்து வாழ்க்கையை நன்றாக அனுபவித்தோம். இதோ அந்த போட்டோக்கள். இது நீ இங்கே ஹோட்டலில் தங்கப் போவதாக எழுதிய கடிதத்தின் நகல். இவை உன் அக்கா எனக்கு எழுதிய காதல் கடிதங்கள். இப்பொழுது சொல். இதையெல்லாம் மக்களுக்கு முன்னால் கொண்டு போனால் உங்க அப்பாவின் நிலைமை என்ன? 'மத்திய அமைச்சரின் இரு மகள்களின் சிருங்கார லீலைகள்' - இந்தத் தலைப்பு எப்படி இருக்கு? இது பத்திரிகைகளில் வந்தால் உங்க அப்பாவின் பதவி என்னவாகும்? அவரால் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா?''

அனுஜா நாற்காலியை விட்டு எழுந்து நின்றாள்.

சத்யன் சொன்னான். ''சொல்லு, இப்போ உன் முடிவு என்ன? செத்துவிடப் போகிறாய். அதனால் கார்த்திகேயனுக்கு உன்னுடைய தேவையில்லை. ஆனால் சாகும் போது கூட உங்க அப்பாவுக்கு உதவி செய்ய மாட்டாயா?''

''கொஞ்சம் தண்ணி குடிக்கலாமா?''

சத்யன் பெரிதாக சிரித்தான். ''ஜீரணித்துக் கொள்ள முடியாத விஷயங்களை கேட்டதும் தண்ணீர் குடிக்கணும் போல் இருக்கா?''

அவள் டம்ளரில் நீரை ஊற்றிக் கொண்டே கேட்டாள். ''எங்க அக்காவின் விஷயம் அப்பாவுக்குத் தெரியாதா?''

''தெரியும்.''

''என்ன சொன்னார்?''

''அது உனக்குத் தேவையில்லை.''

''என்னால் ஊகித்துக் கொள்ள முடியும். மறுபடியும் வீட்டு வாசலை மிதித்தால் காலை உடைத்து விடுவேன் என்று சொல்லியிருப்பார். அப்படித்தானே? நீ ஒரு விஷயத்தை மறந்து போய் விட்டாய், நான் அவருடைய மகள் என்பதை.''

''அதனால்?''

''அதனால் என்னவா?'' என்று சொல்லிக் கொண்டே அனுஜா தண்ணீர் கூஜாவை எடுத்து அவன் தலை மீது ஓங்கி அடித்தாள். எவ்வளவு பலமாக அடித்தாள் என்றால் அந்த வேகத்திற்கு கண்ணாடித் துகள்கள் கலகலவென்று சத்தத்தோடு கீழே சிதறி விழுந்தன. சத்யன் முழங்காலிட்டு சரிந்து விழுந்தான்.

''இனி ஒரு நாளும் இப்படி டில்லி பெண்களிடம் வம்பு வைத்துக் கொள்ளாதே'' என்றாள்.

அவன் மெதுவாக எழுந்து கொண்டான். மேஜை மீது இருந்த கேசட்டை எடுத்து அவன் மீது வீசிக் கொண்டே, ''என்ன? இதன் மீது கேஸ் போடப் போகிறாயா? இது கோர்ட்டுக்கு வரும் வரைக்கும் கூட நான் உயிருடன் இருக்க மாட்டேன்'' என்றாள்.

அவன் கை பேண்ட் ஜேபிக்குள் நுழைந்தது.

''கார்த்திகேயனை ஜெயிலுக்கு அனுப்பி வைப்பாயா? நான் உயிருடன் இருக்கும் போது நடக்கிற காரியமா அது?''

அவன் சைகிக் என்ற விஷயம் அவளுக்குத் தெரியாது. ஆபத்து ஏற்படும் போது சைகிக் நோயாளிகளுக்கு அசாத்திய துணிச்சலும், பலமும் வந்து விடும்.

அவள் ஊகித்தும் பார்க்காத வேகத்தோடு ஜேபியிலிருந்து கத்தியை வெளியே எடுத்தான் சத்யன். அவளை நெருங்கி சர்ரென்று காற்றில் வீசினான். அவள் சட்டென்று பின்னால் நகர்ந்து கொண்டாள். கத்தி கையில் கீறிக் காயப்படுத்தியது. அப்பொழுதுதான் கவனித்தாள் அவள் அவனுடைய அசாத்திய துணிச்சலை.

சட்டென்று வெளியே ஓடினாள். சத்யன் அவளை பின் தொடர்ந்து அறைக்கு வெளியே வந்தான். ஸ்டார் ஹோட்டல் என்பதால் ஆளரவமற்று இருந்தது. அவள் திரும்பிப் பின்னால் பார்த்தாள். சத்யன் தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பது தென்பட்டது. லிப்டிற்காக பட்டனை அழுத்தினாள். முதல் மாடியிலிருந்த லிப்ட் மெதுவாக மேலே நோக்கி வரத் தொடங்கியது.

இந்தப் பக்கம் சத்யன் வேகமாக தன்னை நோக்கி வருவதை அவள் கவனித்தாள். தான் எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டோம் என்று அவளுக்குப் புரிந்தது. சத்யன் நெருங்கி வந்து விட்டான். லிப்ட் இன்னும் இரண்டாவது தளத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது.

சத்யன் மேலும் நெருங்கி வந்து கத்தியால் அவளைக் குத்தப் போனான். அவள் காலால் அவன் முழங்காலில்

உதை விட்டாள். வலி தாங்க முடியாமல் அவன் முனகிக் கொண்டே கீழே குனிந்தான். அதை வாய்ப்பாக பயன் படுத்திக் கொண்டு அவள் லிப்டிற்குப் பக்கத்திலிருந்த படிகளில் ஏறி மாடிக்கு ஓடினாள்.

முனகிக் கொண்டே சத்யன் மெதுவாக எழுந் திருந்தான். சரியாக அந்தச் சமயத்தில் லிப்ட் நின்றது. கதவைத் திறந்து கொண்டு கார்த்திகேயன் வெளியே வந்தான். அவ்வளவு நெருக்கத்தில் தரையில் குனிந்தபடி இருப்பது யார் என்று வியப்புடன் பார்த்தான். ஓரடி முன்னோக்கி வந்தான். அதே சமயத்தில் சத்யன் நிமிர்ந்து பார்த்தான்.

கார்த்திகேயனை பார்த்ததுமே அவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. இவன்...

தனக்கு சொந்தமாக வேண்டிய கல்யாணியை மணந்து கொண்டு விட்டான். தன்னுடைய திட்டங்களுக்கு குறுக்கே வந்து விட்டான். இவனுக்காக இரண்டு பெண்கள் தம் உயிரையும் தருவதற்காக தயாராக இருக்கிறார்கள். இவனுக்கு இவ்வளவு அதிர்ஷ்டமா! இவன் ஏன் உயிருடன் இருக்க வேண்டும்?

சத்யன் கத்தியை அழுத்தமாக பிடித்துக் கொண்டு கார்த்திகேயனின் வயிற்றில் பலமாக குத்தினான். ஒன்று... இரண்டு... மூன்று...

ரத்தம் ஜிவ்வென்று பாய்ந்தது. கார்த்திகேயன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு முனகினான். உள்ளங்கை ரத்தத்தால் நனைந்தது. கீழே ஆறாக ஓடி கம்பளத்தை நனைத்துக் கொண்டிருந்தது. கடைசி தடவை இன்னும் ஓங்கி பலமாக குத்தி விட்டு ''ராட்சசி! வருகிறேன்.

என்னிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது'' என்று கத்திக் கொண்டே மாடிக்கு ஓடினான். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அனுஜாவை விட்டுவிடக் கூடாது என்ற பிடிவாதம் அவன் முகத்தில் தெரிந்தது.

ஹோட்டல் தாஜ் இண்டர்நேஷனல் நான்கு மாடிக் கட்டிடம். ஏறக்குறைய பத்தாயிரம் சதுர அடிகளைக் கொண்ட மொட்டை மாடி. சுற்றிலும் இரண்டடி உயரத்திற்கு குட்டிச் சுவர் இருந்தது. இரும்புக் கம்பிகள் மேலே நீட்டிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு இரு நூறடி தூரத்திற்கும் ஒரு வாட்டர் டேங்க் செபரேட்டர் இருந்தது. நடுவில் நான்கு தூண்களின் மீது பெரிய வாட்டர் டேங்க் இருந்தது.

சத்யன் கடைசி படியில் நின்று கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். எங்குமே சந்தடி இல்லை. அவன் இன்னொரு அடி எடுத்துவைத்து மொட்டை மாடிக்கு வந்தான். தொலைவில் எங்கேயோ காற்றிற்கு மரம் அசைந்த சத்தத்தைத் தவிர வேறெந்த சத்தமும் இருக்க வில்லை. வெயில் தீவிரமாக இருந்தது. தொலைவில் எங்கேயோ கார் புறப்படும் சத்தம் கேட்டது. அங்கே எவ்வளவு நிசப்தமாக இருந்தது என்றால் அவன் கையில் இருந்த கத்தியின் நுனியிலிருந்து சொட்டிய ரத்தம் காய்ந்த சிமெண்ட் தரையில் விழுந்த சத்தம் கூட தெளிவாக கேட்டது. தான் முன்னுக்கு போனதுமே அவள் பின் பக்கமாக படிகளில் இறங்கிப் போகக் கூடும் என்று நினைத்தவனாக பின்னால் திரும்பிப் பார்த்தான். படிகளுக்கு ஒட்டியபடியே பின்பக்கத்தில் குட்டிச் சுவர் இருந்தது.

சத்யன் சாடிஸ்ட் போல் சிரித்தான். எந்தப் பக்கமும் தப்பித்துக் கொண்டு போக முடியாத பிராணியை பார்த்து

கொல்லப் போகும் மிருகம் களைப்பை போக்கிக் கொள்வதற்காக நிதானித்தது போல் ஒரு வினாடி நின்று ஆழமாக மூச்சு விட்டுக் கொண்டு இன்னொரு அடியை முன்னோக்கி வைத்தான். அவன் காலடியில் சிமெண்ட் தரை பாளமாக பெயர்ந்தது. வாட்டர் டேங்கின் நிழல் சாய்வாக விழுந்து கொண்டிருந்தது.

எத்தனையோ ஆண்டுகளாக தான் கண்ட கனவுகள் கடைசியில் இப்படி சிதறிப் போய் கொண்டிருப்பதைப் பார்த்து அவனுக்கு பைத்தியம் பிடித்து விடும் போல் இருந்தது. தான் இவ்வளவு கஷ்டப்பட்டு போட்ட திட்டத்தை சுண்டு விரலால் கிள்ளிவிட்டதோடு 'டில்லிப் பெண்களோடு வம்பு வைத்துக் கொள்ளாதே' என்று தலையில் ஓங்கி அடித்திருக்கிறாள்.

அவன் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான். தொலைவில் கோடியில் வாட்டர் டேங்கின் தூணிற்குப் பின்னால் தென்பட்டது அனுஜாவின் புடவைத் தலைப்பு.

அவன் பூனையைப் போல் நடந்து அந்தப் பக்கமாக போனான். ஒரு வினாடி கழித்து அனுஜா கதவு பக்கமாக பார்த்தாள். அங்கே யாரும் இல்லை. சத்யன் தன்னை கவனிக்கவில்லை என்ற உத்தேசத்துடன் அனுஜா கதவை நோக்கி வரத் தொடங்கினாள். ஒரு முறை கதவுக்கு பக்கத்தில் போய் விட்டால் கீழே சென்று மக்களுடன் சேர்ந்து கொள்ளலாம்.

அதே மாடியில் படிகளுக்கு அருகில் இன்னொரு அறை இருந்தது. எதிர்காலத்தில் ஹோட்டல் மாடிகளை அதிகரிக்கச் செய்யலாம் என்ற எண்ணத்துடன் லிப்ட் அந்த இடத்திற்கு வரும் விதமாக அறையை கட்டி வைத்திருந்தார்கள். படியை நோக்கி வந்து கொண்டிருந்த

அனுஜா சுவற்றோரமாக இருந்த சத்யனை கவனிக்க வில்லை. அவள் அருகில் வரத் தொடங்கியதும் சத்யன் கத்தியை உள்ளங்கையில் மேலும் அழுத்தமாக பிடித்துக் கொண்டான்.

★

''அப்படி என்றால் அந்தத் துப்பாக்கி உங்ளுடையது இல்லை என்று சொல்றீங்கள், அப்படித்தானே?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அதான் சொன்னேனே, பிரதாப் என்று உங்க டிபார்ட்மெண்டில் பெரிய ஆபீசர். தற்சமயம் சிக்மா டிடெக்டிவ் ஏஜென்ஸியின் முதலாளி. அவருடைய பிஸ்டல் இது.''

இன்ஸ்பெக்டர் சப்-இன்ஸ்பெக்டரை பார்த்தார். ''பிரதாப் சாருக்கு போன் செய்தோம். புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்.''

எஸ்.ஐ.யின் வார்த்தைகள் முடிவடைவதற் குள்ளேயே போலீஸ் ஸ்டேஷன் வாசலில் கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய பிரதாப் உள்ளே வந்தார். அவர் முகத்தில் கலவரமும் கோபமும் போட்டியிட்டன. நினைத்ததெல்லாம் கடைசி தருணத்தில் தாறுமாறாகி விட்டதால் அதே துப்பாக்கியால் அஸ்வத்தாமனை சுட்டுத் தள்ளி விட வேண்டும் என்ற அளவுக்கு ஆத்திரமாக இருந்தது.

ஆனால் இன்ஸ்பெக்டரை பார்த்ததுமே அவர் முகம் மலர்ந்தது. ஒரு காலத்தில் அந்த இன்ஸ்பெக்டர் அவருக்குக் கீழே வேலை செய்தவர்.

இன்ஸ்பெக்டர் பிரதாப்பை பார்த்து விஷ் செய்தார். நடந்த விஷயத்தை எல்லாம் சொன்னார். எல்லாவற்றையும் கேட்டு விட்டு ''நாம் உள்ளே போய் ஒரு நிமிஷம் பேசிக் கொள்வோமா?'' என்று பிரதாப் கேட்டார். இருவரும் உள்ளே போனதும் இன்ஸ்பெக்டரிடம் சொன்னார். ''சாரி இன்ஸ்பெக்டர்! மிஸ்டர் அஸ்வத்தாமன் என்னுடைய நண்பர். அவருக்கு மனநிலை சரியில்லை. என்னிடம் ஒரு மணி நேரத்திற்கு முன்னால் வந்தார். எனக்கு தெரியாமல் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வந்து விட்டார் போலிருக்கு. தயவு செய்து அவர் மீது கேஸ் போடாதீங்க.''

''மனநிலை சரியில்லாதவர் என்று சொல்றீங்க. இது போல் துப்பாக்கி அவர் கைக்கு எட்டும் விதமாக வைப்பது தவறு என்று உங்களுக்கு தெரியாதா?''

''சாரி. இனி இது போல் நடப்பதற்கு இடம் கொடுக்க மாட்டேன். அவர் மீது கேஸ் போடமாட்டீங்கதானே?''

இன்ஸ்பெக்டர் சிரித்தார். ''நீங்கதான் புகார் செய்ய வில்லையே? அப்படி இருக்கும் போது கேஸ் எதற்கு? அவர் இதற்குள் ஏதாவது கொலையை செய்திருந்தால் தவிர.''

''ஐயோ! அப்படி என்றால் என் மீது கேஸ் வந்து விடும் போலிருக்கே.'' ஜோக் அடிப்பது போல் சொன்னார் பிரதாப். ''அப்படி ஏதாவது நடந்திருந்தால் நாளைக்கு கோர்ட்டில் நீங்கள் தான் சாட்சியம் சொல்ல வேண்டி யிருக்கும் இன்ஸ்பெக்டர்.''

''கண்டிப்பாக.'' இன்ஸ்பெக்டர் சிரித்துக் கொண்டே சொன்னார். ''துப்பாக்கியில் குண்டுகள் ஏதாவது குறைந்திருக்கா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.''

''எவ்வளவு இருந்ததோ நினைவு இல்லை'' என்றார் பிரதாப் எழுந்து கொண்டே. ''அந்த அஸ்வத்தாமனுக்கு சில பேர் மீது ரொம்ப ஆத்திரம். கார்த்திகேயன் என்று ஒருத்தன் அவர் கீழே வேலை பார்த்து வந்தான். இப்பொழுது கோடீஸ்வரனாக இருக்கிறான். நல்ல ஆயுதம் கிடைத்தால் கொன்று போட்டு விடப் போகிறேன் என்று சொன்னார். நான்தான் நல்ல வார்த்தை சொல்லி சமாதானப்படுத்தி னேன். எனக்குத் தெரியாமல் துப்பாக்கியை திருடிக் கொண்டு வந்து விட்டாற் போலிருக்கு. நல்ல வேளை... உங்கள் கையில் பிடிபட்டு விட்டார். இல்லா விட்டால் அந்த கார்த்திகேயனின் மனைவி கொலை செய்யப் பட்டிருப்பாள்'' என்று சொல்லிவிட்டு அப்பொழுது தான் ஏதோ நினைவுக்கு வந்தாற் போல் ''ஒரு தடவை அந்த கல்யாணியின் வீட்டிற்கு போன் செய்யுங்கள் இன்ஸ்பெக்டர்! இவர் இதற்குள் அங்கே ஏதாவது அட்டூழியம் செய்து விட்டு வந்தாலும் வந்திருப்பார்'' என்றார்.

இருவரும் முன் அறைக்கு வந்தார்கள். இன்ஸ்பெக்டர் கல்யாணியின் வீட்டிற்கு போன் செய்து பேசினார். ''மேடம் எங்கேயோ போயிருக்காங்களாம். ஏதோ ஹோட்டலுக்காம்'' என்றார்.

''போய் வருகிறேன் இன்ஸ்பெக்டர்.'' துப்பாக்கியை எடுத்துக் கொண்டு பிரதாப் எழுந்து கொண்டார். இன்ஸ்பெக்டருடன் கைகுலுக்கிவிட்டு அஸ்வத்தாமனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தார். அது வரை உள்ளே என்ன நடந்ததோ என்ற பதற்றத்தில் ஆழ்ந்திருந்த அஸ்வத்தாமன் வெளியே வந்ததும் ''என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

''ஒன்றும் நடக்கவில்லை. இந்த இன்ஸ்பெக்டர் எனக்குத் தெரிந்தவர்தான். நீதான் பார்த்தாயே.''

பிரதாப் தன்னை கோபமாக திட்டுவார் என்று நினைத்திருந்த அஸ்வத்தாமனுக்கு அவர் சாதாரணமாக பேசியதைக் கேட்டதும் வியப்பும் சந்தோஷமும் ஏற்பட்டன. இருவரும் காரை நெருங்கினார்கள்.

''என் காரில் போகலாம் வா.''

''எங்கே?''

''ஹோட்டல் தாஜ் இண்டர்நேஷனலுக்கு. மற்ற விஷயங்களை காரில் சொல்கிறேன்'' என்றார் பிரதாப். கார் புறப்பட்ட பிறகு துப்பாக்கியை அவரிடம் நீட்டிக் கொண்டே ''எடுத்துக் கொள்'' என்றார்.

அஸ்வத்தாமன் வியப்புடன் பார்த்தார். பிரதாப் சிரித்தார். ''இன்ஸ்பெக்டரிடம் பொய் சொன்னேன். என் துப்பாக்கியை கார்த்திகேயன் எடுத்துக் கொண்டு போய் விட்டான் என்றும், அவனிடமிருந்து உன்னிடம் வந்திருக்கிறது என்றும் சொன்னேன். இப்பொழுது கல்யாணி ஹோட்டலுக்குப் போயிருக்கிறாள். அவளை தொலைவிலிருந்து சுட்டுவிடு. இனி நீ எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. துப்பாக்கியை மட்டும் திருப்பிக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து விடு. அது போதும். கேஸ் முழுவதும் கார்த்திகேயன் மீது போய் விடும். இந்தத் துப்பாக்கியால் அவன் கொலை செய்ததாக எல்லோரும் நினைத்துக் கொள்வார்கள்.''

அஸ்வத்தாமன் அவரை சாட்சாத் கடவுளைப் பார்ப்பது போலவே பார்த்தார்.

''பின்னே என்ன செய்வது? நீயோ அந்த கல்யாணியை அவள் வீட்டில் கொலை செய்யாமல் கோட்டை விட்டாய். அதனால் உடனுக்குடன் ஒரு கதையை புனைந்து சொல்ல வேண்டியதாகி விட்டது. முன்னதை விட இது நல்ல திட்டம் இல்லையா?''

அஸ்வத்தாமன் துப்பாக்கியை வாங்கிக் கொண்டார். ''இனி நீங்க எந்தச் சந்தேகமும் வைத்துக் கொள்ளாதீங்க. காவல் நிலையத்தில் உங்களுக்கு இருந்த செல்வாக்கை கண் கூடாக பார்த்து விட்டேன். உங்கள் சாமர்த்தியத்தை இப்பொழுது புரிந்து கொண்டேன். என்ன இருந்தாலும் நீங்க பெரிய துப்பறியும் நிபுணர் இல்லையா?''

''இந்தக் கேஸில் இன்ஸ்பெக்டரின் சாட்சியமும் நமக்கு பயன்படும். என் துப்பாக்கி உன்னிடம் எப்படி வந்தது என்பதற்கு அவர்தான் சாட்சி.''

''கண்டிப்பாக.''

கார் நின்றது. அஸ்வத்தாமன் காரிலிருந்து இறங்கினார். துப்பாக்கியை ஜேபியில் வைத்துக் கொண்டு ரிசப்ஷனை நோக்கி நடக்கத் தொடங்கினார். அவரையே பார்த்துக் கொண்டிருந்த பிரதாப் முகத்தில் முறுவல் தவழ்ந்தது.

முதல் நாள் சத்யன் சொன்ன வார்த்தைகள் அவருக்கு நினைவு வந்தன. 'எப்படியாவது இந்த அஸ்வத்தாமனை நம் பார்ட்னர்ஷிப்பிலிருந்து நீக்கி விட்டால் உனக்கு இன்னொரு ஐந்து லட்சம் அதிகமாக தருகிறேன்.'

36

அதே நேரத்தில் பீட்டர் ரிசப்ஷனில் ரஜிதாவின் அறை நம்பரை விசாரித்துக் கொண்டிருந்தான். தொலை விலிருந்து வந்து கொண்டிருந்த அஸ்வத்தாமன் பீட்டரை கவனிக்கவில்லை. அதற்குள் ''ரூம் நம்பர் 413'' என்று ரிசப்ஷனிஸ்ட் சொன்னாள். கல்யாணி லிப்டிற்கு அருகில் சக்கர நாற்காலியை தானே தள்ளிக் கொண்டு போனாள். பீட்டருக்கு ஹோட்டல் பற்றிய விவரம் அதிகம் தெரியாது.

''எத்தனாவது மாடி?'' என்று கேட்டான்.

''டாப் ஃப்ளோர்''

பீட்டர் லிப்ட் அருகில் போன போது ஸ்ரீ கல்யாணி நாற்காலியை தள்ளிக் கொண்டு உள்ளே போனாள். பீட்டர் நாற்காலியை பிடித்துக் கொண்டு ''நான்தான் வருகிறேனே மேடம்! நீங்க எதற்காக சிரமப்படறீங்க?'' என்றான் வருத்தப்பட்டுக் கொள்வது போல்.

ஸ்ரீகல்யாணி முறுவலுடன் ''என்றைக்காவது என் வேலைகளை நான்தானே செய்து கொள்ளணும். நீங்கள் கீழேயே இருங்கள்'' என்றாள்.

பீட்டர் வியப்புடன் ''நீங்கள் தனியாகவா போகிறீர்கள்?'' என்று கேட்டான் நம்ப முடியாதவனாக.

''ஆமாம். இது எங்கள் மூவருக்கும் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம் இல்லையா?'' என்றாள்.

பீட்டரால் பதில் பேசமுடியவில்லை.

ஸ்ரீகல்யாணி சிரித்துக் கொண்டே ''நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நான் அங்கே போய்

ரகளை எதுவும் செய்யமாட்டேன். எனக்கு அந்தப் பெண் மீது கோபம், துவேஷம் எதுவும் இல்லை. அவள் என் கண்களுக்கு ஒரு சின்னப் பெண்ணாக தோன்றுகிறாள்'' என்றவள் லிப்ட் மூடிக் கொள்ளத் தொடங்கவும் கடைசியாக சொன்னாள். ''கலைஞர்கள் சாதாரணமாக என்னைப் போன்ற மெடீரியலிஸ்டுகளை விட அப்படிப் பட்ட பெண்ணைத்தான் விரும்புவார்கள்.''

அதிலிருந்த அர்த்தம் புரிந்ததும் பீட்டரின் முகம் நிறம் மாறியது. அவன் ஏதோ சொல்லப் போனான். அதற்குள் லிப்ட் புறப்பட்டு விட்டது. கல்யாணி லிப்ட்டில் இருந்த பட்டன்களை பார்த்தாள். பீட்டரிடம் ரிசப்ஷனிஸ்ட் ''டாப் ப்ளோர்'' என்று சொன்னது நினைவுக்கு வந்தது. அதனால் 4 என்ற பட்டனை அழுத்தாமல் 'T' (Terminal) என்ற பட்டனை அழுத்தினாள்.

அதனால் லிஃப்ட் நாலாவது மாடியில் நிற்காமல் இன்னும் மேலே போயிற்று. மொட்டை மாடியில் போய் நின்றது. அரை வினாடிக்குப் பிறகு கதவுகள் திறந்து கொண்டன. அவள் சக்கர நாற்காலியுடன் வெளியே வந்ததுமே பிற்பகலின் தீவிரமான வெயில் முகத்தில் சுள்ளென்று தாக்கியது. அப்பொழுதுதான் அவளுக்கு அந்தக் கத்தல் கேட்டது. ஸ்ரீகல்யாணி அனுஜாவின் குரலைக் கேட்டதில்லை. யாரோ யாரையோ கொலை செய்யப் பார்க்கிறார்கள் என்று கூட அவளால் ஊகித்துக் கொள்ள முடியவில்லை. போக வேண்டிய தளத்தை விட ஒரு தளம் அதிகம் வந்து விட்டோம் என்றும் அது ஹோட்டலின் மொட்டை மாடி என்றும் புரிந்தது.

யாரோ ஒரு பெண் ஆபத்தில் இருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டு சக்கர நாற்காலியை தள்ளிக்

கொண்டே முன்னோக்கி போனாள். அதற்குள் அனுஜாவை சத்யன் மொட்டை மாடியிலிருந்து கீழே தள்ளி விட்டான்.

அதற்கு சில வினாடிகளுக்கு முன்னால் அங்கே ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அனுஜா தண்ணீர் டேங்கிற்கு நடுவிலிருந்து தன்னையே நோக்கி நடந்து வருவதை கவனித்து விட்டு கத்தியை அழுத்தமாக பிடித்துக் கொண்டே பதுங்கியிருந்தான் சத்யன். அவள் அருகில் வந்ததுமே சட்டென்று பின்னாலிருந்து பிடித்துக் கொண்டு வாயை அழுத்தமாக பொத்தி விட்டு, இன்னொரு கையால் கத்தியால் குத்தப் போனான்.

சரியாக அந்த நேரத்தில் லிஃப்ட் மேலே வந்து நின்ற சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் கேட்டு தன்னையறியாமல் திரும்பி அந்தப் பக்கம் பார்த்தான். அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு அனுஜா தப்பி ஓட முயன்றாள். ஆனால் அவள் முயற்சி பலிக்கவில்லை. அவன் மேலும் வேகமாக துரத்தி வந்து அவளை மறுபடியும் பிடித்து விட்டான்.

லிஃப்டின் கதவுகள் திறந்து கொண்டன.

சத்யனின் கைகளுக்கிடையே அனுஜா திமிறிக் கொண்டிருந்தாள். இந்த முறை அவன் கத்தியை பயன் படுத்தவில்லை. அப்படியே இரு கைகளாலேயும் அவளைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டான். கீழே நழுவிக் கொண்டே அனுஜா வீலென்று கத்தினாள்.

ஸ்ரீகல்யாணியின் காதில் விழுந்த அலறல் அதுதான்.

லிஃப்டிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த ஸ்ரீ கல்யாணி அந்தச் சத்தம் கேட்டு சக்கர நாற்காலியை தள்ளிக் கொண்டே வெளியே வந்தாள். திடீரென்று இருட்டிலிருந்து

வெளியில் வந்தது அவ்வளவு வெளிச்சத்திற்கு அவள் கண்கள் உடனே பழக்கப்படவில்லை. சத்தம் கேட்ட திசையை நோக்கி நாற்காலியைத் தள்ளிக் கொண்டே போனாள். தண்ணீர் டேங்கிற்கு அருகில் இருந்த சத்யனை அவள் கவனிக்கவில்லை.

ஆனால் சத்யன் அவளைப் பார்த்து விட்டான். அந்தச் சமயத்தில் கல்யாணியை அங்கே எதிர்பாராத வகையில் பார்த்ததில் ஆச்சரியத்தை விட, இப்படிப்பட்ட அவகாசம் கிடைத்ததற்கு ஆனந்தம் ஏற்பட்டது. அவன் உதட்டில் ஒரு சாடிஸ்டிக் சிரிப்பு மலர்ந்தது. அவள் தன் பக்கமாக வரும் வரையில் தண்ணீர் டேங்கிற்கு அருகிலேயே அசையாமல் நின்றான். பதுங்கியிருக்கும் ஆபத்தை உணராதவளாக கல்யாணி அந்தப் பக்கமாகவே போனாள். சத்யன் நின்று கொண்டிருந்த தண்ணீர் டேங்கை தாண்டிக் கொண்டு அவள் போய்க் கொண்டிருந்த போது அவன் மின்னல் வேகத்தில் பின்னாலிருந்து அவள் நாற்காலியை தள்ளி விட்டான். அந்த வேகத்திற்கு அவள் நாற்காலியில் முன்னால் தள்ளப்பட்டு முழங்காலின் மீது தலை வந்து மோதிக் கொண்டது. என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளும் முன்பே நாற்காலி மொட்டை மாடியின் விளிம்பிற்கு போய் விட்டது. அங்கே குட்டிச் சுவர் இல்லை. கம்பிகள் மட்டுமே இருந்தன.

அவளுக்குத் திரும்பிப் பார்க்கும் அவகாசம் கூட இல்லை. மரணத்தை நோக்கிப் பறந்து போய்க் கொண் டிருந்தாற்போல் நாற்காலி போய்க்கொண்டிருந்தது. அவள் கால்களால் தடுத்து நிறுத்த முயன்றாள். நாற்காலியின் வேகம் குறையவில்லை. கால்களை கம்பிகளுக்கு குறுக்காக வைத்து நிறுத்த முயன்றாள். ஆனால் இரண்டு கம்பிகளுக்கு நடுவிலிருந்து நாற்காலி முன்னோக்கி போயிற்று.

அவள் கத்தவில்லை. கத்துவதற்கு நேரம் இல்லை. ஆனால் காரணம் அது ஒன்று மட்டுமே இல்லை. அவளிடம் உள்ளூர இருந்து வந்த தைரியம்.

ஆபத்துச் சூழ்நிலையில் ஏற்படும் துணிச்சல் தானோ அல்லது க்ரைஸிஸ் மேனேஜ்மெண்ட் படித்து ஜீரணித்துக் கொண்டிருந்ததால் வந்த 'கடைசி நிமிஷம் வரைக்கும் முயற்சி செய்' என்ற லட்சணம் தானோ தெரியாது, கால்களால் நாற்காலியின் வேகத்தை குறைப்பதற்காக தன் சக்தியையெல்லாம் பயன்படுத்திக் கொண்டாள். ஆனால் துரதிர்ஷ்டம் அவளை பின் தொடர்ந்து கொண்டிருந்தது.

தூண்களை கட்டுவதற்காக விட்டு வைத்திருந்த கம்பிகளுக்கு இடையே நாற்காலி கீழே நழுவி விழுந்து கொண்டிருந்தது. நாற்காலியுடன் அவளும் கீழே விழுந்து கொண்டே என்ன செய்வது என்று தெரியாமல் கைகளை காற்றில் நீட்டினாள்.

கடைசி நிமிஷத்தில் அவள் கைக்கு இரும்புக் கம்பி கிடைத்தது. அதை அழுத்தமாக பிடித்துக் கொண்டு தொங்கத் தொடங்கினாள். சரியாக அரை நிமிஷத்திற்கு பிறகு சக்கர நாற்காலி தரையில் விழுந்த சத்தம் கேட்டது. அவள் கீழே பார்த்தாள். கீழே தரையில் சக்கரங்கள் உடைந்து போன நாற்காலி தாறுமாறாக கிடந்தது. அவள் அழுத்தமாக கண்களை மூடிக் கொண்டாள். அவள் பாரத்தைத் தாங்க முடியாமல் கம்பி வளைந்தது. உடலின் பாரத்தை இரு கைகளாலும் தாங்குவது அவளுக்கு அசாத்தியமாக இருந்தது. நான்காவது மாடியின் பால்கனியில் அனுஜாவின் உடல் சலனமில்லாமல் கிடந்தது.

நாற்காலியுடன் சேர்ந்து ஸ்ரீகல்யாணி கீழே நழுவி விழத் தொடங்கியதுமே சத்யன் மெதுவாக படிகளில்

இறங்கத் தொடங்கினான். நாலாவது மாடியில் லிப்டிற்கு அருகில் கார்த்திகேயனின் உடலைப் பார்த்தான். ஆனால் பொருட்படுத்தவில்லை. மூன்றாவது மாடிக்கு வந்து சேர்ந்தான். அங்கே தென்பட்டார் அஸ்வத்தாமன். மூச்சு இரைத்தபடி மெதுவாக படியேறி மேலே வந்து கொண்டிருந்தார். அவரையும் அங்கேயே குத்திப் போட்டு விட்டு போய் விடலாமா என்று நினைத்தான். ''எல்லாம் முடிந்து போன பிறகு ஆடி அசைந்து கொண்டு வர்றீங்களே'' என்றான் எரிச்சலுடன்.

''ஸ்ரீகல்யாணியை கொலை செய்ய வாய்ப்பு கிடைக்க வில்லை. பின் தொடர்ந்து கொண்டே வந்தேன்'' என்றார் அஸ்வத்தாமன்.

''கிழித்தாய்'' மனதில் திட்டிக் கொண்டான் சத்யன்.

''பிரதாப் கீழே காரில் இருக்கிறார். ஸ்ரீகல்யாணியை கொலை செய்து விட்டு வரச் சொன்னார். திட்டம் நினைத்தாற் போலவே நடக்கும். கார்த்திகேயனும், அனுஜாவும் கையும் களவுமாக பிடிபட்டு விடுவார்கள்'' எனறார் அஸ்வத்தாமன்.

அப்பொழுதுதான் சத்யனுக்கு அந்த யோசனை வந்தது. 'பிரதாப் கீழே இருக்கிறார்' என்று சொன்னதால் வந்த வினை அது. கொலை கேஸில் அஸ்வத்தாமனை சிக்க வைத்து விட வேண்டும் என்று தாமிருவரும் திட்டம் போட்டது நினைவுக்கு வந்தது.

''பிரதாப் கொடுத்த துப்பாக்கி எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான்.

''என்னிடம் தான்.''

''இப்படி கொடு.''

சாதாரண நிலையில் இருந்தால் அஸ்வத்தாமன் கொடுத்திருக்க மாட்டார். சத்யனை கண்டாலே அவருக்குப் பிடிக்காது. ஆனால் இப்பொழுது தான் செய்த தவறுக்கு டிஃபென்ஸில் இருந்தார். அதனால் மறு பேச்சு பேசாமல் துப்பாக்கியை சத்யனிடம் கொடுத்தார். சத்யன் தன் கையிலிருந்த கத்தியை அவரிடம் தந்தான்.

''இது எதுக்கு?''

''மேலே மொட்டை மாடியில் ஸ்ரீகல்யாணி இருக்கிறாள். போய் குத்தி விட்டு வா.'' பொய் சொன்னான்.

''நீ குத்தவில்லையா? இதென்ன ரத்தம்?'' கத்தியில் ஒட்டிக் கொண்டிருந்த ரத்தத்தைப் பார்த்துக் கேட்டார்.

சத்யன் கடுமையான குரலில் ''அதெல்லாம் உன்னிடம் சொல்லணுமா? சொன்ன ஒரு காரியத்தைக் கூட செய்யாமல் லட்சக் கணக்கில் சம்பாதிக்க முடியும் என்று எப்படி நினைத்தாய்? போய் சொன்ன காரியத்தை முதலில் செய்'' என்று உறுமினான்.

அப்பொழுதுதான் லிஃப்ட் மூன்றாவது மாடியில் வந்து நின்றது. யாரோ கஸ்டமர் வெளியே வந்தார். அஸ்வத்தாமன் லிஃப்டில் நுழைந்து மாடிக்குப் போனார். சத்யன் அந்தப் பக்கமாக ஒரு வினாடி பார்த்துக் கொண்டே நின்றான். பிறகு கீழே இறங்கிப் போய் விட்டான்.

பிரதாப் சத்யனைப் பார்த்து ''என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

''அந்தக் கிழவனை கொலை கேசில் சிக்க வைத்து விட்டேன்'' என்றான் சத்யன் காரின் மறுபக்கத்து கதவைத் திறந்து உட்கார்ந்து கொண்டே.

''யாரைக் கொன்றாய்? அனுஜாவையா? ஸ்ரீ கல்யாணியையா?'' காரைக் கிளப்பிக் கொண்டே கேட்டார் பிரதாப்.

''மூன்று பேரையும்.''

''காரை ஓட்டு. முதலில் நாம் இங்கிருந்து போய் விடணும்.''

பிரதாப் ஆக்ஸிலரேட்டரை மிதித்தார். கார் புறப்பட்டதும் சத்யன் சொன்னான். ''மூன்று பேரையும் கொலை செய்ய வேண்டியதாகிவிட்டது. கத்தியில் அஸ்வத்தாமனின் விரல் ரேகைகள் பதிய வேண்டும் என்று கத்தியை அவனிடம் தந்துவிட்டு துப்பாக்கியை வாங்கிக் கொண்டு விட்டேன்.''

கார் வேகம் பிடித்தது. சரியாக அந்த நேரத்தில் நாலாவது மாடி பால்கனியில் விழுந்து கிடந்த அனுஜா லேசாக அசைந்தாள்.

★

லிப்ட் மொட்டை மாடியில் நின்றதுமே அஸ்வத்தாமன் வெளியே வந்தார். அந்த இடம் ஆளரவமில்லாமல் இருந்தது. ஸ்ரீகல்யாணி படிகளில் இறங்கி கீழே போய் விட்டிருப்பாளோ என்று நினைத்தார். மறுபடியும் லிப்டிற்குள் நுழைந்து பட்டனை அழுத்தப் போன பொழுது காற்றில் லேசாக ''ஹெல்ப்'' என்று யாரோ கத்துவது காதில் விழுந்தது. சட்டென்று லிஃப்டிலிருந்து வெளியில் வந்தார்.

அந்தச் சத்தம் எங்கிருந்து வந்தது என்று புரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தார். அந்த நேரத்தில் மற்றொரு முறை அதே சத்தம் தண்ணீர் டேங்கின் மறு பக்கத்திலிருந்து

கேட்டது. அந்தப் பக்கமாக போனார். கம்பிகளில் தொங்கிக் கொண்டே தென்பட்டாள் ஸ்ரீகல்யாணி.

அஸ்வத்தாமன் முழங்காலிட்டு அமர்ந்து கொண்டார். ''சத்யன் நீ இறந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறான்'' என்றார்.

''ஹெல்ப் மி!''

ஸ்ரீகல்யாணியின் வேண்டுகோளை அவர் பொருட்படுத்தவில்லை. கம்பிகளை அழுத்தமாக பிடித்துக் கொண்டிருந்த அவள் வலது கையில் கத்தியால் கீறினார்.

வலி தாங்க முடியாமல் ஸ்ரீகல்யாணி கத்திக் கொண்டே அந்தக் கையை விட்டு விட்டாள். அவர் எழுந்து கொண்டு கொஞ்சம் தள்ளி நின்று இன்னொரு கையையும் கத்தியால் குத்தப் போனார்.

அப்பொழுதுதான் மேலே வந்த பீட்டருக்கு கீழே குனிந்தபடி அஸ்வத்தாமனும், கம்பியைப் பிடித்துக் கொண்டிருந்த ஸ்ரீகல்யாணியும் தென்பட்டார்கள். அஸ்வத்தாமனின் கையில் கத்தி இருந்தது. அந்தப் பக்கமாக குனிந்து கல்யாணியின் கையைக் குத்தப் போனவர் பின்னாலிருந்து வந்த பீட்டரை கவனிக்கவில்லை.

பீட்டர் தயங்கவில்லை. துப்பாக்கியை எடுத்து குறிபார்த்து சுட்டான். வரிசையாக இரண்டு குண்டுகள் - அஸ்வத்தாமனின் முதுகைத் துளைத்தன. அப்படியே வேரற்ற மரம்போல் தரையில் சரிந்தார்.

பீட்டர் ஓடிப் போய் ஸ்ரீகல்யாணிக்கு கை கொடுத்தான். அவள் குட்டிச் சுவற்றின் மீது காலை ஊன்றி மெதுவாக மேலே வந்தாள். அவள் கையிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

''ஒன்றும் அபாயமில்லையே மேடம்?''

'இல்லை' என்று சொல்லப் போன கல்யாணி சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவளாக தன் கால்களை பார்த்துக் கொண்டாள். அதே சமயத்தில் பீட்டருக்குக் கூட அந்த விஷயம் புரிந்து விட்டது. மடை திறந்த வெள்ளம் போல் சந்தோஷம் அவள் மனதில் பொங்கியது. சந்தோஷம் தாங்க முடியாமல் அவள் தடுமாறினாள். ''என் கால்கள்... என் கால்கள்...'' என்று ஏதோ சொல்ல வந்தாள். ஆனால் சந்தோஷத்தை விட கடமை முக்கியம் என்பதை உணர்ந்ததால் பீட்டருக்கு ஆணைகளை பிறப்பிக்கத் தொடங்கினாள்.

★

''டாமிட்!'' என்றார் பிரதாப். ''இன்னொரு நிமிஷம் அங்கே இருந்து ஸ்ரீகல்யாணி கீழே விழுந்தாளா இல்லையா என்று பார்த்திருந்தால் கதை முடிந்திருக்கும்.'' கல்யாணி பிழைத்து விட்டாள் என்று அப்பொழுது தான் அவருக்குத் தெரிய வந்தது.

''இப்படி நடக்கும் என்று நான் எதிர் பார்க்க வில்லை'' சத்யன் சொன்னான். ''அஸ்வத்தாமன் கண்ணில் பட்டதும் கத்தியை அவர் கையில் கொடுத்து விட்டால் எல்லா குற்றமும் அவர் மீது போய் விடும் என்று நினைத்தேன். அவரை மேலே அனுப்பி வைத்து விட்டு நான் கீழே இறங்கி வந்து விட்டேன்.''

''ஸ்ரீகல்யாணிக்கு உன் மேல் எந்தச் சந்தேகமும் வரவில்லையே?''

''இல்லை. தன் கணவனை குத்தியதும், அனுஜாவை கீழே தள்ளியதும் அஸ்வத்தாமன்தான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள்.''

''கார்த்திகேயன் எப்படி இருக்கிறான்?'' பிரதாப் கேட்டார். அவர் ரொம்பவும் கலங்கிப் போய் இருந்தார்.

''ஆஸ்பத்திரியில் இருக்கிறான். ஆபரேஷன் நடந்து கொண்டிருக்கிறது.''

''அஸ்வத்தாமன், அனுஜா இருவரின் பிணங்களை ஸ்ரீகல்யாணி எதற்காக மாயம் செய்தாள்? அதுதான் எனக்குப் புரியவில்லை.''

''அனுஜாவின் பிணம் வெளிப்பட்டுவிட்டால் அஸ்வத்தாமன் மீது கொலைக் குற்றம் வந்து விடும். அதுவும் அமைச்சரின் மகள் வேறு. அஸ்வத்தாமனை போலீசார் தேடுவார்கள். அவனை பீட்டர் துப்பாக்கியால் சுட்டு விட்டான். அதனால் பீட்டர் கூட ஜெயில் தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும்.''

''அதற்காக இரண்டு பிணங்களையும் மாயம் செய்திருப்பாள் என்கிறாயா?''

''கல்யாணியைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். தன்னை சேர்ந்தவர்களை காப்பாற்றுவதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வாள். பக்கத்திலேயே பிணங்களை வைத்துக் கொண்டே முடிவுகளை எடுத்துக் கொண்டதி லிருந்து தெரியவில்லையா அவள் எவ்வளவு காரியவாதி என்று.''

''பிணங்களை கல்யாணிதான் மாயம் செய்தாள் என்று எப்படித் தெரியும்?''

''ஹோட்டலுக்கு பின் பக்கம் சின்ன தோட்டம் இருக்கு. மேலே இருந்து பீட்டர் பிணங்களை கீழே தள்ளியிருக்கிறான். கீழே இருந்த காரில் ஏற்றிக் கொண்டு

போய் விட்டார்கள். அந்த ஹோட்டலிலேயே இருக்கும் ஒரு பேரர் இதையெல்லாம் சொன்னான். அவனுக்கு பத்தாயிரம் கொடுத்து வாயை அடைத்து விட்டாள். போலீஸ் என்று சொல்லி மிரட்டிய போது அவன் இதையெல்லாம் சொல்லிவிட்டான்.''

''அவனை உண்மையாகவே போலீஸில் பிடித்துக் கொடுத்தால் என்ன?'' என்று பிரதாப் கேட்கவில்லை. அவன் உண்மைகளைச் சொன்னால் பீட்டருக்கு தண்டனை கிடைக்குமே தவிர கல்யாணிக்கு ஒன்றும் ஆகாது என்று அவருக்குத் தெரியும். ஆனால் ஏதோ இக்கட்டான உணர்வு. பீட்டரை காப்பாற்றுவதற்காகவே அஸ்வத்தாமனின் பிணத்தை மறைத்திருப்பாள் என்று சொன்னால் நம்பத்தான் முடியவில்லை.

''சத்யன்! எனக்கு ஒரு சந்தேகம். நாளைக்கு கார்த்திகேயனுக்கு நினைவு திரும்பினால், நீ அவனை குத்திய விஷயத்தைச் சொல்லிவிடுவான். நீ தண்டனை யிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது'' என்றார்.

சத்யன் ரொம்ப உற்சாகமாக இருந்தான். குற்றம் முழுவதும் அஸ்வத்தாமன் மீது தள்ளப்பட்டதும், அஸ்வத்தாமன் மரணமடைந்ததும், அவன் பிணத்தை மறைக்கும் பொறுப்பை கல்யாணியே எடுத்துக் கொண்டு விட்டதும் அவன் மகிழ்ச்சிக்குக் காரணங்கள். அந்தச் சந்தோஷத்தோடு அவன் சொன்னான். ''கார்த்திகேயனுக்கு நினைவு திரும்பாது. அந்த விஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''எப்படி?''

''அவனுக்கு ஆபரேஷன் செய்கிற டாக்டருக்கு நிறைய லஞ்சம் கொடுத்துள்ளேன். அவன் இறந்து போகும் விதமாக அந்த டாக்டரே பார்த்துக் கொள்வார்.''

''அந்த டாக்டரின் பெயர்?''

''பத்ரி பிரசாத்.''

பிரதாப் எழுந்து கொண்டார். ''இதுவரையில் நான் திரைமறைவில் இருந்து கொண்டு கதையை நடத்துவோம் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் எல்லாமே தவறாகவே நடந்து கொண்டு இருக்கின்றன. எந்தச் சூழ்நிலையிலும் கார்த்திகேயன் பிழைத்துக் கொண்டு விடக் கூடாது. வா... டாக்டர் பத்ரி பிரசாதுடன் நாமே நேரிடையாகப் பேசணும்.''

★

''**க**த்திக்குத்து ஆழமாகப் பட்டிருக்கிறது. ஆபரேஷன் டேபிள் மீதே உயிர் போயிருக்க வேண்டியது. ஆனால் பிழைத்துக் கொண்டு விட்டான்'' என்றார் டாக்டர் பத்ரி பிரசாத்.

'இப்போ என்ன சொல்கிறாய்?' என்பது போல் சத்யனை பார்த்தார் பிரதாப்.

சத்யன் எரிச்சலடைந்து ''விஷம் தந்து கொன்று விடுவதாக சொன்னீங்களே'' என்றான் டாக்டரிடம்.

''இஞ்ஜெக்ஷன் தரலாம் என்று தான் நினைத்தேன். ஆனால் என்னுடன் கூட இரண்டு பெரிய டாக்டர்கள் இருக்கிறார்கள். நோயாளி கோடீஸ்வரியின் கணவன். ஆபரேஷன் தியேட்டரில் எல்லோரும் ரொம்ப ஜாக்கிரதை யாக இருந்தாங்க.''

''இப்போ என்ன செய்வது?''

''அந்த விஷயத்தை என்னிடம் விடுங்கள். கார்த்திகேயனுக்கு இப்போதைக்கு நினைவு திரும்பாது.

கோமாவில் இருக்கிறான். நினைவு திரும்பும் வரையில் என்னுடைய மேற்பார்வையில்தான் இருப்பான். அவன் கோமாவிலிருந்து மீளுவதற்குள் யாருக்கும் சந்தேகம் வராமல் மேல் உலகத்திற்கு அனுப்பிவைக்கும் பொறுப்பு என்னுடையது'' என்றார் டாக்டர்.

சத்யன் ஓரடி முன்னால் வைத்து ''அவன் மட்டும் அப்படி மேலுலகத்திற்குப் போகா விட்டால்?'' என்றான் கடுமையான குரலில்.

பிரதாப் மட்டும் கையை அழுத்தாமல் இருந்தால் இன்னும் ஏதேதோ சொல்லியிருப்பான். அதற்குள் அந்த சைகிக்கின் கண்கள் செக்கச் செவேலென்று பயங்கரமாக மாறி விட்டிருந்தன.

★

''இது தான் மேடம் நடந்தது.'' நடந்ததை எல்லாம் சொல்லி முடித்தார் டாக்டர் பத்ரி பிரசாத். ''நீங்கள் உடனே போலீஸ் ரிப்போர்ட் தருவது நல்லது.''

கல்யாணி அவர் சொன்னதை எல்லாம் கேட்டாள். ஆனால் கார்த்திகேயனையே பார்த்துக் கொண்டிருந்தாள். கார்த்திகேயனுக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை. பீட்டர் அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று காத்திருந்தான். அவன் ரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. சத்யனையும், பிரதாப்பையும் அப்பொழுதே சுட்டுத் தள்ளியிருக்கணும் என்று நினைத்துக் கொண்டிருந்தான்.

''டாக்டராக நான் எத்தனையோ மனிதர்களை சந்தித்திருக்கிறேன். ஆனால் மனிதர்களில் இப்படிப்பட்ட அரக்கர்களை பார்ப்பது இதுதான் முதல் தடவை'' என்றார் டாக்டர்.

கல்யாணி பதில் பேசவில்லை. அவள் கண் முன்னால் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் நிழலாடியது. தன் தந்தையின் முகத்தின் மீது தாய் மாமன், அதாவது சத்யனின் தந்தை, தலையணையை அழுத்தி கொலை செய்த காட்சி. அப்படிப்பட்டவரின் மகன் இவ்வளவு காலமாக பாம்பைப் போல் தன் பக்கத்திலேயே இருந்து கொண்டிருப்பதை தான் தெரிந்து கொள்ளவில்லை.

எத்தனையோ விஷயங்களில் எவ்வளவோ ஜாக்கிரதையாக இருப்பவர்கள் சின்ன விஷயத்தில் அலட்சியமாக இருந்து விடுவார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டு அவளேதான்.

''அவருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே டாக்டர்?'' கேட்டாள்.

''ஆபரேஷன் நல்லபடியாக முடிந்து விட்டது. நினைவு திரும்ப தாமதம் ஆகலாம். வெளியிலிருந்து வரும் ஆபத்துகளுக்கு என்னால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் எனக்கே லஞ்சம் தருவதாக ஆசை காட்டினார்கள். அதுதான் என் பயம். உங்களை எனக்கு நன்றாகத் தெரியும் என்று அவர்களுக்குத் தெரியாது'' என்றார்.

கணவனின் உடலுக்குள் ஆக்ஸிஜனையும், சலைனையும் ஏற்றிக் கொண்டிருந்த ட்யூப்களையே உணர்ச்சியற்ற முகத்துடன் பார்த்துக் கொண்டே கல்யாணி சொன்னாள். ''எங்கள் இருவரையும் கொல்லாமல் இவ்வளவு நாளாக சத்யன் ஏன் பொறுத்திருந்தான் தெரியுமா? நாங்கள் இறந்து போனால் அந்தக் குற்றம் தன் மீது வந்து விடும் என்று தான். அவன் சாமர்த்தியத்தை பார்த்து வியப்படைந்து விட்டேன். புத்திசாலித்தனம் எங்கேயிருந்தாலும் மதிக்கிறவள் நான். மிக அற்புதமாக

திட்டம் போட்டிருக்காங்க அந்த இருவரும். என்னைக் கொன்று விட்டு அந்தக் குற்றத்தை காதலன், காதலி மீது போடுவது - மைகாட்! அந்த லாயரும், டிடெக்டிவ்வும்-'' என்று நிறுத்திவிட்டு சொன்னாள் கல்யாணி. ''அடுத்தவர்களின் சாமர்த்தியத்தைப் பார்த்து நாம் கற்றுக் கொள்வதில் தவறு இல்லை பீட்டர்!''

''ஆனால் கொலை முயற்சி?''

''கொலை முயற்சிக்கு தண்டனை ஏழாண்டுகள் தான் பீட்டர்!'' அவன் வார்த்தைகளை இடைமறித்து விட்டு சொன்னாள் கல்யாணி. ''அனுஜாவை மாடியிலிருந்து தள்ளியது சத்யன் என்று நம்மால் நிரூபிக்க முடியாது. கார்த்திகேயனை அவன் குத்திய போதும் அதிர்ஷ்டவசமாக அவர் இறக்கவில்லை.'' அவள் நிமிர்ந்து அவனை நேராக பார்த்துக் கொண்டே சொன்னாள். ''இவ்வளவு அக்கிரமங் களை செய்தவனுக்கு வெறும் ஏழாண்டு சிறைத்தண்டனை மட்டும்தானா? ஊஹூம். உங்களுக்கு அது சரி என்று படுகிறதோ என்னவோ, எனக்கு மட்டும் திருப்தியாக இல்லை.''

37

''சத்யன்! நீ என்னை இப்படி ஏமாற்றுவாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.'' வருத்தத்தோடு சொன்னாள் கல்யாணி.

''நான் உன்னை ஏமாற்றினேனா?''

''என் கணவனைப் பற்றி எல்லா விஷயங்களும் தெரிந்திருந்தும் என்னிடம் சொல்லாமல் போனது ஏமாற்றியதற்கு சமம் இல்லையா?''

சத்யன் நிம்மதியாக மூச்சு வாங்கிக் கொண்டான். ''நான் சொல்லிக் கொண்டுதான் இருந்தேன். நீ தான் நம்பவில்லை'' என்றான். அதற்குள் வேலைக்காரன் ஷிவாஸ் ரீகல் பாட்டிலையும், சோடாவையும் கொண்டு வந்து வைத்தான். சத்யன் சங்கோஜத்தோடு ''நான் வீட்டிற்குப் போய் டிரிங்க் எடுத்துக் கொள்கிறேன்'' என்றான்.

''பரவாயில்லை. இங்கே பார்ட்டீக்கள் வழக்கம் தானே. உன்னிடம் கொஞ்சம் பேசணும்'' என்றவள் அவன் குடிக்கத் தொடங்கிய பிறகு சொன்னாள். ''கார்த்திகேயனை விவாகரத்து செய்து விடலாம் என்று நினைக்கிறேன்.''

சத்யன் அளவு கடந்த வியப்புடன் ''யோசித்து பார்த்து விட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்தாயா?'' என்றான்.

''இவ்வளவு நடந்த பிறகு ஒன்றுமே நடக்காதது போல் அவருடன் குடித்தனம் நடத்தச் சொல்கிறாயா? என் விஷயம்தான் உனக்கு நன்றாகத் தெரியுமே?''

சத்யன் பதில் பேசாமல் குடிக்கத் தொடங்கினான்.

''என் கணவரும், பிரதாப்பும் சேர்ந்து இவ்வளவு திட்டம் போட்டிருக்காங்க. உண்மைதான். ஆனால் இதில் அஸ்வத்தாமன் எப்படி வந்தார்? அதுதான் புரியவில்லை.''

''மூவரும் ஒரே குரூப். கார்த்திகேயன் அஸ்வத்தாமனுக்குக் கீழே கொஞ்சநாள் வேலை பார்த்து வந்தான் என்பதை மறந்து விடாதே'' என்றான் சத்யன். ''முதலில் நீ ஒரு நாள் இரவு அஸ்வத்தாமனுக்கு போன் செய்ததிலிருந்துதான் இந்தக் கதையே தொடங்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். உனக்காக அப்பொழுதே வலை போட்டு வைத்திருக்கிறார்கள்.''

''இவ்வளவு நடந்த பிறகு உன்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்லித்தான் ஆகணும் சத்யன். அஸ்வத்தாமனை பீட்டர்

சுட்டுக் கொன்று விட்டான். இரண்டு பிணங்களையும் மறைத்து வைத்தது நாங்கள் தான்.''

''எனக்குத் தெரியும்'' என்றான் சத்யன்.

அவள் வியப்புடன் ''உனக்குத் தெரியுமா? மைகாட்! உன் புத்திசாலித்தனம் அபாரம்'' என்றாள்.

சத்யன் கிளாஸை எடுத்து இன்னொரு பெக் குடிக்கப் போனவன் நின்றான். தொலைவிலிருந்து லேசாக சலங்கை சத்தம் கேட்டது. மெல்ல மெல்ல அருகில் வந்து காணாமல் போய் விட்டது. சத்யன் நிமிர்ந்து உட்கார்ந்தான். ''அதென்ன சத்தம்?''

''சத்தமா? என்ன சத்தம்?''

''சலங்கை ஒலி.''

''என் காதில் ஒன்றும் விழவில்லையே?''

அப்பொழுது யாரோ சிரிப்பது போல் சத்யன் காதருகில் கேட்டது. அவன் எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தான்.

''என்ன ஆச்சு சத்யன்?'' கல்யாணி கேட்டுக் கொண்டே இருந்தாள். ஆனால் இந்த முறை அவளுக்கே ஏதோ குரல் கேட்டாற்போல் இருந்தது. ''என்னது?'' என்றாள் காற்றோடு பேசுவது போல்.

''யாருடன் பேசுகிறாய்?'' சத்யன் கேட்டான்.

''இந்த விஷயத்தில் நீ குறுக்கிடாதே. கண்ணுக்குத் தெரியாத சக்தி ஏதோ என்னிடம் முயற்சி செய்கிறது'' என்றாள்.

சத்யனின் முகம் சிவந்து விட்டது.

''பேய்!'' என்றாள் கல்யாணி. ''உனக்கு நினைவு இருக்கிறதா சத்யன்? ஞான சித்தாந்தி சொன்னார், காதல் நிறைவேறாமல் இறந்து போகிறவர்கள் 'இஸ்தேஹக்' ஆக

மாறி விடுவார்களாம். நம் வீட்டில் ஒரு கண்ணாடிக்குப்பி கிடைத்த போது அவரை வரவழைத்தோம்.''

''இருக்கு.'' சத்யனின் குரல் பலவீனமாக ஒலித்தது.

''இஸ்தேஹக்காக மாறி அந்தக் காதலி கூப்பிடுகிறாளோ என்னவோ?''

''யாரு?''

''அனுஜா'' என்று சொல்லிவிட்டு வலியச் சிரிக்க முயன்றாள். ''எங்கேயோ ஹோட்டலில் இறந்து போன அனுஜா ஆஸ்பத்திரியில் இருக்கும் கார்த்திகேயனுக்காக நம் வீட்டிற்கு வந்து அழைப்பதாவது?'' என்றாள்.

சத்யன் கிளாஸை கீழே வைத்துவிட்டு ''நான் கிளம்புகிறேன்'' என்றான்.

''ஏன் இங்கேயே படுத்துக் கொள்கிறேன் என்று சொன்னாயே?''

''ஊஹூம், போகிறேன்'' என்று புறப்பட்டான்.

வாசலை தாண்டும் போது இம்முறை தெளிவாக கேட்டது 'உன்னை விடப் போவதில்லை சத்யன்' என்று.

சரேலென்று திரும்பிப் பார்த்து விட்டு ''யார் அது?'' என்று கத்தினான்.

''என்ன நடந்தது?''

''உன்னை விடமாட்டேன் என்று யாரோ சொன்னார்கள்.''

''என் காதில் விழவில்லையே?''

''என் காதில் விழுந்தது. அனுஜாவின் குரல் அது.'' சத்யன் உயிரற்றுச் சிரித்தான்.

★

''உனக்கு புத்தி பிசகிவிட்டது.'' பிரதாப்பின் குரல் போனில் ஆத்திரமாக கேட்டது. ''நள்ளிரவு நேரத்தில் போன் செய்து இதையா சொல்வாங்க?''

சத்யன் அதைவிட கோபமாக ''நான் என் காதால் கேட்டேன். நள்ளிரவில் உனக்கு போன் செய்தது பயத்தினால் அல்ல. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றுதான்'' - சொல்லிவிட்டு போனை வைத்து விட்டான்.

இரவு பன்னிரெண்டு மணி. கல்யாணி கொடுத்த டிரிங்க் மூளையை மரத்துப் போகச் செய்தது. போனை வைத்து விட்டு படுக்கைக்கு வந்து படுக்கப் போனான். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தவன் திடுக்கிட்டான்.

ஜன்னலுக்கு அந்தப் பக்கம் அனுஜா நின்று கொண்டிருந்தாள். லேசாக சிரித்துக் கொண்டிருந்தாள். சத்யன் தன் கண்களையே நம்ப முடியாதவனாக கண்களை கசக்கிக் கொண்டு பார்த்தான். இருட்டில் வெள்ளை புடவையில் அவள் தோற்றம் மங்கலாக தெரிந்தது. கூந்தலை விரித்துக் கொண்டிருந்தாலும் அவள் அழகாகவே இருந்தாள். மெல்லிய குரலில் பாட்டு ஒன்றை முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

சத்யனுக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. பெரும் முயற்சி செய்து சக்தியை திரட்டிக் கொண்டு எழுந்து போய் விளக்கைப் போட்டான். வெளிச்சத்தில் அவள் நின்று கொண்டிருந்த பக்கம் பார்த்தான். அங்கே அவள் இல்லை. தன்னுடைய பிரமையை நினைத்துச் சிரித்து விட்டு படுத்துக் கொண்டான்.

★

''இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் ஜாக்கிரதையாக இருக்கணும். கொஞ்சம் மனம் பலவீனமடைந்தாலும் போதும், ஹெலூசினேஷன்ஸ் மனதை பயமுறுத்தும். நம்

யோசனைகளை முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொண்டு விடும்'' - பிரதாப் சொன்னார்.

''இந்த பிரமைகளைப் பற்றி எனக்கும் தெரியும். அனுஜாவை பார்த்தது பிரமையாக இருக்கலாம். ஆனால் குரல் மட்டும் நன்றாக கேட்டேன். அதனால்தான் நள்ளிரவு நேரத்தில் உனக்கு போன் செய்தேன்.''

பிரதாப் என்ன செய்யலாம் என்பது போல் சத்யனை பார்த்தார். இந்த இரண்டு நாட்களில் சத்யனிடம் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. கண்கள் குழிவிழுந்து கன்னங்கள் ஒட்டிப் போய்விட்டன. ஆள் எலும்புக் கூடாக காட்சி அளித்தான்.

''இதென்ன? இப்படி ஆகிவிட்டாய்?''

''எப்படி இருக்கிறேன்?''

''பல நாட்களாக பட்டினி இருப்பவன்போல்.''

''இரண்டு நாட்களாக தூக்கமில்லை. மனோஜா என்னைத் தூங்க விடவில்லை''

பிரதாப் அதிர்ச்சியடைந்தவர்போல் ''மனோஜாவா?'' என்றார்.

''ஆமாம். ஒரு காலத்தில் என்னுடைய காதலி. நான்தான் கொன்று விட்டேன். ஆனாலும் அவளுக்கு என்மீது அன்பு குறையவில்லை. தினமும் இரவு ஆனதுமே வந்து விடுகிறாள். காலை வரையில் என்னுடனேயே இருப்பாள். சுவர்க்க சுகத்தை அள்ளித் தருவாள். இரவு வேளைகளில் தூக்கமே இருப்பதில்லை.''

பிரதாப் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. சத்யன் மேலும் சொன்னான். ''அகாலமாக காதலி மரணம் அடைந்துவிட்டாள். கோரிக்கைகள் தீரும் முன்பே இறந்து

போனால் இஸ்தேஹக் ஆகிவிடுவார்களாம். என் மனோஜா கூட இஸ்தேஹக் ஆக மாறி எனக்கு மகிழ்ச்சி தருவதற்காகவே தினமும் இரவு வேளையில் வருகிறாள்.''

பிரதாப் செவிகளில் அவன் வார்த்தைகள் விழவில்லை. கண்ணிமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். சைகிக் ஒருவன் எப்படி இருப்பான் என்று இதுவரை கதைகளில் படித்திருக்கிறார். சினிமாக்களில் பார்த்திருக்கிறார். ஆனால் இப்பொழுதுதான் கண் கூடாக பார்க்கிறார். சத்யனின் கண்கள் நெருப்புத் துண்டங்களாக இருந்தன. வேறு ஏதோ உலகில் இருப்பது போல் தென்பட்டான். சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனையே ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்த பிரதாப் தனக்குள் நினைத்துக் கொண்டார் - 'என்றாவது ஒரு நாள் இவனால் ஆபத்து வரத்தான் போகிறது.'

அதற்கு பதில் சொல்வது போல் ''ஆமாம்.'' என்ற குரல் காற்றில் கேட்டது. இருவரும் திடுக்கிட்டார்கள்.

சத்யன் எழுந்து நின்று ''அது அனுஜாவின் குரல்தான்'' என்றான்.

பிரதாப் வேகமாக வெளியே ஓடினார். ஜன்னலை விட்டு யாரோ தொலைவுக்குப் போனாற் போல் காலடிச் சுவடுகள் தென்பட்டன. பிரதாப் அவற்றைப் பரிசீலித்து விட்டு ''இதெல்லாம் யார் செய்யறாங்கன்னு புரிந்து விட்டது. உனக்கு நினைவு இல்லையா? எண்ணெயில் காலடிச் சுவடுகளைப் பதித்துவிட்டு ரொம்ப நாட்களுக்கு முன்னால் கல்யாணியை பயமுறுத்தினாய். இப்பொழுது அதே டெக்னிக்கை பயன்படுத்தி அவள் உன்னை பயமுறுத்தப் பார்க்கிறாள். நாம் வீட்டில் இல்லாத நேரத்தில் வந்து போட்ட சுவடுகளாக இருக்கும். இல்லாவிட்டால் இதற்குள் எப்படி உலர்ந்து போயிருக்கும்?'' என்றார்.

சத்யன் முழங்காலில் அமர்ந்து கொண்டு அந்தக் காலடிச் சுவடுகளை ஆள் காட்டி விரலால் தொட்டு பார்த்து விட்டு ''இது எண்ணெய் இல்லை. தண்ணீர்தான்'' என்றான்.

அதே நேரத்தில் கல்யாணியின் வீட்டில் போன் ஒலித்தது. மறுமுனையிலிருந்து பத்ரி பிரசாத் கல்யாணி யிடம் ''கார்த்திகேயனுக்கு நினைவு திரும்பிவிட்டது. உடனே வாங்க'' என்று சொன்னார்.

★

கார்த்திகேயன் மெதுவாக கண்களைத் திறந்தான். முதலில் மங்கலாக... பிறகு தெளிவான உருவத்தோடு... மனைவி தென்பட்டாள். எப்போதும் படுக்கையோடு படுக்கையாகவே அவளைப் பார்த்து பழக்கப்பட்டிருந்த கண்களுக்கு, நின்று கொண்டிருந்த மனைவியைப் பார்த்ததுமே புதிய பெண் ஒருத்தியை பார்ப்பது போல் தோன்றியது. சந்தோஷம் தாங்க முடியாமல் கட்டிலை விட்டு எழுந்திருக்கப் போனான். பக்கத்திலிருந்த பத்ரி பிரசாத் தடுத்தார்.

வயிற்றில் தையல் போடப்பட்டிருந்த இடத்தில் வலித்தது. மறுபடியும் கண்களை மூடிக் கொண்டான். ஸ்ரீ கல்யாணி அவனை நெருங்கி வந்து அவன் கைகளை தன் கையில் ஏந்திக் கொண்டாள். அவன் அவள் கைகளை மெதுவாக அழுத்தினான், தன் சந்தோஷத்தை வெளிப் படுத்துவது போல்.

அதற்குள் நடந்தது எல்லாம் வரிசையாக நினைவுக்கு வரவே ஒரு சந்தேகம் வயிற்றில் எரிமலைக் குழம்பாக தகித்தது.

''அனுஜா... என்னவானாள்?'' என்று கேட்டான்.

அந்த அறையில் எறும்பு ஊர்ந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம். அவன் கண்களை சுழற்றி எல்லோரையும்

ஒரு முறை பார்த்தான். அவன் பார்வை பீட்டர் மீது நிலைத்து நின்றது கேள்விக் குறியோடு. இனி வேறு வழியில்லை என்பது போல் பீட்டர் ஓரடி முன்னால் வைத்து ''அனுஜா இறந்து விட்டாள்'' என்றான்.

கார்த்திகேயனுக்கு மறுபடியும் நினைவு தப்பிவிட்டது.

★

சத்யன் அன்றிரவு முழுவதும் குடித்துக் கொண்டே இருந்தான். கார்த்திகேயனுக்கு நினைவு திரும்பி விட்டது என்று தெரிந்ததும் அவன் கலவரமடைந்தான். டாக்டரை அந்த இடத்திலேயே கொன்று போட்டு விட வேண்டும் போலிருந்தது. அதற்குள் மறுபடியும் நினைவு தப்பி விட்டதால் தற்காலிகமாக பிரச்னை விலகியது. ஆனால் எந்தச் சமயத்திலும் ஆபத்து வரக் கூடும் என்று அவனுக்குத் தெரியும்.

அந்த ஆத்திரத்தில்தான் குடித்துக் கொண்டிருந்தான். இரவு பதினோரு மணி அளவில் அவன் குடித்து விட்டு படுத்துக் கொள்வதற்காக எழுந்து கொண்டான். அப்பொழுதுதான் அந்த உருவத்தைப் பார்த்தான்.

கட்டில் பக்கத்திலேயே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் அனுஜா. ஜன்னல் வழியாக வந்து வீசிய காற்றுக்கு அவள் கூந்தல் அலை பாய்ந்து கொண்டிருந்தது. திடீரென்று அவளை அவ்வளவு அருகில் அந்தத் தோற்றத்தில் பார்த்ததால் அவன் கையிலிருந்த கிளாஸ் நழுவி விழுந்தது. தன்னை அறியாமல் பின்னால் நகர்ந்து கொண்டான். அவள் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டு காற்றோடு காற்றாக வெளியே சென்று விட்டாள்.

இரண்டு வினாடிகளுக்குப் பிறகு தன்னை சமாளித்துக் கொண்டு சத்யன் பார்த்தபொழுது அவள்

தொலைவில் தோட்டத்தில் கார்ஷெட் அருகில் தென்பட்டாள்.

அவன் அப்பொழுதுதான் சுய நினைவுக்கு வந்தவன் போல் சட்டென்று வெளியே ஓடினான். வெளியே ஊதக்காற்று வீசிக் கொண்டிருந்தது. அவன் அருகில் வந்த பிறகும் அவள் விலகிப் போகவில்லை.

''என்னுடன் வா'' சுருக்கமாக சொன்னாள்.

அந்தக் குரலில் இருந்த ஈர்ப்புக்குக் கட்டுப்பட்டு அவன் காரை ஓட்டத் தொடங்கினான். அவள் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

''எங்கே போகணும்?''

''மயானத்திற்கு.'' தலையைத் திருப்பாமலேயே சொன்னாள்.

தன் கைகள் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது. பத்து ,நிமிடங்கள் கழித்து கார் நின்றது.

மயானம் இருளில் மூழ்கியிருந்தது. ஒரு மூலையில் இரண்டு குழிகள் புதிதாக தோண்டப் பட்டிருந்தன. அவற்றை சுட்டிக்காட்டி ''அதில் ஒன்று அஸ்வத்தாமனுடையது. இன்னொன்னு யாருடையது தெரியுமா?'' என்று கேட்டாள்.

''யாருடையது?''

''என்னுடையது தான்.'' விர்ரென்று வீசிய காற்றுக்கு அவளுடைய புடவைத் தலைப்பு பாய்மரமாக அசைந்து கொண்டிருந்தது. அவள் மேலும் சொல்லத் தொடங்கினாள். ''சத்யன்! நீ என்னை ஹோட்டல் மாடியிலிருந்து தயையின்றி தள்ளிவிட்டு கொலை செய்தாய். நான் நினைத்தால் இப்பொழுது, இந்த நிமிடமே, இங்கே என்

சமாதிக்குப் பக்கத்திலேயே, உன்னை சமாதியாக்கி விட முடியும். ஆனால் கொல்ல மாட்டேன். ஏன் தெரியுமா?''

அவள் கண்கள் விநோதமான ஒளியுடன் மின்னிக் கொண்டிருந்தன. அவளை சுற்றிலும் ஒரு ஒளிவட்டம் சுழன்று கொண்டிருந்தது. அவள் தொடர்ந்தாள். ''என் அக்கா மனோஜா இஸ்தேஹக்காக மாறி உன்னுடன் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள். உயிருடன் இருந்த போதுதான் எப்படியும் சந்தோஷமாக இல்லை. இப்பொழுதாவது சந்தோஷமாக இருக்கட்டும் என்றுதான்-''

சத்யன் மந்திரத்திற்கு கட்டுண்டவன் போல் கேட்டுக் கொண்டிருந்தான். ''ஆனால் என் பகை? உன்னையும், பிரதாப்பையும் கொல்ல வேண்டும் என்ற பகை உணர்வு என்னை வதைத்துக் கொண்டிருக்கிறது. அந்த விருப்பம் தான் என்னை இப்படி மாற்றி விட்டது. ஆசைகள் நிறை வேறாமல் இறந்து போனால் பேயாக மாறி விடுவார்களாம்.''

பலமாக வீசிய காற்றுக்கு சருகுகள் அவ்விருவர் மேலே விழுந்து பறந்து கொண்டிருந்தன.

''உன்னையும் பிரதாப்பையும் கொன்று விட்டால் என் விருப்பம் பூர்த்தியாகிவிடும். விருப்பம் நிறைவேறிய அடுத்த நிமிடமே என் ஆன்மா காற்றில் கலந்து விடும் சத்யன்! கார்த்திகேயனை என்னுடன் அழைத்துக் கொண்டு போய் விடப் போகிறேன். நாங்கள் இருவரும் சேர்ந்து இன்னும் நிறைய அனுபவிக்க வேண்டும். கார்த்திகேயனை நீ கொலை செய்ய முயன்றாய் என்று எனக்குத் தெரியும்.''

சத்யன் திடுக்கிட்டான்.

''நீ பயப்படத் தேவையில்லை. கார்த்திகேயன் இந்த விஷயத்தை வெளியே சொல்வதற்கு முன்னால் நான்

அவனை என்னுடன் அழைத்துக் கொண்டு போய் விடுவேன். என் காதல் மானசீகமானது. எனக்கு கார்த்திகேயனின் ஆன்மா வேண்டும். அது மட்டுமே இல்லை. பிரதாப்பின் மரணமும் வேண்டும்.''

சத்யன் குழப்பத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

''இதற்குப் பின்னால் இருப்பது பிரதாப் என்று எனக்குத் தெரியும். அதனால் நாமிருவரும் ஒரு தீர்மானத்திற்கு வருவோம். கார்த்திகேயன் பிரச்னை உனக்கு இல்லாமல் செய்து விடுகிறேன். என் அக்கா கண்ணுக்குத் தெரியாமல் இருந்து கொண்டு உனக்குச் சகல சுகத்தையும் தருவாள். ஸ்ரீகல்யாணியை நீ என்ன செய்வாயோ அது உன் விருப்பம். முடிந்தால் கல்யாணி உன்னை பிசினெஸ் பார்ட்னராக போட்டுக் கொள்ளும் விதமாக ஏற்பாடு செய்கிறேன். அதற்குப் பிரதிபலனாக நான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பிரதாப்பை நீ கொலை செய்ய வேண்டும். இது உனக்குச் சம்மதம்தானே?''

''எனக்கு... எனக்கு விருப்பம் இல்லை.''

அவள் மெதுவாக அருகில் வந்து நின்று அவன் கையைத் தொட்டாள். மின் அதிர்ச்சி தாக்கியது போல் அவன் துள்ளி கீழே விழுந்தான். சமாதியில் இருந்த கல் ஒன்று தலையில் பலமாக பட்டது.

சற்றும் பிசிறில்லாமல் கடுமையாக ஒலித்தது அவள் குரல். ''ஆசைகள் நிறைவேறாமல் அகாலமாக இறந்து போன பெண் இஸ்தேஹக்காக மாறுவாள். அப்படிப்பட்ட மோகினி பேயுடன் பகை வைத்துக் கொள்ளாதே. உனக்கு நல்லது இல்லை. யோசித்துப் பார்த்துக் கொள்.''

அவள் இருட்டில் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து விட்டாள்.

மறுநாள் காலையில் பத்து மணிக்கு அவனுக்கு ஸ்ரீ கல்யாணியிடமிருந்து அழைப்பு வந்தது. அவன் போன பொழுது அவள் ஏதோ காகிதங்களைப் பரிசீலித்துக் கொண்டிருந்தாள். அவனிடம் அவற்றைத் தந்து ''இந்த காகிதங்களை பதிவு செய்ய ஏற்பாடு செய்யணும். கவனமாக படித்துப் பாரு'' என்றாள்.

அவன் வாங்கிப் படிக்கத் தொடங்கினான். பாதி படித்த பிறகு அவன் வியப்புடன் நிமிர்ந்து ''கல்யாணி! இதெல்லாம் என்ன?'' என்றான்.

''என் விஷயம்தான் உனக்குத் தெரியுமே. ஒரு விஷயத்தில் முடிவு செய்து விட்டால் உடனேயே செயல் படுத்துவேன். கார்த்திகேயன்பால் என் மனம் உடைந்து விட்டது. சத்யன்! என் தவறை நான் தெரிந்து கொண்டு விட்டேன். தோட்டத்து மூலிகை மருந்துக்கு உதவாது என்பது போல் உன்னை அலட்சியம் செய்தேன். அதனால்தான் என் சொத்தில் பாதியை உனக்குத் தந்து உன்னை என் பார்ட்னராக சேர்த்துக் கொள்கிறேன்.''

''அப்படி என்றால் கார்த்திகேயன்?''

''அவனுக்கு அனுஜா வழி செய்யப் போகிறாள். நேற்று இரவு அனுஜா என் அறைக்கு வந்தாள். சத்யன்! இந்தக் காரியத்தை நான் செய்து விட்டால் அவள் ஆன்மா சாந்தி அடைந்து விடும் என்று சொன்னாள். தன்னுடைய சமாதிக்கு காரில் அழைத்துக் கொண்டு போய் சத்தியம் கூட வாங்கிக் கொண்டாள்.''

''சமாதிக்கா?''

''ஆமாம். எனக்கென்னவோ எல்லாம் தெளிவாக நடந்தாற் போலவே நினைவு இருக்கிறது. ஆனால் கூர்க்கா நான் காரில் வெளியே போகவே இல்லை என்று சொல்கிறான். அது கனவா நனவா என்று எனக்குப் புரியவில்லை.''

''அது கனவு இல்லை. நிஜம்தான். என்னைக் கூட அழைத்துக் கொண்டு போனாள்'' என்றான் சத்யன். அவள் ஷாக் அடித்தாற் போல் பார்த்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அவன் அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு உற்சாகத்துடன் வீட்டிற்கு வந்தான். அவள் மனம் காற்றில் மிதப்பது போல் இலேசாக இருந்தது. அந்த உற்சாகத்தில் அவன் பாட்டிலை திறக்கப் போன பெழுது ''இங்கே இல்லை. பிரதாப் வீட்டுக்குப் போய் கொண்டாடு'' என்று குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்த பொழுது எதிரே அனுஜா. அவன் இப்பொழுது அவளைப் பார்த்து பயப்படவில்லை. பழக்கப்பட்டவனைப் போல் சாதாரணமாக பேசக் கூடிய நிலைக்கு வந்திருந்தான்.

''பிரதாப்பின் வீட்டிற்கு எதற்கு?'' என்று கேட்டான்.

''இன்று இரவு பிரதாப்பின் மரணத்திற்கு முஹூர்த்தம் வைத்து விட்டேன். அதோ! அந்த மேஜை மீது பாட்டில் இருக்கிறது. அந்த மருந்தை இரண்டு சொட்டுகள் அவள் கிளாஸில் கலந்துவிடு. அவன் கதை முடிந்து விடும்.''

சத்யன் வாயடைத்துப் போய் விட்டான். கண்களுக்குப் போட்டுக் கொள்ளும் மருந்தைப் போன்ற சின்ன பாட்டில் ஒன்று மேஜை மீது இருந்தது. அவன் அவள் பக்கம் திரும்பி ''ஆனால்...'' என்றான்.

''ஸ்ரீகல்யாணி உன்னை பார்ட்னராக சேர்த்துக் கொள்ளப் போகும் விஷயம் தெரிந்தால் பிரதாப் சும்மா இருக்க மாட்டார். உன்னை அட்டையைப் போல் பீடிக்கத் தொடங்கி விடுவான். அவன் தொல்லையை இப்பொழுதே கழட்டிக் கொண்டு விட்டால் பிறகு யாருக்குமே சந்தேகம் வராது.''

''நான் யோசிப்பது பிரதாப்பைப் பற்றியில்லை. கார்த்திகேயன் பற்றி. கார்த்திகேயனுக்கு நினைவு திரும்பிவிட்டால் எல்லா குட்டும் வெளிப்பட்டு விடும். அதுதான் பிரச்னை'' என்றான்.

அனுஜா அதற்கு பதில் சொல்லாமல் கண்களை மூடிக் கொண்டாள். ரொம்ப நேரம் வரையில் ஒன்றுமே பேசவில்லை. கவனமெல்லாம் எங்கேயோ நிறுத்தி வைத்தாற் போல் சலனமில்லாமல் இருந்தாள். அவள் கைவிரல்கள் பாம்பு படம் எடுத்தாற் போல் அசைந்து கொண்டிருந்தன.

அந்த நேரத்தில் போன் ஒலித்தது. சத்யன் ரிசீவரை எடுத்தான். ''நான்தான் டாக்டர் பத்ரி பிரசாத் பேசுகிறேன். நீங்கள் சொன்ன வேலை முடிந்து விட்டது. கார்த்திகேயனின் நிலைமை மோசமாகி விட்டது. இன்னும் பத்து நிமிஷங்களுக்குள் இறந்து போய் விடுவான்.''

சத்யன் நம்ப முடியாதவன் போல் அவளையும் ரிசீவரையும் மாறி மாறிப் பார்த்தான். அனுஜா கண்களைத் திறக்காமலேயே ''உன் வேலை முடிந்துவிட்டது இல்லையா சத்யன்?'' என்றாள். சத்யன் திகைத்துப் போய் விட்டான். அவள் கண்களைத் திறந்து கொண்டே ''அந்த போன் நீ ஏற்பாடு செய்திருந்த டாக்டரிடமிருந்து. அப்படித்தானே?'' என்றாள்.

சத்யனால் இன்னும் தேறிக் கொள்ள முடியவில்லை. நம்ப முடியாத உண்மையை காண்பது போல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் எழுந்து நின்றாள். ''என் வேலையை நான் முடித்து விட்டேன். கார்த்திகேயனின் தொல்லையை நீக்கிவிட்டேன். இனி நீ செய்ய வேண்டிய வேலைதான் பாக்கி'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து மெதுவாக காற்றில் மிதந்தபடி போய் விட்டாள்.

38

''சியர்ஸ்!'' பிரதாப் கிளாஸை உயர்த்திக் கொண்டே சொன்னார். சத்யனும் சியர்ஸ் சொன்னான். பிரதாப் ஒரு மடக்கு குடித்து விட்டு டம்ளரை கீழே வைத்து விட்டு ''மொத்தத்தில் அந்த டாக்டர் நமக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார் என்று சொல்லு'' என்றார்.

''கார்த்திகேயன் பத்து நிமிடங்களில் இறந்து விடுவான் என்று சொன்னார்'' என்றான் சத்யன். கொஞ்சம் நேரம் கழித்து, ''எனக்கு கொஞ்சம் ஐஸ் வேண்டும்'' என்று கேட்டான். அதைக் கொண்டு வருவதற்காக பிரதாப் உள்ளே போனதுமே ஜேபியிலிருந்து பாட்டிலை எடுத்து எதிரே இருந்த டம்ளரில் இரண்டு சொட்டுகளை விட்டான். பிரதாப் ஐஸைக் கொண்டு வந்து சத்யனின் கிளாஸில் போட்டு விட்டு தன்னுடைய கிளாஸிலும் போட்டுக் கொண்டு ஒரு மடக்கு குடித்தார். உடனே நெஞ்சில் எரிச்சல் தோன்றியது.

சில மாதங்களுக்கு முன்னால் இறால் உணவை வாயில் போட்டுக் கொண்டதுமே கல்யாணிக்கு இதயத்தில் ஏற்பட்ட எரிச்சலை போன்றது. அதையும் விட பத்து மடங்கு அதிகம்.

அப்பொழுது போன் ஒலித்தது. ஒரு கையால் மார்பை நீவிவிட்டுக் கொண்டே இன்னொரு கையால் ரிசீவரை எடுத்துக் கொண்டு ''ஹலோ!'' என்றார்.

''டிரிங்க் நன்றாக இருந்ததா?'' மறுமுனையில் பெண்ணின் குரல் கேட்டது.

''யார் பேசுவது?''

மறுமுனையிலிருந்து ஒரே ஒர வார்த்தை சுருக்கமாக, தெளிவாக கேட்டது. ''ஸ்ரீகல்யாணி.''

கையில் பாம்பைப் பிடித்துக் கொண்டிருந்தாற் போல் பயந்து ரிசீவரை நழுவவிடப் போனவர் எப்படியோ சமாளித்துக் கொண்டு ''என்ன பேசுகிறாய் நீ?'' என்றார்.

''என் உப்பைத் தின்று கொண்டே என் சொத்துக்கு உலை வைக்கப் போனாய். உனக்கு எதிரே உட்கார்ந்து கொண்டிருக்கும் நபருடன் கூட்டு சேர்ந்து கொண்டு என்னைக் கொலை செய்ய முயன்றாய். அதற்கு இதுதான் பதிலடி.''

''அப்படி என்றால்?''

''பிரதாப்! நீ ரொம்ப புத்திசாலி. என்னைக் கொன்று விட்டு என் கணவனையும், அனுஜாவையும் கொலைக் குற்றத்தில் சிக்க வைத்து விட வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தாய் இல்லையா?''

அவள் என்ன பேசுகிறாள் என்று அப்பொழுதுதான் அவருக்குப் புரிந்தது. அவளுக்கு முழுவதுமாக தெரிந்து போய்விட்டது என்றும் புரிந்தது. சட்டென்று முகத்திரையை களைந் தெறிந்து விட்டு ''ஆமாம். நான்தான் எல்லா திட்டமும் போட்டேன். என்ன செய்ய முடியும் உன்னால்? எதை நிரூபிக்க முடியும் உன்னால்?'' என்றார் பழித்துக் காட்டுவது போல்.

''எதையுமே நிரூபிக்க முடியாது'' என்றாள் ஸ்ரீ கல்யாணி மறுமுனையிலிருந்து. ''நீ குடிக்கிற டிரிங்கில் விஷத்தைக் கலந்தது யார் என்று கூட நிரூபிக்க முடியாது உன்னால். அந்த விஷ பாட்டிலின் மீது விரல் அடையாளங்கள் இல்லாமல் போனால் அவர்களுக்கு தண்டனை கிடைக்கும் படியாக செய்ய முடியாது உன்னால். சாரி'' என்று போனை வைத்து விட்டாள்.

★

கார்த்திகேயனுக்கு நினைவு வரத் தொடங்கியது. அவன் கண் முன்னால் மயக்கத் திரை மெதுவாக அகலத்

தொடங்கியது. தெளிவில்லாத உருவங்கள் மெல்ல மெல்லத் தெளிவடையத் தொடங்கின.

நினைவு நன்றாக திரும்பிய பிறகு பீட்டரிடம் என்ன நடந்தது என்று கேட்டுத் தெரிந்து கொண்டான். அவனுக்கு வருத்தம் ஏற்படவில்லை. சத்யனைப் பற்றி புரிந்து கொண்டான். பிரதாப்பின் சுயநலம் புரிந்தது. அஸ்வத்தாமனின் அசட்டுத்தனம் புரிந்தது. ஸ்ரீகல்யாணியின் உறுதி புரிந்தது. ஆனால் அவனைத்தான் அவனுக்கே புரியவில்லை.

★

உரையாடல் முழுவதும் கேட்டு விட்டு ''யாரிடமிருந்து போன்?'' என்று கேட்டான் சத்யன். அதற்குள் பிரதாப்பின் உடம் சுவாதீனத்தை இழக்கத் தொடங்கி விட்டது. நடந்ததை அவரால் ஊகித்துக் கொள்ள முடிந்தது. சிரமப்பட்டு எழுந்து நிற்கப் போன பொழுது டீபாய் மீது இருந்த பாட்டில் கீழே விழுந்து சிலீர் என்று உடைந்தது. சத்யனும் எழுந்து நின்றான்.

''போ... போன் கல்யாணியிடமிருந்து, எல்லாம் - எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள்'' என்றார் மூச்சிறைக்க.

'எல்லாவற்றையும்' என்று சொன்னதை சத்யன் வேறு விதமாக புரிந்து கொண்டான். இனி மறைத்து வைக்க எதுவும் இல்லை என்பது போல் ''ஆமாம். நாங்கள் இருவரும் இப்போது பார்ட்னர்களாகி விட்டோம்'' என்றான்.

அதைக் கேட்டதும் பிரதாப்பின் கண்கள் அகல விரிந்தன. தன்னுடைய தாக்குதலுக்கு இலக்காகி துடிதுடித்துக் கொண்டிருக்கும் எலியை கர்வமாக பார்க்கும் பூனையைப் போல் சத்யன் அவரைப் பார்த்தான். மரண வேதனையில் தவிக்கும் கூட்டாளியைப் பார்த்ததும் அவனுள் சாடிஸம் மேலும் அதிகரித்து விட்டது. ''உனக்கு

நினைவு இருக்கா கிழவனே?'' என்றான். ''என்னைப் பற்றி கல்யாணிக்கு நல்லபடியாக ரிப்போர்ட் தருவதற்காக ஒரு லட்சம் கேட்டாய். அதற்குப் பிறகு கல்யாணியின் நடவடிக்கைகளை உடனுக்குடன் எனக்கு தெரிவிப் பதற்காக இன்னொரு லட்சம் கேட்டாய். அதற்குப் பிறகு எனக்கு உதவி செய்ததற்காக இருபது லட்சம் பங்கும் கேட்டாய். அப்பொழுதே நினைத்தேன், உனக்குக் கேடு காலம் வந்து விட்டது என்று. உண்மையில் நீ எனக்குச் செய்த உதவிதான் என்ன? என் செலவில் சாப்பிட்டுக் கொண்டும், தண்ணியடித்துக் கொண்டும் உதவாக்கரை திட்டங்களை போட்டுக் கொண்டிருந்தாய். ஒன்று கூட நினைத்தது போல் நடக்கவில்லை. கடைசியில் நானே எல்லாவற்றையும் செய்ய வேண்டியதாகிவிட்டது. எல்லா வேலைகளையும் நானே செய்யும் போது உன்னையும் பாதையிலிருந்து நீக்கி விட்டால் என்ன தவறு என்று யோசித்தேன். நாமிருவரும் சேர்த்து அஸ்வத்தாமனை நீக்கி விட்டால் தொல்லை ஒழிந்து போகும் என்று நினைத் தோம். உன்னையே நீக்கிவிட்டால் முழுத் தொல்லையும் விட்டுப் போய் விடும் என்று நினைத்தேன். புரிந்ததா? இனி நிம்மதியாக செத்துப் போ.''

மெதுவாக தன் கிளாஸில் இருந்த விரல்ரேகைகளை துடைத்து விட்டு விஷம் இருந்த பாட்டிலை ஜேபியில் வைத்துக் கொண்டு வெளியே வந்தான் சத்யன். படியிறங்கி போர்ட்டிகோவில் இருந்த தன் காரை ஸ்டார்ட் செய்தான்.

சத்யன் அறையை விட்டு வெளியேறிய இரண்டு வினாடிகள் வரை பிரதாப் சுதாரித்துக் கொள்ள முடியாமல் தடுமாறினார். அவர் முகம் சிவந்து விட்டிருந்தது. விஷத்தின் பாதிப்பால் அல்ல. கோபம், ஆத்திரம், இயலாமை இவற்றால் ஏற்பட்ட எரிச்சலால்.

சக்தியை திரட்டிக் கொண்டு பெட்ரூமுக்குள் நுழைந்தார். உடல் தள்ளாடிக் கொண்டிருந்தது. உயிர்

போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. கட்டிலுக்கு அருகில் தள்ளாடி விழுந்தார். தட்டுத் தடுமாறி டிராயரிலிருந்து ரிவால்வரை வெளியே எடுத்தார்.

எழுந்து நிற்பதற்கு சக்தி இருக்கவில்லை. அப்படியே தரையோடு தரையாக தவழ்ந்து கொண்டே பால்கனிக்கு வந்தார். நாக்கு வரண்டு போயிற்று. நெற்றியிலிருந்து வியர்வை ஆறாக வழிந்து கொண்டிருந்தது. போலீஸ் பயிற்சி பெற்ற உடம்பு என்பதால் இந்த அளவுக்காவது சமாளித்துக் கொள்ள முடிந்தது.

அப்படியே குப்புறப்படுத்துக் கொண்டு, ஒரு கையால் துப்பாக்கியை பிடித்துக் கொண்டார். இன்னொரு கையால் பால்கனியின் கம்பிகளை பிடித்துக் கொண்டு பெரும் முயற்சி செய்து எட்டிப் பார்த்தார். அந்தச் சமயத்தில் சத்யன் போர்ட்டிகோவிலிருந்து காரை வெளியே எடுத்துக் கொண்டிருந்தான். கார் ஜன்னல் வழியாக அவன் உருவம் தென்பட்டுக் கொண்டிருந்தது.

பிரதாப் இரு கைகளாலும் ரிவால்வரை உயர்த்திப் பிடித்துக் கொண்டார். கண்கள் மூடிக் கொள்ள ஆரம்பித்தன. சத்யனின் உருவம் மங்கலாக தென்பட்டது. அவர் டிரிக்கரை அழுத்தினார். ஒரே ஒரு குண்டு.

சத்யனின் நெற்றிப் பொட்டை ஊடுருவிக் கொண்டு மூளைக்குள் பாய்ந்தது. வாய்விட்டு கத்துவதற்கும் வாய்ப்பு இல்லாமல் சத்யன் ஸ்டீரிங்கின் மீது சாய்ந்து விட்டான். அதற்குள் மேலே பால்கனியில் பிரதாப் கூட தரையில் சரிந்து விட்டார். போய்க் கொண்டு இருந்த அவர் உயிருக்கு பெருத்த சத்தம் கேட்டது.

சத்யனின் கார் காம்பவுண்ட் சுவற்றில் மோதிக் கொண்ட சத்தம் அது. காருக்குள் சத்யனின் உடல் நசுங்கி விட்டது.

பின்னுரை

அவன் வீட்டை விட்டு போய் எவ்வளவு நாட்களாகி விட்டதோ அவனுக்கே தெரியாது. மனம் பக்குவ மடைவதற்கு காலம் முக்கியமில்லை. பக்குவம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரிந்து கொள்வதற்காகவே அவன் வீட்டை விட்டு போனான்.

அனுஜா இறந்து விட்டாள் என்ற செய்தி அவனை ரொம்ப பாதித்துவிட்டது. அவனுக்கு சதா தான் வரைந்த ஓவியத்தில் இருந்த அவளுடைய உருவமே தென்பட்டுக் கொண்டிருந்தது. சில நாட்களிலேயே அவன் மௌனத்தின் எல்லைக்கு வந்து சேர்ந்து விட்டான்.

அந்தச் சமயத்தில்தான் அவன் ஓவியம் பாரிஸில் நடந்த போட்டியில் சிறந்த கலைப்படைப்பாக தேர்ந் தெடுக்கப்பட்டது. லண்டனில் சேர்ந்த ஒரு தனியார் மியூசியத்தின் முதலாளி அந்தப் படத்தை நூறாயிரம் டாலர்களுக்கு வாங்கிக் கொள்ள முன் வந்ததால் நாட்டிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் அவனை வானளவுக்கு புகழ்ந்தன. லண்டன் டைம்ஸ் பத்திரிகையோ அவன் ஓவியத்தை 'மோனாலீஸா' ஓவியத்தோடு ஒப்பிட்டு தலையங்கம் எழுதியிருந்தது. ஆனால் அவனுக்கு இதொன்றும் தெரியாது. அதற்கு முதல் நாள் இரவே அவன் வீட்டை விட்டு போய் விட்டான்.

அவன் விந்திய மலைகளைத் தாண்டினான். கங்கையில் குளித்தான். பைராகிகளுடன் சேர்ந்து

மயானத்தில் உறங்கினான். தியானத்தில் ஆழ்ந்து இந்த உலகத்தையே மறந்து போய் விட வேண்டும் என்று நினைத்தான். ஆனால் அவனுக்கு இந்த நடவடிக்கைகள் எல்லாம் உண்மையின் நிழல்களாக தென்பட்டனவே தவிர அவன் நினைத்தது நடக்கவில்லை.

அவனுடைய ஒரே நோக்கம்! சூனியமாகிப் போய்விட வேண்டும் என்று. ஆசைகளிலிருந்தும், கனவு, தாகம், வேதனை... கடைசியில் மகிழ்ச்சி இவற்றிலிருந்தும் கூட விடுதலையாகி விட வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருந்தான்.

ஒரு நினைப்பு தன்னை இவ்வளவு தூரம் வருத்தப் படுத்துகிறதே என்ற ஆச்சரியம் ஒரு பக்கம், அந்தப் பெண்ணிற்கும் தனக்குமிடையே இருந்த பந்தம் என்னவென்ற குழப்பம் இன்னொரு பக்கம். இந்த இரு வேறு உணர்வுகளால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டே அவன் வேறு உலகில் இருப்பது போல் வாழ்ந்து கொண்டிருந்தான்.

கல்யாணி பற்றிய நினைவு வந்தது. சத்தியத்தை சோதித்து முடித்தால் தவிர வீட்டிற்கு போகக் கூடாது என்று தோன்றியது. ஆனால் அவளுக்கு தன்னைப் பற்றி தெரியப்படுத்துவதை கடமையாக நினைத்தான். வீட்டிற்கு கடிதம் எழுதினான்.

கல்யாணி!

நான் இது போல் வீட்டை விட்டு போய் ஊர் சுற்றிக் கொண்டிருப்பது உனக்கு கோபத்தையும், வெறுப்பையும் வரவழைக்கும் என்று தெரியும். வேதனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக நான் இவ்வாறு ஓடிவரவில்லை.

ஒரு சத்தியத்தைத் தேடிக் கொண்டு அலைந்து கொண்டிருக்கிறேன். அது கிடைத்த அடுத்த நிமிஷமே வந்து விடுவேன். என்னை மன்னித்து விடு.

கார்த்திகேயன்

அந்தக் கடிதத்தை தபாலில் போட்டுவிட்டு அந்த ஊரிலேயே இன்னும் இரண்டு நாட்கள் இருந்ததன் மூலம் அவன் தன் மனைவியைப் பற்றி குறைவாக எடைபோட்டு விட்டான். கடிதம் கிடைத்த உடனேயே அது எந்த ஊரிலிருந்து வந்தது என்று தெரிந்து கொண்டு தன் செல்வாக்கை பயன்படுத்தி அவன் இருப்பிடத்தை தெரிந்து கொண்டு விட்டாள்.

அவன் ஹரித்துவாரில் இருந்தான். இமயமலையின் அடிவாரத்தில் இருக்கும் சிறிய ஊர் அது. அந்த ஊரில் ஒரு ஆளைத் தேடிக் கண்டு பிடிப்பது பெரிய கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் அவள் அவனைச் சந்திக்க முயற்சி செய்யவில்லை.

சுவாமி துருவானந்தரை அனுப்பினாள்.

★

ஹரித்துவார்...

இமயமலையின் மீது வந்த விழுந்த சூரிய வெளிச்சம் பளீரென்று மின்னிக் கொண்டிருந்தது. புண்ணிய க்ஷேத்திரம் என்பதால் விடியற்காலையிலேயே ஊர் விழித்துக் கொண்டு விட்டது.

சத்திரத்துத் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த கார்த்திகேயன் விழித்துக் கொண்டான். தொலைவில் மலைகளுக்கு இடையே கங்கை நதி தென்பட்டது. நதி

அங்கே இன்னும் வேகமாக துள்ளிக் குதித்து ஓடிக் கொண்டிருந்தது. நதியில் முகத்தை அலம்பிக் கொண்டு திரும்பியவன் நின்று விட்டான்.

மலைப் பாறையின் மீது சுவாமி துருவானந்தர் நின்று கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அந்த இடத்தில் அங்கே பார்த்து வியப்படைந்தவனாக ''சுவாமி! நீங்கள் இங்கேயா?'' என்றான்.

''அதே கேள்வியை நான் கேட்க நினைத்தேன். இதென்ன ஆடை? இதென்ன தோற்றம்? நீயேதானா இது என்று கூட சந்தேகமாக இருக்கிறது. கோடீஸ்வரனான நீ இந்த விதமாக பைராகியாக ஏன் மாறினாய்? என்னதான் நடந்தது?''

கார்த்திகேயன் அருகில் வந்து பணிவுடன் ''சுவாமி! தாங்கள் ஒரு முறை சொல்லியிருக்கீங்க, நினைவு இருக்கா, வேதாந்தம் வேறு வைராக்கியம் வேறு என்று? அந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை தெரிவிக்கத்தான் போலும், கர்மா என்னை ஆட்டி வைக்கிறது. அனுஜா மரணத்தின் மூலமாக வேதனை ஏற்பட்டதை பார்த்து என் மீதே எனக்கு நம்பிக்கை போய் விட்டது. உண்மையான மதிப்புக்கும், ஒழுக்கத்தின் மதிப்பீடுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை தெரிந்து கொள்வதற்காக நான் வீட்டை விட்டு வந்து விட்டேன். சந்தோஷம் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தது வெறும் கண்ணாடி மாளிகை என்றும், அதை உடைத்தெறிய சிறிய கல் போதும் என்ற கசப்பான உண்மையும் என்னை தேச சஞ்சாரியாக்கியது'' என்றான்.

''அனுஜா யாரு?''

அவன் நடந்ததை எல்லாம் சொன்னான். ''என் மனைவி எனக்கு இந்த உலகத்தைப் பற்றிச் சொன்னாள். இந்த உலகத்தில் வாழ வேண்டும் என்றால் அதிகாரம், தன்னம்பிக்கை, பணம் வேண்டும் என்று சொன்னாள். அந்த மூன்றுக்கும் மூல காரணம் சுயநலம் என்று நம்பி வந்த என்னுடன் சேர்ந்து வாழ்ந்த நாட்களில் வாதாடி வந்தாள். ஒரு பெண்ணின் சந்தோஷத்திற்காக சில லட்சங்களுக்கு என்னை விற்று விட்டாள். அந்தப் பெண் என் உள்ளே இருந்த கலைஞனை வெளியில் கொண்டு வந்தாள். எனக்கு பந்தங்கள் இருப்பது தெரிந்தும் தன் காதலை குறைத்துக் கொள்ளவில்லை. ஒழுக்கத்திற்கு மதிப்பு அளித்து நான் என் எல்லைக்குள் இருந்து விட்டேன். ஆனாலும் என் மனைவி என்னைப் புரிந்து கொள்ளாமல் எனக்காகவே அனுஜா வந்து ஹோட்டலில் தங்கியிருந்தாள் என்று குற்றம் சாட்டினாள். நான் மனதளவில் தளர்ந்து போய் விட்டேன். எனக்கு என் மனைவியின் கொள்கையின்பால் அவமதிப்பு இல்லை. நான் தெரிந்து கொள்ள விரும்பியதெல்லாம் நான் யார் என்றுதான்.

''என் மனைவி பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு படுத்துக் கிடக்கும் போது எனக்கு இச்சையோடு கூடிய கனவுகள் ஏன் வந்தன? நான் மணமானவன் என்று முதல் நாளே அனுஜாவிடம் ஏன் சொல்லவில்லை? அவள் என்னை விரும்புகிறாள் என்று தெரிந்த பிறகும் என் திருமண விஷயம் அவளுக்குத் தெரியும் விதமாகவே செய்ய வேண்டும் என்று நினைத்தேனே தவிர செயல்படுத்த வில்லையே ஏன்? ஒரு பெண்ணிற்கு என் மீது ஏற்பட்ட விருப்பத்தை உள்ளூர நானும் விரும்பியது என்னுடைய சுயநலமில்லையா? கல்யாணியை நான் எதற்காக மணம் புரிந்து கொண்டேன்? தியாகம் மூலமாக ஏற்படும்

சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறு ஏதாவது காரணமும் இருக்கிறதா? ஒவ்வொரு விஷயத்திலும் சில வரம்புகளை விதித்துக் கொண்டு நான் எனக்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கொள்கைகள் உண்மையில் எனக்கு சந்தோஷத்தை தருகின்றனவா? நான் ரொம்ப உயர்ந்தவன் என்ற அகம்பாவம் என் வார்த்தை களில், செயல்களில் அவ்வப்பொழுது வெளிப்பட வில்லையா? உண்மையில் எந்த விதத்தில் நான் உயர்ந்தவன்? என் மனைவி போல் தனக்கு என்ன வேண்டும் என்று தெரிந்து கொண்டு அதை எந்த விதத்திலாவது சாதித்துக் கொள்ள எனக்குத் தெரியாது. அனுஜாவைப் போல் காதலுக்காக உலகத்தை எதிர்க்கத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் சதா குமுறிக் கொண்டிருப்பதுதான். மனப் போராட்டம் தான்.''

''மனப் போராட்டத்தின் மூலமாகத்தான் மனிதன் உயருகிறான் அப்பனே.''

''அர்த்தமில்லாத மனப்போராட்டம் தேவையில்லை என்பது என் உத்தேசம் சுவாமி! முதலில் மனப்போராட்டம் என்பது ஏன் வருகிறது? எது நல்லது எது கெட்டது என்று தெரியாமல் போனதால் வருகிறது. எல்லாம் நல்லதே என்று நினைப்பதுதான் மிக உயர்ந்த வாழ்க்கை முறை என்று நம்பி வந்தேன். இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனிடமும், அவன் நடவடிக்கையிலும் நல்லதுதான் இருக்கும் என்றும், நாம் யோசிக்கும் விதத்தை பொறுத்துத் தான் அது வெளிப்படும் என்று நினைத்திருந்தேன். அனுஜாவிடம் நான் என் விருப்பத்தைக் காட்டிக் கொள்ளாமல் இருந்ததற்குக் காரணம் என் மனைவியின் பால் எனக்கு இருந்த அன்பா? ஒழுக்கத்தின் பால் இருந்த மதிப்பா? இந்த இரண்டில் எதுவாக இருந்தாலும்

நல்லதுதான். ஆனால் என் தந்தையின் கடந்த கால வாழ்க்கை என்னுள் ஏற்படுத்தியிருந்த பயம்தான் நான் இவ்வாறு இருப்பதற்குக் காரணம் என்றால் அதை விட வருந்தத்தக்கது வேறு இல்லை.''

''இவ்வளவு ஆழமாக சிந்திப்பதுதான் உன் நிலைமைக்குக் காரணம். எதற்காக இன்னும் இப்படி சுற்றிக் கொண்டு இருக்கிறாய்?''

''தியாகத்தை விட பெரிய சந்தோஷம் இல்லை என்று நம்பிய எனக்கு என் மனைவியின் மூலமும், அனுஜா மரணத்தின் மூலமும் ஏற்பட்ட வருத்தத்தை பார்த்து எனக்கே என் மீது நம்பிக்கை போய் விட்டது. அதனால் தான் வீட்டை விட்டு புறப்பட்டு விட்டேன்'' என்றான்.

துருவானந்தரின் புருவங்கள் முடிச்சேறின. கண்களை மூடிக் கொண்டு ஏதோ யோசித்தவாறு இருந்தார். கொஞ்ச நேரம் கழித்து கண்களைத் திறந்து ''அனுஜாவின் ஆன்மா சாகவில்லை அப்பனே'' என்றார்.

கார்த்திகேயன் புரியாமல் பார்த்தான்.

''ஆமாம். உன்ன அபரிமிதமாக நேசித்த அனுஜாவால் உன்னை விட்டு பிரிந்திருக்க முடியாமல் போய் விட்டது. அவள் ஆன்மா உன் மனைவியோடு சேர்ந்து விட்டது. உனக்கு நினைவு இருக்கா? அனுஜா மரணமடைந்த அடுத்த நிமிடமே உன் மனைவிக்கு கால்கள் சுவாதீனத்திற்கு வந்து விட்டன. அதுவரை நடைப்பிணமாக இருந்து வந்த உன் மனைவி அந்த நிமிஷத்திலிருந்து சாதாரண மனுஷியானதற்குக் காரணம் அனுஜாவின் ஆன்மாதான்.''

மலையிலிருந்து வந்த தென்றல் காற்று அந்த எல்லையையும், அவன் உடலையும் ஒரே சமயத்தில் வந்து

சூழ்ந்து கொண்டது. கண்ணிமைக்கவும் மறந்து போனவனாக அவன் அவரையே பார்த்துக் கொண்டிருந் தான். மனதில் ஒரு நெகிழ்ச்சி... பனித்திரை விலகியது போன்ற உணர்ச்சி. ஒரு தேடலுக்கு அர்த்தம் புரிந்து விட்டது. ஒரு கேள்விக்கு பதில் கிடைத்து விட்டது. இரு கரங்களையும் கூப்பி, ''நான் வீட்டிற்கு திரும்பிப் போகிறேன் சுவாமி'' என்றான்.

''நல்லது'' என்றார் துருவானந்தர். ''சீக்கிரமாக போ. அங்கே உன் மனைவி எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள், உன் காதலியும் கூட.''

சத்திய சோதனை முடிவடைந்து விட்டவன் போல் கார்த்திகேயன் மலையிறங்கி ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

அந்தப் பக்கமாகவே ரொம்ப நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு சுவாமிகளும் திரும்பினார். தொலைவில் இமயமலை உயரமாக... உன்னதமாக... மனிதனின் ஊகத்திற்கு எட்டாத வகையில்...

அவற்றையே பார்த்துக் கொண்டிருந்த துருவானந்த சுவாமிக்கு ஸ்ரீகல்யாணியின் நினைவுதான் வந்தது.

★

திடீரென்று கல்யாணிக்கு தூக்கத்திலிருந்து விழிப்பு வந்தது. பக்கத்தில் கார்த்திகேயன் இல்லாததால் எழுந்து வெளியே வந்தாள். பால்கனியில் நின்றபடி இருளையே பார்த்துக் கொண்டிருந்தான் கார்த்திகேயன். அருகில் சென்று பக்கத்தில் நின்று கொண்டாள்.

நள்ளிரவு தாண்டி மணி இரண்டு அடிக்க இருந்தது. இருவரும் கொஞ்ச நேரம் அவ்வாறு நின்ற பிறகு கல்யாணி

அந்த மௌனத்தைத் தாங்க முடியாதவளாக அவன் கை மீது தன் கையை வைத்து ''வருத்தப்படறீங்களா?'' என்று கேட்டாள்.

கார்த்திகேயன் பதில் பேசவில்லை.

''சில நினைவுகள் நம்மை வருத்தப்படுத்தும். அவற்றை விட்டு தொலைவில் இருப்பதுதான் நாம் செய்ய வேண்டியது'' என்றாள் சமாதானப்படுத்துவது போல்.

அவன் ஆழ்ந்த பெருமூச்சு ஒன்றுவிட்டு ''நான் வருத்தப்படுவது உண்மைதான். ஆனால் என் வருத்தம் பழைய நினைவுகளைப் பற்றி இல்லை. கொஞ்சம் கூட அறிவு இல்லாதவனாக, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு போனதைப் பற்றித்தான்'' என்றான்.

''என்னால் புரிந்து கொள்ள முடியும். எதிர்பாராத சம்பவம் நடக்கும் போது நம்மால் தாங்கிக் கொள்ள முடியாது. எதையாவது செய்ய வேண்டும் என்று தோன்றும். இது சரியா தவறா என்ற யோசனை இருக்காது.''

''நான் வீட்டை விட்டு போனதற்கு காரணம் அனுஜாவின் மரணம் இல்லை கல்யாணி!''

கல்யாணி அளவு கடந்த வியப்புடன் ''பின்னே எதுக்கு?'' என்றாள்.

அவன் கொஞ்சம் தயங்கினான். சொன்னால் புரியுமா? ஆனால் சொல்லித்தான் ஆகணும். இவ்வளவு நாட்களாக திரைகள் இருப்பதை தவிர்க்க முடியவில்லை. இப்பொழுதாவது அவற்றை விலக்க வேண்டும்.

அவன் சொன்னான். ''இவ்வளவு நாளாக நான் உண்மை என்று ஒன்று இருக்கும் என்று நம்பிக் கொண்

டிருந்தேன். ஆனால் 'உண்மைக்கு மறுபக்கம் இருப்பது கூட உண்மைதான்' என்று எனக்குப் புரிந்து விட்டது. அதனால்தான் இந்த உலகத்தில் முற்றிலும் உண்மை என்று எதுவுமே இல்லை.''

''நீங்கள் எந்த உண்மையைப் பற்றி பேசுகிறீர்கள்?''

''உன்னைப் பற்றி. இவ்வளவு காலமாக நான் உண்மை என்றும், நீ பொய் என்றும் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது நீயும் உண்மைதான் என்ற விஷயத்தை தெரிந்து கொண்டேன். மற்றவர்களிடமிருந்து தனக்கு வேண்டியதை அதிகாரத்துடனும், தன்னம்பிக்கை யுடனும் எடுத்துக் கொள்ள முடிந்தவர்களால்தான் சுயநலமில்லாமலும், சந்தோஷமாகவும் மற்றவர்களுக்கு தர முடியும் என்று என் பரிசோதனை மூலமாக புரிந்து விட்டது.''

ஸ்ரீகல்யாணி சிரித்தாள். ''அந்தக் காலத்தில் கௌதம புத்தருக்கு போதி மரத்தின் அடியில் ஞானோதயம் ஏற்பட்டதாம். உங்களுக்கு எங்கே ஏற்பட்டது?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''அனுஜாவின் ஆன்மாவைப் பற்றி நீ சொன்ன பொய்யை சுவாமி துருவானந்தர் கிளிப்பிள்ளை போல் என்னிடம் சொன்ன பொழுது.''

அவள் சிலையாகி விட்டாள். ''நான்தான் அப்படிச் சொல்லச் சொன்னேன் என்று உங்களுக்கு எப்படி தெரியும்?'' என்று கேட்டாள்.

அவன் அந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் தொடர்ந்து சொன்னான். ''நான் அனுஜாவுக்காக பைத்திய மாகி விட்டேன் என்று நினைத்துக் கொண்டு அனுஜா

உன்னிடமே இருக்கிறாள் என்று சொல்ல வைத்தாய். அதாவது நான் உன்னுடன் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டே அனுஜாவுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்ற சந்தோஷத்தை ஆயுள் முழுவதும் எனக்கு வழங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தாய். நினைத்தாலே என் கண்கள் பனிக்கின்றன. எந்த மனைவியுமே தன் கணவனுக்கு செய்யாத காரியத்தை நீ எனக்காக செய்தாய். மிகச் சுலபமாக, மிகச் சாதாரணமாக நீ என்னுடன் கூடினாய், நீ துருவானந்தரிடம் சொன்னதெல்லாம் உண்மை என்று நான் நம்பியிருந்தால் இன்றிரவு நான் செய்தது மானசீக விபச்சாரமாக இருந்திருக்கும். அதைக் கூட சாதாரண விஷயமாக எண்ணினாய். உனக்கு வேண்டியதை நீ எவ்வளவு பெருந்தன்மையோடு எடுத்துக் கொள்வாயோ, அதே அளவுக்கு பெருந்தன்மையுடன் மற்றவர்களுக்கு தருவாய். நான் அப்படி இல்லை. என் காரியங்கள் எல்லாவற்றிலும் நான் நல்லவன் என்ற திருப்தி ஒன்றுதான் இருந்து வந்ததே தவிர உண்மையான ஆத்மதிருப்தி இருந்தது இல்லை. இவ்வளவு நாட்களாக மற்றவர்களை சந்தோஷப்படுத்துவதில்தான் சந்தோஷம் இருக்கிறது என்று நினைத்திருந்தேன். நாம் சந்தோஷப் படுவதில் கூட ஆனந்தம் இருக்கிறது என்று இப்பொழுது தான் எனக்குப் புரிகிறது.''

''ஆனால்...''

''இரு கல்யாணி! என்னை சொல்லிவிடு. இன்று இரவு என் மனதை திறந்து சொல்ல விடு.'' அவன் அவள் பக்கம் திரும்பி சொல்லத் தொடங்கினான்.

''முன் காலத்தில் கலைஞர்கள் தம் ஜீவனத்திற்காக எந்த வேலையும் செய்ய மாட்டார்கள். எந்தப் பிரச்னையும்

மனதை தாக்காமல் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். கலைஞர்கள் இயற்கையிலிருந்தோ, பெண்ணிடமிருந்தோ ஊக்கம் பெறுவார்கள். அரசர்கள் ஒரு பக்கம் போர் புரிந்து கொண்டே இன்னொரு பக்கம் கலைகளையும் போற்றி வந்தார்கள். மாறிக் கொண்டிருக்கும் காலத்தின் போக்கில் கலைஞன் தன் வயிற்றுப் பிழைப்பிற்காக சம்பாதித்துக் கொண்டே கலையின் தாகத்தை தீர்த்துக் கொள்ள வேண்டிய நிலைமை. அதனால்தான் கலை மடிந்து கொண்டே வருகிறது. உண்மையான கலைஞன் சின்ன பிரச்னை எதிர்ப்பட்டாலும் தத்தளித்துப் போய் விடுவான். கவனம் பிசகி விடுகிறது. இந்த விஷயத்தை நீ ஊகித்துக் கொண்டாய். அனுஜா எனக்கு ஒரு ஊக்கம் என்று உனக்குத் தெரியும். அதனால்தான் எனக்கு மானசீகமாக பாதுகாப்பை ஏற்படுத்தித் தர முன் வந்தாய். அனுஜா உனக்குள் இருப்பதாக சொல்லிக் கொண்டு, எனக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்க முற்பட்டாய். அந்த விதமாக நீ எனக்கு போதி மரமாகி விட்டாய். கல்யாணி! எந்தத் தேடலிலும் கிடைக்காத சத்தியம் எனக்கு உன்னிடம் தான் இறுதியில் கிடைத்தது.''

அவன் முழங்காலில் அமர்ந்து அவள் கால்களை சுற்றிலும் கைகளை பிணைத்துக் கொண்டு வயிற்றில் தலையை சாய்த்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான்.

அவள் அவன் கேசங்களை விரல்களால் கோதிக் கொண்டே ரொம்ப நேரம் மௌனமாக இருந்து விட்டு பிறகு ''நான் உங்களிடம் ஒரு விஷயம் சொல்லட்டுமா?'' என்றாள். ''அனுஜா உயிருடன்தான் இருக்கிறாள்.''

★

மறுநாள் பொழுது விடிந்து ரொம்ப நேரம் கழித்து போன் வந்தது.

''நான்தான் அனுஜா.'' மறுமுனையிலிருந்து குரல் கேட்டது. ''கார்த்திகேயன் வந்து விட்டாராமே'' பரபரப்புடன் கேட்டாள்.

''ஆமாம்'' என்றாள் கல்யாணி.

''அப்பாடா! என்னவானாரோ என்று இவ்வளவு நாளாக கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். எங்கே போனாராம்?''

''அது கிடக்கட்டும். உன் உடல் நிலை எப்படி இருக்கிறது? எங்கிருந்து பேசுகிறாய்?''

''லண்டனிலிருந்து. இங்கே நல்ல சிகிச்சை கிடைக்கிறது. டாக்டர்கள் பரவாயில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். அது சரி, சத்யன், பிரதாப் இருவரின் மரணத்தைப் பற்றி யாருக்காவது சந்தேகம் வந்ததா?''

''இல்லை. இருவரையும் பேய் அடித்துவிட்டது என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

மறுமுனையில் அனுஜா சிரித்தாள். ''ஓ.கே. போனை வைத்து விடட்டுமா? இதுதான் கடைசி போன். அப்பாவிடம் கூட கார்த்திகேயனை எப்பொழுதாவது சந்திக்க நேர்ந்தாலும் என்னைப் பற்றிய பேச்சை எடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். மறுபடியும் அவருக்கு மன நிம்மதி இல்லாமல் செய்து விடக் கூடாது இல்லையா?''

'அவர் வீட்டை விட்டு போனது நீ இறந்து போய் விட்டாய் என்பதற்காக இல்லை' என்று சொல்லவில்லை

கல்யாணி. ஒரு பிரமை மகிழ்ச்சியை தந்து கொண்டிருக்கும் போது அதை போக்கடிப்பானேன்?

''நீ லண்டனில்தான் இருப்பாயா?''

''ஆமாம். ஏன்?''

''ஒன்றுமில்லை. நாங்கள் ஹனிமூனுக்கு பிளான் போட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த டிரிப்பில் லண்டன் இல்லாமல் பார்த்துக் கொள்கிறேன்.''

மறுமுனையில் அனுஜாவின் சிரிப்பு உரக்கக் கேட்டது. ''நான் ஒன்று சொல்லட்டுமா?''

''சொல்லு'' என்றாள் கல்யாணி.

''இந்த உலகத்தில் நிறைய நல்ல ஆண்கள் இருக்கலாம். ஆனால் நல்ல கணவர்கள் மட்டும் ரொம்பக் குறைவு.

நல்ல கொடேஷன்'' என்றாள் கல்யாணி. ''சரி. வைத்து விடட்டுமா?''

''ஓ.கே.பை...பை ஃபாரெவர்.''

போனை வைத்துவிட்டாள் கல்யாணி. 'உண்மை தான். நல்ல கணவர்கள் மிகக் குறைவு. அந்த விதமாக நான் அதிர்ஷ்டசாலி. அதனால்தான் நீ உயிரோடுதான் இருக்கிறாய் என்ற விஷயத்தை என் கணவரிடம் என்னால் மறைத்து 'வைக்க முடியவில்லை. நீ இறந்து போய் விட்டாய் என்ற உத்தேசத்தில் அவர் மறுபடியும் உன்னை சந்திக்கும் முயற்சி செய்யவில்லை என்ற நினைப்பு உனக்கு திருப்தி தருகிறது இல்லையா? நீ அந்தத் திருப்தியுடன் இரு அனுஜா!' மனதில் எண்ணிக் கொண்டாள்.

முற்றும்